சிவமயம்.

# திருப்புகழ்த்திரட்டு.

இஃது

## அரும்பதவுரையுடன்

யாழ்ப்பாணம், கோக்குவில்

சோதிடப்பிரகாசயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

1916.

# முகவுரை.

இமாநடப் பிறவியைக் கடவுள் எமக்குத் தந்தருளியது எம்மைப் பந்தித்த மும்மலங்களினின்றும் யாம் நீங்கி, நித்தியமாகிய பேரின்பவாழ்வைப் பெறுதல் காரணமாகவேயாம். மும்மலங்களை யும் நீக்குவதற்கு மனம் வாக்குக் காயம் என்னும் மூன்றும் துணைக் காரணமாயுள்ளன. மனத்தினுலே கடவுளைத் தியானஞ் செய்தும், வாக்கினுலே துதித்தும், காயத்தினுலே வணங்கியும் வர மும்மலங் களும் நீங்கும். தியானஞ்செய்தலாவது சற்குருவருளாலே தீக்ஷை பெற்றுப் பஞ்சாக்கரத்தியானஞ்செய்தல் முதலியனவாம். துதித்த லாவது தேவார திருவாசகம் முதலிய அருட்பாக்களைக் கிரமமாக ஓதுதலாம். வணங்கலாவது ஆலயசேவை குருசேவை அடியார் சேவைசெய்தலாம். இவைகளெல்லாம் முத்தியடைதற்கேற்ற சாத னங்களாம். இக்காரணம்பற்றியே தேவார திருவாசகம் முதலிய அருட்பாக்களைச் சீவர்கள் ஓதி முத்தியடையும்பொருட்டு சீவன் முத்தர்களாகிய மகான்கள் திருவாய்மலர்ந்தருளினுர்கள்.

அருணகிரிநாதசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய திருப் புகழ்ப் பாக்களும் அருட்பாக்களாம். தேவார திருவாசகங்கள் சிவனைத் துதிக்கும் அருட்பாக்கள். திருப்புகழ் முருகக்கடவுளைத் துதிக்கும் அருட்பாக்கள். முருகக்கடவுள் அப்பரமசிவனேயன்றி வேறெருவரல்லர். குமரவடிவங்கொண்டு சுப்பிரமணியர் முதலாய திவ்வியநாமங்களோடும்நின்று விளங்குகின்றவர் சிவனே. சிவன் ஐந் தொழிற்குரியனவாய பல மூர்த்தங்களை எய்தினுலும், அவையெல் லாம் குணகுணிபாவமாயுடனிற்குந் தமது சத்தியிற் காணப்படுவன வாகலின், அவைபற்றித் தந்தன்மை வேறுபட்டு விகாரியாவாரல்லர். இவ்வுண்மைபற்றியே பதிநூல்களெல்லாம் சிவனே குகன், குகனே சிவன் எனக் கூறும்.

"ஈசனேயவனுடலான்மதலையாயினன்கா
ணுசிலாவவனறுமுகத்துண்மையாலறிநீ
பேசிலாங்கவன்பரனெடுபேதகனல்லன்
றேசுலாவகன்மணியினடக்கதிர்வருதிறம்போல்."

என்றும்,

முகவுரை.

" ஆதலின் மதுசத்திய முருகனவனும்யாமும்
பேதகமன்றனம்போற்பிரிவிலன்யாண்டுநின்று
னே தமில்குழவிபோல்வான்யாவையுமுணர்ந்தான்சீரும்
போதமுமழிவில்வீடும்போற்றினர்க்கருளவல்லான்."

ன்றும், கந்தபுராணம் கூறும். அநுபூதிச்செல்வராகிய அருணகிரி நாதசுவாமிகளும் குகனே சிவன் எனப் பாடியருளினர். (பார்: ட்டு. 25, 82, 99, 141, 142.)

அருட்பாக்களாகிய திருப்புகழ்ப் பாசுரங்களின் தொகை திறுமயிரம் என்ப தற்காலங் கிடைத்தவை 1231 பாசுரங்களே. வைகள் இரண்டுபாகமாக அச்சிடப்பட்டு வழங்கிவருகின்றன. ராயணஞ்செய்வோருக்கு உபயோகமாகும் என்றெண்ணி விநா கக்கடவுள்பேரில் இரு பாக்களும், முருகக்கடவுள்பேரில் 148 ாக்களுமாகத் திரட்டப்பட்ட இத்திரட்டு "துதி" முதல் "முத்தி" றகி 25 பிரிவுகளாக வகுக்கப்பட்டிருக்கின்றன. இதனுடன் ருப்பதவுரை என ஓர் உரையும் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

கலியுகவரதராகிய முருகக்கடவுளுடைய அரும்பெருப் புக ாகிய திருப்புகழை நியமமாகப் பாராயணஞ்செய்யும் அடியார்கள் ம்மையில் விரும்பிய பாக்கியங்களையெல்லாம்பெற்று மறுமையில மாக்ஷமடைவார்கள் என்பதற்கு யாதோர் ஐயமும் இல்லை.

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் னணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீ ரடியா ரெல்லாம்.

[illegible] - 1361 [illegible]

# பொருளடக்கம்.

அருணகிரிநாதசுவாமிகள் சரித்திரசுருக்கம் I-III
திருப்புகழ்ச்சிறப்பு. ... .. V
முருகக்கடவுள் துதி. ... . VI

விநாயகக்கடவுள்

பாட்டு.
துதி .. .. ... ... 1 - 2

சுப்பிரமணியக்கடவுள்

1. துதி .. .. .. ... 3 - 7
2. அருள்வேண்டல் ... .. .. 8 - 15
3. பிரபஞ்சவெறுப்பு ... ... .. 16 - 18
4. அறிவுறுத்தல் .. .. ... 19 - 22
5. விண்ணப்பம் .. . ... 23 - 33
6. நோயற்றவாழ்வு .. ... ... 34
7. முறையீடு ... .. .. 35 - 42
8. பரத்தையர்வெறுப்பு .. ... 43 - 44
9. பிறவிவேண்டாமை ... ... 45 - 47
10. மறுபிறப்பு ... ... ... 48
11. அந்தியகாலம் ... ... ... 49 - 56
12. திருவடிக்கிரங்கல் .. ... ... 57 - 69
13. திருவடிக்கன்பு . ... ... 70 - 79
14. சிவஞானம் .. ... ... 80 - 85
15. தெரிசனம் ... .. ... 86 - 98
16. ஞானோபதேசம் ... ... ... 99-109
17. பத்திவைராக்கியம் .. ..110
18. பூசை ... . ... ...111-112
19. அடியார் ... ... ...113-115
20. சுதந்திரமின்மை ... ... ...116-117
21. அநுபூதி .. ... ... ...118-121
22. சிவயோகம் ... .. .. 122-133
23. மனோலயசமாதி .. ... ...134-135
24. அத்துவிதமௌனம் .. ...136-141
25. முத்தி ... .. ... ...142-150

பக்கம்.
அரும்பதவுரை ... ... ... 95-208
பிழைதிருத்தம் ... ... ...209
ஸ்தலஅகராதி ... ... ...210
பாட்டுமுதற்குறிப்பகராதி ... ...211-212

# அ ரு ண கி ரி நா த சு வா மி க ள்

# சரித்திரச் சுருக்கம்.

அருணகிரிநாதசுவாமிகள் ஏறக்குறைய இற்றைக்கு நானூறு வருடங்களுக்கு முன்னே (பிரபுடதேவராயர் II காலத்திலே) திருவண்ணாமலையிலே திருவவதாரஞ்செய்தருளினார்.

இளமைப்பருவத்திற் சிற்றின்பவிஷயத்திலே உழன்று, அதனால் வறுமை பிணி முதலியன அடைந்து மிகத் துன்புறும்போது, முன்னைத தவப்பேற்றால் முருகக்கடவுள் குருவடிவங்கொண்டு தோன்றித், தமது திருவடிகளை அவர்சிரசின்மேற் சூட்டி, ஜெபமாலையும் ஒன்று கொடுத்துப், பிரபஞ்சவிஷயங்களாற் சஞ்சலமுறா வண்ணம், மன வாக்குகளுக்கு எட்டாததாய், மெய்ஞ்ஞானியர்களாலும் உணர்தற்கரியதான "சும்மா இரு சொல்லற" என்னும் மௌனோபதேசத்தையுஞ்செய்தருளித், திருப்புகழ் எனப் பெயரிய சந்தப் பாவினைப் பாடுந் திறத்தையுங் கொடுத்தருளினார்.

இவ்வாறு மெய்ஞ்ஞான உபதேசம்பெற்ற அருணகிரிநாதசுவாமிகள் பின்னர்த் திருவண்ணாமலையினின்றும் நீங்கித் தெற்கேயுள்ள சிவஸ்தலந்தோறும் முருகக்கடவுளுடைய திருப்புகழ்களைப் பாடிக்கொண்டு வந்து, திரிசிராப்பள்ளிக்கடுத்த வயலூர் என்னும் க்ஷேத்திரத்தை அடைந்தனர். திருவண்ணாமலையில் அநுக்கிரகித்த முருகக்கடவுள் பின்னர் வயலூரிலும் அவரைத் தடுத்தாட்கொண்டு, தமது திருவடியைப் பின்னுஞ் சூட்டித் "திருப்புகழை விருப்பொடு நித்தமும் உரைத்தி" எனக் கட்டளையிட்டருளினார். அருணகிரிநாதசுவாமிகளுக்கு வயலூரின்மீதிருந்த பற்றுக்கு அளவுகிடையாது. முருகக்கடவுளின் கட்டளைப்படி வேறு தலங்களிற் பாடிய திருப்புகழ்ப்பாடல்களிலும் "வயலூரா" என மறவாது துதிப்பர். வயலூரிற்றங்கியிருந்த சுவாமிகளுக்கு முன்னர் முருகக்கடவுள் ஓர் அற்புதக்கோலத்தோடு தோன்றி "நாம் உறைதரு பருப்பதம் திருவிராலிமலை, ஆண்டுவருதி" எனக் கட்டளையிட்டு மறைந்தருளினர். முருகக்கடவுளின் கட்டளையைச் சிரமேற்கொண்டு விராலிமலைக்குச்சென்று அவரைத் தரிசனஞ்செய்து மனங்கசிந்துருகித் துதித்து சிலநாள் அங்கே வதிந்திருந்து, பின்னர்ப் பழனிமலைக்குச் சென்றனர். பழனிமலையிலிருக்கும்போது சுவாமிகளுக்கு ஓர் அரிய நண்பர் கிடைத்தனர். அவரூர் கவிசை.

அவரைக் கலிசைச்சேவகன் என்றும் காவேரிச்சேவகன் என்றும் நமது சுவாமிகள் கூறுவர். இக்கலிசைச் சேவகனார் சுவாமிகளாலே பாராட்டப்பட்டிருத்தலின், முருகக்கடவுளிடத்தில் அவருக்கிருந்த பத்தி அளவிடற்கரியது என்பது பெறப்படும். முருகக்கடவுளைப் பழனியிலிருந்த திருக்கோலத்தோடுந் தரிசிக்கவேண்டி, கலிசைச் சேவகனார் "வீரை" என்னுந் தலத்திலே கோயிலொன்று கட்டுவித்துப் பழனிநாதர்போலத் திருவுருவும் ஒன்று சமைத்து அம்மூர்த்தியை வழிபடுவாராயினர்.

அப்பால் நமது சுவாமிகள் பழனியினின்றும் புறப்பட்டுக் கீழ்த்திசையிலுள்ள கொடுங்குன்றம் முதலிய தலங்களையும், தென்றிசையிலுள்ள திருச்செந்தூர் முதலிய தலங்களையும், ஈழநாட்டுத் தலங்களையுந் தரிசனஞ்செய்து துதித்துப், பின்னும் வடதிசை நோக்கித் திரும்பிப் பல தலங்களையும் பாடித் துதித்து, வடக்கே காஞ்சீபுரம் திருத்தணிகை வள்ளிமலை காளத்தி ஸ்ரீசைலம் காசி முதலிய தலங்களுக்குந் திருப்புகழ் பாடியபின் மீண்டு திருவண்ணாமலைக்கு வந்துசேர்ந்தனர்.

இலக்கண இலக்கியம் நன்கு கற்றவராகிய வில்லிபுத்தூராருக்கும் சுவாமிகளுக்கும் ஒருமுறை வாதமுண்டாயிற்றென்றும், அப்போது சுவாமிகளால் ஆசுகவியாகக் கந்தரந்தாதி என்னும் நூல் பாடப்பட்டது என்றும், அந்நூலுக்கு அவ்வில்லிபுத்தூராரே உரை செய்துவந்தனரென்றும், அதில் "திதததத்தத்" என்று தொடங்குஞ் செய்யுளுக்கு வில்லிபுத்தூரார் உரைகூறமாட்டாது திகைத்துத் தோல்வியுற்றனரென்றும், அதற்குச் சுவாமிகளே உரையருளிச் செய்தனரென்றும், ஏனைய செய்யுள்களுக்கும் வில்லிபுத்தூராரே உரைசெய்துமுடித்தனரென்றும் ஆன்றோர் கூறுப.

அருணகிரிநாதசுவாமிகளோடு வாதஞ்செய்தவர் வேறும் ஒருவருண்டு. அவர்பெயர் சம்பந்தாண்டார். அவருக்கும் இவருக்கும் வாதமுண்டானபோது இவ்விருவரிலே தாம் உபாசிக்கும் மூர்த்தியை இச்சபையில் வரவழைப்பவர் எவரோ அவரே வென்றவராவர் என அரசன் கூற, சம்பந்தாண்டார் தம் உபாசனாதேவியாகிய பார்வதியாரை வரவழைக்கிறேன் என்றார். நமது சுவாமிகள் தம் உபாசனாமூர்த்தியாகிய முருகக்கடவுளை வரவழைக்கிறேன் என்றனர். தேவியார் வந்து தோற்றாமையாற் சம்பந்தாண்டார் அபசயமடைந்தார். முருகக்கடவுள் அரசசபையில் வந்து தோன்றிக் காட்சிகொடுக்க நமது சுவாமிகள் வெற்றியடைந்தார். மேற்கூறியவையெல்லாம் திருப்புகழ்ப் பாடல்களினாலுந் தெரிகின்றன.

அபசயமடைந்த சம்பந்தாண்டார் யாதேனும் ஒரு சூழ்ச்சி யாலாவது வெல்லக் கருதித் தேவுலகத்துள்ள பாரிசாதமலரைக் கொண்டுவரக்கூடுமோ என வினவ, நமது சுவாமிகள் நான் கொண்டு வருவேன் என்று சொல்லித் தம்முடலை அருணைக் கோபுரத்துட் கிடக்கவிட்டு, ஒரு கிளியுருவெடுத்தந்த தேவுலகஞ் சென்று பாரி சாதமலர்கொண்டு மீண்டனர். இவர் மீண்டுவருமுன், "அருணகிரி நாதர் இறந்தனர், அவர் உடல் திருவருணைக்கோபுரத்தின்கண் கிடக்கின்றது" என அரசனுக்கறிவித்து, அவர்திருமேனியைச் சம்பந்தாண்டார் தகிப்பித்துவிட்டனரென்றும், பின்னர் இதனை யறிந்த சுவாமிகள் கிளிவடிவமாகவே முருகக்கடவுள்மாட்டு அமர்ந்துவிட்டனரென்றும் ஆன்றோர் கூறுவர்.

சுவாமிகள் கிளிவடிவமாயிருந்தே கந்தரநுபூதி என்னும் நூலையும் இயற்றினரென்ப. இவர் இயற்றிய வேறு நூல்கள் கந்தரலங்காரம் திருவகுப்பு உடற்கூற்றுவண்ணம் என்பன. இந்நூல்களின் பெருமையை நம்மால் அளவிடமுடியாது.

இவரது வாக்கின்பிரபாவத்துக்கு,

> வாக்கிற் கருணகிரி வாதவூ ரார்கனிவில்
> தாக்கிற் றிருஞான சம்பந்தர்—நோக்கிற்கு
> நக்கீர தேவர் நயத்துக்குச் சுந்தரனார்
> சொற்குறுதிக் கப்பரெனச் சொல்.

என்னும் ஆன்றோர் செய்யுளும், பொருளமைப்பின் சிறப்புக்கு,

> ஐயா அருணகிரி அப்பா உனைப்போல
> மெய்யாக ஓர்சொல் விளம்பினர்யார்—வையகத்தோர்
> சாற்றரிதென் றேசற்றூர் தன்னையாய் முக்கணைக்கை
> நாற்றிசைக்குங் கைகாட்டி னன்.

> அறிவை யறிவதுவே யாகும் பொருளென்
> றுறுதிசொன்ன வுண்மையினை யோருநா ளெந்நாளோ.

> கந்தரநு பூதிபெற்றுக் கந்தரநு பூதிசொற்ற
> எந்தையருள் நாடி யிருக்குநா ளெந்நாளோ.

எனத் தாயுமானசுவாமிகள்சொற்ற செய்யுள்களும், தக்கசான்றும்.

சுவாமிகள் அருளிய திருப்புகழ்ப் பாசுரங்களின் தொகை பதினாறாயிரம் என்பது ஆன்றோர் துணிபு.

அவரைக் கலிசைச்சேவகன் என்றும் காவேரிச்சேவகன் என்றும் நமது சுவாமிகள் கூறுவர். இக்கலிசைச் சேவகனார் சுவாமிகளாலே பாராட்டப்பட்டிருத்தலின், முருகக்கடவுளிடத்தில் அவருக்கிருந்த பத்தி அளவிடற்கரியது என்பது பெறப்படும். முருகக்கடவுளைப் பழனியிலிருந்த திருக்கோலத்தோடு தரிசிக்கவேண்டி, கலிசைச் சேவகனார் "வீரை" என்னும் தலத்திலே கோயிலொன்று கட்டுவித்துப் பழனிநாதர்போலத் திருவுருவும் ஒன்று சமைத்து அம் மூர்த்தியை வழிபடுவாராயினர்.

அப்பால் நமது சுவாமிகள் பழனியினின்றும் புறப்பட்டுக் கீழ்த்திசையிலுள்ள கொடுங்குன்றம் முதலிய தலங்களையும், தென்றிசையிலுள்ள திருச்செந்தூர் முதலிய தலங்களையும், ஈழநாட்டுத் தலங்களையுந் தரிசனஞ்செய்து துதித்துப், பின்னும் வடதிசை நோக்கித் திரும்பிப் பல தலங்களையும் பாடித் துதித்து, வடக்கே காஞ்சீபுரம் திருத்தணிகை வள்ளிமலை காளத்தி ஸ்ரீசைலம் காசி முதலிய தலங்களுக்குந் திருப்புகழ் பாடியபின் மீண்டு திருவண்ணாமலைக்கு வந்துசேர்ந்தனர்.

இலக்கண இலக்கியம் நன்கு கற்றவராகிய வில்லிபுத்தூரருக்கும் சுவாமிகளுக்கும் ஒருமுறை வாதமுண்டாயிற்றென்றும், அப்போது சுவாமிகளால் ஆசுகவியாகக் கந்தரந்தாதி என்னும் நூல் பாடப்பட்டது என்றும், அந்நூலுக்கு அவ்வில்லிபுத்தூரரே உரை செய்துவந்தனரென்றும், அதில் "திதத்ததத்த" என்று தொடங்குஞ் செய்யுளுக்கு வில்லிபுத்தூரர் உரைகூறமாட்டாது திகைத்துத் தோல்வியுற்றனரென்றும், அதற்குச் சுவாமிகளே உரையருளிச் செய்தனரென்றும், ஏனைய செய்யுள்களுக்கும் வில்லிபுத்தூரரே உரைசெய்துமுடித்தனரென்றும் ஆன்றோர் கூறுப.

அருணகிரிநாதசுவாமிகளோடு வாதஞ்செய்தவர் வேறும் ஒருவருண்டு. அவர்பெயர் சம்பந்தாண்டார். அவருக்கும் இவருக்கும் வாதமுண்டானபோது இவ்விருவரிலே தாம் உபாசிக்கும் மூர்த்தியை இச்சபையில் வரவழைப்பவர் எவரோ அவரே வென்றவராவர் என அரசன் கூற, சம்பந்தாண்டார் தம் உபாசனாதேவியாகிய பார்வதியாரை வரவழைக்கிறேன் என்றார். நமது சுவாமிகள் தம் உபாசனாமூர்த்தியாகிய முருகக்கடவுளை வரவழைக்கிறேன் என்றனர். தேவியார் வந்து தோற்றாமையாற் சம்பந்தாண்டார் அபசயமடைந்தார். முருகக்கடவுள் அரசசபையில் வந்து தோன்றிக் காட்சிகொடுக்க நமது சுவாமிகள் வெற்றியடைந்தார். மேற்கூறியவையெல்லாம் திருப்புகழ்ப் பாடல்களினாலுந் தெரிகின்றன.

அபசயமடைந்த சம்பந்தாண்டார் யாதேனும் ஒரு சூழ்ச்சியாலாவது வெல்லக் கருதித் தேவுலகத்துள்ள பாரிசாதமலரைக் கொண்டுவரக்கூடுமோ என வினவ, நமது சுவாமிகள் நான் கொண்டு வருவேன் என்று சொல்லித் தம்முடலை அருணைக் கோபுரத்துட் கிடக்கவிட்டு, ஒரு கிளியுருவெடுத்தது தேவுலகஞ் சென்று பாரிசாதமலர்கொண்டு மீண்டனர். இவர் மீண்டுவருமுன், "அருணகிரிநாதா இறந்தனர், அவர் உடல் திருவருணைக்கோபுரத்தின்கண் கிடக்கின்றது" என அரசனுக்கறிவித்து, அவர்திருமேனியைச் சம்பந்தாண்டார தகிப்பித்துவிட்டனரென்றும், பின்னர் இதனையறிந்த சுவாமிகள் கிளிவடிவமாகவே முருகக்கடவுள்மாட்டு அமர்ந்துவிட்டனரென்றும் ஆன்றோர் கூறுவர்.

சுவாமிகள் கிளிவடிவமாயிருந்தே கந்தரநுபூதி என்னும் நூலையும் இயற்றினரென்ப. இவர் இயற்றிய வேறு நூல்கள் கந்தரலங்காரம் திருவகுப்பு உடற்கூற்றுவண்ணம் என்பன. இந்நூல்களின் பெருமையை நம்மால் அளவிடமுடியாது.

இவரது வாக்கின்பிரபாவத்துக்கு,

> வாக்கிற் கருணகிரி வாதவூ ரார்கனிவில்
> தாக்கிற் றிருஞான சம்பந்தர்—நோக்கிற்கு
> நக்கீர தேவர் நயத்துக்குச் சுந்தரனார்
> சொற்குறுதிக் கப்பரெனச் சொல்.

என்னும் ஆன்றோர் செய்யுளும், பொருளமைப்பின் சிறப்புக்கு,

> ஐயா அருணகிரி அப்பா உனைப்போல
> மெய்யாக ஓர்சொல் விளம்பினர்யார்—வையகத்தோர்
> சாற்றறிதென் றேசற்றார் தன்னையாய் முக்கணெந்தை
> நாற்றிசைக்குங் கைகாட்டி னான்.

> அறிவை யறிவதுவே யாகும் பொருளென்
> றுறுதிசொன்ன வுண்மையினை யோருநா ளெந்நாளோ.

> கந்தரநு பூதிபெற்றுக் கந்தரநு பூதிசொற்ற
> எந்தையரு ளாடி யிருக்குநா ளெந்நாளோ.

எனத் தாயுமானசுவாமிகள்சொற்ற செய்யுள்களும், தக்கசான்றாம்.

சுவாமிகள் அருளிய திருப்புகழ்ப் பாசுரங்களின் தொகை பதினாறாயிரம் என்பது ஆன்றோர் துணிபு.

# திருப்புகழ்ச் சிறப்பு.

## நூற்சிறப்பு.

வேதம்வேண் டாஞ்சகல வித்தைவேண் டாங்கீத
நாதம்வேண் டாம்ஞான நூல்வேண்டாம்—ஆதி
குருப்புகழை மேவுகின்ற கொற்றவன்றாள் போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்.

## நூற்பயன்.

ஞானம் பெறலாம் நலம்பெறலாம் எந்நாளும்
வானம் அரசாள் வரம்பெறலாம்—மோனவீ
டேறலாம் யானைக் கிளையான் திருப்புகழைக்
கூறினர்க் காமேயிக் கூறு.

ஆறுமுகந் தோன்றும் அழகியவேல் தோன்றுமவன்
ஏறுமயில் தோன்று மெழில்தோன்றும்—சீறிவரு
சூரன் முடியைத் துணித்தோன் திருப்புகழைப்
பாரில் வழுத்தினோர் பால்.

ஓராறு மாமுகனும உச்சிதமெய்ஞ் ஞானகுகனை
பேரா லருணகிரி பேருலகில்—சீராரும்
தோத்திரம தாகத் துதிக்குந் திருப்புகழை
ஏத்தினவ ரீடேறு வார்.

அருணகிரி நாதர்பதி னாறா யிரமென்
றுரைசெய் திருப்புகழை யோதீர்—பரகதிக்கஃ
தேணி யருட்கடலுக் கேற்ற மனத்தளர்ச்சிக்
காணி பிறவிக் கரம்.

திருப்புகழைக் கற்கத் திருப்புகழைக் கேட்கத்
திருப்புகழை நித்தஞ் செபிக்கத்—திருப்புகழை
அர்ச்சிக்க முத்தியெளி தாகுமே கூற்றைவென்று
கெர்ச்சிக்க லாமே கெடீ.

# முருகக்கடவுள் துதி.

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசல மமர்ந்தபெரு மாளே.

சிவமயம்.

அருணகிரிநாதர்

அருளிச்செய்த

# திருப்புகழ்.

## விநாயகக்கடவுள்.

### துதி.

1. தத்தன தனதன தத்தன தனதன
தத்தன தனதன தனதான.

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்,
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ!
கற்பக! மெனவினை கடிதேகும்;
மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகன்,
மற்பொரு திரள்புய மதயானை,
மத்தள வயிறனை, உத்தமி புதல்வனை,
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே.
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே!
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா!
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை யிபமாகி,
அக்குற மகளுட னச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே! (க)

2. தந்ததனத் தானதனத் தனதான.

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி,
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி,
இன்பரசத் தேபருகிப் பலகாலும்,
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே;
தம்பிதனக் காகவனத் தணைவோனே!
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே!
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே!
ஐந்துகரத் தானைமுகப் பெருமானே! (உ)

---

# முருகக்கடவுள்.

## I. துதி. /68

3. தனன தனதனன தனன தனதனன
தனன தனதனன தனதான.

கடலை பொரியவரை பலக னிகழைநுகர்
கடின குடவுதர, விபரீத
கரட தடமுமத, நளின சிறுநயன,
கரிணி முகவரது துணைவோனே!
வடவ ரையின்முகடு அதிர, வொருகொடியில்
வலம்வ ருமரகத மயில்வீரா!
மகப திதருசுதை, குறமி னொடிருவரு,
மருவு சரசவித மணவாளா!
அடல சுரர்கள்குல முழுது மடிய,வுய
ரமரர் சிறையைவிட, எழில்மீறும்
அருண கிரணவொளி யொளிரு மயிலைவிடு,
மரக ரசரவண பவலோலா!
படல வுடுபதியை யிதழி யணிசடில
பசுப தி,வரநதி, அழகான
பழநி மலை,யருள்செய் மழலை மொழிமதலை,
பழநி மலையில்வரு, பெருமாளே! (க)

---

துதி

தனதன தனதன தனதன தனதன
தனதன தனதன தனதான.

அரகர சிவனரி அயனிவர் பரவிமு
னறுமுக சரவண பவனேயென்
றநுதின மொழிதர, அசுரர்கள் கெட,அயி
லனலென எழவிடு மதிவீரா!
பரிபுர கமலம தடியிணை, யடியவ
ருளமதி லுறவருள், முருகேசா!
பகவதி வரைமகள் உமைதர வருகுக!
பரமன திருசெவி களிகூர
உரைசெயு மொருமொழி, பிரணவ முடிவதை,
உரைதரு குருபர! வுயர்வாய
உலகம னலகில வுயிர்களு, மிமையவ
ரவர்களு, முறுவர முநிவோரும்,
பரவிமு னநுதின மனமகிழ் வுறவணி
பணிதிகழ் தணிகையி லுறைவோனே!
பகர்தரு குறமகள் தருவமை வனிதையு
மிருபுடை யுறவரு பெருமாளே! (உ

5. தனதனன தான தனதனன தான
தனதனன தானத தனதாந.

திருமகளு லாவு மிருபுயமு ராரி
திருமருக நாமப் பெருமாள்காண்,
செகதலமும் வானு மிருதிபெறு பாடல்
தெரிதருகு மாரப் பெருமாள்காண்,
மருவுமடி யார்கள் மனதில்விளை யாடு
மரகதம யூரப் பெருமாள்காண்,
மணிதரளம் வீசி யணியருவி சூழ
மருவுகதிர் காமப் பெருமாள்காண்,
அருவரைகள் நீறு படஅசுரர் மாள
அமர்பொருத வீரப் பெருமாள்காண்,
அரவுபிறை வாரி விரவுசடை வேணி
அமலர்குரு நாதப் பெருமாள்காண்,

இருவினையி லாத தருவினைவி டாத
இமையவர்கு லேசப பெருமாள்காண்,
இலகுசிலை வேடர் கொடியினதி பார
இருதனவி நோதப் பெருமாளே! (௫)

---

6. தனனதன தான தனனதன தான
590 தனனதன தானத் தனதான.

கனகசபை மேவு மெனதுகுரு நாத
கருணைமுரு கேசப் பெருமாள்காண்,
கனகநிற வேத னபயமிட மோது
கரகமல சோதிப் பெருமாள்காண்,
வினவுமடி யாரை மருவிவிளை யாடு
விரகுரச மோகப் பெருமாள்காண்,
விதிமுநிவர் தேவ ரருணகிரி நாதர்,
விமலசர சோதிப் பெருமாள்காண்,
சனகிமண வாளன் மருகனென வேத
சதமகிழ்கு மாரப் பெருமாள்காண்,
சரணசிவ காமி யிரணகுல காரி
தருமுருக நாமப் பெருமாள்காண்,
இனிதுவன மேவு மமிர்தகுற மாதொ
டியல்பரவு காதற் பெருமாள்காண்,
இணையிலிப தோகை மதியின்மக ளோடு
மியல்புலியுர் வாழ்பொற் பெருமாளே. (௬)

7. தான தானன தனன தனதன 741
தான தானன தனன தனதன
தான தானன தனன தனதன தந்ததான.

காணொ ணாதது உருவோ டருவது,
பேசொ ணாதது உரையே தருவது,
காணு நான்மறை முடிவாய் நிறைவது, பஞ்சபூதக்
காய பாசம தனிலே யுறைவது,
மாய மாயுட லறியா வகையது,
காய மானவ ரெதிரே யவரென வந்துபேசிப்

பேறெ ணுதது, வெளியேய் ஒளியது,
மாய னாய னறியா வகையது,
பேத பேதமொ டுலகாய் வளர்வது, விந்துநாதப்
பேரு மாய்,கலை யறிவாய், துரியவ
தீத மானது, வினையேன் முடிதவ
பேறு மா,யருள் நிறைவாய் விளைவது, ஒன்றுநீயே;
வீறெ ணுதெனை அமையா தசுரரை
நூறி யேயுயிர் நமனீ கொளுவென
வேல்க டாவிய கரனே! யுமைமுலை யுண்டகோவே!
வேத நான்முக மறையோ னெடும்விளை
யாடி யேகுடு மியிலே கரமொடு
வீற மோதின மறவா! குறவர்கு றிஞ்சியூடே
சேறெ ணுயிடு மிதண்மே லரிவையை
மேவி யேமயல் கொளலீ லைகள்செய்து
சேர நாடிய திருடா! அருட்கு கந்தவேளே!
சேரொ ணுவகை வெளியே திரியுமெய்ஞ்
ஞான யோகிக ளுளமே யுறைதரு
தேவ னூர்வரு குமரா! வமரர்கள் ம்பிரானே! (௫)

---

## II. அருள்வேண்டல்.

---

8\. தனனதந்த தததத்த தந்த
தனனதந்த தத்தத்த தந்த
தனனதந்த தத்தத்த தந்த தனதான.

கருவடைந்து பத்துற்ற திங்கள்
வயிறிருந்து முற்றிப்ப யின்று
கடையில்வந்து தித்துக்கு ழந்தை வடிவாகிக்,
கழுவியங்கெ டுத்துச்சு ரந்த
முலையருந்து விக்கக்கி டந்து
கதறியங்கை கொட்டித்த வழ்ந்து நடமாடி,
அரைவடங்கள் கட்டிச்ச தங்கை
யிடுகுதம்பை பொற்சுட்டி தண்டை
அவையணிந்து முற்றிக்கி ளர்ந்து வயதேறி,

அரியபெண்கள் நட்பைப்பு ணர்ந்து,
பிணியுழன்று சுற்றித்தி ரிந்த
தனையு,முன்க்ரு பைச்சித்த மென்று பெறுவேனோ?
இரவியிந்த்ரன் வெற்றிக்கு ரங்கி
னரசரென்று, மொப்பற்ற வுந்தி
யிறைவனெண்கி னக்கர்த்த னென்றும், நெடுநீலன்
எரியதென்றும், ருத்ரன்சி றந்த
அநுமனென்றும், ஒப்பற்ற அண்டர்
எவருமிந்த வர்க்கத்தில் வந்து புனமேவ,
அரியதன்ப டைக்கர்த்த ரென்று
அசுரர்தங்கி ளைக்கட்டை வென்ற
அரிமுகுந்தன் மெச்சுற்ற பண்பின் மருகோனே!
அயனையும்பு டைத்துச்சி னந்து
உலகமும்ப டைத்துப்ப ரிந்து
அருள்பரங்கி ரிக்குட்சி றந்த பெருமாளே! (க)

9. தனதான தந்தனத் தனதானா.

* அபசார நிந்தைபட் டுழலாதே,
அறியாத வஞ்சரைக் குறியாதே,
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநானி னைந்தருட் பெறுவேனோ?
இபமாமு கன்தனக் கிளையோனே!
இமவான்ம டந்தையுத் தமிபாலா!
ஜெபமாலை தந்தசற் குருநாதா!
திருவாவி னன்குடிப் பெருமாளே! (உ)

10. தனதனன தானந்த தத்ததன தானதன
தனதனன தானந்த தத்ததன தானதன
தனதனன தானந்த தத்ததன தானதன தனதானா.

சுருதிமுடி மோனஞ்சொல் சிற்பரம! ஞானசிவ
சமயவடி விரய்வந்த, அத்துவித மான,பர [வே!
சுடரொளிய தாய்நின்ற, நிட்களசொ ரூபமுத லொருவாழ்

* "அபகாரநிந்தை" என்றும் பாடம்.

துரியநிலை யேகண்ட முத்தரித யாகமல
மதனில்விளை யாநின்ற அற்புதசு போதசுக
சுயபடிக மாவின்ப பத்மபத மேவுடைய உணராதே,
கருவிலுரு வேதங்கு சுக்கிலநி தானவளி
பொருமவதி லேகொண்ட முக்குணவி பாகநிலை
கருதவறி யாவஞ்ச கக்கபட மூடியுடல் வினைதானே
கலகமிட வேபொங்கு குப்பைமல வாழ்வுநிஜ
மெனவுழலு, மாயஞ்செ னித்தகுகை யேஉறுதி
கருதசுழ மாமிந்த மட்டைதனை யாளஉன தருள்தாராய்;
ஒருநியம மேவிண்ட சட்சமய வேத! அடி
முடிநடுவு மாயண்ட முட்டைவெளி யாகியுயி
ருடலுணர்வ தாயெங்கு முற்பனம தாகஅம ருளவோனே!
உததரிச மாமின்ப புத்தமிர்த போகசுக
முதவுமம லாநந்த! சத்திகர! மேவுணர
வுருபிரண வாமந்த்ர கர்த்தவிய மாகவரு குருநாதா!
பருதிகதி ரேகொஞ்சு நற்சரண நூபுரம
தசையநிறை பேரண்ட மொக்கநட மாடுகன
பத! கெருவி தா! துங்க வெற்றிமயி லேறுமொரு திறலோனே!
பணியுமடி யார்சிந்தை மெய்ப்பொருள தாகநில்
சரவணப வாவொன்று வற்கரமு மாகிவளர்
பழநிமலை மேனின்ற சுப்ரமணி யா! வமரர் பெருமாளே! (௰)

---

11. தாத்தன தத்தன தானன தானன
291 தாத்தன தத்தன தானன தானன
தாத்தன தத்தன தானன தானன தனதான.

தாக்கம ருக்கொரு சாரையை, வேறொரு
சாக்ஷிய றப்பசி யாறிலை, கீறிடு
சாஸ்த்ரவ ழிக்கதி தூரனை, வேர்விழு தவமூழ்கும்
தாற்பர்ய மற்றுழல் பாவியை, நாவலர்
போற்பரி வுற்றுனை யேகரு தாதிகல்
சாற்றுத மிழ்க்குரை ஞானியை, நாள்வரை தடுமாறிப்
போக்கிட மற்றவரு தாவனை, ஞானிகள்
போற்றுத லற்றது ரோகியை, மாமருள்
பூத்தம லத்ரய பூரியை, நேரிய புலையேனைப்,

போக்கிவி டக்கட னோ?நர கோகதி?
போய்ப்பெறு கைக்கிலை யோகதி? யானது
போரசசுடா வஜ்ரவை வேலமயி லா! அருள் புரிவாயே
மூக்கறை மட்டைம காபல காரணி,
சூர்ப்பன கைப்படு மூளியு தாசனி
மூர்க்ககு லத்திவி பீஷணர் சோதரி முழுமோடி,
மூத்தவ ரக்கனி ராவண னோடியல்
பேற்றிவி டக்,கம லாலய சீதையை,
மோட்டன்வ ளைத்தொரு தேர்மிசை யேகொடு முகிலேபோய்,
மாக்கன சித்திர கோபுர நீள்படை
வீட்டிலி ருத்திய நா,ளவன் வேரற
மார்க்கமு டித்தவி லாளிகள் நாயகன் மருகோனே!
வாச்சிய மத்தள பேரிகை, போல்மறை
வாழ்த்த,ம லர்க்கமு நீர்தரு நீள்சுனை
வாய்த்த,தி ருத்தணி மாமலை மேவிய பெருமாளே! (௪)

---

12. தான தந்தன தானன தானன
தான தந்தன தானன தானன
தான தந்தன தானன தானன தனதான.

நாத விந்துக லாதீ! நமோநம,
வேத மந்த்ரசொ ரூபா! நமோநம,
ஞான பண்டித ஸாமீ! நமோநம, வெகுகோடி
நாம சம்புகு மாரா! நமோநம,
போக அந்தரி பாலா! நமோநம,
நாக பந்தம யூரா! நமோநம, பரசூரர்
சேத தண்டவி நோதா! நமோநம,
கீத கிண்கிணி பாதா! நமோநம,
தீர சம்ப்ரம வீரா! நமோநம, கிரிராஜ!
தீப மங்கள ஜோதீ! நமோநம,
தூய அம்பல லீலா! நமோநம,
தேவ குஞ்சரி பாகா! நமோநம, அருள்தாராய்;
ஈத லும்பல கோலால பூஜையும்
ஓத லுங்குண ஆசார நீதியும்
ஈர முங்குரு சீர்பாத சேவையு மறவாத,

ஏழ்த லம்புகழ் காவேரி யால்விளை
சோழ மண்டல மீதேம னோகர!
ராஜ கெம்பிர நாடாளு நாயக! வயலூரா!
ஆத ரம்பயி லாரூரர் தோழமை
சோதல் கொண்டவ ரோடேமு னாளினில்
ஆடல் வெம்பரி மீதேறி மாகயி லையிலேகி,
ஆதி யந்தவு லாவாசு பாடிய
சேரர் கொங்குவை காவூர நாடதில்
ஆவி னன்குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே! (ரு)

---

13. தனதன தானன தானன தனதன தானன தானன
தனதன தானன தானன தனதான.

சரவண சாதா!ந மோநம, கருணைய தீதா!ந மோநம,
சததள பாதா!ந மோநம, அபிராம!
தருணக'தீரா'ந மோநம, *நிருப!மர் வீரா!ந மோநம,
சமதள வூரா'ந மோநம, ஜகதீச!
பரமசொ ரூபா!ந மோநம, சுரர்பதி பூபா!ந மோநம,
பரிமள நீபா!ந மோநம, உமைகாளி
பகவதி பாலா'ந மோநம, இகபர மூலா'ந மோநம,
பவுருஷ சீலா!ந மோநம, அருள்தாராய்;
இரவியு மாகாச பூமியும் விரவிய தூளேற, வானவ
ரெவர்களு மீடேற, ஏழ்கடல் முறையோவென்
றிடாபட, மாமேரு பூதர மிடிபட வேதா,ணி சாசர
ரிகல்கெட, மாவேக நீடயில் விடுவோனே!
மரகத ஆகார ஆயனு மிரணிய ஆகார வேதனும்
வசுவெனு மாகார ஈசனு மடிபேண,
மயிலுறை வாழ்வே!வி நாயக மலையுறை வேலா!ம கீதர!
வனசர ராதார மாகிய பெருமாளே! (சு)

---

14. தானதனத தனதனன தனதான.

ஈனமிகுத துளபிறவி யணுகாதே,
யானுமுனக் கடிமையென, வகையாக

---

* "நிருபமல்வீரா" என்றும் பாடம்.

ஞானஅருட் டனையருளி, வினைதீர
நாணமகற் றியகருணை புரிவாயே;
தானதவத் தினின்மிகுதி பெறுவோனே!
சாரதியுத் தமிதுணைவ முருகோனே!
ஆனதிருப் பதிகமரு ளிளையோனே!
ஆறுதிருப் பதியில்வளர் பெருமாளே! (எ)

---

15. தனன தத்தன தாத்தன தனதான
1286 தனன தத்தன தாத்தன தனதான.

சமய பத்திவரு தாத்தனை நினையாதே,
சரண பத்மசி வார்ச்சனை தனைநாடி
அமைய, சற்குரு சாத்திர மொழிநூலால்
அருளெ னக்கினி மேற்றுணை தருவாயே.
உமைமு லைத்தரு பாற்கொடு அருள்கூறி,
உரிய மெய்த்தவ மாக்கிநல் உபதேசத்
தமிழ்த னைக்கரை காட்டிய திறலோனே!
சமண ரைக்கழு வேற்றிய பெருமாளே! (அ

---

## III. பிரபஞ்சவெறுப்பு.

16. தனனதன தான தந்த தனதான.
137

உலகபசு பாச தொந்த மதுவான,
உறவுகிளை தாயர் தந்தை மனைபாலர்,
மலசலசு வாச சஞ்ச லமதாலென்,
மதிநிலைகெ டாம லுன்ற னருள்தாராய்.
சலமறுகு பூளை தும்பை யணிசேயே!
சரவணப வா!மு குந்தன் மருகோனே!
பலகலைசி வாக மங்கள் பயில்வோனே!
பழநிமலை வாழ வந்த பெருமாளே! (க

## பிரபஞ்சவெறுப்பு.

17. தனதத்த தத்த தனதான
தனதத்த தத்த தனதான.

மனைமக்கள் சுற்ற மெனுமாயா
வலையக்க டக்க அறியாதே,
வினையிற்செ ருக்கி யடிநாயேன்
விழலுக்கி றைத்து விடலாமோ!
சுனையைக்க லக்கி விளையாடு
சொருபக்கு றத்தி மணவாளா!
தினைநற்ச ரித்ர முளதேவர்
சிறைவெட்டி விட்ட பெருமாளே!

---

18. தானதன தத்ததான தானதன தத்ததான
தானதன தத்ததான தனதான.

குட்டமீளை வாதமொடு பித்தமூல
நீள்குளிர்வெ துப்புவேறு முளநோய்கள்
நேருருப்பு ழுக்கள்கூடு, நான்முகனெ டுத்தவீடு,
நீடியவி ரத்தமூளை தசைதோல்சீ
பாரியந வத்துவார நாறுமும லத்திலாறு
பாய்பிணியி யற்றுபாவை, நரிநாய்பேய்
பாறொடுகெ ழுக்கள்கூகை தாமிவைபு சிபபதான
பாழுடலெ டுத்துவீணில் உழல்வேனோ?
நாரணிய றத்தினாரி ஆறுசம யத்திபூத
நாயகரி டத்துகாமி மகமாயி,
நாடகந டத்திகோல நீலவரு ணத்திவேத
நாயகியு மைசசிநீலி திரிசூலி,
வாரணிமு லைச்சிஞான பூரணிக லைச்சிநாக
வாணுதல ளித்தவீர மயிலோனே!
மாடமதில் முத்துமேடை கோபுரம ணைத்தசோலை
வாகுளகு றட்டிமேவு பெருமாளே! (௲)

---

ஞானஅருட் டனையருள், வினைதீர
நாணமகற் றியகருணை புரிவாயே;
தானதலத் தினின்மிகுதி பெறுவோனே!
சாரதியுத் தமிதுணைவ முருகோனே!
ஆனதிருப் பதிகமரு ளிளையோனே!
ஆறுதிருப் பதியில்வளர் பெருமாளே! (௭

---

15. தனன தத்தன தாத்தன தனதான
*1286* தனன தத்தன தாத்தன தனதான.

சமய பத்திவ்ரு தாத்தனை நினையாதே,
சரண பத்மசி வார்ச்சனை தனைநாடி
அமைய, சற்குரு சாத்திர மொழிநூலால்
அருளெ னக்கினி மேற்றுணை தருவாயே.
உமைமு லைத்தரு பாற்கொடு அருள்கூறி,
உரிய மெய்த்தவ மாக்கிநல் உபதேசத்
தமிழ்த னைக்கரை காட்டிய திறலோனே!
சமண ரைக்கழு வேற்றிய பெருமாளே! (௮

---

## III. பிரபஞ்சவெறுப்பு.

16. *137* தனனதன தான தந்த தனதான.

உலகபசு பாச தொந்த மதுவான,
உறவுகிளை தாயர் தந்தை மனைபாலர்,
மலசலசு வாச சஞ்ச லமதாலென்,
மதிநிலைகெ டாம லுன்ற னருள்தாராய்.
சலமறுகு பூளை தும்பை யணிசேயே!
சரவணப வா!மு குந்தன் மருகோனே!
பலகலைசி வாக மங்கள் பயில்வோனே!
பழநிமலை வாழ வந்த பெருமாளே! (௪

---

17. தனதத்த தத்த தனதான
தனதத்த தத்த தனதான.

மனைமக்கள் சுற்ற மெனுமாயா
வலையக்க டக்க அறியாதே,
வினையிற்செ ருக்கி யடிநாயேன்
விழலுக்கி றைத்து விடலாமோ!
சுனையைக்க லக்கி விளையாடு
சொருபக்கு றத்தி மணவாளா!
தினைநற்ச ரித்ர முளதேவர்
சிறைவெட்டி விட்ட பெருமானே! (௨)

---

18. தானதன தத்ததான தானதன தத்ததான
தானதன தத்ததான தனதான.

நீரிழிவு குட்டமீளை வாதமொடு பித்தமூல
நீள்குளிர்வெ துப்புவேறு முளநோய்கள்
நேருருபு ழுக்கள்கூடு, நான்முகனெ டுத்தவீடு,
நீடியவி ரத்தமூளை தசைதோல்சீ
பாரியந வத்துவார நாறுமும லத்திலாறு
பாய்பிணியி யற்றுபாவை, நரிநாய்பேய்
பாறுடுகெ ழுக்கள்கூகை தாமிவைபு சிப்பதான
பாழுடலெ டுத்துவீணில் உழல்வேனோ?
நாரணிய றத்திநாரி ஆறுசம யத்திபூத
நாயகரி டத்துகாமி மகமாயி,
நாடகந டத்திகோல நீலவரு ணத்திவேத
நாயகியு மைச்சிநீலி திரிசூலி,
வாரணிமு லைச்சிஞான பூரணிக லைச்சிநாக
வாணுதல ளித்தவீர மயிலோனே!
மாடமதில் முத்துமேடை கோபுரம ணத்தசோலை
வாகுளகு றட்டிமேவு பெருமானே! (௩)

---

## IV அறிவுறுத்தல்.

19. தந்தானன தானன தாத்தன
330 தந்தானன தானன தாததன
தந்தானன தானன தாததன தனதான.

அந்தோமன மேநம தாக்கையை
நம்பாதெயி தாகித ரூத்திர,
மம்போருக ஞடிய பூட்டிது, இனிமேல்நாம்
அஞ்சாதமை யா,கிரி யாக்கையை
பஞ்சாடிய வேலவ ஞர்க்கிய
லங்காகுவம் வா,இனி தாக்கையை ஒழியாமல்
வந்தோ,மிது வேகதி, யாட்சியு
மிந்தா,மயில் வாகனர் சீடிது,
வந்தாளுவம் நாமென வீக்கிய சிவநீறும்,
வந்தேவெகு வாநமை யாட்கொளு
வந்தார்மத மேதினி மேற்கொள
மைந்தாகும ராவெனு மாாபபுய மறவாதே
திந்தோதிமி திதத மாத்துடி
தநதாதன ஞதன தாத்தன
செம்பூரிகை பேரிகை யார்த்தெழ மறையோத,
செங்காடென வேவரு மூர்ககரை
சங்காரசி காமணி! வேற்கொடு
திண்டாடிம காமயில் மேற்கொளு முருகோனே!
இந்தோடிதழ் நாகம காக்கடல
கங்காளமி ஞர்சடை சூட்டிய
என்தாதைச தாசிவ கோத்திர னருள்பாலா!
எண்கூடரு ளாலநெளவி நோக்கியை
நன்பூமண மேவிசி ராபபளி
யெனபாாமன மேதினி நோககிய பெருமாளே! (க)

---

424 20. தானதன தானத் தனதான, தானதன தானத் தனதான.

மாதர்வச மாயுற் றுழல்வாரும், மாதவமெ ஞடீற் றிரிவாரும்,
தீதகல வோதிப பணியாரும், தீநரக மீதிற் றிகழ்வாரே;
காதவொளி யே!நற் குணசீலா! நாரியிரு வோரைப் புணாவேலா!
சோதிசிவ ஞானக் குமரேசா! தோமில்கதிர் காமப் பெருமாளே!

---

21. தான தானனு தான தானத் தனதான.
1631

காதி மோதிவா தாடு நூல்கற் றிடுவோருங்,
காசு தேடியீ யாமல் வாழப் பெறுவோரும்,
மாது பாகர்வாழ் வேயெ னுநெக குருகாரும்,
மாறி லாதமா கால னூர்புக் கலைவாரே.
நாத ரூப!மா நாத ராகத் துறைவோனே!
நாக லோகமீ ரேழு பாருக் குரியோனே!
நீதி லாதவேல் வீர! சேவற் கொடியோனே!
தேவ தேவ!தே வாதி தேவப் பெருமாளே! (௫)

---

22. தான தத்தன தானன தானன
1149 தான தததன தானன தானன
தான தததன தானன தானன தனதான.

ஓது வித்தவர் கூலிகொ டாதவர்,
மாத வர்க்கதி பாதக மானவர்,
ஊச லிற்கன லாயெரி காளையர், மறையோர்கள்
ஊர்த னக்கிட ரேசெயு மேழைகள்,
ஆர்த னக்குமு தாசின தாரிகள்,
ஓடி யுத்தம ரூதிய நாடின, ரிரவோருக்
கேது மித்தனை தானமி டாதவர்,
பூத லத்தினி லோரம தானவர், [ர்கள்,
ஈசர் விஷ்ணுவை சேவைசெய் வோர்தமை யிகழ்வோ
ஏக சித்ததி யானமி லாதவர்,
மோக முற்றிடு போகித மூறினர்,
ஈன ரித்தனை பேர்களு மேழ்நர குழல்வாரே;
தாத தத்தத தாதத தாதத
தூது துத்துது தூதுது தூதுது
சாச சசசச சாசச சாசச சசசாச
தாட டட்டட டாடட டாடட
டுடு டுட்டுடு டுடுடு டுடுடு
தாடி டிட்டிடி டீடிடி டீடிடி டிடிடீடி
தீதி தித்திதி தீதிதி தீதிதி
தோதி குத்திகு தோதிகு தோதிகு
சேகு செக்குகு சேகுகு சேகுகு செகுசேகு

சேயெ னப்பல ராடிட மாகலை
  ஆயு முத்தமர் கூறிடும் வாசக!
  சேகு சித்திர மாகரி னூடிய    பெருமாளே! (௪)

---

## V. விண்ணப்பம்.

157 23. தானதந்த தனாதன தனதான.

வேழமுண்ட விளாகனி    யதுபோல,
  மேனிகொண்டு வியாபக    மயலூறி,
நாளுமிண்டர் கள்போல்மிக    அயாவாகி,
  நானுநைந்து விடாதருள்    புரிவாயே.
மாளஅன்று மணீசர்கள்    கழுவேற,
  வாதில்வென்ற சிகாமணி!    மயில்வீரா!
காளகண்ட னுமாபதி    தருபாலா!
  காசிகங்கை யில்மேவிய    பெருமாளே! (௧)

---

191 24. தனதனன தாத்த தனதான.

வசனமிக வேற்றி    மறவாதே,
  மனதுதுய ராற்றி    லுழலாதே,
இசைபயில்ச டாக்ஷ    ரமதாலே,
  இகபரசௌ பாக்ய    மருள்வாயே.
பசுபதிசி வாக்ய    முணர்வோனே!
  பழநிமலை வீற்ற    ருளும்வேலா!
அசுரர்கிளை வாட்டி    மிகவாழ
  அமரர்சிறை மீட்ட    பெருமாளே! (௨)

---

25. தனதன தனதன தானான தானன
611 தனதன தனதன தானான தானன
தனதன தனதன தானான தானன தந்ததான.

அவகுண விரகனை வேதாள ரூபனை,
  அசடனை மசடனை ஆசார ஈனனை,
  அகதியை மறவனை ஆதாளி வாயனை, அஞ்சபூதம்

அடைசிய சவடனோ மோடாதி மோடனே,
அழிகரு வழிவரு வீணுதி வீணனே,
அழுகலை யவிசலை ஆமுன வூணனோ, அன்பிலாத
சவடனே விகடனே நாஞவி காரனே,
வெகுளியை வெகுவித மூதேவி மூடிய
கலியனே அலியனே ஆதேச வாழ்வனே, வெட்பிவீழும்
களியனே, யறிவுரை பேணுத மாநுட
கசனியை யசனியை மாபாத ஞகிய
கதியிலி தனையடி நாயேனை, யாளுவ தெந்தநாளோ?
மவுலியி லழுகிய பாதாள லோகனு,
மரகத முழுகிய காகோத ராஜனு, [ரும்
மநுநெறி யுடன்வளர் சோஞடர் கோனுட, னும்பர்சே
மகபதி, புகழ்புலி யூர்வாழு நாயகர்
மடமயில் மகிழ்வுற வானுடர் கோவென
மலைமக ளுமைதரு வாழ்வே!ம ஞேகர! மன்றுளாடும்
சிவசிவ ஹரஹர தேவா!ந மோநம,
தெரிசன பரகதி யாணய்ந மோநம, [சேருந்
திசையினு மிசையினும் வாழ்வே!ந மோநம, செஞ்சொல்
தினைபுன வனிதைம ணுளா!ந மோநம,
திரிபுர மெரிசெய்த கோவே!ந மோநம,
ஜெயஜெய ஹரஹர தேவா!சு ராதிபர் தம்பிரானே! (௩)

---

76 26. தானதான தத்ததந்த தானதான தத்ததந்த
தானதான தத்ததந்த தனதான.

மாலினுலெ டுத்தகந்தல், சோறினுல்வ ளர்த்தபொந்தி,
மாறியாடெ டுத்தசிந்தை, யஙியாய
மாயையாலெ டுத்துமங்கி னேனையா,ள னக்கிரங்கி
வாராயா!யி னிப்பிறந்து இறவாமல்,
வேலினுல்வி னைக்கணங்கள் தூளதாள ரித்து,வுன்றன்
வீடுதாப ரித்தஅன்பர் கணமூடே,
மேவி,யானு னைப்பொல்சிந்தை யாகவேக ளித்துகந்த
வேளையாமெ னப்பரிந்து அருள்வாயே.
காலினுலெ னப்பரந்த சூரர்மாள வெற்றிகொண்ட
காலபானு சத்தியங்கை முருகோனே!

---

* "திருதரு கலவிம ணுளா" என்றும் பாடம்.

காமபாண மட்டனந்த கோடிமாத ரைப்புணர்ந்த
காளையேறு கர்த்தனெந்தை யருள்பாலா!
சேலைநேர்வி ழிக்குறப்பெ ணாசைதோளு றப்புணாந்து
சீரையோது பத்தரன்பி னுறைவோனே!
தேவர்மாதா சித்தர்தொண்டர் ஏகவேளு ருக்குகந்த
சேவல்கேது சுற்றுகந்த பெருமாளே! (௪)

---

27. தனனதன தானதத்த தனனதன தானதத்த
214 தனனதன தானதத்த தனதான.

சரணகம லாலயத்தை அரைநிமிஷ நேரமட்டில்
தவமுறைதி யானம்வைக்க அறியாத
சடகசட மூடமட்டி, பவவினையி லேசனித்த
தமியன்,மிடி யாலமயக்க முறுவேனோ?
கருணைபுரி யாதிருப்ப தெனகுறை,யி வேளைசெப்பு,
கயிலைமலை நாதாபெற்ற குமரோனே!
கடகபுய மீதிரத்ந மணியணிபொன் மாலைசெச்சை
கமழுமண மார்கடப்ப மணிவோனே!
தருணமிதை யா,மிகுத்த கனமதுறு நீள்சவுக்ய
சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வு,
தகைமைசிவ ஞானமுத்தி, பரகதியு, நீகொடுத்து
தவிபுரிய வேணு,நெய்த்த வடிவேலா!
அருணதள பாதபதம மதுநிதமு மேதுதிக்க
அரியதமிழ் தானளித்த மயில்வீரா!
அதிசயம நேகமுற்ற பழநிமலை மீதுதித்த
அழக! திரு வேரகத்தின் முருகோனே! (௫)

---

28. தந்ததன தத்ததன தந்ததன தத்ததன
316 தந்ததன தத்ததன தனதான.

ஐங்கரனை யொத்தமன, மைம்புலம கற்றிவள
ரந்திபக லற்றநினை, வருள்வாயே;
அம்புவித னக்குள்வளர் செந்தமிழ்வ ழுத்தியுனை
அன்பொடுது திக்கமன மருள்வாயே;

தங்கியத வத்துணர்வு தந்தடிமை முத்திபெற,
சந்திரவெ ளிக்குவழி யருள்வாயே;
தண்டிகைக னப்பவுசு எண்டிசைம திக்கவளர்
சம்ப்ரமவி தத்துடனெ யருள்வாயே;
மங்கையர்சு கத்தைவெகு இங்கிதமெ னுற்றமன,
முன்றனைநி னைத்தமைய அருள்வாயே;
மண்டலிக ரப்பகலும் வந்த,சுப ரக்ஷைபுரி
வந்தனைய, புத்தியினை யருள்வாயே;
கொங்கிலுயிர் பெற்றுவளர் தென்கரையி லப்பரருள்
கொண்டுஉட லுற்றபொரு ளருள்வாயே;
குஞ்சரமு. கற்கிளைய கந்தனென வெற்றிபெறு
கொங்கணகி ரிக்குள்வளர் பெருமாளே. (௬)

---

444

29. தானதன தந்த தானதன தந்த
தானதன தந்த தனதான.

வாதினைய டர்ந்த வேல்விழியர் தங்கள்
மாயமதொ ழிந்து தெளியேனே;
மாமலர்கள் கொண்டு மாலைகள்பு னைந்து
மாபதம ணிந்து பணியேனே;
ஆதியொடு மந்த மாகியந லங்கள்
ஆறுமுக மென்று தெரியேனே;
ஆனதனி மந்த்ர ரூபநிலை கொண்ட
தாடுமயி லென்ப தறியேனே;
நாதமொடு விந்து வானவுடல் கொண்டு
நானிலம லைந்து திரிவேனே;
நாகமணி கின்ற நாதநிலை கண்டு
நாடியதில் நின்று தொழுகேனே;
சோதியுணர் கின்ற வாழ்வுசிவ மென்ற
சோகமது தந்து எனையாள்வாய்;
சூரர்குலம் வென்று வாகையொடு சென்று
சோலைமலை நின்ற பெருமாளே. (௭

30. தனதான தத்ததன தனதான தத்ததன
தனதான தத்ததன தனதான.

வலிவாத பித்தமொடு களமாலை விப்புருதி
வறள்சூலை குட்டமொடு குளிர்தாகம்
மலிநீரி ழிச்சல்பெரு வயிறீளை கக்குகளை
வருநீர டைப்பினுடன் வெகுகோடி
சிலைநோய டைத்தவுடல், புவிமீதெ டுத்துழல்கை
தெளியாவெ னக்குமினி முடியாதே;
சிவமார்தி ருப்புகழை எனுநாவி னிற்புகழ,
சிவஞான சித்திதனை யருள்வாயே.
தொலையாத பத்தியுள திருமால்க ளிக்க,வொரு
சுடர்வீசு சக்ரமதை யருள்ஞான
துவர்வேணி யப்பன்,மிகு சிவகாமி கர்த்தன்,மிகு
சுகவாரி சித்தனருள் முருகோனே!
அலைசூரன் வெற்புமரி முகனானை வத்திரனொ
டசுராரி றக்கவிடு மழல்வேலா!
அமுதாச னத்திகுற மடவாள்க ரிப்பெணொடும்
அருணாச லத்திலுறை பெருமாளே! (அ)

---

31. தந்தான தானதன தானதன தானதன
தந்தான தானதன தானதன தானதன
தந்தான தானதன தானதன தானதன தனதான.

வங்கார மார்பிலணி தாரொடுயர் கோடசைய,
கொந்தார மாலைகுழ லாரமொடு தோள்புரள,
வண்காதி லோலைகதிர் போலவொளி வீச,இதழ் மலர்போல
மஞ்சாடு சாபநுதல், வாளனைய வேல்விழிகள்,
கொஞ்சார மோககிளி யாகநகை பேசி,யுற
வந்தாரை வாருமிரு நீருறவெ னாசைமய லிடுமாதர்
சங்காளர், சூதுகொலை காரர்,குடி கேடர்,சுழல்
சிங்கார தோளர்,பண ஆசையுளர், சாதியிலர்,
சண்டாளர், சீசியவர் மாயவலை யோடடியெ னுழலாமல்
சங்கோதை நாதமொடு கூடி,வெகு மாயையிருள்
வெந்தோட, மூலஅழல் வீச,வுப தேசமது
தண்காதி லோதி,யிரு பாதமலர் சேர,அருள் புரிவாயே

சிங்கார ரூபமயில் வாகனந மோநமென,
கந்தாகு மாரசிவ தேசிகந மோநமென,
சிந்தூர பார்வதிசு தாகரந மோநமென, விருதோதை
சிநதான, சோதிகதிர் வேலவந மோநமென,
கங்காள வேணிகுரு வானவந மோநமென,
திண்சூர ராழிமலை தூளபடவை வேலைவிடு முருகோனே!
இங்கீத வேதபிர மாவைவிழ மோதியொரு
பெண்காத லோடுவன மேவிவழி நாயகியை
யின்பான தேனிரச மார்முலைவி டாதகர மணிமார்பா!
எண்டோளர் காதல்கொடு காதல்கறி யேபருகு
செங்காடு மேவிபிர காசமயில் மேலழகொ
டென்காதல் மாலைமுடி ஆறுமுக வா!வமரர் பெருமாளே!(கூ)

---

32. தானதன தானதந்த தானதன தானதந்த
393 தானதன தானதந்த தனதான.

ஆதிமக மாயியம்பை தேவிசிவ னார்மகிழ்ந்த
ஆவுடைய மாதுதந்த குமரேசா!
ஆதரவ தாய்வருந்தி யாதியரு ணேசரென்று
ஆளுமுனை யேவணங்க அருள்வாயே.
பூதமது வானவைந்து பேதமிட வேயலைந்து
பூரணசி வாகமங்க ளறியாதே,
பூணுமுலை மாதர்தங்கள் ஆசைவகை யேநினைந்து
போகமுற வேவிரும்பு மடியேனை,
நீதயவ தாயிரங்கி நேசவரு ளேபுரிந்து,
நீதிநெறி யேவிளங்க, வுபதேச
நேர்மைசிவ னார்திகழ்ந்த காதிலுரை வேதமந்த்ர
நீலமயி லேறிவந்த வடிவேலா!
ஓதுமறை யாகமஞ்சொல் யோகமது வேபுரிந்து,
ஊழியுணர் வார்கள்தங்கள் வினைதீர,
ஊனுமுயி ராய்வளர்ந்து, ஓசையுடன் வாழ்வுதந்த,
ஊதிமலை மீதுகந்த பெருமாளே! (கO)

---

33\. தனதனன தனதனன தான தந்தனந்
211 தனதனன தனதனன தான தந்தனந்
தனதனன தனதனன தான தந்தனந் தனதான.

ஒருவரையு மொருவரறி யாம லுந்திரிந்,
திருவினையி னிடர்கலியொ டாடி, நொந்துநொந்
துலையிலிடு மெழுகதென வாடி, முன்செய்வஞ் சனையாலே
ஒளிபெறவெ யெழுபுமர பாவை துன்றிடுங்
கயிறுவித மெனமருவி யாடி., விண்பறிந்
தொளிறுமின லுருவதென வோடி, யங்கம்வெந் திடுவேனைக்
கருதி,யொரு பரமபொரு ளீது என்றுஎன்
செவியிணையி னருளி,யுரு வாகி வந்தஎன்
கருவினையொ டருமலமு நீறு கண்டு,தண் டருமாமென்
கருணைபொழி கமலமுக மாறு, மிந்துளந
தொடைமகுட முடியு,மொளிர் நூபு ரஞ்சரண்
கலகலென, மயிலின்மிசை யேறி வந்துகந் தெனையாள்வாய்
திரிபுரமு மதனுடலும் நீறு கண்டவன்,
தருணமழ விடையனட ராஜ, னெங்கணுந்
திகழருணை கிரிசொருப ஜோதி யந்தமங் கறியாத
சிவயநம நமசிவய கார ணன்,சுரந்
தமுதமதை யருளியெமை யாளு மெந்தைதன்
திருவுருவின் மகிழெனது தாய்ப யந்திடும் புதல்வோனே
குருகுகொடி யுடன்மயிலி லேறி மந்தரம்
புவனகிரி சுழலமறை யாயி ரங்களும்
குமரகுரு வெனவலிய சேட னஞ்சவந் திடுவோனே
குறமகளி னிடைதுவள பாத செஞ்சிலம்
பொலியவொரு சசிமகளொ டேக லந்துதிண்
குருமலையின் மருவுகுரு நாத! வும்பர்தம் பெருமாளே! (க

---

## VI நோயற்றவாழ்வு.

240 34. தனதன தான தனதன தான
தனதன தான தனதான.

இருமலு ரோக முயலகன் வாத
மெரிகுண நாசி விடமேநீ

ரிழிவுவி டாத தலைவலி சோகை
யெழுகள மாலை யிவையோடே,
பெருவயி றீளை யெரிகுலை சூலை
பெருவலி வேறு முளநோய்கள்,
பிறவிக டோறு மெனைநலி யாத
படியுன தாள்க ளருள்வாயே;
வருமொரு கோடி யசுரர்ப தாதி
மடியஅ நேக இசைபாடி
வருமொரு கால வயிரவ ராட
வடிசுடர் வேலை விடுவோனே!
தருநிழல் மீதி லுறைமுகி லூர்தி
தருதிரு மாதின் மணவாளா!
சலமிடை பூவி னடுவினில் வீறு
தணிமலை மேவு பெருமாளே! (க)

## VII. முறையீடு.

166 35. தனதனன தனதனன தானத் தானத் தனதான.

ஒருபொழுது மிருசரண நேசத் தேவைத் துணரேனே,
உனதுபழ நிமலையெனு மூரைச் சேவித் தறியேனே,
பெருபுவியி லுயர்வரிய வாழ்வைத் தீரக் குறியேனே,
பிறவியற நினைகுவனெ னாசைப் பாடைத் தவிரேனோ?
துரிதமிடு நிருதர்புர சூறைக் காரப் பெருமாளே!
தொழுதுவழி படுமடியர் காவற் காரப் பெருமாளே!
விருதுகவி விதரணவி நோதக் காரப் பெருமாளே!
விறன்மறவர் சிறுமிதிரு வேளைக் காரப் பெருமாளே! (க)

471 36. தத்தத் தனதான தத்தத் தனதான.

அற்றைக் கிரைதேடி, அத்தத் திலுமாசை
பற்றித் தவியாத, பற்றைப் பெறுவேனோ?
வெற்றிக் கதிர்வேலா! வெற்பைத் துளைசீலா!
கற்றுற் றுணர்போதா! கச்சிப் பெருமாளே! (உ)

37. தானதன தானதன தானதன தானதன
731 தானதன தானதன தந்ததான.

ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம்
ஆறுமுகம் ஆறுமுகம் என்று,பூதி
ஆகமணி மாதவர்கள் பாதமலர் சூடுமடி
யார்கள்பத மேதுணைய தென்று,நாளும்
ஏறுமயில் வாகனகு காசரவ ணாஎனது
ஈசஎன மானமுன தென்று,மோதும்
ஏழைகள்வி யாகுலமி தேதெனவி னாவி,லுனை
யேவர்புகழ் வார்மறையு மென்சொலாதோ;
நீறுபடு மாழைபொரு மேனியவ! வேல! அணி
நீலமயில் வாக! வுமை தந்தவேளே!
நீசர்கட மோடெனது தீவினையெ லாமடிய
நீடுதனி வேல்விடும டங்கல்வேலா!
சீறிவரு மாறவுண னாவியுணு மானைமுக
தேவர்துணை வா! சிகரி அண்டகூடஞ்
சேருமழ கார்பழனி வாழ்குமர னே! பிரம
தேவர்வரதா! முருக! தம்பிரானே! (௩)

---

38. தனன தனதன தனன தனதன
196 தனன தனதன தனதான.

குமர, குருபர, முருக, சரவண,
குக,சண் முக,கரி பிறகான
குழக, சிவசுத, சிவய நமவென
குரவ னருள்குரு மணியேயென்,
றமுத இமையவர், திமிர்த மிடுகட
லதென, அநுதின முனையோதும்
அமலை, அடியவர் கொடிய வினைகொடு
மபய மிடுகுர, லறியாயோ?
திமிர எழுகட லுலக முறிபட,
திசைகள் பொடிபட, வருசூரர்
சிகர முடியுடல் புவியில் விழ,வுயிர்
திறைகொ டமர்பொரு மயில்வீரா!

நமனை யுயிர்கொளு மழலி னிணைகழல்
நதிகொள் சடையினர் குருநாதா!
நளின குருமலை மருவி யமர்தரு
நவிலு மறைபுகழ் பெருமாளே! (௪)

39. தனன தனனு தனன தனனு
542 தனன தனனு தனதான.

இருவர் மயலோ, அமளி விதமோ,
என்ன செயலோ, அணுகாத
இருடி அயன்மா லமர ரடியா
ரிசையு மொலிதா னிவைகேளா,
தொருவ னடியே னலறு மொழிதா
னொருவர் பரிவாய் மொழிவாரோ?
உனது பததூள் புவன கிரிதா,
னுனது கிருபா கரமேதோ?
பரம குருவா யணுவி லசைவாய்,
பவன முதலா கியபூத
படையு முடையாய், சகல வடிவாய்
பழைய வடிவா கியவேலா!
அரியு மயனோ டபய மெனவே
அயிலை யிருள்மேல் விடுவோனே!
அடிமை கொடுநோய் பொடிகள் படவே
அருண கிரிவாழ் பெருமாளே! (௫)

40. தனதனந் தத்தத் தத்தன தத்தந்
462 தனதனந் தத்தத் தத்தன தத்தந்
தனதனந் தத்தத் தத்தன தத்தந் தனதான.

புரைபடுஞ் செற்றக் குற்றம னத்தன்,
தவமிலன், சுத்தச் சத்யஅ சத்யன்,
புகலிலன், சுற்றச் செத்தையுள் நிற்குந் துரிசாளன்,
பொறையிலன், கொத்துத் தத்வவி கற்பஞ்
சகலமும் பற்றிப் பற்றற நிற்கும்
பொருளுடன் பற்றுச் சற்றுமில் வெற்றன், கொடியே,னின்

கரையறுஞ் சித்ரச் சொற்புகழ் கற்குங்
கலையிலன், கட்டைப் புத்தியன், மட்டன்,
கதியிலன், செச்சைப் பொற்புய வெற்புங் கதிர்வேலுங்
கதிரையுஞ் சக்ரப் பொற்றையு மற்றும்
பதிகளும் பொற்புக் கச்சியு முற்றுங்
கனவிலுஞ் சித்தத் திற்கரு திக்கொண் டடைவேனோ!
குரைகருஞ் சுற்றுச் சத்தச முத்ரங்
கதறிவெந் துட்கக், கட்புர துட்டன்
குலமடங் கக்கெட் டொட்டொழி யச்,சென் றொருநேமிக்
குவடொதுங் கச்,சொர்க் கத்தரி டுக்கங்
கெட,நடுங் கத்திக் கிற்கிரி வர்க்கங்,
குலிசதுங் கக்கைக் கொற்றவ னத்தங் குடியேறத்
தரைவிசும் பைச்சிட் டித்தஇ ருக்கன்
சதுர்முகன் சிட்சைப் பட்டொழி யச்,சந்
ததமும்வந் திக்கப் பெற்றவர் தத்தம் பகையோடத்
தகையதண் டைப்பொற் சித்ரவி சித்ரந்
தருசதங் கைக்கொத் தொத்துமு ழக்குஞ்
சரணகஞ் சத்திற் பொற்கழல் கட்டும் பெருமாளே! (சு

---

41. தனத்தந் தான தனதன தனத்தந் தான தனதன
1178 தனத்தந் தான தனதன தனதான.

புவிக்குன் பாத மதைநினை பவர்க்குங் கால தரிசனை
புலக்கண் கூடு மதுதனை அறியாதே,
புரட்டும் பாத சமயிகள் நெறிக்கண் பூது படிறரை,
புழுக்கண் பாவ மதுகொளல் பிழையாதே,
கவிக்கொண் டாடு புகழினை படிக்கும் பாடு திறமிலி
களைக்கும் பாவ சுழல்படு மடிநாயேன்
கலக்குண் டாகு புவிதனி லெனக்குண் டாகு பணிவிடை
கணக்குண் டாதல் திருவுள மறியாதே
சிவத்தின் சாமி, மயில்மிசை நடிக்குஞ் சாமி, யெமதுளே
சிறக்குஞ் சாமி, சொரூபமி தொளிகாண
செழிக்குஞ் சாமி, பிறவியை யொழிக்குஞ் சாமி, பவமதை
தெறிக்குஞ் சாமி, முனிவர்க ளிடமேவு

தவத்தின் சாமி, புரிபிழை பொறுக்குஞ் சாமி, குடிநிலை
தரிக்குஞ் சாமி, யசுரர்கள் பொடியாகச்
சதைக்குஞ் சாமி, யெமைபணி விதிக்குஞ் சாமி, சரவண
தகப்பன் சாமி, யெனவரு பெருமாளே! (எ)

---

42. தான தத்தன தானா தனதன
தான தததன தானா தனதன
தான தத்தன தானா தனதன தந்ததான.

போத நிர்க்குண போதா நமோநம,
நாத நிஷ்கள நாதா நமோநம,
பூர ணக்கலை சாரா நமோநம, பஞ்சபாண
பூபன் மைத்துன பூபா நமோநம,
நீப புஷ்பக தாளா நமோநம,
போக சொர்க்கபு பாலா நமோநம, சங்கமேறும்
மாத மிழ்த்ரய சேயே நமோநம,
வேத னத்ரய வேளே நமோநம,
வாழ்ஜ கத்ரய வாழ்வே நமோநம, என்றுபாத
வாரி ஜததில்வி ழாதே, மகோததி
யேழ்பி றபபினில் மூழ்கா, மனோபவ
மாயை யிற்சுழி யூடே விடாது,க லங்கலாமோ?
கீத நிர்த்தவெ தாளா டவீநட
நாத புத்திர! பாகீ ரதீ!கிரு
பாச முதகிர! ஶ்ரீமூ தவாகனர் தந்திபாகா!
கேக யப்பிர தாபா! முலாதிப!
மாலி கைக்கும ரேசா! விசாகக்ரு
பாலு! வித்ரும காரா! ஷடானன! புண்டரீகா!
வேத வித்தக! வேதா விநோத!கி
ராத லக்ஷ்மிகி ரீடா! மகாசல
வீர! விக்ரம! பாரா வதானவ கண்டசூர
வீர நிட்டுர! வீரா திகாரண!
தீர! நிர்ப்பய தீரா! பிரம!வி
நாய கப்ரிய! வேலா யுதா!சுரர் தம்பிரானே! (அ)

---

## VIII. பரத்தையர்வெறுப்பு.

43. தனனதன தனனதந்த தனனதன தனனதந்த
144 தனனதன தனனதந்த தனதான.

விரைமருவு மலரணிந்த கரியபுரி குழல்சரிந்து
விழ,வதன மதிவிளங்க, அதிமோக
விழிபுரள, முலைகுலுங்க, மொழிகுழற, அணைபுகுந்து
விரகமயல் புரியுமின்ப மடவார்பால்,
இரவுபக லணுகிநெஞ்ச மறிவழிய வுருகுமந்த
இருளகல, வுனதுதண்டை யணிபாதம்
எனதுதலை மிசையணிந்து, அழுதழுது னருள்விரும்பி
யினியபுகழ் தனைவிளம்ப, அருள்தாராய்.
அரவில்விழி துயில்முகுந்த னலர்கமல மலர்மடந்தை
அழகினொடு தழுவுகொண்டல் மருகோனே!
அடலசுர ருடல்பிளந்து நிணமதனில் முழுகியண்ட
அமராசிறை விடுப்ரசண்ட வடிவேலா!
பரவைவரு விடமருந்து மிடறுடைய கடவுள்கங்கை
படாசடையர் விடையரன்ப ருளமேவும்
பரமரரு ளியகடம்ப! முருக! அறு முகவ! கந்த!
பழநிமலை தனிலமர்ந்த பெருமாளே! (க)

---

44. தனன தான தானன தனன தான தானன
419 தனன தான தானன தனதான.

அலகின் மாறு மாறுத கலதி, பூத வேதாளி,
அடைவில் ஞாளி, கோமாளி, அறமீயா
அழிவு கோளி, நாணது புழுகு பூசி வாழ்மாதர்
அருளி லாத தோடோய மருளாகி,
பலக லாக ரா! மேரு மலைக ராச லா! வீசு
பருவ மேக மே! தாரு! வெனயாதும்
பரிவு றுத மாபாதர் வரிசை பாடி, யோயாத
பரிசில் தேடி, மாயாத படி,பாராய்.

இலகு வேலை நீள்வாடை யெரிகொள் வேலை மாசூரி
லெறியும் வேலை மாறுத திறல்வீரா!
இமய மாது பாகீர திநதி பால கா! சார
விறைவி கான மால்வேடர் சுதைபாகா!
கலக வாரி போல்மோதி வடவை யாறு சூழ் * சீல
கதிர காம மூதூரி விளையோனே!
கனக நாடு வீடாய கடவுள் யானை வாழ்வான
கருணை மேரு வே! தேவர் பெருமாளே! (உ)

---

## IX. பிறவிவேண்டாமை.

45. தனன தனன தனன தனன
௪௫/ தனன தனன தனதான.

எருவாய் கருவாய் தனிலே யுருவா,
யிதுவே பயிராய் விளைவாகி,
இவர்போ யவரா, யவர்போ யிவரா,
யிதுவே தொடர்பாய் வெறிபோல,
ஒருதா யிருதாய் பலகோ டியதா
யுடனே யவமா யழியாதே,
ஒருகால் முருகா பரமா குமரா
உயிர்கா வெனவோ தருள்தாராய்;
முருகா வெனவோர் தரமோ தடியார்
முடிமே † லிணைதா ளருள்வோனே!
முனிவோ ரமரோர் முறையோ வெனவே
முதுசூ ரூரமேல் விடும்வேலா!
திருமால் பிரமா அறியா தவர்சீர்
சிறுவா! திருமால் மருகோனே!
செழுமா மதில்சே ரழகார் பொழில்சூழ்
திருவீ ழியில்வாழ் பெருமாளே! (க)

---

* "சீத" என்றும் பாடம்.
† "இருதாள் புனைவோனே" என்றும் பாடம்.

46. தானான தத்ததன தானான தததனத
985 தானான தத்ததன தனதான.

ஊனாரு முட்பிணியு மானாக வித்தவுட
லூதாரி பட்டொழிய, வுயிர்போனால்
ஊரார்கு வித்துவர, ஆவாவெ னக்குறுகி
ஓயாமு ழுக்கமெழ, அழுதோய,
நானாவி தசிவிகை மேலேகி டத்தியது
நாறுதெ டுததடவி யெரியூடே
நாணாமல் வைத்துவிட நீறு,மெ னிபபிறவி
நாடாதெ னக்குனருள் புரிவாயே;
மானாக துத்திமுடி மீதேறி ருததமிடு
மாயோனு, மட்டொழுகு மலர்மீதே
வாழ்வாயி ருக்குமொரு வேதாவு, மெட்டிசையும்
வானோரு, மட்டகுல கிரியாவும்,
ஆனாவ ரக்கருடன் வானாபி ழைக்க,வரு
மாலால முற்றவமு தயில்வோன்முன்
ஆசார பத்தியுடன் ஞானாக மத்தையரு,
ளாடானை நித்தமுறை பெருமாளே! (உ)

---

47. தத்தன தான தானன தத்தன தான தானன
1204 தத்தன தான தானன தனதான.

அப்படி யேழு மேழுமவ குததுவ மாது, போதினி
னகரம்வி யோம கோளகை மிசைவாழும்
அக்ஷர தேவி கோவின்வி திப்படி மாறி மாறி,ய
னேதருரு வாய காயம தடைவேகொண்,
டிப்படி யோனி வாய்தொறு முற்பவி யாவி ழாவுல
கிற்றடு மாறி யேதிரி தருகாலம்,
எத்தனை யூழி காலமெ னத்தெரி யாது வாழி,யி
னிப்பிற வாது நீயருள் புரிவாயே;
கற்பக வேழ மெய்வன பச்சிள.ஏனல் மீதுறை
கற்புடை மாது தோய்தரு மபிராம!
கற்பூர தூளி லேபன மற்புய! பாக சாதன
கற்பக லோக தாரண! கிரிசால

விப்ரச மூக வேதன! பசசிம பூமி காவல!
வெட்சியு நீப மாலையு மணிவோனே!
மெத்திய ஆழி சேறெழ வெற்பொடு சூர னீறெழ
விக்ரம வேலை யேவிய பெருமாளே! (ரு)

## X. மறுபிறப்பு.

31 48. தனன தனன தனன தனன தனன தனன தனதான.

திமிர வுததி யனைய நரக செனன மதனில் விடுவாயேல்,
செவிடு குருடு வடிவு குறைவு சிறிது மிடியு மணுகாதே,
அமரர் வடிவு மதிக குலமு மறிவு நிறையும் வரவேநின்
அருள தருளி யெனையு மனதொ டடிமை கொளவும் வரவேணும்.
சமர முகவெ லசுரர் தமது தலைக ளுருள, மிகவேநீள்
சலதி யலற, நெடிய பதலை தகர, அயிலை விடுவோனே!
வெமர வணையி லினிது துயிலும் விழிகள் நளினன் மருகோனே!
மிடறு கரியர் குமர! பழநி விரவு மமரர் பெருமாளே! (க)

## XI. அந்தியகாலம்.

49. தனதனன தனதனன தானன தானதன
443 தனதனன தனதனன தானன தானதன
தனதனன தனதனன தானன தானதன தந்ததான.

-றவின்முறை கதறியழ, ஊராரு மாசையற,
பறைதிமிலை முழவினிசை யாகாச மீதுமுற,
உலகிலுள பலரரிசி வாய்மீதி லேசொரியு மந்தநாளில்,
உனதுமுக கருணைமல ரோராறு, மாறிருகை,
திரள்புயமு, மெழில்பணிகொள் வார்காது, நீள்விழியு,
முபயபத மிசைகுலவு சீரேறு நூபுரமும், அந்தமார்பும்,
மறையறைய, அமரர்தரு பூமாரி யேசொரிய
மதுவொழுகு, தரவில்மணி மீதேறு நூலொளிர,
மயிலின்மிசை, யழகுபொலி யாளாய்மு னாடியர் வந்துகூட,

மறலிபடை யமபுரமு மீதோட வேபொருது,
விருதுபல முறைமுறையி லேயூதி வாதுசெய்து,
மதலையொரு குதலையடி நாயேனை யாளஇஙன் வந்திடாயோ?
பிறையெயிறு முரணசுரர் பேராது பாரில்விழ,
அதிரஎழு புவி,யுலக மீரேழு மோலமிட,
பிடிகளிறி னடல்நிரைகள் பாழாக வே,திசையில் நின்றநாகம்
பிரிய,நெடு மலையிடிய, மாவாரி தூளியெழ,
பெரியதொரு வயிறுடைய மாகாளி கூளியொடு [ரா!
பிணநிணமு முணவுசெய்து பேயோடு மாடல்செய, வென்றதீ
குறமறவர் கொடியடிகள் கூசாது போய்வருட,
கரடிபுலி திரிகடிய வாரான கானில்மிகு
குளிர்கணியி னிளமரம தேயாகி, நீடியுயர் குன்றுலாவி,
கொடியதொரு முயலகனின் மீதாடு வாருடைய
வொருபுறம துறவளரு மாதாபெ ருவருள்செய்
குமரகுரு பர! அமரர் வாழுடர் பேணஅருள் தம்பிரானே. (க)

---

50. தனனத் தனனத் தனனத் தனனத்
340 தனனத் தனனத் தனனத் தனனத்
தனனத் தனனத் தனனத் தனனத் தனதான.

புவனத் தொருபொற் றொடிசிற் றுதரக்
கருவிற் பவமுற் று,விதிப் படியிற்
புணர்துக் கசுகப் பயில்வுற் று,மரித் திடிலாவி
புரியட் டகமிட், டதுகட் டியிறுக்
கதுருத் தெனஅச் சம்விளைத், தலறப்
புரள்வித் து,வருத் தி,மணற் சொரிவித், தனலூடே
தவனப் படவிட், டுயிர்செக் கிலரைத்,
தணிபற் களுதிர்த், தெரிசெப் புருவைத்
தழுவப் பணி,முட் களில்கட் டியிசித் திட,வாய்கண்
சலனப் படஎற் றி,யிறைச் சியறுத்
தயில்வித் து,முரித் துநெரித், துளையத்
தளையிட் டு,வருத் தும்யமப் ரகரத் துயர்தீராய்.
பவனத் தையொடுக் குமனக் கவலைப்
ப்ரமையற், றைவகைப் புலனிற் கடிதிற்
படரிச் சையொழித் த,தவச் சரியைக் க்ரியையோகர்

பரிபக் குவர்கிட் டைகிவிர்த் தியினிற்
பரிசுத் தர்விரத் தர்கருத் ததனிற்,
பரவப் படுசெய்ப் பதியிற், பரமக் குருநாதா!
சிவனுத தமனித் தவுருத் திரன்முக்
கணனக் கன்மழுக் கரனுக் கரணத்
த்ரிபுரத் தையெரித தருள்சிற் குணகிற் குணனுதி
செகவித் தனிசப் பொருள்சிற் பரனற்
புதனைப் பிலியுற் பவ! பத மதடத
த்ரிசிரப் புரவெற் புறைசற் குமரப் பெருமாளே! (௨)

51. தனதத தந்தன தனதன தனதன
தனத்த தந்தன தனதன தனதன
தனத்த தந்தன தனதன தனதன தனதான.

உனைத்தி னந்தொழு திலனுன தியல்பினை
உரைத்தி லன்,பல மலர்கொடு னடியிணை
உறப்ப ணிந்திலன், ஒருதவ மிலனுன தருள்மாறு
உளத்து ளன்பின ருறைவிட மறிகிலன்,
விருப்பொ டுன்சிக ரமும்வலன் வருகிலன்,
உவப்பொ டுன்புகழ் துதிசெய விழைகிலன், மலைபோலே
கனைத்தெ ழும்பக டதுபிடர் மிசைவரு
கறுத்த வெஞ்சின மறலித னுழையினர்,
கதித்த டர்ந்தெறி கயிறடு கதைகொடு பொருபோதே,
கலக்கு றுஞ்செய லொழிவற, அழிவுறு
கருத்து நைந்தல முறுபொழு தளவைகொள்
கணத்தி, லென்பய மற,மயில் முதுகினில் வருவாயே;
வினைத்த லந்தனி லலகைகள் குதிகொள,
விழுக்கு டைந்துமெ யுகுதசை கழுகுண,
விரித்த குஞ்சிய ரெனுமவு ணரையமர் புரிவேலா!
மிகுத்த பண்பயில் குயில்மொழி யழகிய
கொடிச்சி குங்கும முலைமுக டுழுநறை
விரைத்த சந்தன ம்ருகமத புயவரை யுடையோனே!

தினத்தி னஞ்சதுர் மறைமுநி முறைகொடு,
புனற்சொ ரிந்தலர் பொதியவி னவரொடு
சினத்தை நிந்தனை செயுமுநி வர்தொழ மகிழ்வோனே
தெனதெதெ னந்தன எனவரி யளிநறை
தெவிட்ட அன்பொடு பருகுயர் பொழில்திகழ்
திருப்ப ரங்கிரி தனிலுறை சரவண பெருமாளே! (௩

52. தந்த தானன தனதன தனதன
71 தந்த தானன தனதன தனதன
தந்த தானன தனதன தனதன தனதான.

பஞ்ச பாதக முறுபிறை யெயிறெரி
குஞ்சி, கூர்விட மதர்விழி, பிலவக
பங்க வாண்முக முடுகிய நெடுகிய திரிசூலம்,
பந்த பாசமு மருவிய கரதல,
மிஞ்சி நீடிய கருமுகி லுருவொடு,
பண்பி லாதொரு பகடது முதுகினில், யமராஜன்
அஞ்ச வேவரு மவதர மதிலொரு
தஞ்ச மாகியெ வழிவழி யருள்பெறும
அன்பி னுனை தடிபுக ழடிமையெ னதிரே நீ,
அண்ட கோளகை வெடிபட இடிபட,
எண்டி சாமுக மடமட நடமிடும்,
அந்த மோகர மயிலினி லியலுடன், வரவேணும்;
மஞ்சு போல்வள ரளகமு, மிளகிய
ரஞ்சி தாம்ருத வசனமு, நிலவென
வந்த தூயவெண் முறுவலு, மிருகுழை யளவோடும்
மன்றல் வாரிச நயனமு, மழகிய
குன்ற வாணர்த மடமகள் தடமுலை
மந்த ராசல மிசைதுயி லழகிய மணவாளா!
செஞ்சொல் மாதிசை வடதிசை குடதிசை
விஞ்சு கீழ்திசை சகலமு மிகல்செய்து,
திங்கள் வேணியர் பலதளி தொழுதுயர் மகமேரு
செண்டு மோதின ரரசரு ளதிபதி!
தொண்ட ராதியும் வழிவழி நெறிபெறு
செந்தில் மாநக ரினிதுறை யமரர்கள் பெருமாளே! (௪

53. தனதனன தான தந்த தனதனன தான தந்த
தனதனன தான தந்த தனதான.

வருபவர்க ளோலை கொண்டு நமனுடைய தூத ரென்று
மடிபிடிய தாக நின்று தொடர்போது,
மயலதுபொ லாத வம்பன் விரகுடைய னுகு மென்று
வசைகளுட னேதொ டர்ந்து அடைவார்கள்;
கருவியத னுலெ றிநது சதைகள்தனை யெய ரிந்து
கரியபுன லேசொ ரிந்து விடவேதான்,
கழுமுனையி லேயி ரென்று விடுமெனும வேளை கண்டு
கடுகிவர வேணு மெந்தன் முனமேதான்.
பரகிரியு லாவு செந்தி மலையினுட னேயி டும்பன்
பழநிதனி லேயி ருந்த குமரேசா!
பதிகள்பல வாயி ரஙகள் மலைகள்வெகு கோடி நின்ற
பதமடியர் காண வந்த கதிர்காமா!
அரவுபிறை பூளை தும்பை விலுவமொடு தூாவை கொன்றை
யணிவர்சடை யாளர் தந்த முருகோனே!
அரகரசி வாய சமபு குருபர! கு மார! நம்பு
மடியர்தமை யாள வநத பெருமாளே!

54. தனதனதந்தனந் தானதத்ததந்த
567 தனதனதந்தனந் தானதததந்த
தனதனதந்தனந தானததததந்த தனதனத தனதான.

தமாகுரங்களுங், காரிருட்பிழம்பு
மெழுகியஅங்கமும், பாாவையிற்கொளுநது
தழலுமிழ்கண்களுங், காளமொத்தகொம்பும
உள,கதக் கடமாமேல,
தனிவருமந்தகன் பாசம்விட்டெறிந்து
அடவருமென்றுசிந தாகுலத்திருந்து,
தமாழ,மைநதருளு சோகமுற்றிரங்க,
மரணபக் குவமாநாள்,
கமலமுகங்களுங், கோமளததிலங்கு
நகையு,நெடுங்கணுங், காதினிற்றுலங்கு
கனககுதமபையுங், தோடும,வஜ்ரஅங்க
தமு,மடற் சுடர்வேலும்,

கடிதுலகெங்கணுந் தாடியிட்டுவந்த
மயிலு,மிலங்கலங் காரபொற்சதங்கை
கழலொலிதண்டையங் காலு,மொக்கவந்து
வரமெனக் கருள்கூர்வாய்.

இமகிரிவந்தபொன் பாவை,பச்சைவஞ்சி,
அகிலதலம்பெறும் பூவை,சத்தி,யம்மை
யிளமுலையின்செழும் பால்குடித்திலங்கு
மியல்நிமிர்த் திடுவோனே!

இறைவரிறைஞ்சநின் முகமப்ப்ரசங்க
முரைசெய்திடும்ப்ரசண் டா! விசித்துநின்ற
ரணமுகதுங்கவெஞ் சூருடற்பிளந்த
அயிலுடைக் கதிர்வேலா!

அமணரடங்கலுங் கூடலிற்றிரண்டு
கழுவிலுதைந்துதைந் தேற்விட்டுநின்ற
அபிநவ! துங்க! கங் காநதிக்குமைந்த!
அடியவர்க் கெளியோனே!

அமரர்வணங்குகந் தா! குறத்திகொங்கை
தனில்முழுகுங்கடம் பா! மிகுத்தசெஞ்சொ
லருணைநெடுந்தடங் கோபுரத்தமர்ந்த
அறுமுகப் பெருமாளே! (௬)

---

55. தந்த தனதனன தந்த தனதனன
70 தந்த தனதனன தனதான.

தந்த பசிதனைய றிந்து முலையமுது
தந்து முதுகுதட வியதாயார்,
தம்பி, பணிவிடைசெய் தொண்டர், பிரியமுள
தங்கை, மருக,ருயி ரெனவேசார்
மைந்தர், மனைவியர்,க டும்பு, கடனுதவு
மந்த வரிசைமொழி பகர்கேடா
வந்து, தலைநவிர விழ்ந்து தரைபுக,ம
யங்க, வொருமகிட மிசையேறி
அந்த கனுமெனைய டர்ந்து வருகையினில்,
அஞ்ச லெனவலிய மயில்மேல்நீ,

அந்த மறலியொடு கந்த மனிதனம
தன்ப னெனமொழிய, வருவாயே;
சிந்தை மகிழுமலை மங்கை நகிலிணைகள்
சிந்து பயமயிலு மயில்வீரா!
திங்க ளரவுநதி துன்று சடிலரருள்
செந்தி னகரிலுறை பெருமாளே! (எ)

56. தனன தனன தனன தனன
129 தனன தனன தனதான.

கரிய பெரிய எருமை கடவு
கடிய கொடிய திரிசூலன்,
கறுவி யிறுகு கயிறொ டுயிர்கள்
கழிய முடுகி யெழுகாலம்,
திரியு நரியு மெரியு முரிமை
தெரிய, விரவி யணுகாதே,
செறிவு மறிவு முறவு மனைய
திகழு மடிகள் தரவேணும்;
பரிய வரையி னரிவை மருவு
பரம ரருளு முருகோனே!
பழன முழவர் கொழுவி லெழுது
பழைய பழநி யமர்வோனே!
அரியு மயனும் வெருவ, வுருவ
அரிய கிரியை யெறிவோனே!
அயிலு மயிலு மறமு நிறமு
மழகு முடைய பெருமாளே! (அ)

## XII. திருவடிக்கிரங்கல்.

57. தான தத்தன தான தத்தன 277
277 தான தத்தன தான தத்தன
தான தத்தன தான தத்தன தந்ததான.

ஏது புத்திஐ யாஎ னக்கினி,
யாரை நத்திடு வேனவத்தினி
லேயி றத்தல்கொ லோஎ னக்குநி தந்தைதாயென்

றேயி ருக்கவு, நானு மிப்படி
யேத வித்திட வோ,ச கத்தவர்
ஏச விற்பட வோ,ந கைத்தவர் கண்கள்காணப்
பாதம் வைத்திடை யா,*தெ ரித்தெனை
தாளில் வைக்கநி யேம றுத்திடில்,
பார்ந கைக்குமை யா,த கப்பன்முன் மைந்தனேடிப்,
பால்மொ ழிக்குர லோல மிட்டிடில்,
யாரெ டுப்பதெ னு†வெ றுத்தழு
பார்வி டுப்பர்க ளோ!எ னக்கிது சிந்தியாதோ?
ஓத முற்றெழு பால்கொ தித்தது
போல, எட்டிகை நீச முட்டரை
யோட வெட்டிய, பானு சத்திகை யெங்கள்கோவே!
ஓத மொய்ச்சடை யாட, வுற்றமர்
மான்ம ழுக்கர மாட, ‡பொற்கழ
லோசை பெற்றிட வேந டித்தவர், தந்தவாழ்வே!
மாதி னைப்புன மீதி ருக்குமை
வாள்வி ழிக்குற மாதி னைத்,திரு
மார்ப ணைத்தம யூர அற்புத கந்தவேளே!
மாரன் வெறறிகொள் பூமு டிக்குழ
லார்வி யப்புற, நீடு மெய்த்தவர்
வாழ்தி ருத்தணி மாம லைப்பதி தம்பிரானே! (௧)

---

58. தனதனன தந்த தானனத்
212 தனதனன தந்த தானனத்
தனதனன தந்த தானனத் தனதான.

கறைபடுமு டம்பி ராதெனக்
கருதுதலொ ழிந்து, வாயுவைக்
கருமவச னங்க ளால்மறித், தனலூதிக்,
கவலைபடு கின்ற யோககற்
பனைமருவு சிநதை போய்விடக்,
கலகமிடு மஞ்சும் வேறறச், செயல்மாளக்,

* தரித்தன எனவும் பாடம். † வெறுப்பொடு எனவும் பாடம்.
‡ நற்கழல் எனவும் பாடம்.

குறைவறநி றைந்த மோனநிற்
குணமதுபொ ருந்தி வீடுறக்,
குருமலைவி ளங்கு ஞானசற் குருநாதா!
குமரசர ணென்று கூதளப்
புதுமலர்சொ ரிந்து, கோமளப்
பதயுகள புண்ட ரீகமுற், றுணர்வேனோ?
சிறைதளைவி ளங்கு பேர்முடிப்
புயலுடன டங்க வேபிழைத்,
திமையவர்கள் தங்க ளூர்புகச் சமராடித்,
திமிரமிகு சிந்து வாய்விடச்,
சிகரிகளும் வெந்து நீறெழத்,
திகிரிகொள நந்த சூடிகைத் திருமாலும்
பிறைமவுலி மைந்த கோவெனப,
பிரமனைமு னிந்து காவலிட்,
டொருநொடியில் மண்டு சூரனைப் பொருதேறிப்;
பெருகுமத கும்ப லாளிதக்
கரியெனப்ர சண்ட வாரணப்
பிடிதனைம ணந்த, சேவகப் பெருமாளே! (௨)

---

59. தான தனன தனதந்த தந்தன
501 தான தனன தனதந்த தந்தன
தான தனன தனதந்த தந்தன தனதான.

ஓல மறைக ளறைகின்ற வொன்றது,
மேலை வெளியி லொளிரும்ப ரஞ்சுடர்,
ஓது சரியை க்ரியையும்பு ணர்ந்தவ ரெவராலும்
ஓத வரிய துரியங்க டந்தது,
போத அருவ சுருபம்ப்ர பஞ்சமும்
ஊனு முயிரு முழுதுங்க லந்தது, சிவஞானம்
சால வுடைய தவர்கண்டு கொண்டது,
மூல நிறைவு குறைவின்றி நின்றது,
சாதி குலமு மில,தன்றி, யன்பர்சொ னவியோமஞ்
சாரு மனுப வரமைந்த மைந்தமெய்
வீடு, பரம சுகசிந்து, இந்த்ரிய
தாப சபல மறவந்து, நின்கழல் பெறுவேனோ?

றேயி ருக்கவு, நானு மிப்படி
யேத விக்திட வோ,ச கத்தவர்
ஏச லிற்பட வோ,ந கைத்தவர் கண்களாணப்
பாதம் வைத்திடை யா,*தெ ரித்தெனே
தாளில் வைக்கநி யேம றத்திடில்,
பார்ந கைக்குமை யா,த கப்பன்முன் மைந்தனேடிப்,
பால்மொ ழிக்குர லோல மிட்டிடில்,
யாரெ டுப்பதெ ன†வெ றுத்தழ
பார்வி டுப்பர்க ளோ!எ னக்கிது சிந்தியாதோ?
ஓத முற்றெழு பால்கொ திக்கது
போல, எட்டிகை நீச முட்டரை
யோட வெட்டிய, பானு சத்திகை யெங்கள்கோவே!
ஓத மொய்ச்சடை யாட, வுற்றமர்
மான்ம ழுக்கர மாட, ‡பொற்கழ
லோசை பெற்றிட வேந டித்தவர், தந்தவாழ்வே!
மாதி னைப்புன மீதி ருக்குமை
வாள்வி ழிக்குற மாதி னைத்,திரு
மார்ப ணைத்தம யூர அற்புத கந்தவேளே!
மாரன் வெற்றிகொள் பூமு டிக்குழ
லார்வி யப்புற, நீடு மெய்த்தவர்
வாழ்தி ருத்தணி மாம லைப்பதி தம்பிரானே! (க)

58. தனதனன தந்த தானனத்
212 தனதனன தந்த தானனத்
தனதனன தந்த தானனத் தனதான.

கறைபடுமு டம்பி ராதெனக்
கருதுதலொ ழிந்து, வாயுவைக்
கருமவச னங்க ளால்மறித், தனலூதிக்,
கவலைபடு கின்ற யோககற்
பனைமருவு சிந்தை போய்விடக்,
கலகமிடு மஞ்சும் வேரறச், செயல்மாளக்,

---

* தரித்தன எனவும் பாடம். † வெறுப்பொடு எனவும் பாடம்.
‡ நற்கழல் எனவும் பாடம்.

குறைவறநி றைந்த மோனநிற்
குணமதுபொ ருந்தி வீடுறக்,
குருமலைவி ளங்கு ஞானசற் குருநாதா!
குமரசர ணென்று கூதளப்
புதுமலர்சொ ரிந்து, கோமளப்
பதயுகள புண்ட ரீகமுற் றுணர்வேனோ?
சிறைதளைவி ளங்கு பேர்முடிப்
புயலுடன டங்க வேபிழைத்,
திமையவர்கள் தங்க ளூர்புகச் சமராடித்,
திமிரமிகு சிந்து வாய்விடச்,
சிகரிகளும் வெந்து நீறெழத்,
திகிரிகொள நந்த சூடிகைத் திருமாலும்
பிறைமவுலி மைந்த கோவெனப்,
பிரமனைமு னிந்து காவலிட்,
டொருநொடியில் மண்டு சூரனைப் பொருதேறிப்;
பெருகுமத கும்ப லாளிதக்
கரியெனப்ர சண்ட வாரணப்
பிடிதனைம ணந்த, சேவகப் பெருமாளே! (உ

---

59. தான தனன தனதந்த தந்தன
501 தான தனன தனதந்த தந்தன
தான தனன தனதந்த தந்தன தனதான.

ஓல மறைக ளறைகின்ற வொன்றது,
மேலை வெளியி லொளிரும்ப ரஞ்சுடர்,
ஓது சரியை க்ரியையும்பு ணர்ந்தவ ரெவராலும்
ஓத வரிய துரியங்க டந்தது,
போத அருவ சுருபம்ப்ர பஞ்சமும்
ஊனு முயிரு முழுதுங்க லந்தது, சிவஞானம்
சால வுடைய தவர்கண்டு கொண்டது,
மூல நிறைவு குறைவின்றி நின்றது,
சாதி குலமு மில,தன்றி, யன்பர்சொ னவியோமஞ்
சாரு மனுப வரமைந்த மைந்தமெய்
வீடு, பரம சுகசிந்து, இந்த்ரிய
தாப சபல மறவந்து, நின்கழல் பெறுவேனோ?

வால குமர குககந்த குனே
வேல மயில எனவந்து கும்பிடு
வான விபுதர் பதியிந்த்ரன் வெந்துயர் களைவோனே!
வாச களப வர! துஙக மஙகல
வீர! கடக புயசிங்க! சுந்தர
வாகை புனையும் ரணரங்க புங்கவ! வயலூரா!
ஞால முதல்வி யிமயம்ப யந்தமின்,
நீலி கவுரி பரைமங்கை குண்டலி,
நாளு மினிய கனியெங்க ளம்பிகை, திரிபுராயி,
நாத வடிவி யகிலம்ப ரந்தவ,
ளாலி னுதர முளைபங்க ரும்பு,வெ
ளுவ லரசு மனைவஞ்சி, தந்தருள் பெருமாளே! (௯)

---

௫௮ 60. தந்தன தான தந்தன தான
தந்தன தான தனதான.

விந்ததி னூறி வந்தது காயம்,
வெந்தது கோடி, யினிமேலோ,
விண்டுவி டாம லுன்பத மேவு
விஞ்சையர் போல, அடியேனும்
வந்து,வி நாச முன்,கலி தீர,
வண்சிவ ஞான வடிவாகி,
வன்பத மேறி, யென்களை யாற,
வந்தருள் பாத மலர்தாராய்;
எந்தனு ளேக செஞ்சுட ராகி
யென்கணி லாடு
எந்தையர், தேடு மன்பர்ச காய,
ரெங்கள்சு வாமி, யருள்பாலா!
சுந்தர ஞான மென்குற மாது
தன்றிரு மார்பி லணைவோனே!
சுந்தர மான செந்திலில் மேவு
கந்தசு ரேசர் பெருமாளே! (௧௦)

---

61. தத்த தானா தனாதன தத்த தானா தனாதன
338 தத்த தானா தனாதன தந்ததான.

க்தி பாணீ! நமோநம, முத்தி ஞானீ! நமோநம,
தத்வ வாதீ! நமோநம, விந்துநாத
சத்த ரூபா! நமோநம, ரத்ந தீபா! நமோநம,
தற்ப்ர தாபா! நமோநம, என்றுபாடும்
பத்தி பூணா மலை,யுல கத்தின் மானார் சவாதகில்
பச்சை பாடீ ரபூஷித கொங்கைமேல்வீழ்
பட்டி மாடா னநா,ளுனை விட்டி ராமே, யுலோகித
பத்ம சீர்பா தநீயினி வந்துதாராய்.
அத்ர தேவா யுதா!சுர ருக்ர சேனா பதீ!சுசி
யர்க்ய சோமா சியா!குரு சம்ப்ரதாயா!
அர்ச்ச னாவா கனா!வய லிக்குள் வாழ்நா யகா!புய
அட்ச மாலா தரா!குற மங்கைகோவே!
சித்ர கோலா கலா!விர லக்ஷ்மி சாதா! ரதா!பல
திக்கு பாலா! சிவாகம தந்த்ரபோதா!
சிட்ட நாதா! சிராமலை யப்பர் ஸ்வாமீ! மகாவ்ருத
தெர்ப்பை யாசா ரவேதியர் தம்பிரானே! (ரு

---

62. தனதன தனன தனதன தனன
534 தனதன தனன தனதான.

எழுகடல் மணலை அளவிடி னதிக
மெனதிடர் பிறவி அவதாரம்;
இனியுன தபய மெனதுயி ருடனு,
மினியுடல் விடுக முடியாது;
கழுகொடு நரியு மெரிபுவி மறலி
கமலனு மிகவு மயர்வானார்;
கடனுன, தபய, மடிமையு னடிமை,
கடுகியு னடிகள் தருவாயே;
விழுதிக ழழகி மரகத வடிவி,
விமலிமு னருளு முருகோனே!
விரிதல மெரிய குலகிரி நெரிய,
விசைபெறு மயிலில் வருவோனே!

எழுகடல் குமுற அவுணர்க ளுயிரை
யிரைகொளும் அயிலை யுடையோனே!
இமையவர முநிவர் பரவிய புலியு
ரினில்நட மருவு பெருமாளே! (௬)

---

637 63. தனன தானன தனன தானன
தனன தானன தனதான.

இருளு மோர்கதி ரணுகொ ணாதபொ
னிடம தேற,யெ னிருநோயும்
எரிய வே,மல மொழிய வே,சுட
ரிலகு மூலக வொளிமேவி
அருவி பாய,இ னமுத மூற,வுன்
அருளெ லாமென தளவாக
அருளி யே,சிவ மகிழ வேபெற
அருளி யே,யிணை யடிதாராய்;
பரம தேசிகர் குருவி லாதவர்,
பரவை வான்மதி தவழ்வேணிய
பவள மேனியர், எனது தாதையர்,
பரம ராசியா, அருளபாலா!
மருவி நாயெனை யடிமை யாமென
மகிழ்மெய் ஞானமு மருள்வோனே!
மறைகு லாவிய புலியுர் வாழ்குற
மகள்மெ லாசைகொள் பெருமாளே! (௭)

---

855 64. தனதன தந்த தனதன தந்த
தனதன தந்த தனதான.

இருவினை யஞ்ச வருவினை கெஞ்ச,
இருள்பிணி துஞ்ச, மலமாய,
எனதிடர் மங்க வுனதருள் பொங்க,
இசைகொடு துங்க புகழ்கூறித்,
திருமுக சந்த்ர முருகக டம்ப
சிவசுத கந்த குகவேல,

சிவசிவ என்று தெளிவுறு நெஞ்சு
திகழுந டஞ்செய் கழல்தாராய்;
மருதொடு கஞ்ச னுயிர்பலி கொண்டு
மகிழுரி விண்டு மருகோனே!
வதைபுரி கின்ற நிசிசரர் குன்ற,
வலம்வரு செம்பொன் மயில்வீரா!
அருகுறு மங்கை யொடுவிடை யுந்து
மமலனு கந்த முருகோனே!
அருள்செறி பந்த ணையிலிரு மங்கை
அமளிந லங்கொள் பெருமாளே! (அ)

---

65. தானன தததந் தானன தததந்
638 தானன தததந் தனதான.

காவியு டுத்துந் தாழ்சடை வைத்துங்
காடுகள் புக்குந் தடுமாறிக்,
காய்கனி துய்த்துங் காயமொ றுத்துங்
காசினி முற்றுந் திரியாதே,
சீவனொ டுக்கம் பூதவொ டுக்கம்
தேறவு திக்கும் பரஞான
தீபவி ளக்கங் காண,எ னக்குன்
சீதள பத்மந் தருவாயே.
பாவநி றத்தின் தாருக வர்க்கம்
பாழ்பட வுக்ரந் தருவீரா!
பாணிகள் கொட்டும் பேய்கள்பி தற்றும்
பாடலை மெச்சுங் கதிர்வேலா!
தூவிகள் நிற்குஞ் சாலிவ ளைக்குஞ்
சோலைசி றக்கும புலியூரா!
சூரர்மி கக்கொண் டாடந டிக்குந்
தோகைந டத்தும் பெருமாளே! (௬)

---

66. தானத்தன தானன தந்த
270 தானத்தன தானன தந்த
தானத்தன தானன தந்த தனதான.

ஊனத்தசை தோல்கள்சு மந்த
காயப்பொதி, மாயமி குந்த
ஊசற்சுடு நாறுகு ரம்பை, மறைநாலும்
ஓதப்படு நாலுமு கன்ற
னூற்றிடு கோல,மெ ழுந்து
ஓடித்தடு மாறியு ழன்று தளர்வாகி
கூனித்தடி யோடுந டந்து
ஈனப்படு கோழைமி குந்த
கூளச்சட, மீதையு கந்து
கூசப்பிர மாணப்ர பஞ்ச
மாயக்கொடு நோய்கள கன்று,
கோலக்கழ லேபெற இன்று அருள்வாயே;
சேனக்குரு கூடலி, லன்று
ஞானத்தமிழ் நூல்கள்ப கர்ந்து
சேனைச்சம ணோர்கழு வின்கண் மிசையேறத்
தீரத்,திரு நீறுபு ரிந்து
மீனக்கொடி யோனுடல் துன்று
தீமைப்பிணி தீர,வு வந்த குருநாதா!
கானச்சிறு மானைநி னைந்து,
ஏனற்புன மீதுந டந்து,
காதற்கிளி யோடுமொ ழிந்து, சிலைவேடர்
காணக்கணி யாகவ ளர்ந்து,
ஞானக்குற மானைம ணந்து,
காழிப்பதி மேவியு கந்த, பெருமாளே! (௧0)

---

67. தனனதன தனனதன தனனதன தனனதன
49 தனனதன தனனதன தனதான.

அறிவழிய மயல்பெருக வுரையுமற விழிசுழல
அனலவிய மலமொழுக அகலாதே,
அனையுமனை யருகிலுற வெருவியழ வுறவுமழ
அழலினிகர் மறலியெனை யழையாதே,

செறியுமிரு வினைகரண மருவுபுல னொழியவுயர்
திருவடியி லணுகவர மருள்வாயே;
சிவனைநிகர் பொதியவரை முநிவனக மகிழஇரு
செவிகுளிர இனியதமிழ் பகர்வோனே!
நெறிதவறி யலரிமதி நடுவன்மக பதிமுளரி,
நிருதிநிதி பதிகரிய வனமாலி,
நிலவுமறை யவனிவர்க ளலைய,அர சுரிமைபுரி
நிருதனுர மற,அயிலை விடுவோனே!
மறிபரசு கரமிலகு பரமனுமை யிருவிழியு
மகிழமடி மிசைவளரு மிளையோனே!
மதலைதவ ழுததியிடை வருதரள மணிபுளின
மறையவுயர் கரையிலுறை பெருமாளே! (கக)

---

68. தான தனதன தான தனதன
225 தான தனதன தனதான.

பாதி மதிநதி போது மணிசடை
நாத ரருளிய குமரேசா!
பாகு கனிமொழி மாது குறமகள்
பாதம் வருடிய மணவாளா
காது மொருவிழி காக முறஅருள்
மாய னரிதிரு மருகோனே!
கால னெனையணு காம லுனதிரு
காலில் வழிபட அருள்வாயே.
ஆதி யயனொடு தேவர் சுரருல
காளும் வகையுறு ளா,
ஆடு மயிலினி லேறி யமரர்கள்
சூழ வரவரு மிளையோனே!
சூத மிகவளர் சோலை மருவுசு
வாமி மலைதனி
சூர னுடலற வாரி சுவறிட
வேலை விடவல பெருமாளே! (கஉ)

---

69. தனத்த தந்தன தானன தானன
949 தனத்த தந்தன தானன தானன
தனத்த தந்தன தானன தானன தனதான.

மனத்தி ரைந்தெழு பீளையு மேலிட,
கறுத்த குஞ்சியு மேநரை யாயிட,
மலர்க்க ணண்டிரு ளாகியு மேநடை தடுமாறி
வருத்த முந்தர, தாய்மனை யாள்மக
வெறுத்தி டங்கிளை யோருடன் யாவரும்
வசைக்கு றுஞ்சொலி னல்மிக வேதின நகையாட,
எனைக்க டந்திடு பாசமு மேகொடு
சினத்து வந்தெதிர் சூலமு மேகையி
லெடுத்தெ திர்ந்தழல் வாய்விட வேபய முறவேதான்
இழுக்க வந்திடு தூதர்க ளானவர்
பிடிக்கு முன்,புன தாள்மல ராகிய
இணைப்ப தந்தர வேமயில் மீதினில் வரவேணும்;
கனத்த செந்தமி ழால்நினை யேதின
நினைக்க வுந்தரு வா,யுன தாரருள்
கருத்தி ருந்துறை வாயென தாருயிர் துணையாகக்,
கடற்ச லந்தனி லேயொளி சூரனை
யுடற்ப குந்திரு கூறென வேயது
கதித்தெ ழுந்தொரு சேவலு மாமயில் விடும்வேலா!
அனத்த னுங்கம லாலய மீதுறை
திருக்க லந்திடு மாலடி நேடிய
அரற்க ரும்பொருள் தானுரை கூறிய குமரேசா!
அறத்தை யுந்தரு வோர்கன பூசுரர்,
நினைத்தி னந்தொழு வாரம, ராய்புரி
யருட்செ றிந்தவி நாசியுள் மேவிய பெருமாளே!(௧௯

## XIII. திருவடிக்கன்பு.

70. தானதந்த தானதந்த தானதந்த தானதந்த
719 தானதந்த தானதந்த தனதான.

தோலெலும்பு சீநரம்பு பீளைதுன்று கோழைபொங்கு
சோரிபிண்ட மாயுருண்டு வடிவான
தூலபங்க காயம்வம்பி லேசுமந்து நான்மெலிந்து
சோருமிந்த நோயகன்று துயராற,
ஆலமுண்ட கோனகண்ட லோகமுண்ட மால்விரிஞ்ச
னாரணங்க ளாகமங்கள் புகழ்தாளும்
ஆனனங்கள் மூவிரண்டு மாறிரண்டு தோளுமங்கை
யாடல்வென்றி வேலுமென்றும் நினைவேனோ?
வாலசந்த்ர சூடிசந்த வேதமந்த்ர ரூபியம்பை
வாணிபஞ்ச பாணிதந்த முருகோனே!
மாயையைந்து வேகமைந்து பூதமைந்து நாதமைந்து
வாழ்பெருஞ்ச ராசரங்க ளுறைவோனே!
வேலையன்பு கூரவந்த ஏகதந்த யானைகண்டு
வேடர்மங்கை யோடியஞ்ச அணைவோனே!
வீரமங்கை வாரிமங்கை பாரின்மங்கை மேவுகின்ற
மேருமங்கை யாளவந்த பெருமாளே! (க)

---

71. தத்தனை தான தத்தனை தான
385 தத்தனை தான தனதான.

புற்புதமெ னாம அற்பநிலை யாத
பொய்க்குடில்கு லாவு மனையாளும்
புத்திரரும் வீடு மித்திரரு மான
புத்திசலி யாத பெருவாழ்வு,
நிற்பதொரு கோடி கற்பமென மாய
நிட்டையுடன் வாழு மடியேன்யான்,
நித்தநின தாளில் வைத்ததொரு காதல்
நிற்கும்வகை யோத நினைவாயே;
சற்பகிரி நாத! முத்தமிழ்வி நோத!
சக்ரகதை பாணி மருகோனே!

தர்க்கசமண் மூகர் மிக்ககழு வேற
வைத்தவொரு காழி மறையோனே!
கற்புவழு வாது வெற்படியின் மேவு
கற்றைமற வாணர் கொடிகோவே!
கைத்தஅசு ரேசர் மொய்த்தகுல கால!
கற்பதரு நாடர் பெருமாளே! (௨)

---

51 72. தனனதன தனன தந்தத் தனதான.

இயலிசையி லுசித வஞ்சிக் கயர்வாகி,
இரவுபகல் மனது சிந்தித் துழலாதே,
உயர்கருணை புரியு மின்பக் கடல்மூழ்கி,
உனையெனது ளறியு மன்பைத் தருவாயே.
மயில்தகர்க ளிடைய ரந்தத் தினைகாவல்
வனசகுற மகளை வந்தித் தணைவோனே!
கயிலைமலை யனைய செந்திற் பதிவாழ்வே!
கரிமுகவ னிளைய கந்தப் பெருமாளே! (௩)

---

97 73. தனதான தந்த தனதான.

வரியார்க ருங்கண் மடமாதர்
மகவாசை தொந்த மதுவாகி,
இருபோது ழைந்து மெலியாதே,
இருதாளி னன்பு தருவாயே;
பரிபால னஞ்செய் தருள்வோனே!
பரமேசு ரன்ற னருள்பாலா!
அரிகேச வன்றன் மருகோனே!
அலைவாய மர்ந்த பெருமாளே. (௪)

---

74. தனன தான தத்த தனதான
421 தனன தான தத்த தனதான.

எதிரி லாத பத்தி தனைமேவி,
இனிய தாணி னைப்பை யிருபோதும்
இதய வாரி திக்கு ளுறவாகி,
எனது ளேசி றக்க அருள்வாயே;

கதிர காம வெற்பி லுறைவோனே!
கனக மேரு வொத்த புயவீரா!
மதுர வாணி யுற்ற கழலோனே!
வழுதி கூனி மிர்த்த பெருமாளே. (ரு)

---

75. தனன தான தானன தனன தான தானன
576 தனன தான தானன தனதான.

புலைய னான மாவீனன் வினையி லேகு *மாபாதன்
பொறையி லாத கோபிகன் முழுமூடன்,
புகழி லாத †தாமீகன் அறிவி லாத காபோதி
பொறிக ளோடு போய்வீழு மதிசூதன்,
நிலையி லாத கோமாளி கொடையி லாத ஊதாரி
நெறியி லாத வேமாளி குலபாதன்,
நினது தாளை நாடோறு மனதி லாசை வீடாமல்
நினையு மாறு நீமேவி யருள்வாயே;
சிலையில் வாளி தானேவி யெதிரி ராவ ணார்தோள்கள்
சிதையு மாறு போராடி, யொருசீதை
சிறையி லாம லேகூடி, புவனி மீதி லேவீறு
‡திறமி யான மாமாயன் மருகோனே!
அலைய மேரு, மாசூரர் பொடிய தாக, வேலேவி
அமர தாடி யே,தோகை
அதிக தேவ ரேசூழ, உலக மீதி லேகூறும்
அருணை மீதி லேமேவு, பெருமாளே! (சு)

---

76. தானதன தானதந்த தானதன தானதந்த
708 தானதன தானதந்த தனதான.

சாலநெடு நாள்மடந்தை காயமதி லேயலைந்து,
சாமளவ தாகவந்து, புவிமீதே
சாதகமு மானபின்பு, சீறியழு தேகிடந்து
தாரணியி லேதவழ்ந்து விளையாடி,

---

* மாபர்வி எனவும் பாடம். † மாமூகன் எனவும் பாடம்.
‡ திறலுன என்றும் பாடம்.

பாலனென வேமொழிந்து, பாகுமொழி மாதர்தங்கள்
பாரதன மீதணைந்து, பொருள்தேடி,
பாரமிசையி லேயுழன்று பாழ்நரகெய் தாம,லொன்று
பாதமலர் சேரஅன்பு தருவாயே;
ஆலமமு தாகவுண்ட ஆறுசடை நாதர்திங்கள்
ஆடரவு பூணர்தந்த முருகோனே!
ஆனைமடு வாயிலன்று மூலமென வோலமென்ற
ஆதிமு,தல் நாரணன்றன் மருகோனே!
கோலமலர் வாவியெங்கு மேவுபுனம் வாழ்மடந்தை
கோவையமு தாறலுண்ட குமரேசா!
கூடிவரு சூரடங்க மாளவடி வேலெறிந்த
கோடைநகர் வாழவந்த பெருமாளே! (எ)

---

77. தனன தனன தனன தனன
தனன தனன தனதான.

834

விழுதா தெனவே கருதா துடலை,
வினைசேர் வதுவே புரிதாக
விருதா வினிலே யுலகா யதமே
விடவே, மடவார் மயலாலே,
அழுதா கெடவே அவமா கிட,நா
ளடைவே கழியா, துணையோதி
அலர்தா ளடியே னுறவாய் மருவோ
ரழியா வரமே தருவாயே;
தொழுதார் வினைவே ரடியோ டறவே
துகள்தீர் பரமே தருதேவா!
சுரர்பூ பதியே! கருணா லயனே!
சுகிர்தா! அடியார் பெருவாழ்வே!
எழுதா மறைமா முடிவே! வடிவே
லிறைவா! எனையா ளுடையோனே!
இறைவா! எதுதா வதுதா, தனையே
இணைநா கையில்வாழ் பெருமாளே! (அ)

78. தானன தான தான தனதன
350 தானன தான தான தனதன
தானன தான தான தனதன தனதான

சீரான கோல கால நவமணி
மாலாபி ஷேக பார வெகுவித
தேவாதி தேவர் சேவை செயுமுக மலராறும்,
சீராடு வீர மாது மருவிய
ஈராறு தோளும், நீளும வரியளி
சீராக மோது நீப பரிமள இருதாளும்,
ஆராத காதல் வேடர் மடமகள்
சீமூத மூர்வ லாரி மடமகள்
ஆதார பூத மாக வலமிட முறைவாழ்வும்,
ஆராயும நீதி வேலு மயிலுமெய்
ஞானாபி ராம தாப வடிவமும்,
ஆபாத னேனும் நாளும நினைவது பெறவேணும்.
ஏராரு மாட கூட மதுரையில்
மீதேறி மாறி யாடு மிறையவர்,
ஏழேழு பேர்கள் கூற வருபொரு ளதிகாரம
ஈடாய, வூமர் போல வணிகரி
லூடாடி, யால வாயில விதிசெய்த
லீலா!வி சார தீர! வரதர குருநாதா!
கூராழி யால்முன் வீய நினைபவ
னீடேறு மாறு பானு மறைவுசெய்
கோபால ராய னேய முளதிரு ருகோனே!
கோடாம லார வார அலையெறி
காவேரி யாறு பாயும் வயலியில்
கோனாடு சூழ்வி ராலி மலையுறை பெருமாளே! (௬)

---

79. தனத்தத தானன தானன தானன
626 தனத்தத் தானன தானன தானன
தனத்தத் தானன தானன தானன தநததான.

எலுப்புத் தோல்மயிர் நாடிகு டாமிடை
இறுக்குச் சீ,புழு வோடடை மூளைகள்,
இரத்தச் சாகர, நீர்மல மேவிய கும்பியோடை,

இளைப்புச் சோகைகள் வாதம்வி லாவலி,
உளைப்புச் சூலையொ டே,வலு வாகிய
இரைப்புக், கேவல மூலவி யாதியொ டண்டவாதம்,
குலைப்புக் காய்கனல் நீரிழி விளையொ
டளைப்புக் காதடை கூனல்வி சூசிகை
குருட்டுக் கால்முட மூமையு ளூடறு கண்டமாலை,
குடிப்புக் கூன,மி தேசத மாமென
எடுத்துப் பாழ்வினை யாலுழல் நாயெனு
னிடத்துத் தாள்பெற ஞானச தாசிவ அன்புதாராய்;
கெலிக்கப் போர்பொரு சூரர்கு ழாமுமி
ழிரத்தச் சேறெழ தேர்பரி யாளிகள்
கெடுத்திட் டேகடல் சூர்கிரி தூள்பட கண்டவேலா!
கிளைப்பொற் றூளிச ராசர மேவியெ
யசைத்துப பூசைகொள் ஆயிப ராபரி
கிழப்பொற் காளைமெ லேறுமெ நாயகி பங்கின்மேவும்
வலித்துத் தோள்மலை ராவண னானவன்
எடுத்தப் போதுடல் கீழ்விழ வேசெய்து
மகிழ்ப்பொற் பாதசி வாயந மோஅர சமயபாலா!
மலைக்கொப் பாமுலை யாள்குற மாதினை
அணைத்துச் சீர்புலி யூரபர மாகிய
வடக்குக் கோபுர வாசலில் மேவிய தம்பிரானே! (௧0)

---

## XIV. சிவஞானம்.

80. தனதனா தானனத் தனதனா தானனத்
536 தனதனா தானனத தனதான.

அழுதுமா வாவெனத் தொழுது,மூ டேநெக்
கவசமா யாதரக் கடலூடுற்,
றமைவில்கோ லாகலச் சமயமா பாதகர்க்
கறியொணா மோனமுத் திரைநாடிப்
பிழைபடா ஞானமெய்ப் பொருள்பெறா தே,வினைப்
பெரியஆ தேசபுற் புதமாய

பிறவிவா ராகரச் சுழியிலே போய்விழப்
பெறுவதோ நானினிப் புகல்வாயே?
பழையபா கீரதிப் படுகைமேல் வாழ்வெனப்
படியுமா றுயினத தனசாரம்
பருகுமா றுனனச் சிறுவ! சோ ணுசலப்
பரம!மா யூர!வித தகவேளே!
பொழுதுசூழ் போதுவெற் பிடிபடா, பார்முதற்
பொடிபடா வோட,முத் தெறிமீனப்
புணரிகோ கோவெனச், சுருதிகோ கோவெனப்,
பொருதவே லாயுதப் பெருமாளே. (௧)

---

81. தத்தன தானதான தத்தன தானதான
784 தததன தானதான தனதான.

எத்தனை கோடிகோடி விட்டுட லோடியாடி
யெத்தனை கோடிபோன, தளவேதோ?
இப்படி மோகபோக மிப்படி யாகியாகி
யிப்படி யாவதேது, இனிமேலோ
சித்திடில், சீசிசீசி குதத்திர மாயமாயை
சிக்கினி லாயுமாயு மடியேனை,
சித்தினி லாடலோடு முத்தமிழ் வாணரோது
சித்திர ஞானபாத மருள்வாயே;
நித்தமு மோதுவார்கள் சித்தமெ வீடதாக
நிர்த்தம தாடுமாறு முகவோனே!
நிட்கள ரூபர்பாதி பச்சுரு வானமூனு
நெட்டிலை சூலபாணி யருள்பாலா!
பைத்தலை நீடுமாயி ரத்தலை மீதுபீறு
பத்திர பாதநீல மயில்வீரா!
பச்சிள பூகபாளை செய்க்கயல் தாவுவேளூர்
பற்றிய மூவர்தேவர் பெருமாளே! (௨)

---

82. தானன தான தனதன தானன தான தனதன
1210 தானன தான தனதன தனதான.

ஆசார வீன னறிவிலி கோபாப ராதி யவகுண
னுகாத நீச னதுசிதன் விபரீதன்,

ஆசாவி சார வெகுவித மோகாச ரீத பரவச
னாகாச நீர்ம ணனல்வளி யுருமாறி,
மாசான நாலெண் வகைதனை நீநானெ னாதை அறிவுளம்
வாயாத பாவி யிவனென நினையாமல்,
மாதாபி தாவி னருணல மாறும காரி லெனையினி
மாஞான போத மருள்செய நினைவாயே;
வீசால வேலை சுவறிட, மாசூரர் மார்பு துளைபட,
வேதாள ராசி பசிகெட, அறைகூறி
மேகார வார மெனஅதிர் போர்யாது தான ரெமபுர
மீதேற, வேல்கொ டமர்செயு மிளையோனே!
கூசாது வேட னுமிழ்தரு நீராடி யூனு ணெனுமுறை
கூறும னீய, அவனுகர் தருசேடங்
கோதாமெ னாம லமுதுசெய் வேதாக மாதி முதல்தரு
கோ! லோக நாத! குறமகள் பெருமாளே! (௫)

---

968 83. தனதான தானத தனதான
தனதான தானத தனதான.

கலைமேவு ஞானப் பிரகாசக்
கடலாடி, ஆசைக் கடலேறி,
பலமாய வாதிற் பிறழாதே,
பதிஞான வாழ்வைத தருவாயே.
மலைமேவு மாயக் குறமாதின்
மனமேவு வாலக் குமரேசா!
சிலைவேட! சேவற் கொடியோனே!
திருவாணி கூடற் பெருமாளே! (௪)

---

505 84. தானத் தானத் தனதானா
தானத் தானத் தனதானா.

நாடித் தேடித் தொழுவார்பால்
நானத் தாகத் திரிவேனோ?
மாடக் கூடற் பதி! ஞான
வாழ்வைச் சேரத் தருவாயே.

பாடற் காதற் புரிவோனே!
பாலைத் தேனைத் தருள்வோனே!
ஆடற் றோகைக் கினியோனே!
ஆனைக் காவிற் பெருமாளே! (ரு)

---

380 85. தானதனத் தனதான தானதனத் தனதான.

காலனிடத் தணுகாதே, காசினியிற் பிறவாதே,
சீலஅகத் தியஞான தேனமுதைத் தருவாயே;
மாலயனுக் கரியானே! மாதவரைப் பிரியானே!
நாலுமறைப் பொருளானே! நாககிரிப் பெருமாளே! (சு)

---

## XV. தெரிசனம்.

86. தந்தன தனந்தனந் தனதனத்
47 தந்தன தனந்தனந் தனதனத்
தந்தன தனந்தனந் தனதனத் தனதான.

அந்தகன் வருந்தினம் பிறகிடச்,
சந்தத மும்வந்துகண் டரிவையர்க்
கன்புரு குசங்கதந் தவிர,முக் குணமாள,
அந்திப கலென்றிரண் டையுமொழித்
திந்திரி யசஞ்சலங் களையறுத்
தம்புய பதங்களின் பெருமையைக் கவிபாடிச்
செந்திலை யுணர்ந்துணர்ந் துணர்வுறக்,
கந்தனை யறிந்தறிந் தறிவினிற்
சென்றுசெ ருகுந்தடந் தெளிதரத், தணியாத
சிந்தையு மவிழ்ந்தவிழ்ந் துரையொழித்
தென்செய லழிந்தழிந் தழிய,மெய்ச்
சிந்தைவர, என்றுநின் தெரிசனைப் படுவேனோ?
கொந்தவிழ் சரண்சரண் சரணெனக்,
கும்பிடு புரந்தரன் பதிபெறக்,
குஞ்சரி குயம்புயம் பெற,அரக் கருமாள,

குன்றிடி ய,அம்பொனின் திருவரைக்
கிண்கிணி கிணின்கிணின் கிணினெனக்,
குண்டல மசைந்திளங் குழைகளிற் ப்ரபைவீச,
தந்தன தனநதனந தனவெனச்,
செஞ்சிறு சதங்கைகொஞ் சிட,மணித
தண்டைகள் கலின்கலின் கலினெனத், திருவான
சங்கரி மனங்குழைந் துருகமுத்
தந்தர வருஞ்செழுந தளர்நடைச்
சந்ததி! சகந்தொழுஞ் சரவணப் பெருமாளே! (௧)

---

87. தந்தனந் தந்தத் தனதான
10 தந்தனந் தந்தத தனதான.

சந்ததம் பந்தத் தொடராலே,
சஞ்சலந் துஞ்சித் திரியாதே,
கந்தனென் றென்றுற் றுனைநாளுங்
கண்டுகொண் டன்புற் றிடுவேனோ?
தந்தியின் கொம்பைப் புணர்வோனே!
சங்கரன் பங்கிற் சிவைபாலா!
செந்திலங் கண்டிக் கதிர்வேலா!
தென்பரங் குன்றிற் பெருமாளே! (௨)

---

88. தனதனன தனன தந்தத் தனதான
592 தனதனன தனன தந்தத் தனதான.

இருவினையின் மதிம யங்கித் திரியாதே,
எழுநரகி லுழலு நெஞ்சுற் றலையாதே,
பரமகுரு அருள்நி னைந்திட் டுணர்வாலே,
பரவுதரி சனையை யென்றெற் கருள்வாயே.
தெரிதமிழை யுதவு சங்கப் புலவோனே!
சிவனருளு முருக! செம்பொற் கழலோனே!
கருணைநெறி புரியு மன்பர்க் கெளியோனே!
கனகசபை மருவு கந்தப் பெருமாளே! (௩)

89. தந்தன தந்தனந் தந்தன தந்தனந் /௬
/௬ தந்தன தந்தனந் தந்ததான.

தண்டையணி வெண்டையங் கிண்கிணிச தங்கையுந்
தண்கழல்சி லம்புடன் கொஞ்சவே,நின்
தந்தையினோ முன்பரிந் தின்பவுரி கொண்டுநன்
சந்தொடம ணைந்துநின் றன்புபோலக்
கண்டுற,க டம்புடன் சந்தமகு டங்களுங்
கஞசமலர் செங்கையுஞ் சிந்துவேலும்
கண்களுமு கங்களுஞ் சந்திரநி றங்களுங்
கண்குளிர என்றன்முன் சந்தியாவோ?
புண்டரிக ரண்டமுங் கொண்டபகி ரண்டமும்
பொங்கியெழ வெங்களங் கொண்டபோது,
பொன்கிரியெ ன்றுசிறந தெங்கினும் வளர்ந்துமுன்
புண்டரிகர் தந்தையுஞ் சிந்தைகூர
கொண்டநட னம்பதஞ், செந்திலிலு மென்றன்முன்
கொஞ்சிநட னங்கொளுங் கந்தவேளே!
கொங்கைகுற மங்கையின் சந்தமணமுண்டிடுங்
கும்பமுநி கும்பிடுந் தம்பிரானே! (௭

---

90. தனன தாத்தன தானு தானன
/௧௬௪ தனன தாத்தன தானு தானன
தனன தாத்தன தானு தானன தனதான.

நிருத ரார்க்கொரு காலா ஜேஜெய,
சுரர்க ளேத்திடு வேலா ஜேஜெய,
நிமல னர்கொரு பாலா ஜேஜெய, விறலான
நெடிய வேற்படை யானே ஜேஜெய,
எனஇ ராப்பகல் தானே நான்மிக
நினது தாட்டொழு மாறே தா,னினி யுடனேதான்,
தரையி னாழ்த்திரை யேழே போ,லெழு
பிறவி மாக்கட லூடே நானுறு
சவலை தீர்த்,தன தாளே சூடி,யு னடியார்வாழ்
சபையி னேற்றி,யின் ஞான போதமு
மருளி, யாட்கொளு மாறே தானது,
தமிய னேற்குமு னேநீ மேவுவ தொருநாளே.

தருவி னுட்டார சாள்வான் வேனுவி
னுருவ மாய்ப்பல நாளே தானுறு
தவசி னுற்,சிவ னீபோய் வானவர் சிறைதீரச்,
சகல லோக்கிய மேதா னுளுறு
மசுர பார்த்திவ னோடே சேயவர்
தமரை, வேற்கொடு நீறு யேபட விழமோதென்
றருள, ஏற்றம ரோடே போ,யவ
ருறையு மாக்கிரி யோடே தானையு
மழிய வீழ்த்,தெதிர் சூரோ டேயம ரடலாகி,
அமரில் வீட்டியும், வானோர் தானுறு
சிறையை மீட்,டடா னோர்பால் மேவிய,
அதிப ராக்ரம வீரா! வானவர் பெருமாளே! (௫)

---

91. தனதான தந்ததன தனதான தந்ததன
109 தனதான தந்ததன தனதான.

சிவனார்ம னங்குளிர உபதேச மந்த்ரமிரு
செவிமீதி லும்பகர்செய் குருநாத!
சிவகாம சுந்தரிதன் வரபால! கந்த!நின
செயலேவி ரும்பியுளம் நினையாமல்,
அவமாயை கொண்டுலகில் விருதாஅ லைந்துழலு
மடியேனை அஞ்சலென வரவேணும்;
அறிவாக மும்பெருக இடரான துந்தொலைய
அருள்ஞான இன்பமது புரிவாயே.
நவநீத முந்திருடி உரலோடெ யொன்றுமரி
ரகுராமர் சிந்தைமகிழ் மருகோனே!
நவலோக முங்கைதொழு நிசதேவ! லங்கிருத!
நலமான விஞ்சைகரு விநோதவே!
தெவயானை யங்குறமின் மணவாள! சம்ப்ரமுறு
திறல்வீர! மிஞ்சுகதிர் வடிவேலா!
திருவாவி னன்குடியில் வருவேள்ச வுந்தரிக!
செகமேல்மெய் கண்டவிறல் பெருமாளே! (௬)

92. தனன தனதன தனதன தனதன
132 தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன தனதான.

திகர நறுமலர் பொதுளிய குழலியர்
கலக செருவித விழிவலை படவிதி
தலையி லெழுதியு மனைவயி னுறவிடு மதனாலே,
தனயர் அனைதமர் மனைவியர் சினெகிதா,
சுரபி விரவிய வகையென, நினைவுறு
தவன சலதியின் முழுகியெ யிடாபடு துயர்தீர,
அகர முதலுள பொருளினை யருளிட,
இருகை குவிசெய்து ஞருகிட, வுருகியெ
அரக ரென,வல னிடமுற, எழிலுன திருபாதம்
அருள அருளுடன், மருளற இருளற,
கிரண அயில்கொடு குருகணி கொடியொடு
அழகு பெறமர கதமயில மிசைவர இசைவாயே;
சிகர குடையினி னிரைவர இசைதெரி
சதுரன், விதுரனில வருபவ, னலையது
திருடி யடிபடு சிறியவ, னெடியவன், மதுசூதன்,
திகிரி வளைகதை வசிதனு வுடையவ,
னெழிலி வடிவின, னரவுபொன் முடிமிசை
திமித திமிதிமி யெனநட மிடுமரி, மருகோனே!
பகர புகர்முக மதகரி யுழைதரு
வனிதை வெருவமுன் வரஅருள் புரிகுக!
பரம குருபர! இமகிரி தருமயில் புதல்வோனே!
பலவின் முதுபழம் விழைவுசெய் தொழுகிய
நறவு நிறைவயல் கமுகடா பொழில்திகழ்
பழநி மலைவரு புரவல! அமரர்கள் பெருமாளே! (௭)

---

93. தனதன தனந்த தான தனதன தனந்த தான
205 தனதன தனந்த தான தனதான.

இருவினை புனைந்து, ஞான விழிமுனை திறந்து, நோயி
னிருவினை யிடைந்து போக, மலமூட
இருளற விளங்கி, யாறு முகமொடு கலந்து பேத
மிலையென, இரண்டு பேரு ›கான

பரிமள சுகந்த வீத மயமென, மகிழ்ந்து தேவர்
பணிய,விண் மடநதை பாத மலர்தூவப்,
பரிவுகொ டநந்த கோடி முநிவர்கள் புகழ்ந்து பாட,
பருமயி லுடன்கு லாவி வரவேணும்;
அரியய னறிந்தி டாத அடியிணை சிவந்த பாதம்
அடியென விளங்கி யாடு நடராஜன்,
அழலுரு மிரும்பின் மேனி மகிழ்மர கதமபெ ணுகம்
அயலணி சிவன்பு ராரி, யருள்சேயே!
மருவலர் கள்திண்ப ணுர முடியுடல் நடுங்க, ஆவி
மறலியு ண,வென்ற வேலை யுடையோனே!
வளைகுல மலங்கு காவி ரியின்வட புறஞ்சு வாமி
மலைமிசை விளங்கு தேவர் பெருமாளே! (அ)

---

94. தனதன தந்த தனதன தந்த
543 தனதன தந்த தனதான.

இருவினை யஞ்ச, மலவகை மங்க,
இருள்பிணி மங்க, மயிலேறி,
இனவரு ளன்பு மொழிய,க டம்பு
வினதக முங்கொ டளிபாட,
கரிமுக னெம்பி முருகனெ னண்டர்
களிமலர் சிந்த, அடியேன்முன்
கருணைபொ ழிந்து, முகமும லர்நது,
கடுகிந டங்கொ, டருள்வாயே;
திரிபுர மங்க, மதனுடல் மங்க,
திகழ்நகை கொண்ட விடையேறி
சிவம்,வெளி யங்க ணருள்குடி கொண்டு,
திகழுந டஞ்செய் தெமையீண,
அரசியி டங்கொள் மழுவுடை யெந்தை
அமலன்ம கிழ்ந்த குருநாதா!
அருணைநி லங்கல் மகிழ்குற மங்கை
அமளிந லங்கொள் பெருமாளே! (௯)

35 95. தானனா தந்தனந் தானனா தந்தனந்
தானனா தந்தனந் தனதான.

காலனார் வெங்கொடுந் தூதர்பா சங்கொடென்
  காலினார் தந்துடன் கொடுபோகக்,
 காதலார் மைந்தருந் தாயாரா ருஞ்சுடுங்
  கானமே பின்தொடர்ந் தலறுமுன்,
சூலம்வாள் தண்டுசெஞ் சேவல்கோ தண்டமுஞ்
  சூடுதோ ளுந்தடந் திருமார்புந்
 தூயதாள் தணையுங் காண,ஆர் வஞ்செயுந்
  தோகைமேல் கொண்டுமுன் வரவேணும்;
ஆலகா லம்பரன் பாலதா கஞ்சிடுந்
  தேவர்வா ழன்றுகந் தமுதீயும்,
 ஆரவா ரஞ்செயும் வேலைமேல் கண்வளர்ந்
  தாதிமா யன்றனன் மருகோனே!
சாலிசேர் சங்கினம் வாவிசூழ் பங்கயஞ்
  சாரலார் செந்திலம் பதிவாழ்வே!
 தாவுசூ ரஞ்சிமுன் சாயவே கம்பெறுந்
  தாரைவே லுந்திடும் பெருமாளே! (௧0)

---

96. தனன தான தானன தனன தான தானன
1056 தனன தான தானன தனதான.

அதல சேட னாராட, அகில மேரு மீதாட,
  அபின காளி தானாட, அவளோடன்
 றதிர வீசி வாதாடும் விடையி லேறு வாராட,
  அருகு பூத வேதாள மவையாட,
மதுர வாணி தானாட, மலரில் வேத னாராட,
  மருவு வானு ளோராட, மதியாட,
 வனச மாமி யாராட, நெடிய மாம னாராட,
  மயிலு மாடி, நீயாடி வரவேணும்.
கதைவி டாத தோள்வீம னெதிர்கொள் வாளி யால்நீடு
  கருத லார்கள் மாசேனை பொடியாகக்,
 கதறு காலி போய்மீள, விஜய னேறு தேர்மீது
  கனக வேத கோடூதி, அலைமோதும்

உததி மீதி லேசாயு முலக மூடு சீர்பாத
உவண மூர்தி மாமாயன், மருகோனே!
உதய தாம மார்பான ப்ரபுட தேவ மாராஜ
னுளமு மாட வாழ்தேவர் பெருமாளே! (௧௧)

---

97. தனன தான தானன தனன தான தானன
698 தனன தான தானன தனதான.

கடிய வேக மாருத விரத சூத ராபாதர்
கலக மேசெய் பாழ்மூடர் வினைவேடர்
கபட வீன ராகாத இயல்பு நாடி யே,நீடு
கனவி கார மேபேசி, நெறிபேணாக்
கொடிய, னேது மோராது விரக சால யேமூடு
குடிலின் மேவி யேநாளு மடியாதே,
குலவு தோகை மீதாறு முகமுமம வேலு மீராறு
குவளை வாகும் நேர்காண வருவாயே;
படியி னோடு மாமேரு அதிர வீசி யே,சேட
பணாமு மாட வே,நீடு வரைசாடிப்,
பரவை யாழி நீர்மோத, நிருதர் மாள, வானாடு
பதிய தாக, வேலேவு மயில்வீரா!
வடிவு லாவி யாகாச மிளிர்ப லாவி னீள்சோலை,
வனச வாவி, பூவோடை, வயலோடே,
மணிசெய் மாட மாமேடை சிகர மோடு வாகான
மயிலை மேவி, வாழ்தேவர் பெருமாளே! (௧௨)

---

98. தனதனன தாத்தனத் தனதானா
தனதனன தாததனத் தனதானா.

1296
பிறவியலை யாற்றினிற் புகுதாதே,
பிரகிருதி மார்க்கமுற் றலையாதே,
உறுதிகுரு வாக்கிய பொருளாலே,
உனதுபத காட்சியைத் தருவாயே.
அறுசமய சாத்திர பொருளோனே!
அறிவுளறி வார்க்குணக் கடலோனே!
குறுமுனிவ னோத்துமுத் தமிழோனே!
குமாரகுரு கார்த்திகைப் பெருமாளே! (௧௩)

# XVI. ஞானோபதேசம்.

99. தனதனன தானதன தத்தனா தாத்த
தனதனன தானதன தத்தனா தாத்த
தனதனன தானதன தத்தனா தாத்த தனதான.

கலகவிழி மாமகளிர் கைக்குளே யாய்ப்,பொய்
களவுமத னூல்பலப டித்,தவா வேட்கை,
கனதனமு மார்புமுற விசையா லார்த்து, கழுநீரார்
கமழ்நறைச வாதுபுழு கைத்துழாய் வார்த்து,
நிலவரசு நாடறிய கட்டில்போட் டார்ச்செய்
கருமமறி யாது,சிறு புத்தியால் வாழ்க்கை கருதாதே,
தலமடைசு சாளரமு கப்பிலே காத்து,
நிறைபவுசு வாழ்வரசு சத்யமே வாய்த்த
தெனவுருகி யோடியொரு சற்றுளே வார்த்தை தடுமாறி
தழுவியனு ராகமுமவி ளைத்துமா யாக்கை
தனையுமரு நாளையும வத்திலே போக்கு
தலையறிவி லேனை,நெறி நிற்கநீ தீக்ஷை தரவேணும்;
அலகில்தமி ழாலுயர்ச மாத்தனே! போற்றி,
அருணைநகர் கோபுரவி ருப்பனே! போற்றி,
அடல்மயில்ந டாவியப்ரி யத்தனே! போற்றி, அவதான
அறுமுகசு வாமியெனும் அத்தனே! போற்றி,
அகிலதல மோடிவரு நிர்த்தனே! போற்றி,
அருணகிரி நாதனெனும் அப்பனே! போற்றி, அசுரேசர்
பெலமடிய வேல்விடுக ரத்தனே! போற்றி,
கரதலக பாலிகுரு வித்தனே! போற்றி, [ம்
பெரியகுற மாதணைபு யத்தனே! போற்றி, பெருவாழ்வா
பிரமனறி யாவிரத தக்ஷிணா மூர்த்தி!
பரசமய கோளரி!த வத்தினால வாய்த்த
பெரியமட மேவியசு கத்தனே! யோக்யர் பெருமாளே! (௧)

---

100. தானத்தத் தான தானன
தானத்தத் தான தானன தந்ததான.

வாசித்துக் காணொ ணாதது,
பூசித்துக் கூடொ ணாதது,
வாய்விட்டுப் பேசொ ணாதது, நெஞ்சினாலே

மாசர்க்குத் தோன்று றாதது,
நேசர்க்குப பேரொ றாதது,
மாயைக்குச சூழொ றாதது, விந்துநாத
ஓசைக்குத் தூர மானது,
மாகத்துக் கிற தானது,
லோகத்துக காதி யானது, கண்டுநாயேன்
யோகத்தைச சேரு மாறு,மெய்
ஞானத்தைப போதி யா,யினி
யூனத்தைப் போடி டாதும யங்கலாமோ?
ஆசைப்பட் டேனல் காவல்செய்
வேடிச்சிக் காக மாமய
லாகிப்பொற் பாத மேபணி கந்தவேளே!
ஆலித்துச சேல்கள் பாய்வய
லூரத்திற் காள மோடட
ராரத்தைப் பூண்ம யூரது ரங்கவீரா!
நாசிக்குட் ப்ராண வாயுவை
ரேசித்தெட் டாத யோகிகள்
நாடிற்றுக் காணொ ணாதென நின்றநாதா!
நாகத்துச் சாகை போயுயர்
மேகத்தைச சேர்சி ராமலை
நாதர்க்குச் சாமி யேசுரர் தம்பிரானே! (௨)

---

101. தனதன தாத்தன தனதன தாத்தன
௪௰ தனதன தாத்தன தந்ததான.

விரகற நோக்கியு முருகியும் வாழ்த்தியும்
விழிபுனல் தேக்கிட, அன்புமேன்மேல்
மிகவுமி ராப்பகல் பிறிதுப ராக்கற,
விளைவுகு ராப்புனை யுங்குமார!
முருக!ச டாக்ஷர! சரவண! கார்த்திகை
முலைநுகர் பார்த்திவ! என்றுபாடி
மொழிகுழ றித்தொழு தழுதழு தாட்பட,
முழுதும லாப்பொருள் தந்திடாயோ?
பரகதி காட்டிய விரக!சி வேச்சுர!
பணிய ராக்ஷம! சம்பராரி

படவிழி யாற்பொரு பசுபதி போற்றிய
பகவதி பார்ப்பதி . தந்தவாழ்வே!
இரைகடல் தீப்பட, நிசிசரர் கூப்பிட,
எழுகிரி யார்ப்பெழ, வென்றவேலா!
இமையவர் நாட்டினில நிறைகுடி யேற்றிய,
எழுகரை நாட்டவர் தம்பிரானே! (ரு)

102. தானதத்தன தானதானன தானதத்தன தானதானன
655 தானதத்தன தானதானன தனதான.

தாரணிக்கதி பாவியாய்,வெகு சூதுமெத்திய மூடனாய்,மன
சாதனைக்கள வாணியாயுறு மதிமோக
தாபமிக்குள வீணனாய்,பொரு வேல்விழிச்சிய ராகுமாதர்கள்
தாமுயசெயு மேதுதேடிய நினைவாகிப்,
பூரணச்சிவ ஞானகாவிய மோதுதற்புணர் வானநேயர்கள்
பூசுமெய்த்திரு நீறிடாஇரு வினையேனைப்,
பூசிமெய்ப்பத மானசேவடி காணவைத்,தருள் ஞானமாகிய
போதகத்தினை யேயுமாறருள் புரிவாயே;
வாரணத்தினை யேகராவுமு னேவளைத்திடு போதுமேவிய
மாயவற்கித மாகவீறிய மருகோனே!
வாழுமுப்புர வீறதானது நீறெழப்புகை யாகவேசெய்த
மாமதிப்பிறை வேணியாரருள் புதல்வோனே!
காரணக்குறி யானநீதிய ரானவர்க்குமு னாகவேநெறி
காவியச்சிவ நூலையோதிய கதிர்வேலா!
கானகக்குற மாதைமேவிய ஞானசொற்கும ரா!பராபர!
காசியிற்பிர தாபமாயுறை பெருமாளே! (சு)

---

103. தத்தத்தத் தானன தானன
484 தத்தத்தத் தானன தானன
தத்தத்தத் தானன தானன தனதான.

மக்கட்குக் கூறரி தானது,
கற்றெட்டத் தான்முடி யாதது,
மற்றொப்புக் கொருமொவ் வாதது

மட்டிட்டுத் தேடவொ ணாதது,
தத்வத்திற் கோவைப டாதது,
மத்தப்பொற் போதுப கீரதி மதிசூடும்
முக்கட்பொற் பாளரு சாவிய
அர்த்தக்குப் போதக மானது,
முத்திக்குக் காரண மானது, பெறலாகா
முட்டர்க்கெட் டாதது, நான்மறை
யெட்டிற்றெட் டாதென வேவரு
முற்பட்டப் பாலையி லாவது புரிவாயே;
செக்கட்சக் ராயுத மாதுலன்
மெச்சப்புற் போதுப டாவிய
திக்குப்பொற் பூதர மேமுதல் வெகுரூபம்
சிட்டித்துப், பூதப சாசுகள்
கைக்கொட்டிட் டாட,ம கோததி
செற்,றுக்ரச் சூரனை மார்பக முதுசோரி
கக்கக்கைத் தாமரை வேல்விடு,
செச்சைக்கர்ப் பூரபு யாசல!
கச்சுற்றப் பாரப யோதர முலையாள்முன்,
கற்புத்தப் பாதுல கேழையு
மொக்கப்பெற் றாள்விளை யாடிய
கச்சிக்கச் சாலையில் மேவிய பெருமாளே! (ரு)

---

104. தனதன தனன தனதன தனன
635 தனதன தனனத் தனதான.

திறுகணன் மறலி முறுகிய கயிறு
தலைகொடு விசிறிக் கொடுபோகும்
சளமது தவிர, அளவிடு சுருதி
தலைகொடு பலசாத் திரமோதி
அறுவகை சமய முறைமுறை சருவி
யலைபடு தலைமூச் சினையாகும்
அருவரு வொழிய, வடிவுள பொருளை
அலம்வர அடியேற் கருள்வாயே.
நறுமல ரிறைவி யரிதிரு மருக!
நகமுத வியபார்ப் பதிவாழ்வே!

நதிமதி யிதழி பணியணி கடவுள்
நடமிடு புலியூர்க் குமரேசா!
கறுவிய நிருதர் எறிதிரை பரவு
கடலிடை பொடியாப் பொருதோனே!
கழலிணை பணியு மவருடன் முனிவு
கனவிலு மறியாப் பெருமாளே! (௬)

---

105\. தனதந்த தனதனன தனதந்த தனதனன
1248 தனதந்த தனதனன தனதான.

திரைவஞ்ச இருவினைகள் நரையங்க மலமழிய,
சிவகங்கை தனில்முழுகி விளையாடிச்,
சிவம்வந்து குதிகொளக வடிவுன்றன் வடிவமென,
திகழண்டர் முனிவர்கண மயன்மாலும்
அரன்மைந்த னென,களிறு முகனெம்பி யெனமகிழ,
அடியெனக ணளிபரவ, மயிலேறி
அயில்கொண்டு திருநடன மெனதநதை யுடன்மருவி
அருமந்த பொருளையினி யருள்வாயே;
பரியென்ப நரிகள்தமை நடனங்கொ டொருவழுதி
பரிதுஞ்ச வருமதுரை நடராஜன்,
பழியஞ்சி யெனதருகி லுறைபுண்ட ரிகவடிவ
பவளஞ்சொ லுமைகொழுந, னருள்பாலா!
இருள்வஞ்ச கிரியவுண ருடனெங்க ளிருவினையு
மெரியுண்டு பொடியஅயில் விடுவோனே!
எனதன்பி லுறைசயில மகிழ்வஞ்சி குறமகளொ
டெனுபஞ்ச ணையின்மருவு பெருமாளே! (௭)

106\. தாநதான தந்தன தந்தன
1187 தாந்தான தந்தன தந்தன
தாந்தான தந்தன தந்தன தனதான.

மாண்டாரெ லும்பணி யுஞ்சடை
யாண்டாரி றைஞ்சமொ ழிந்தநதை,
வான்பூத லம்பவ னங்கனல் புனலான

வான்பூத முங்கர ணங்களு,
நான்போயொ டுங்க,அ டங்கலு
மாய்ந்தால்வி ளங்கும தொன்றினை யருளாயேல்,
வேண்டாமை யொன்றைய டைந்துள
மீண்டாறி நின்சர ணங்களில்
வீழ்ந்தாவல் கொண்டுரு கன்பினை யுடையேனாய்,
வேந்தா,க டம்புபு னைந்தருள்
சேந்தா,ச ரண்சர ணென்பது,
வீண்போம தொன்றல என்பதை யுணராதோ?
ஆண்டார்த லங்கள ளந்திட
நீண்டார்மு குந்தர்,த டந்தனில்
ஆண்டாவி துஞ்சிய தென்றுமு தலைவாயுற்
றுங்கோர்சி லம்புபு லம்பிட,
ஞான்றாது துங்கச லஞ்சலம்
ஆம்பூமு ழங்கிய டங்கும ளவில்,நேசம்
பூண்டாழி கொண்டுவ னங்களி
லேய்ந்தாள வென்றுவெ றுந்தனி
போந்தோல மென்றுத வும்புயல் மருகோனே!
பூம்பாளை யெங்கும ணங்கமழ்
தேங்காவில் நின்றதொர் குன்றவர்
பூந்தோகை கொங்கைவி ரும்பிய பெருமாளே! (அ)

107. தானன தான தானன தான
363 தானன தான தனதான.

மாலாசை கோப மோயாதெ நாளு
மாயாவி கார வழியேசெல்
மாபாவி காளி தானேனும், நாத!
மாதாபி தாவு மினிநீயே.
நாலான வேத நூலாக மாதி
நானோதி னேனு மிலை,வீணே
நாள்போய்வி டாம லாறாறு மீதில்
ஞானோப தேச மருள்வாயே.
பாலா!க லார! ஆமோத லேப
பாடீர வாக அணிமீதே!

பாதாள பூமி யாதார! மீன
பானீய மேலை வயலூரா!
வேலா!வி ராலி வாழ்வே!ச மூக
வேதாள பூத பதிசேயே!
வீரா!க டோர சூராரி யே!செ
வேளே!சு ரேசா பெருமாளே! (௯)

---

108. தனனதன தானதான தனனதன தானதான
928 தனனதன தானதான தனதான.

ஒருவழிப டாது,மாயை யிருவினைவி டாது,நாளு
முழலுமனு ராகமோக அனுபோகம்
உடலுமுயிர் தானுமாயு ணுணர்விலொரு காலிராத
வுளமுநெகிழ் வாகுமாறு, அடியேனுக்,
கிரவுபகல் போன,ஞான பரமசிவ யோகதீர
மௌனமொழியும், வீசுபாச கனகோப
எமபடரை மோது,மோன வுரையினுப தேசவாளை,
யெனதுபகை தீரநீயும் அருள்வாயே;
அரிவையொரு பாகமான அருணகிரி நாதர்பூசை
அடைவுதவ றாதுபேணும் அறிவாளன்,
அமணர்குல காலனாகும் அரியதவ ராஜராஜன்,
அவனிபுகழ் சோமநாதன் மடமேவும்
முருக!பொரு சூரர்சேனை முறியவட மேருவீழ
முகரசல ராசிவேக முனிவோனே!
மொழியுமடி யார்கள்கோடி குறைகருதி னும்வேறு
முனியஅறி யாததேவர் பெருமாளே! (௧௦)

---

109. தனன தனதன தனதன தனதன
1007 தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன தனதான.

தசையு முதிரமு நிணமொடு செருமிய
கரும கிருமிக ளொழுகிய பழகிய
சடல வுடல்கடை சுடலையி லிடுசிறு குடில்பேணுஞ்

சகல கருமிகள் சருவிய சமயிகள்
சரியை கிரியைகள் தவமெனு மவர்சிலர்
சவலை யறிவினர், நெறியினை விட,இனி யடியேனுக்
கிசைய இதுபொரு ளெனஅறி வுறவொரு
வசன முறஇரு வினையற மலமற
இரவு பகலற எனதற நினதற, அநுபூதி
இனிமை தருமொரு தனிமையை, மறைகளி
னிறுதி யறுதியி டவரிய பெறுதியை,
இருமை யொருமையில் பெருமையை, வெளிபட மொழிவாயே;
அசல குலபதி தருமொரு திருமகள்
அமலை, விமலைக ளொழுவரும் வழிபட
அருளி அருணையி லுறைதரு மிறையவ, ளபிராமி,
அநகை அநுபவை அநுதயை அபிநவை,
அதல முதலெழு தலமிவை முறைமுறை
அடைய அருளிய பழையவ, ளருளிய சிறியோனே!
வசுவ பசுபதி மகிழ்தர வொருமொழி
மவுன மருளிய மகிமையு, மிமையவர்
மரபில் வனிதையும், வனசரர் புதல்வியும், வடிவேலும்,
மயிலு, மியலறி புலமையு, முபநிட
மதுர கவிதையும், விதரண கருணையும்,
வடிவு, மிளமையும், வளமையு, மழகிய பெருமாளே! (கக)

---

## XVII. பத்திவைராக்கியம்.

167

110. தனதன தத்த தானன தனதன தத்த தானன
தனதன தத்த தானன தனதான.

கதிரைவி லக்கு மாதர்கள் புதியஇ ரத்ந பூஷண
கனதன வெற்பு மேல்மிகு மயலான
கவலைம னத்த னாகிலும், உனதுப்ர சித்த மாகிய
கனதன மொத்த மேனியு முகமாறும்,
அதிபல வஜ்ர வாகுவும் அயில்நுனை வெற்றி வேலதும்,
அரவுபி டித்த தோகையு முலகேழும்

அதிரவ ரற்று கோழியும் அடியர்வ ழுத்தி வாழ்வுறும்
அபிநவ பத்ம பாதமு மறவேனே;
இரவிகு லத்தி ராசத மருவியெ திர்த்து வீழ்கடு
ரணமுக சுத்த வீரிய குணமான
இளையவ னுக்கு, நீண்முடி அரசது பெற்று வாழ்வுற,
இதமொட ளித்த ராகவன் மருகோனே!
பதினொரு ருத்தி ராதிகள் தபனம்வி ளக்கு மாளிகை
பரிவொடு நிற்கு மீசுர! சுரலோக
பரிமள கற்ப காடவி * அரியளி சுற்று பூவுதிர்
பழநிம லைக்குள் மேவிய பெருமாளே! (க)

---

## XVIII. பூசை.

111. தனதன தனதன தாந்த தானன
தனதன தனதன தாந்த தானன
தனதன தனதன தாந்த தானன தனதான.

தரையினில் வெகுவழி சார்ந்த மூடனை,
வெறியனை, நிறைபொறை வேண்டி டாமத
சடலனை, மகிமைகள் தாழ்ந்த வீணனை, மிகுகேள்வி
தவநெறி தனைவிடு தாண்டு காலியை,
யவமதி யதனில்பொ லாங்கு தீமைசெய்
சமடனை, வலியஅ சாங்க மாகிய தமியேனை,
விரைசெறி குழலியர் வீம்பு நாரியர்
மதிமுக வனிதையர் வாஞ்சை மோகியர்
விழிவலை மகளிரொ டாங்கு கூடிய வினையேனை,
வெகுமல ரதுகொடு வேண்டி யாகிலு
மொருமல ரிலைகொடு மோர்ந்து யானுனை
விதமுறு பரிவொடு வீழ்ந்து தாடொழ அருள்வாயே;
ஒருபது சிரமிசை போந்த ராவணை,
யிருபது புயமுட னேந்து மேதியு,
மொருகணை தனிலற வாங்கு, மாயவன் மருகோனே!

* "வரியளி" என்றும் பாடம்.

உனதடி யவர்,புக ழாய்ந்த நூலின,
ரமரர்கள், முனிவர்க, ளீந்த பாலகர்,
உயர்கதி பெறஅரு, ளோங்கு மாமயி லுறைவோனே!
குரைகழல் பணிவொடு கூம்பி டார்பொரு
களமிசை யறமது தீர்ந்த சூரர்கள்,
குலமுழு தனைவரு மாய்ந்து தூளெழ, முனிவோனே!
கொடுவிட மதுதனை வாங்கி யே,திரு
மிடறினி லிருவென வேந்து, மீசுரர்
குருபர னெனவரு, கூந்த லூருறை பெருமாளே! (௧)

112. தனன தான தானன தனன தான தானன
தனன தான தானன தனதான.

அகல நீளம் யாதாலு மொருவ ராலு மாராய
அரிய மோன மேகோயி லெனமேவி,
அசைய வேக்ரி யாபீட மிசைபு கா,ம காஞான
அறிவி னாத ராமோத மலர்தூவிச்
சகல வேத னாதீத, சகல வாச காதீத,
சகல மாக்ரி யாதீத, சிவரூப
சகல சாத காதீத, சகல வாச னாதீத,
தனுவை நாடி, மாபூசை புரிவேனோ?
விகட தார சூதான நிகள பாத போதாள!
விரக ராக போதார சுரர்கால!
விபுதி மாலி கா!நீல முகப டாக மாயூர!
விமல! வ்யாப கா!சீல க!விநோத!
ககன கூட பாடீர தவள சோபி தாளான
கவன பூத ராரூட சதகோடி
கனக கார ணா!ஞான கருணை மேரு வே!வீழ
கதிர காமம் வாழ்தேவர் பெருமாளே! (௨)

## XIX. அடியார்.

113. தானந் தனதன தானந் தனதன
1035 தானந் தனதன தனதான.

ஊனுந் தசையுடல் தானென் பதுவழி,
யூருங் கருவழி யொருகோடி,
ஓதும் பலகலை கீதஞ் சகலமு
மோரும் படி,யுன தருள்பாடி
நாளுன் திருவடி பேணும் படி,யிரு
போதுங் கருணையில் மறவாதுன்
நாமம் புகழ்பவர் பாதந் தொழஇனி
நாடும் படி,யருள் புரிவாயே;
காணுந் திகழ்கதி ரோனுஞ் சசியொடு
காலங் களுநடை யுடையோனுங்,
காருங் கடல்வரை நீருந் தருகயி
லாயன் கழல்தொழு மிமையோரும்,
வானிந் திரனொடு மாலும் பிரமனும்
வாழும் படிவிடும் வடிவேலா!
மாயம் பலபுரி சூரன் பொடிபட
வாள்கொண் டமர்செய்த பெருமாளே! (க)

114. தான தந்தன தான தந்தன 103
1214 தான தந்தன தான தந்தன
தான தந்தன தான தந்தன தனதான.

மூல மந்திர மோத மிங்கிலை,
யீவ திங்கிலை, நேய மிங்கிலை,
மோன மிங்கிலை, ஞான மிங்கிலை, மடவார்கள்
மோக முண்,டதி தாக முண்,டப
சார முண்,டப ராத முண்,டிடு
மூக னென்றொரு பேரு முண்,டருள் பயிலாத
கோல முங்,குண வீன துன்பர்கள்
வார்மை யும்பல வாகி, வெந்தெழு
கோர கும்பியி லேவி ழுந்திட நினைவாகிக்

கூடு கொண்டுழல் வேனை, யன்பொடு
ஞான நெஞ்சினர் பாலி ணங்கிடு
கூர்மை தந்தினி யாள வந்தருள் புரிவாயே;
பீலி வெந்துய ராவி வெந்தவ
சோகு வெந்தமண் மூகர் நெஞ்சிடை
பீதி கொண்டிட வாது கொண்டரு ளெழுதேடு
பேணி யங்கெதி ராறு சென்றிட,
மாற னும்பிணி தீர, வஞ்சகர்
பீறு வெங்கழு வேற, வென்றிடு முருகோனே!
ஆல முண்டவர் சோதி யங்கணர்
பாக மொன்றிய வாலை யந்தரி
ஆதி யந்தமு மான சங்கரி குமரேசா!
ஆர ணம்பயில் ஞான புங்கவ!
சேவ லங்கொடி யான பைங்கர!
ஆவி னன்குடி வாழ்வு கொண்டருள் பெருமாளே! (௨)

---

115. தான தனனதன தான தனனதன
121 தான தனனதன தனதான.

சீற லசடன்வினை காரன் முறைமையிலி,
தீமை புரிகபடி, பவநோயே
தேடு பரிசிகன நீதி நெறிமுறைமை
சீர்மை சிறிதுமிலி, எவரோடுங்
கூறு மொழியதுபொய், யான கொடுமையுள
கோள னறிவிலியு னடிபேணக்
கூள னெனினுமெனை நீயு னடியரொடு
கூடும் வகைமையருள் புரிவாயே;
மாறு படுமவுணர் மாள அமர்பொருது
வாகை யுளமவுலி புனைவோனே!
மாக முகடதிர வீசு சிறைமயிலை
வாசி யெனவுடைய முருகோனே!
வீறு கலிசைவரு சேவ கனதிதய
மேவு மொருபெருமை யுடையோனே!
வீரை யுறைகுமர! தீர தர! பழநி
வேல! இமையவர்கள் பெருமாளே! (௩)

## XX. சுதந்திரமின்மை.

116. தானா தனந்த தானா தனந்த
தானா தனந்த தனதான.

ஊனே றெலுமபு சீசீ மலங்க
ளோடே, நரம்பு கசுமாலம்
ஊழ்நோ யடைந்து மாசா னமண்டு
மூனோ டுழன்ற கடைநாயேன்
நானா, றொடுங்க நானார், வணங்க
நானார், மகிழ்ந்து வுனையோத
நானா, ரிரங்க நானா, ருணங்க
நானார், நடந்து விழநானார்?
தானே புணர்ந்து தானே யறிந்து,
தானே மகிழ்ந்து, அருளூறித்
தாய்போல் பரிநத தேனோ டுகந்து,
தானே தழைந்து சிவமாகித்,
தானே வளர்ந்து தானே யிருந்த
தார்வே ணியெந்தை யருள்பாலா!
சாலோ கதொண்டர் சாமீ பதொண்டர்
சாரூ பதொண்டர் பெருமாளே. (க)

---

117. தன்னா தனத்தன தன்னா தனத்தன
தன்னா தனதன தந்ததான.

என்னால் பிறக்கவும், என்னா லிறக்கவும்,
என்னால் துதிக்கவுங், கண்களாலே
என்னா லழைக்கவும், என்னால் நடக்கவும்,
என்னா லிருக்கவும், பெண்டிர்வீடு
என்னால் சுகிக்கவும், என்னால் முசிக்கவும்,
என்னால் சலிக்கவும, தொந்தநோயை
என்னா லெரிக்கவும், என்னால் நினைக்கவும்,
என்னால் தரிக்கவும், இங்குநானார்?
கன்னா ருரித்தஎன் மன்னா! எனக்குநல்
கர்னா மிர்தப்பதந் தந்தகோவே!

கல்லார் மனத்துட னில்லா மனத்தவ!
  கண்ணா டியிற்றடங் கண்டவேலா!
மன்னா னதக்கனை முன்னாள் முடித்தலை
  வன்வா ளியிற்கொளுந் தங்கரூபன்
மன்னா! குறத்தியின் மன்னா! வயற்பதி
  மன்னா! மூவர்க்கொரு தம்பிரானே! (௨)

## XXI. அநுபூதி.

139 118. தனதனதனத தனதான தனதனதனத தனதான.

பகலிரவினிற் றடுமாறு, பதிகுருவெனத் தெளிபோத
ரகசியமுரைத், தநுபூதி ரதநிலைதனைத் தருவாயே;
இகபரமதற் கிறையோனே! இயலிசையின்முத் தமிழோனே!
சகசிரகிரிப் பதிவேளே! சரவணபவப் பெருமாளே! (௧)

282 119. தனத்தத் தானத் தனதான தனத்தத் தானத் தனதான.

கருப்பற் றூறிப் பிறவாதே, கனக்கப் பாடுற் றுழலாதே,
திருப்பொற் பாதத் தநுபூதி சிறக்கப், பாலித் தருள்வாயே;
பரப்பற் றாருக் குரியோனே! பரத்தப் பாலுக் கணியோனே!
திருக்கைச் சேவற் கொடியோனே! செகதிற் சோதிப் பெருமாளே!

120. தானதன தானனத் தனதானா தானதன தானனத் தனதானா.

292

நாரியர்க ளாசையைக் கருதாதே,
  நாலுமிரு பாதபத் மமுநாட,
ஆரமுத மானசர்க் கரைதேனே!
  ஆனஅநு பூதியைத் தருவாயே;
காரணம தானவுத் தமசீலா!
  கானகுற மாதினைப் புணர்வோனே!
சூரர்கிளை தூளெழப் பொரும்வேலா!
  தோகைமயில் வாகனப் பெருமாளே! (௩)

121. தான தனத்த தனதான தான தனத்த தனதான.

நாளு மிருத்த கசிவாகி, ஞான நிருத்த மதைநாடும்
ஏழை தனக்கு, மநுபூதி ராசி தழைக்க அருள்வாயே;
பூளை யெருக்கு மதிநாக பூண ரளித்த சிறியோனே!
வேளை தனக்கு சிதமாக, வேழ மழைத்த பெருமாளே! (ச)

## XXII சிவயோகம்.

122. தனத்த தான தானன தனதத தான தானன
497 தனத்த தான தானன தனதான.

அனித்த மான வூனாளு மிருப்ப தாக வேநாசி
யடைத்து, வாயு வோடாத வகைசாதித்,
தவத்தி லேகு வால்மூலி புசித்து வாடு, மாயாச
அசட்டு யோகி யாகாமல், மலமாயை
செனித்த காரி யோபாதி யொழித்து, ஞான ஆசார
சிரத்தை யாகி, யான்வேறெ னுடல்வேறு,
செகத்தி யாவும் வேறாக நிகழ்ச்சி யா,ம னோதீத
சிவசசொ ரூப மாயோகி யென,ஆள்வாய்;
தொனித்த நாத வேயூது சகஸ்த்ர நாம கோபால
சுதற்கு நேச மாறாத மருகோனே!
சுவர்க்க லோக மீகாம! சமஸ்த லோக பூபால!
தொடுத்த நீப! வேல்வீர! வயலூரா!
மனித்த ராதி சோணாடு தழைக்க மேவு காவேரி
மகப்ப்ர வாக பானீய மலைமோதும்
மணத்த சோலை சூழ்காவை அணைத்து லோக மாள்வாரு,
மதித்த சாமி யே! தேவர் பெருமாளே! (க

123. தனனதான தானன தனனதான தானன
1047 தனனதான தானன தனதான.

அடைபடாது நாடோறும் இடைவிடாது போம்வாயு
[illegible]

அருள்பெறுவ தாசார கருமயோகி யாகாமல்
அவனிமீதி லேயாது தடுமாறி,
உடலம்வேறு யான்வேறு கரணம்வேறு வேறாகி
உதறி,வாச காதீத அடியூடே
உருகி,ஆரி யாசார பரமயோகி யாமாறுன்
உபயபாத ராசீவ மருளவாயே;
வடபராரை மாமேரு கிரியெடாக டா,மோது
மகரவாரி யோரேழு மழுதாக,
மருடவாள ராநோவ, மதியநோவ, வாரீச
வனிதைமேவு தோளாயி ரமுநோவக்,
கடையுமாதி கோபாலன் மருக!தீர வேல்வீர!
கதிரகாம மூதூரில் இளையோனே!
கனகலோக பூபால! சகலலோக ஆதார!
கருணைமேரு வே!தேவ பெருமாளே! (உ)

---

124. தந்த தானன தான தனதன
357 தந்த தானன தான தனதன
தந்த தானன தான தனதன தனதான.

ஐந்து பூதமு, மாறு சமயமு,
மந்த்ர வேதபு ராண கலைகளும்,
ஐம்ப தோர்வித மான லிபிகளும், வெகுரூப
அண்ட ராதிச ராச ரமு,முயர்
புண்ட ரீகனு, மேக நிறவனும,
அநதி போலுரு வானும், நிலவொடு வெயில்காலும்
சந்த்ர சூரியர் தாமு, மசபையும்,
விந்து நாதமு, மேக வடிவம
தன்சொ ரூபம தாக வுறைவது, சிவயோகம்.
தமக ளாணவ மாயை கருமம
லங்கள் போ,யுப தேச குருபர
சம்ப்ர தாயமொ டேயு நெறியது பெறுவேனோ?
வந்த தானவர் சேனை கெடிபுக,
இந்த்ர லோகம்வி பூதர் குடிபுக,
மண்டி பூதப சாசு பசிகெட, மயிடாரி

வன்கண் வீரிபி டாரி அரஹர
சங்க ரான்ன, மேரு கிரிதலை
மண்டு தூளெழ, வேலை யுருவிய வயலூரா!
வெந்த நீறணி வேணி யிருடிகள்
பந்த பாசவி கார பரவச
வென்றி யானச மாதி முறுகுகல் முறைகூடும்
விண்டு மேல்,மயி லாட, இனியக
ஞண்டு காரளி பாட, இதழிபொன்
விஞ்ச வீசு,வி ராலி மலையுறை பெருமாளே! (௩)

---

125. தனதான தானதத்த தனதான தானதத்த
355 தனதான தானதத்த தந்ததான.

உருவேற வேஜெபித்து ஒருகோடி, யோமசித்தி
யுடனாக ஆகமத்து கந்துபேணி,
உணர்வாசை யாரிடத்து மருவாது வோரெழுத்தை
யொழியாது வூதைவிட்டி ருந்துநாளும்
தரியாத போதகத்தர், குருவாவ ரோரொருத்தர்,
தருவார்கள் ஞானவித்தை தஞ்சமாமோ?
தழலாடி வீதிவட்ட மொளிபோத ஞானசித்தி
தருமாகி லாகுமத்தை கண்டிலேனே;
குருநாடி ராசரிக்கர் துரியோத னுதிவர்க்க
குடிமாள மாயமிட்டு குந்திபாலர்
குலையாமல் நீதிகட்டி யெழுபாரை யாளவிட்ட
குறளாக னூறில்நெட்டை கொண்டஆதி
மருகா! பு ராரிசித்தன் மகனே! வி ராலிசித்ர
மலைமேலு லாவுசித்த! அங்கைவேலா!
மதுராபு ரேசர்மெய்க்க அரசாளு மாறன்வெப்பு
வளைகூனை யேமிர்த்த தம்பிரானே! (௪)

126. தானன தான தந்த தானன தான தந்த
தானன தான தந்த தானன தான தந்த
தானன தான தந்த தானன தான தந்த தனதான.

பூரண வார கும்ப சீதப டீர கொங்கை
மாதர்வி கார வஞ்ச லீலையி லேயு ழன்று
போதவ மேயி ழந்து, போனது மான மென்ப தறியாத
பூரிய னாகி, நெஞ்சு காவல்ப டாத பஞ்ச
பாதக னாய றஞ்செ யாதடி யோடி றந்து
போனவர் வாழ்வு கண்டு, மாசையி லேய ழுந்து மயல்தீரக்
காரண காரி யங்க ளானதெ லாமொ ழிந்து,
யானெனு மேதை விண்டு, பாவக மாயி ருந்து,
காலுட லூடி யங்கி நாசியின் மீதி ரண்டு விழிபாய
காயமு நாவு நெஞ்சு மோர்வழி யாக, அன்பு
காயம்வி டாம, லுன்றன் நீடிய தாள்நி னைந்து
காணுதல் கூர்த வஞ்செய் யோகிக ளாய்வி ளங்க, அருள்
ஆரண சார மந்த்ர வேதமெ லாமவி ளங்க, [வாயே
ஆதிரை யானை நின்று தாழ்வனெ னாவ ணங்கு
மாதர வால்வி ளங்கு, பூரண ஞான மிஞ்சு முரவோனே
ஆர்கலி யூடெ ழுந்து மாவடி வாகி நின்ற
சூரனை மாள வென்று, வானுல காளு மண்ட
ரானவர் கூர ரந்தை தீர,மு னாள்ம கிழ்ந்த முருகேசா
வாரண மூல மென்ற போதினி, லாழி கொண்டு
வாவியின் மாடி டங்கர் பாழ்பட வேயெ றிந்த,
மாமுகில் போலி ருண்ட மேனிய னாமு குந்தன் மருகோனே
வாலுக மீது வண்ட லோடிய காலில் வந்து
சூல்நிறை வான சங்கு மாமணி யீன, வுந்து
வாரிதி நீப ரந்த சீரலை வாயு கந்த பெருமாளே! (ரு

---

127. தான தானதன தத்ததன தத்ததன
தான தானதன தத்ததன தத்ததன
தான தானதன தத்ததன தத்ததன தந்ததான.

ஆசை நாலுசது ரக்கமல முற்றினொளி
வீசி யோடியிரு பக்கமொடு றச்செல்வளி,
ஆவல் கூரமண்மு தற்சலசு பொற்சபையு மிந்துவாகை

ஆர மூணுபதி யிற்கொளளி றூத்தி,வெளி
யாரு சோதிநறு பத்தினுட னெட்டிஇத
மாகி யேழுமள விட்,டருண விற்பதியின் விந்துநாத
ஓசை சாலுமொரு சத்தமதி கபபடிக
மோடு கூடியொரு மித்,தமுத சித்தியொடு,
மோது வேதசர சத்தியடி யுற்றதிரு நந்தியூடே
ஊமை யேகோயொளிர் வித்,துனது முத்திபெற
மூல வாசல்வெளி விட்,டுனது ரத்திலொளிர் [ராய்!
யோக பேதவகை யெட்டுமிதி லொட்டும்வகை, யின்றுதா
வாசி வாணிகனெ னக்குதிரை விற்றுமகிழ்
வாத வூரனடி மைக்கொளுக்கு பைக்கடவுள்
மாழை ரூபன்முக மத்திகைவி தத்தருண செங்கையாளி,
வாகு பாதியுறை சத்திகவு ரிக்குதலே
வாயின் மாதுதுகிர் பச்சைவடி விச்சிவையென்
மாசு சேரெழுபி றப்பையும றுத்தவுமை தந்தவாழ்வே!
காசி ராமெசுரம் ரதநகிரி சர்ப்பகிரி
ஆரூர் வேலூர்தெவுர் கசசிமது ரைப்பழியல்,
காவை மூதாரு ணக்கிரிதி ருக்தணியல் செந்தில்நாகை,
காழி வேளூர்பழ நிக்கிரிகு றுக்கைதிரு
நாவ லூர்திருவெ ணெய்ப்பதியின் மிக்கதிகழ் [னே!
காதல் சோலேவளர் வெற்பிலுறை முததர்புகழ் தமபிரா

---

128. தானந்தன தானன தானன
190 தானந்தன தானன தானன
தானந்தன தானன தானன தனதான.

மூலங்கிள ரோருரு வாய்,நடு
நாலங்குல மேனடு வேரிடை
மூள்பிங்கலே நாடியொ டாடிய, முதல்வேர்கள்
மூணும்பிர காசம தாயொரு
சூலம்பெற வோடிய வாயுவை,
மூலந்திகழ் தூண்வழி யேயள விடவோடி,
பாலங்கிள ராறுசி காரமொ
டாருஞ்சுட ராடுப ராபர
பாதம்பெற, ஞானச தாசிவ மதின்மேவிப்,

பாடுந்தொனி நாதமு நூபுர
மாடுங்கழ லோசையி லேபரி
வாரும்படி யேயடி யேனையும் அருள்வாயே;
சூலங்கலை மான்மழு வோர்துடி
வேதன்தலை யோடும ராவிரி
தோடுங்குழை சேர்பர னார்தரு முருகோனே!
சூரன்கர மாசிலை வாளணி
தோளுந்தலை தூள்பட வேதுவா
சூளுங்கெட வேல்விடு சேவக! மயில்வீரா!
காலின்கழ லோசையு நூபுர
வாரவெண்டைய வோசையு மேயுக
காலங்களி னோசைய தாநட மிடுவோனே!
கானங்கலை மான்மக ளார்தமை
நாணங்கெட வேயணை வேள்பிர
காசம்பழ னாபுரி மேவிய பெருமாளே! (எ)

---

129. தானா தானன தாத்த தந்தன
தானா தானன தாத்த தந்தன
தானா தானன தாத்த தந்தன தனதான.

மூலா தாரமொ டேற்றி யங்கியை,
ஆறா தாரமொ டோட்டி யந்திர,
மூலா வாயுவை யேற்று நன்சுழி முனையூடே,
மூதா தாரம ரூப்பி லந்தர,
நாதா கீதம தார்த்தி டும்பர
மூடே, பாலொளி ஆத்து மந்தனை விலகாமல்
மாலா டேனொடு சேர்த்தி தம்பெற,
நானா வேதம சாத்தி ரஞ்சொலும்
வாழ்நா னாபுரி யேற்றி, மந்திர தவிசூடே
மாதா நாதனும் வீற்றி ருந்திடும்
வீடே மூவொளி காட்டி, சந்திர
வாகார் தேனமு தூட்டி, யென்றனை யுடனாள்வாய்;
சூலாள் மாதுமை தூர்த்த சம்பவி,
மாதா ராப்பகல் காத்த மைந்தனை,
சூடோ டீர்வினை வாட்டி மைந்தரெ னெமையாளும்

தூயாள், மூவரை நாட்டு மெந்தையர்,
வேளூர் வாழ்வினை தீர்த்த சங்கரா
தோய்சா ரூபரொ டேற்றி ருந்தவ ளருள்பாலா!
வேலா! ஏழ்கடல் வீட்டி, வஞ்சக
மூடார் சூரரை வாட்டி, யந்தகன்
வீடு டேவிய, காதகி ரம்பரி மயில்வாழ்வே!
வேதா நால்தலை சிகைகொ ளுமபடி
கோலா காலம தாட்டு மந்திர
வேலா! மானமக ளாக்கி ரங்கிய பெருமாளே! (அ)

---

130. தானதன தத்த தந்தன தானதன தத்த தந்தன
647 தானதன தத்த தந்தன தந்ததான.

நாலுசது ரத்த பஞ்சறை மூலகம லத்தி லங்கியை
நாடியின டத்தி மந்திர பந்தியாலே,
நாரணபு ரத்தி லிந்துவி னூடுறனு ணக்கி நன்சுடர்
நாறிசைந டத்தி, மண்டல சந்தியாறில்
கோலமுமு திப்ப கண,டுள நாவினைம றித்தி தப்பெறு
கோவெனமு ழக்கு சங்கொலி விந்துநாதங்
கூடியமு கப்பி லிந்திர வானவமு தத்தை யுண்டொரு
கோடிநட னப்ப தஞ்சபை யென்றுசேர்வேன்?
ஆலமல குற்ற சம்பவி வேரிலிகு லக்கொ ழுந்திலி
ஆரணாத லைக்க லங்கொளி செமபொன்வாசி
ஆணவம யக்க முங்கலி காமியம கற்றி யென்றனை
ஆளுமைப ரத்தி சுந்தரி தந்தசேயே!
வேலதைவெ டுத்து மிந்திரர் மால்விதிபி ழைக்க வஞ்சகா
வீடெரிகொ ளுத்தி யெண்கட லுண்டவேலா!
வேதசது ரத்தா தென்புலி யூருறையொ ருத்தி பங்கினர்
வீறுநட னர்க்கி சைந்தருள் தம்பிரானே! (கூ)

---

131. தானதன தானதத்த தானதன தானதத்த
790 தானதன தானதத்த தனதான.

சூலமென வோடுசர்ப்ப வாயுவைவி டாதடக்கி,
தூயவொளி காணமுத்தி விதமாக

சூழுமிருள் பாவகத்தை வீழஅழ லூடெரித்து,
சோதிமணி பீடமிட்ட மடமேவி,
மேலைவெளி யாயிரத்து நாலிருப ராபரத்தின்
மேவி,யரு னூசலத்தி னுடன்மூழ்கி,
வேனுமயில் வாகனப்ர காசமதி லேதரித்து,
வீடுமது வேசிறக்க அருள்தாராய்;
ஓலசுர ராழியெட்டு வாளகிரி மாய,வெற்பு
மூடுருவ, வேல்தொடுத்த மயில்வீரா!
ஓதுகுற மான்வனத்தில் மேவியவள் கால்பிடித்து
ளோமெனுப தேசவித்தொ டணைவோனே!
காலனொடு மேதிமட்க வூழிபுவி மேல்கிடத்து
காலனிட மேவுசத்தி யருள்பாலா!
காலமுதல் வாழ்புவிக்க தாரநகர் கோபுரத்துள்
கானமயில் மேல்தரித்த பெருமாளே! (க0)

---

132. தந்ததனத் தானதனத் தந்ததனத தானதனத்
[illegible] தந்ததனத் தானதனத் தனதான.

இந்துகதிர்ச் சேருணப் பந்திநடுத் தானொளிபட்
டின்பரசப் பாலமுதச் சுவைமேவு
எண்குணமுற் றேனடனச் சந்த்ரவொளிப் பீடகமுற்
றெந்தைநடித் தாடுமணிச் சபையூடே,
கந்தமெழுத் தோடுறுசிற் கெநதமணப் பூவிதழைக்
கண்டுகளித் தேயமுதக் கடல்மூழ்கிக்,
கந்தமதித் தாயிரவெட் டண்டமதைக் கோல்புவனக்
கண்டமதைக் காணஎனக் கருள்வாயே;
திந்திமித் திதகுடட் டுண்டுமிடட் டாடுடிட்
டிந்தமெனக் காளமணித் தவிலோசை
சிந்தைதிகைத் தேழுகடற் பொங்கவரிச் சூர்மகுடச்
செண்டுகுலைத் தாடுமணிக் கதிர்வேல
குந்தியரித் தாழ்துளபச செந்திருவைச் சேர்களபக்
கொண்டல்நிறத் தோன்மகளைத் தரைமீதே,
கும்பிடகைத் தாளமெடுத் தம்பொனுருப் பாவைபுகழ்க்
கும்பகோணத் தாறுமுகப் பெருமாளே! (க

133. தானந்த தனன தான தானந்த தனன தான
179 தானந்த தனன தான தனதான.

ஞானங்கொள் பொறிகள் கூடி வானிந்து கதிரி லாத
நாடண்டி, நமசி வாய வரையேறி,
நாவின்ப ரசம தான ஆநந்த அருவி பாய,
நாதங்க ளொடுகு லாவி விளையாடி,
ஊனங்க ளுயிர்கள் மோக நாமென்ப தறிவி லாம
லோமங்கி யுருவ மாகி, யிருவோரும்
ஓரந்த மருவி, ஞான மாவிஞ்சை முதுகி னேறி,
லோகங்கள் வலம தாட, அருள்தாராய்;
தேனங்கொ ளிதழி தாகி தாரிந்து சலில வேணி
சீரங்க னெனது தாதை ஒருமாது
சேர்பஞ்ச வடிவி மோங்கி யோகங்கொள் மவுன ஜோதி
சேர்பங்கி னமல நாத னருள்பாலா!
கானங்கள் வரைகள் தீவு ஓதங்கள் பொடிய நீல
காடந்த மயிலி லேறு முருகோனே!
காமன்கை மலர்கள் நாண வேடம்பெ ணமளி சேர்வை
காணெங்கள் பழநி மேவு பெருமாளே! (கஉ)

---

## XXIII. மனோலயசமாதி.

134. தனதன தனதன தனதன தனதன
352 தனதன தனதனன தனதான.

இலாபமில் பொலாவுரை சொலாமன தபோதன
ரியாவரு மிராவுபக லடியேனை,
இராகமும் விநோதமு முலோபமு டன்மோகமு
மிலானிவ னுமாபுருஷ னெனஏய,
சலாபவ! மலாகர! சசிதர! விதாரண!
சதாசிவ! மயேசுர! கலலோக
சராசர வியாபக! பராபர! மநோலய
சமாதிய நுபூதிபெற நினைவாயே;

நிலாவிரி நிலாமதி; நிலாதவ நிலாசன
நியாயப ரிபாலஅர நதிசூடி,
நிசாசர குலாதிப திராவண புயாரிட
நிராமய சரோருகர, னருள்பாலா!
விலாசுகம் வலாரெனு முலாசவி தவாகவ!
வியாதர்கள விநோதமகள் மணவாளா!
விராவுவ யலார்புரி சிராமலை பிரான்மலை
விராலிம லைமீதிலுறை பெருமாளே! (க)

---

135. தனன தானன தானன தானன
235 தனன தானன தானன தானன
தனன தானன தானன தானன தந்ததான

தறையின் மானுட, ராசையி னுல்மட
லெழுது மாலருள மாதர்கள் தோதக
சரசர், மாமல ரோதியி னுலிரு கொங்கையாலுந்,
தளாமி னேரிடை யாலுடை யால்நடை
யழகி னுல்மொழி யால்விழி யால்மருள்
சவலை நாயடி யேன்மிக வாடிம யங்கலாமோ?
பறவை யானமெய் ஞானிகள மோனிகள்
அணுகொ ணுவகை நீடுமி ராசிய,
பவன பூரக வேகிக மாகிய விந்துநாதம்
பகரொ ணுதது சேரவொ ணுதது
நினையொ ணுதது வான,த யாபர
பதிய தான,ச மாதிம னேலயம் வந்துதாராய்.
சிறைவி டாதநி சாசரர் சேனைகள்
மடிய, நீலக லாபம தேறிய
திறல்வி நோதச மேள! த யாபர! அம்புராசி
திரைகள் போலலை மோதிய சீதள
குடக காவிரி நீளலை சூடிய
திரிசி ராமலை மேலுறை வீர! கு றிஞ்சிவாழும்
மறவர் நாயக! ஆதிவி நாயக
ரிளைய நாயக! காவிரி நாயக!
வடிவி னுயக ஆனைத னுயக! எங்கள்மானின்

மகிழு நாயக! தேவர்கள் நாயக!
கவுரி நாயக னாதிகுரு நாயக!
வடிவ தாமலை யாவையு மேவிய தம்பிரானே! (௨)

---

## XXIV. அத்துவிதமௌனம்.

136. தானதான தந்ததந்த தானதான தந்ததந்த
தானதான தந்ததந்த தனதான.

ஆறுமாறு மஞ்சுமஞ்சும் ஆறுமாறு மஞ்சுமஞ்சும்
ஆறுமாறு மஞ்சுமஞ்சும அறுநாலும்
ஆறுமாய சஞ்சலங்கள வேறதாவி ளங்குகின்ற
ஆரணாக மங்கடந்த கலையான
ஈறுகூற ரும்பெருஞ்சு வாமியாயி ருந்தநன்றி
யேதுவேறி யம்பலின்றி, யொருதானாய்
யாவுமாயம னங்கடந்த மோனவீட டைந்தொருங்கி,
யானவாவ டங்களென்று பெறுவேனோ?
மாறுகூறி வந்தெதிர்ந்த சூரசேனை மங்கவங்க
வாரிமேல்வெ குண்டசண்ட விததாரை
வாகைவேல! கொன்றைதும்பை மாலைகூவி ளங்கொழுந்து
வாலசோம னஞ்சுபொங்கு பகுவாய
சீறுமாசு ணங்கரந்தை ஆறுவேணி கொண்டநம்பர்
தேசிகா! க டம்பலங்கல் புனைவோனே!
தேவர்யாவ ருந்திரண்டு பாரின்மீது வந்திறைஞ்சு
தேவனூர்வி ளங்கவந்த பெருமாளே! (௧)

---

137. தத்தனாத் தான தத்தனாத் தான
தத்தனாத் தான தனதான.

சுட்டதுபோ லாசை விட்,டுலகா சார
துக்கமிலா ஞான சுகமேவிச்,
சொற்கரணா தீத நிற்குணமூ டாடு
சுக்கிரா கார வெளிகாண,

மொட்டலர்வா ரீச சக்ரசடா தார
முட்டவுமீ தேறி மதிமீதாய்,
முப்பதுமா றாறு முப்பதும்வே றான
முத்திரையா மோன மடைவேனோ?
எட்டவொணா வேத னத்தொடு,கோ கோவெ
னப்பிரமா வோட, வரைசாய,
எற்றியவ ழாழி வற்றிட,மா றாய
எத்தனையோ கோடி யசுரேசர்
பட்டொருசூர் மாள, விக்ரமவே லேவு
பத்திருதோள் வீர! தினைகாவல்
பத்தினிதோள் தோயு முத்தம! மா றாது
பத்திசெய்வா ருடர் பெருமாளே! (உ)

---

138. தானான தானதத்த தானான தானதத்த
தானான தானதத்த தனதான.

நாவேறு பாமணத்த பாதார மேநினைத்து,
நாலாறு நாலுபற்று வகையான
நாலாறு மாகமத்தி னூலாய ஞானமுத்தி,
நாடோறு நானுரைத்த நெறியாக,
நீவேறெ னாதிருக்க, நான்வேறெ னாதிருக்க,
நேராக வாழ்வதற்கு னருள்கூர,
நீடார்ச டாதரத்தின் மீதேப ராபரத்தை
நீகாணெ னாவினைச்சொ லருள்வாயே;
சேவேறு மீசர்சுற்ற மாஞான போதபுத்தி
சீராக வேயுரைத்த குருநாதா!
தேரார்கள் நாடுசுட்ட சூரார்கள் மாளவெட்டு
தீரா! குகா! குறத்தி மணவாளா!
காவேரி நேர்வடக்கி லேவாவி பூமணத்த
காவார்சு வாமிவெற்பின் முருகோனே!
கார்போது மேனிபெற்ற மாகாளி வாலைசத்தி
காமாரி வாமிபெற்ற பெருமாளே! (௩)

139. தனனதான தானன தனனதான தானன 1048
1046 தனனதான தானன தனதான.

அமலவாயு வோடாது கமலநாபி மேல்வீழ,
அமுதபான மேல்மூல அனல்மூள,
அசைவுறாத பேராத மவுனமேவி யோவாது,
அரியதான சோபான மதனூலே,
எமனைமோதி, யாகாச கமனமாம னோபாவ
மெளிதுசால, மேலாக வுரையாடும்
எனதியானும் வேறாகி, எவரியாதும் யானாகும்,
இதயபாவ னாதீத மருள்வாயே;
விமலைதோளின் மீதோடு யமுனைபோல, வோரேழு
விபுதமேக மேபோல, வுலகேழும்
விரிவுகாணு மாமாயன் முடியநீள மாபோல,
வெருவிதாழ காகாய பதமோடிக்
கமலயோனி வீடான ககனகூட மீதோடு
கலபநீல மாயூர இளையோனே!
கருணைமேரு வே! நீறில் கருணைவாரி யே! நீழ
கதிரகாமம் வாழ்தேவ பெருமாளே! (௪)

---

140. தானதன தான தானந்த தானந்த
93 1216 தானதன தான தானந்த தானந்த
தானதன தான தானந்த தானந்த தனதான.

மூளும்வினை சேர மேல்கொண்டி டா,ஐந்து
பூதவெகு வாய மாயங்கள் தானெஞ்சில்
மூடி,நெறி நீதி யேதுஞ்செ யாவஞ்சி, யதிபார
மோகவினை வான போகஞ்செய் வே,அண்டர்
தேடஅரி தாய ஞேயங்க ளாய்நின்ற
மூலபர யோக மேல்கொண்டி டாநின்ற துளதாகி,
நாளுமதி வேக கால்கொண்டு தீமண்ட,
வாசியன லூடு போயொன்றி வானின்க,
ணாமமதி மீதி லூறுங்க லாஇன்ப அமுதூறல்
நாடி,யதன் மீது போய்நின்ற ஆனந்த
மேலைவெளி யேறி, நீயின்றி நானின்றி,
நாடியினும் வேறு தானின்றி வாழ்கின்ற தொருநாளே;

காளவிட முணி மாதங்கி, வேதஞ்சொல்
பேதைநெடு நீலி, பாதங்க ளால்வந்த
காலன்விழ மோதா சாமுண்டி, பாரம்பொ டனல்வாயு
காதிமுதிர் வான மேதங்கி வாழ்வஞ்சி,
ஆடல்விடை யேறி பாகங்கு லாமங்கை,
காளிநட மாடி நாளன்பர் தாமவந்து தொழுமாது,
வாளமுழு தாளு மோர்தண்டு மூய்தங்கு
சோதிமணி மார்ப மாவின்பி ஞளின்சொல்
வாழுமுமை மாத ராள்மைந்த னே!யெநதை யிளையோ
மாசிலடி யார்கள் வாழ்கின்ற வூர்சென்று [னே!
தேடிவிளை யாடி யேயங்ங னேநின்று
வாழுமயில வீர னே!செநதில் வாழ்கின்ற பெருமாளே!

141. தனதனன தனதனன தனதனன தனதனன
தான தானன தான தானன தனதன தனதான.

அறுகுநுனி பனியனைய சிறியதுளி, பெரியதொரு
ஆக மாகி,யோர் பால ரூபமாய்,
அருமதலை குதலைமொழி தனினுருகி யவருடைய
ஆயி தாதையார் மாய மோகமாய்,
அருமையினி லருமையிட, மொருமொரென வுடல்வளர,
ஆளு மேளமாய், வால ரூபமாய், அவரொரு பெரியோ
அழகுபெறு நடையடைய, கிருதபடு மொழிபழகி, [ராய்
ஆவி யாயவோர் தேவி மாருமாய்,
விழுசுவரை யரிவையர்கள் படுகுழியை நிலைமையென,
வீடு வாசலாய் மாட கூடமாய்,
அணுவளவு தவிடுமிக பிதிரவிட மனமிறுகி
ஆசை யாளராய், ஊசி வாசியாய், அவியுறு சுடர்போலே
வெறுமிடிய னொருதவசி யமுதுபடை யெனுமளவில்,
மேலை வீடுகேள் கீழை வீடுகேள்,
திடுதிடென நுழைவதன்முன் கதிர்முடுகி யவர்களொடு
சீறி ஞாளிபோல் ஏறி வீழ்வதாய்,
விரகினொடு வருபொருள்கள் சுவறியிட மொழியுமொரு
வீணி யார்சொலே மேல தாயிட, விதிதனை நினையாதே,

மினுகுமினு கெனுமுடலை மாமுறிசி நெகிழ்வுறவும்,
வீணர் சேவையே பூணு பாவியாய்,
மறுமையுள தெனுமவரை விடுமவிழலை யதனினவரு
வாரகள் போகுவார காணு மோனென,
விடுதுறவு பெரியவரை மறையவரை வெடுவெடென
மேள மேசொலாய் ஆளி வாயராய் மிடையுற வருநாளில்,
வறுமைகளு முடுகிவர, வுறுபொருளு நழுவசில,
வாத மூதுகா மாலை சோகைநோய்
பெருவயிறு வயிறுவலி படுவன்வர, இருவிழிகள்
பீளை சாறிட, ஈளை மேலிட,
வழுவழென உமிழுமது கொளிகோளென ஒழுகிவிழ,
வாடி யூனெலாம, நாடி பேதமாய், மனையவள் மனமவேறு
மறுக,மனை யுறுமவாகள் நணுகுநணு கெனுமளவில,
மாதர் சீயென, வாலர சீயென,
கனவுதனி லிரதமொடு குதிரைவர, நெடியசுடு
காடு வாவென, வீடு போவென,
வலதழிய, விரகழிய, வுரைகுழறி விழிசொருகி
வாயு மேலிட, ஆவி போகுநாள மனிதர்கள் பலபேச,
இறுதியதொ டறுதியென உறவின்முறை கதறியழ,
ஏழை மாதராள் மோதி மேல்விழ,
எனதுடைமை யெனதடிமை யெனுமறிவு சிறிதுமற,
ஈமொ லேலெனு, வாயை ஆவென,
இடுகுபறை சிறுபறைகள் திமிலையொடு தவிலறைய,
ஈம தேசமே பேய்கள் சூழ்வதாய் எரிதனி லிடும்வாழ்வே
இணையடிகள் பரவுமுன தடியவர்கள் பெறுவதுவும்,
ஏசி டாரகளோ, பாச நாசனே!
இருவினைமு மலமுமற இறவியொடு பிறவியற
ஏக போகமாய் நீயு நானுமாய்
இறுகும்வகை பரமசுக மதனையரு ளிடைமருதில்
ஏக நாயகா! லோக நாயகா! இமையவா பெருமாளே!

---

## XXV. சிவகதி, முத்தி.

142. தனனதான தானன தனனதான தானன
351 தனனதான தானன தனதான.

கரிபுராரி! காமாரி! திரிபுராரி! தீயாடி!
கயிலையாளி! காபாலி! கழையோனி!
கரவுதாச னாசாரி! பரசுபாணி! பாணி!
கணமொடாடி! காயோகி! சிவயோகி!
பரமயோகி! மாயோகி! பரியராச டாரூடி!
பகரொணாத மாஞானி! பசுவேறி!
பரதமாடி! கானாடி! பரவயோதி காதீத
பரமஞான ஊர்பூத அருளாயோ?
சுருதியாடி தாதாவி வெருவியோட, மூதேவி
துரககோப மீதோடி, வடமேரு
சுழல,வேலை தீமூள, அழுதளாவி வாய்பாறி
சுரதிேனாடு சூர்மாள, வுலகேழும்
திகிரிமாதி ராவார திகிரிசாய, வேதாள
திரளினோடு பாரோடு கழுகாட,
செருவினூடு வானீப! கருணைமேரு வே! பார
திருவிராலி யூர்மேவு பெருமாளே! (க

143. தனனதான தானன தனனதான தானன
1052 தனனதான தானன தனதான.

சுருதியூடு கேளாது, சரியையாளர் காணாது,
துரியமீது சாராது, எவராலுந்
தொடரொணாது, மாமாயை யிடைபுகாது, ஆனாத
சுகமகோத தீயாகி யொழியாது,
பருதிகாயில் வாடாது, வடவைமூளில் வேகாது,
பவனம்வீசில் வீழாது சலியாது,
பரவைசூழி லாழாது, படைகள்மோதில் மாயாது,
பரமஞான வீடேது ‡ பகர்வாயே.

‡ "புகல்வாயே" என்றும் பாடம்.

நிருதர்பூமி பாழாக, மகரபூமி தீமூள,
நிபிடதாரு காபூமி குடியேற,
நிகரபார சீகார சிகரமீது வேலேவு
நிருப! வேத ஆசாரி யனுமாலும்
கருதுமாக மாசாரி! கனககார்மு காசாரி!
ககனசாரி! பூசாரி! வெகுசாரி!
கயிலைநாட காசாரி! கதிரகாமம் வாழ்வான
கருணைமேரு வே! தேவர் பெருமாளே! (உ)

---

144. தனதன தத்தனத தனதன தததனத
425 தனதன தத்தனத் தனதான.

சரியையா ளர்க்குமக் கிரியையா ளர்க்குநற்
சகலயோ கர்க்குமெட் டரிதாய,
* சமயபே தத்தவர்க் கணுகொணு, மெய்ப்பொருட்
டருபரா சத்தியிற் பரமான
துரியமே, லற்புதப் பரமஞா னத்தனிச
சுடர்வியா பித்தநற் பதி,நீடு
துகளில்சா யுச்சியக் கதியை,யீ றற்றசொற்
சுகசொரூ பத்தையுற் றடைவேனோ?
புரிசைசூழ் † சொர்ப்பதிச சுரர்களோ டிக்கெடப்
பொருதவீ ரத்துவிக் ரமசூரன்
புரளவேல் தொட்டகைக் ‡ குமரவேண் மெய்த்திருப்
புகழையோ தற்கெனக் கருள்வாயே.
கரியபூ கத்திரட் பலவின்மீ திற்சுளைக்
கனிகள்பீ றிப்புசித் தமராடிக்,
கதலிசூ தத்தினிற் பயிலுமீ முத்தினிற்
கதிரகா மக்கிரிப் பெருமாளே! (க)

---

* "சமயபே தத்திலுக்" என்றும் பாடம்.
† "செயப்பதிக் குரியசா மர்த்யசற் புருஷவீ ரத்துவிக்" என்றும் பாடம்.
‡ "குமரமேன் மைத்திருப்" என்றும் பாடம்.

145. தனதன தானந்த தான தந்தன
தனதன தானந்த தான தந்தன
தனதன தானந்த தான தந்தன தனதான.

குருதிபு லாலென்பு தோன ரம்புகள்,
கிருமிகள் மாலமபி சீத மண்டிய
குடாநிணம் ரோமங்கள் மூளை யென்பன பொதிகாயக்
குடிலிடை, யோரைந்து வேட, ரைம்புல
அடவியி லோடுந்து ராசை வஞ்சகர்,
கொடியவர், மாபஞ்ச பாத கஞ்செய, அதனாலே
சுருதிபு ராணங்க ளாக மம்பகர்
சரியைக்ரி யாஅண்டர் பூசை வந்தனை,
துதியொடு நாடுந்தி யான மொன்றையு முயலாதே,
சமடம தாய்வம்பு மாலகொ ளுந்திய
திமிரரோ டேபந்த மாய்வ ருந்திய
துரிசற, ஆநந்த வீடு கண்டிட, அருள்வாயே.
ஒருதனி வேலகொண்டு நீள்க்ர வுஞ்சமும,
நிருதரு மாவுங்க லோல சிந்துவும,
உடைபட மோதுங்கு மார! பங்கய கரவீரா!
உயர்தவர், மாவும்ப ரான அண்டர்கள்,
அடிதொழு தேமனப ராவு தொண்டர்கள்,
உளமதில் நாளுங்கு லாவி யின்புற வுறைவோனே!
கருதிய ஆறங்க வேள்வி யந்தணர்
அரிகரி கோவிந்த கேச வென்றிரு
கழல்தொழு சீரங்க ராச னன்புறு மருகோனே!
கமலனு மாகண்ட லாதி யண்டரு
மெமது பிரானென்று தாள்வ ணங்கிய,
கரிவனம் வாழ்சம்பு நாதர் தந்தருள் பெருமாளே!(௬)

---

146. தானதன தத்த தானதன தத்த
தானதன தத்த தனதான.

ஆனைமுக வர்க்கு நேரிளைய பத்த!
ஆறுமுக! வித்த கமரேசா!

ஆதியா னுக்குமெ வேதமுதல் வற்கும்
　　ஆரணமு ரைத்த குருநாதா!
தானவர்கு லதனை வாள்கொடுது ணித்த
　　சால்சதுர்மி குதத திறல்வீரா!
தாளிணைக ளுற்று மேவியப தத்தில்
　　வாழ்வொடுசி றக்க அருள்வாயே;
வானெழுபு விக்கு மாலுமய னுக்கும்
　　யாவரொரு வாக்கு மறியாத,
மாமதுரை சொக்கா மாதுமைக ளிக்க
　　மாமயிலந டத்து முருகோனே!
தேனெழுபு னத்தில் மான்விழிகு றத்தி
　　சேரமரு வுற்ற திரள்தோளா!
தேவர்கள்க ருத்தில் மேவியப யத்தை
　　வேலகொடுத ணித்த பெருமாளே! (௫)

---

147, தானநத னத்ததன தானந்த னத்ததன
231 தானந்த னததததன தனதான.

தேனுந்து முக்கனிகள் பால்செங்க ருபபிளநிர்
　　சீரும்ப ழித்தசிவ மருளூறத்,
தீதும்பி டித்தவினை யேதும்பொ டித்துவிழ,
　　சீவன்சி வச்சொருப மெனதேறி,
நானென்ப தற்றுயிரொ டேனென்ப தற்றுவெளி
　　நாதம்ப ரப்பிரம வொளிமீதே,
ஞானஞ்சு ரப்பமகி ழாநந்த சித்தியொடெ
　　நாளுங்க ளிக்கபத மருள்வாயே.
வானந்த ழைக்கஅடி யேனுஞ்செ ழிக்கஅயன்
　　மாலும்பி ழைக்க,அலை விடமாள
வாருங்க ரத்த,னெமை யாளுந்த கப்பன்,மழு
　　மானின்க ரத்தனருள் முருகோனே!
தானந்த னத்ததன னவண்டு சுற்றிமது
　　தானுண்க டப்பமல ரணிமார்பா!
தானங்கு றித்தெமை யாளுந்தி ருக்கயிலை
　　சாலுங்கு றத்திமகிழ் பெருமாளே! (௧)

286
### 148. தத்ததன தானத் தனதான
### தத்ததன தானத் தனதான.

இத்தரணி மீதிற் பிறவாதே,
எத்தரொடு கூடிக் கலவாதே,
முத்தமிழை யோதித் தளராதே,
முத்தியடி யேனுக் கருள்வாயே.
தத்துவமெய்ஞ் ஞானக் குருநாதா!
சத்தசொரு பா! புத் தமுதோனே!
நித்தியக்ரு தா! நற் பெருவாழ்வே!
நிர்த்தஜெக ஜோதிப் பெருமாளே! (எ

### 149. தத்தன தானனத் தனதான. 349

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி,
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே;
உத்தமா தானசற் குணர்நேயா!
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா!
வித்தகா! ஞானசத் திநிபாதா!
வெற்றிவே லாயுதப் பெருமாளே! (அ

### 150. தனதானத் தனதான தனதானத் தனதான.
447

இறவாமற் பிறவாமல்,
எனையாள்சற் குருவாகிப்,
பிறவாகித், திரமான
பெருவாழ்வைத் தருவாயே.
குறமாதைப் புணர்வோனே!
குகனே! சொற் குமரேசா!
கறையானைக் கிளையோனே!
கதிர்காமப் பெருமாளே! (க

# அரும்பதவுரை.

கைத்தலம் நிறை கனி - திருக்கரத்திலே நிறைந்த பழங்களும். கைத்தலம் - கை. கப்புதல் - உண்ணல்.

கரிமுகன் அடிபேணிக் கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவ - யானைமுகவராகிய விநாயகக்கடவுளது திருவடிகளை வணங்கித் துதிக்கும் அடியவரது சித்தத்தில் இருப்பவரே. யானைமுகன் - பிரணவசொரூபி. அடி - ஞானசத்தி கிரியாசத்தி. புத்தியில உறைபவர் - துதிப் போராது மலத்தைப்போக்கி அவாரது அறிவின்கண் நிலையாக நிற்பவர்.

கற்பகம் என - கற்பகமே என்று சொல்ல. கற்பகம் - கற்பகவிருட்சம். கற்பகவிருட்சம்போல் தம்மையடைந்தோர்க்கு அவர்கள் விரும்பிய பொருள்களைக் கொடுத்தலால் கற்பகம் என்றார்.

மத்தம் - ஊமத்தம்பூ.

மல் பொரு திரள் புய - மல்லயுத்தத்தைச் செய்யும் திரண்ட புயத்தையுடைய.

மதயானை - மும்மதங்களையுடைய யானை முகத்தவரும். மும்மதம் - கன்னமதம், கும்பமதம், கோசமதம். இவை இச்சாஞானக் கிரியாசத்திகளைக் குறிக்கும். சச்சிதானந்தமுடையவர் என்பதுமாம்.

மத்தள வயிறு - எல்லா உலகங்களும் அவைகளிலுள்ள சேதனசேதனங்களும் தன்னிடத்தடங்கி உற்பத்திக்குக் காரணமான கர்ப்பஸ்தானமாயிருத்தலால் மத்தள வயிறு என்றார்.

மட்டு அவிழ் மலர்கொடு - தேன்சொரிகின்ற பூக்களைக் கையிற்கொண்டு.

முத்தமிழ் அடைவு-இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழின்முறையை.

முன்படு கிரி - எல்லா மலைகளுக்கும் மேம்பட்ட மேருமலை.

முப்புரம் - தாரகாசுரன் புத்திரர் மூவருடைய இரும்பு வெள்ளி பொன் என்னும் மூன்று லோகத்தாலும் அமைந்த யாண்டும் போக்கு வரவுடைய கோட்டைகளையுடைய மூன்று புரங்கள் என்று புராணங் கூறும். முப்புரமாவது மும்மலத்தினலாகிய தூல சூட்சும காரணமென்கிற முச்சரீரங்கள். "அப்பணிசெஞ்சடையாதிபுராதனன், முப்புரஞ்செற்றனனென்பர்கண்மூடர்கண, முப்புரமாவதுமும்மலகாரிய, மப்புரமெய்தமை யாரறிவாரே." (திருமந்திரம்.)

சிவன் உறை ரதம் - சிவபிரான் ஏறியிருந்த தேர். திரிபுரசங்காரத்திலே விநாயகர் தம்மைத் துதியாமையாற் சிவபெருமான் ஏறிய தேரின் அச்சை முரித்தார் என்று புராணங் கூறும்.

அத்துயா அதுகொடு சுப்பிரமணிபடும் அப்புனம் அதனிடை இபமாகி - (வள்ளியம்மையாராலாய) அத்துயாகொண்டு சுப்பிரமணியக்கடவுள் தோன்றிநின்ற அந்தத் தினைப்புனத்தின்கண்ணே யானை வடிவங் கொண்டு. இபம் - யானை.

இதன் முடிபு.

கரிமுகன் அடிபேணி . .அடியவர் புத்தியிலுறைபவ! கற்பகம்! என வினை கடிதேகும். (ஆதலால் யான் எனது வினை கடிதேகும் பொருட்டு) முதல்வோனே! அதிதீரா! . ..பெருமாளே! எனத் துதி செய்து, அரன்மகன் .. . மதயானை (ஆகிய) மத்தள வயிறனை, உத்தமி புதல்வனை . .. மலர் கொடு பணிவேன்.

2 உம்பர்தரு தேனு மணிக் கசிவாகி - (தம்மை யடைந்தோர்க்கு விரும்பிய பொருள்களைக் கொடுக்கும் இயல்புடைய சந்தானம், அரிசந்தனம், மந்தாரம் பாரிசாதம், கற்பகம் என்னும் ஐவகைத்) தேவதருக்கள், காமதேனு என்னும் தெய்வப்பசு. சிந்தாமணி என்னும் தேவரத்தினம் ஆகிய இவைகளைப்போலத் தேவரீர் இரக்கமெய்தி,

ஒண்கடலில் தேன் அமுதத்து உணர்வு ஊறி - ஒளிபொருந்திய பாற்கடலில் எழுந்த தித்திப்பான தேவாமிர்தத்தைப்போல எனது அறிவிலே ஊறி,

இன்ப ரசத்தே பலகாலும் பருகி - பேரின்ப சுவையையே எப்பொழுதும் நான் பானஞ்செய்து இருக்கும்படி,

என்றன் உயிர்க்கு ஆதரவு உற்று அருள்வாய் - அடியேனுக்குக் கருணை கூர்ந்து அநுக்கிரகஞ் செய்வீராக.

தந்தை வலத்தால் அருள் கைக்கனியோனே - தந்தை தம்மை வலம் வந்தமையால கொடுத்தருளிய கனியைக் கைக்கொண்டவரே.

நிலைப்பொருளோனே - நித்தியப்பொருளாயுள்ளவரே.

3. கடின குட உதரம் - வன்மையான குடம்போன்ற வயிற்றையும்,

விபரீத கரடம் தடம் மும்மதம் - வேறுபாடான மதம்பாய்சுவட்டையும், மிகுதியான மும்மதங்களையும், கரடம் - மதம்பாய்சுவடு. தடம் - மிகுதி. மும்மதம் - பார் பாட்டு: 1.

நளின சிறு நயனம் - தாமரைமலர்போன்ற சிறிய கண்களையுமுடைய,

கரிணி முகவர் - யானைமுகவராகிய விநாயகர். கரிணி - யானை.

துணைவன் - சகோதரன். விநாயகக்கடவுளும் சுப்பிரமணியக்கடவுளும் சிவபெருமானினின்றும் வேறுகாது, மணியும் அதன் ஒளியும்போலப், பிரிவின்றி நிற்கும் அவருடைய இரண்டு சத்திகளாம். சிவபெருமானினின்றுந் தோற்றிய சத்திகளாதலால், அவரது குமாரர் எனப்படுவர்.

வடவ்ரையின் முகடு அதிர - மேருமலையின் கொடுமுடி நடுங்கும்படி.

மகபதி தரு சுதை - யாகங்களுக்கு அதிபதியாகிய இந்திரன் பெற்ற புதல்வி; தெய்வயானை.

குறமின் - குறப்பெண்; வள்ளிநாயகி.

சரசவித - லீலைவகைகளைச்செய்யும். தெய்வயானையம்மையாரும் வள்ளிநாயகியாரும் சுப்பிரமணியக்கடவுளது ஞானசததியும் கிரியாசத்தியுமாம. சரசவிதம் - ஆன்மாக்களுக்கு வினையை நுகர்விதது ஞானனந்ததைப் பெறச்செய்தலாம்.

அடல் அசுரா - வலிமைபொருந்திய அவுணர்கள்.

எழில் மீறும் அருண கிரண ஒளி ஒளிரும் அயிலைவிடு - அழகுமிகுந்த சூரிய காந்திபோலும் ஒளிவிளங்கும் வேற்படையைவிடுகின்ற. வேற்படை - ஞானசததி. வேற்படையை ஞானசததியாகக்கொள்ளும்பொழுது, தெய்வயானை அம்மையார் இசசாசத்தியெனக் கொள்ளப்படுவர்.

சரவணபவ அரகரலோலா - சரவணப்பொய்கையிலுற்பவித்து (வினையை) அரிக்கும் ஆசைப்பெருக்கமுடையவரே. லோலம் - அவா.

படல உடுபதியை இதழி அணிசடில - கூட்டமான நட்சத்திரங்களுக்குத் தலைவனான சந்திரனையும் கொன்றைமாலையையும் அணிந்த படலம் - கூட்டம். உடு - நட்சததிரம். இதழி - கொன்றைமாலை.

பசுபதி வரநதி அழகான பழ நிமலை அருள்செய் மழலைமொழி மதலை - சிவபெருமானும் கங்காதேவியும் அழகிய உமாதேவியாரும் பெற்றருளிய மழலைசசொற்களைப்பேசுங் குழந்தை. பழ - பழைய. நிமலை - மலமில்லாதவள்.

---

4. அரகரசிவன் - சங்காரகிருத்தியஞ் செய்கின்ற சீகண்ட உருத்திரன்.

பரவுதல் - வணங்குதல், துதித்தல். மொழிதர - துதிக்க.

பரிபுரம் கமலம் அது அடி இணை - சிலம்பை அணிந்த தாமரைமலர் போன்ற திருவடிகள் இரணடையும். திருவடிகள் - கிரியாசத்தியும் ஞானசத்தியும். கிரியாசத்தி ஆன்மாக்களுக்கு இருவினையொப்பு மலபரிபாகம்வரும்பொருட்டுக் கர்மங்களைப் பக்குவாபக்குவமறிந்து கூட்டிப் புசிப்பிதது்த் தொலைப்பிக்கும். ஞானசததி ஞானனந்ததைப் பெறசசெய்யும்.

உரைசெயும் ஒருமொழி பிரணவ முடிவதை உரைதரு - உபதேசிக்கும் ஏகாட்சரமாகிய பிரணவத்தின் உட்பொருளை விளக்கும். பிரணவமானது மூலமொழி எனவும், ஒருமொழி எனவும், ஓங்காரம் எனவும், குடிலை எனவும், உத்கீதை எனவும், சுத்தமாயை எனவும்படும். அது சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் பீடமாயும், மற்றைத் தேவர்களுக்கெல்லாம்பிறப்பிடமாயும், எல்லா மந்திரங்களுக்கும் வேதங்களுக்கும்

மூலமாயும் உள்ளது. சிவன் ஓங்கார மூலப்பொருளெனப்படுவர். பிரணவம் சமஷ்டிப் பிரணவம் வியஷ்டிப் பிரணவம் என இரு வகைப்படும். சமஷ்டிப் பிரணவம் 'ஓம்' காரம் என நிற்பது. வியஷ்டிப் பிரணவம் அகார உகார மகார விந்து நாதம் என நிற்பது.

உயர்வாய உலகம் மன் அலகு இல உயிர்கள் - மேன்மைபொருந்திய உலகத்திலுள்ள நிலைபெற்ற அளவில்லாத ஆன்மாக்கள்.

உறுவரம் முநிவோர - அடைந்த வரத்தையுடைய தவத்தோர்.

மன மகிழ்வுற அணி பணி திகழ் தணிகையிலுறைவோனே - மனமகிழ்ச்சியோடு அணியும் ஆபரணங்கள் விளங்குகின்ற தணிகாசலபதியே.

பகர்தரு குறமகள் - சொல்லப்படுகின்ற வள்ளிநாயகியாரும்,

தரு அமை வனிதையும் - கற்பக விருட்ச நீழலில் உறையுந் தெய்வயானையம்மையாரும். அமைதல் - உறைதல்.

இரு புடை உற - இரண்டு பக்கங்களிலும் பொருந்த.

---

5. திருமகள் உலாவும் இருபுய முராரி - இலக்குமி சஞ்சரிக்கும் இரண்டு புயங்களையுடைய விட்டுணுவின். முராரி - முரன் என்னும் அசுரனுக்குப் பகைவர். (முர + அரி.)

செகதலமும் வானும் மிகுதிபெறு பாடல் தெரிதரு - மண்ணுலகத்தவரும் விண்ணுலகத்தவரும் மிகுதியான நூல்களினூலே ஆராய்ந்து தெளியப்பெறும்.

மரகத மயூர - மரகதநிறம்பொருந்திய மயிலை வாகனமாகக்கொண்டருளிய. மயூரம் - மயில்.

மணி தரளம் வீசி அணி அருவி சூழ மருவு - இரத்தினங்களையும் முத்துக்களையும் எறிந்து அழகிய மாணிக்ககங்கை சமீபத்திற் பாயும்.

அருவரைகள் - அடைதற்கரிய மலைகள்.

அரவு பிறை வாரி விரவு சடை வேணி - சர்ப்பம் சந்திரன் கங்கை என்னும் மூன்றுங் கலந்திருக்கும் சடாமுடியையுடைய. அரவு, பிறை, கங்கை முறையே சிவசத்தியைக் குறிக்கும்.

இருவினையிலாத தருவினை விடாத இமையவர்குல ஈசன் - (புண்ணியமாகிய ஒருவினையேயன்றிப் புண்ணியம் பாவமென்னும்) இருவினை இல்லாதவரும், கற்பகத்தருவினை விட்டுநீங்காதவருமாகிய தேவர்கள் கூட்டத்துக்கு அதிபதி.

இலகு சிலை வேடர் கொடி - விளங்குகின்ற வில்லையுடைய வேடுவர்களது மகள்; வள்ளிநாயகி.

இருதன விநோத - அபரஞான பரஞானங்களை வள்ளிநாயகியாருக்கு விளக்குவதே பொழுதுபோக்காகவுடைய.

6. கனகசபை - பொன்னம்பலம். சிதம்பரத்திலுள்ள ஐந்து சபைகளிலொன்று. அவை சிற்சபை, கனகசபை, நிருத்தசபை, தேவசபை, இராசசபை என்பன.

கனகநிற வேதன் அபயமிட மோதும் - பொன்னிறம்பொருந்திய பிரமன் ஓலமிடும்படி குட்டிய. மோதுதல் - குட்டுதல்.

கரகமலம் சோதிப் பெருமாள் - தாமரைமலர்போன்ற திருக்கரத்தையுடைய ஞானசோதியாய் விளங்கும் பெருமாள்.

வினவுமடியாரை மருவி விளையாடு விரகுரச மோகப் பெருமாள் - தேடும் அடியவரைக் கூடி அவர்களது மும்மலங்களையும் நீக்கி ஞானசசுவையாகிய பேரின்பத்தைக்கொடுக்கும் ஆசையுள்ள பெருமாள். விரகு - கதி, ஞானம்.

விதிமுநிவர் தேவர் அருணகிரிநாதர் விமலசர சோதிப்பெருமாள் - நியமமுடைய முநிவர்களுக்குத தெய்வமாயுள்ளவர், அருணகிரிக்குத் தலைவர், மலமில்லாத ஒப்பற்ற சோதியாயுள்ள பெருமாள். இனி, பிரமாவுக்கும், முநிவருக்கும், தேவருக்கும், அருணகிரிக்குந் தலைவர் எனப் பொருள் கூறலும் பொருந்தும். சரம் - தனிமை.

சனகி மணவாளன் - இராமா. சனகி - சீதை.

வேத சதம் - வேதங்கள் எல்லாம். சதம் - எல்லாம்.

சரண சிவகாமி - ஆன்மாக்களுக்குப் புகலிடமாயுள்ள சிவகாமி. சரணம் - புகலிடம்.

இரண குலகாரி - போர்செய்யும் அவுணர்குலத்தைச சங்கரித்தவள். அவுணர்குலத்துக்கு நஞ்சாயுள்ளவள். இரணம் - போர். காரி - நஞ்சு.

அமிர்த குறமாதொடு இயல்பரவு காதல் பெருமாள் - (தினையுந் தேனுமாகிய) உணவை உண்ணும் வள்ளிநாயகியாரோடு பொருந்திய பரந்த காதலையுடைய பெருமாள். ஆனமாக்களுக்கு வினையை நுகர்வித்து ஞானத்தைக்கொடுக்கும் பெருங்காதலையுடையவர்.

இணையில் இபம் தோகை மதியின் மகளோடும் - ஒப்பற்ற யானைவளர்த்த பெண்ணாகிய அறிவிற்சிறந்த தெய்வயானையோடும். மதி - அறிவு.

இயல் புலியூர் வாழ் - அழகிய சிதம்பரத்தில் வாழ்கின்ற. இயல் - இலக்ஷணம்.

---

7. காணொணாதது - பாசஞானம் பசுஞானங்களாற் காணக்கூடாதது. பாசஞானமாவது சொற்பிரபஞ்சமும் பொருட்பிரபஞ்சமுமாகிய இருவகைப் பிரபஞ்சங்களின் வாயிலாய் ஆன்மாவின்கண் நிகழும் ஏகதேசஞானமாம். வேதம் சாத்திரம் மிருதி புராணம் கலைஞானங்களும் அசபையும் சொற்பிரபஞ்சமாம். நிலம்முதல் நாதமீறுயுள்ள

தத்துவங்கள் பொருட்பிரபஞ்சமாம். பசுஞானமாவது இப்பிரபஞ்சங்களைப்பொருந்திய ஆன்மா இவை அனைத்துந் தன்கீழ் அடங்கியதென்றறிந்து அவற்றினின்றும் நீங்கியபொழுது அப்பிரபஞ்சமாகிய பாசநீக்கத்தால் அநாதியே பாசத்தினீங்கியிருக்கின்ற சிவனை ஒப்பேனென்று சடிதியில் மதிக்கவருவதோர் சிவசமவாதஞானமாம். (சி. சி. 9, 2.) அஃதாவது, தன்னை அறிந்து, ஆணவமலம் ஒன்றும் நீங்காமையினால், தானே பிரமமெனக்கருதியிருத்தலாம். முதல்வன் திருவடிஞானமாகிய பதிஞானம் ஒன்றாலே அப்பதிப்பொருளை அறிய முடியும். பதிஞானமாவது (அநுபவஞானம்) அருள்வழிநின்று ஆணவமொழிதது ஏகமாம் இன்பத்தைப் பொருந்துவதாம். இந்த ஞானமே முதல்வனது சொரூப இலக்கணம். இதுநோக்கியே "அவனருளாலே யவன்றாள் வணங்கி" என்று மாணிக்கவாசகசுவாமிகளும், "அப்படிய னவ்வுருவ னவ்வண்ணதத னவனருளே கணாகக் காணபதல்லால், இப்படிய னிவ்வுருவ னிவ்வண்ணதத னிவனிறைவனென்றெழுதிக் காட்டொணாதே," "காட்டுவிததா லாரொருவர் காணாதாரே காணபாரார் கணணுதலாய் காட்டாக்காலே" என்றும் திருநாவுக்கரசுசுவாமிகளும் திருவாய்மலர்ந்தார்கள்.

உருவோடு அருவது - (அப்படியாயினும் உயிர்கள்பொருட்டு) உருவம் உருவருவம் அருவம் என்னுந் தடத்தவடிவங்களைக்கொள்வது. சுதத சிவம் ஞானானந்தசொரூபியாய் ஒன்றோடும் பற்றற்றுநிற்பினும், உயிர்கள்பொருட்டுச் சிவசத்தியின் செயலால் ஐந்தொழில்செய்யும் நிமித்தம் அசசததியில வசப்பட்டுநிற்கும் ஏகதேசநிலையில் பதியெனப் பெயர்பெறும். பதி மாயையோடுகூடி அதனைக் காரியப்படுததும்பொழுது அடையும்நிலை தடததநிலையெனப்படும். மாயையிலிருந்து முதலில் சிவதத்துவந்தோன்ற அதில் தங்கிநின்ற பதியின் ஒருபாகம் சிவம் எனப்படும். அம்மாயையிற்றோன்றிய சாதாக்கிய தத்துவத்தில் தங்கிநின்ற பதியின் பாகம் சதாசிவம் எனப்படும். மகேசுரதத்துவத்தில் தங்கிய பாகம் மகேசுரன் எனப்படும். சிவன் சதாசிவன் மகேசுரன் என்னும் மூன்று பேதங்களும் தடத்தவடிவங்களாம். இவற்றுள் சிவன் அருவப்பொருள். சதாசிவன் அருவுருவப்பொருள். மகேசுரன் உருவப்பொருள். சிவம் ஒன்று. சதாசிவம் ஒன்று. மகேசுரவடிவம் ஒன்றேயாயினும், தொழில் வேறுபாடுபெற்றிக் கொண்ட வடிவநிலை இருபத்தைந்து பேதமாக எண்ணப்படும். அவை சபாபதி, *சந்திரசேகரர், உமாமகேசர், இடபாரூடர், கல்யாணசுந்தரர், பிக்ஷாடனர், காமாரி, காலாரி, திரிபுராரி, சலந்தராரி, மாதங்காரி, வீரபத்திரர், ஹரியர்த்தர், அர்த்தநாரீசுரர், கிராதர், கங்காளர், சண்டேசாநுக்கிரகர், நீலகண்டர், சக்கரப்பிரதர், கசமுகாநுக்கிரகர், சோமாஸ்கந்தர், ஏகபாதர், சுகாசீனர், தக்ஷிணாமூர்த்தி, லிங்கோற்பவர் என்பனவாம்.

பேசொணுதது, உரையே தருவது - (அச்சொரூப இலக்கணம் இத்தன்மை யதென்று) சொல்லமுடியாதது, தடத்த இலக்கணமே ஆகமப்பிரமா ணத்தால் ஆராயப்படுவது. உரை - ஆகமப்பிரமாணம்.

காணு நான்மறை முடிவாய் நிறைவது - உணரப்படுகின்ற நான்கு வேத ஙகளும் மெய்ப்பொருளென்று முடித்துக் கூறும் பொருளாய் வியாபி த்திருப்பது.

பஞ்சபூதக் காய பாசமதனிலே உறைவது - பஞ்சபூதங்களினுலுண்டாய உடம்பென்னும் பாசத்திலுறைவது.

மாயமாய் உடல் அறியாவகையது - உடலுளுறைந்தும் மறைபொருளாய் உடலோடு சம்பந்தமற்றது.

காயமானவர் எதிரே அவரென வந்து பேசிப் பேணுதது - சரீரத்தை யுடைய மனிதாகள் முன்னே பக்குவகாலததில் அவரைப்போல மானிடசசட்டை சாத்திவந்து உபதேசமுதலியவைசெய்தும், மனித ருள் ஒருவராக மதிக்கமுடியாதது.

வெளியேய் ஒளியது - சிதாகாசத்திற் பொருந்திய சோதிவடிவாயுள்ளது.

பேத அபேதமொடு உலகாய் வளர்வது - அப்படியாயினும் உலகு உயிர்க ளோடு பொருட்டன்மையாற் கண்ணும் சூரியனும்போல அவற்றின் வேறுமாய், கலப்பினுல் உடலும் உயிரும்போல ஒன்ருய், உயிர்க் குயிராதற்றன்மையாற் கணணொளியும் ஆன்மபோதமும்போல அவற் ருேடு உடனுமாய்ச சத்திரூபமாயும் பதிரூபமாயும் நிற்பது. சி. சி. 2 சூ. 1.

விந்து நாதப் பேருமாய் கலை அறிவாய் துரிய அதீதமானது - பரவிந்து பரநாதம் என்று சொல்லப்படும் பொருளாய், ஞானசத்தியாய், அப் படியாயினும் அவற்றைக் கடந்து அப்பாற்பட்டது. கலை அறிவு - உன்மனகலையின்கண்ணே விளஙகும் பராசத்தி.

வினையேன் முடிதவ பேறுமாய் - இருவினையிற்கிடந்து தடுமாறுகின்ற யான் முன்செய்த சரியை கிரியை யோகஙகளாகிய தவத்தின் பயனு மாய்.

வீண் ஒணுது என அமையாது அசுரரை நூறியே - யுத்தஞ்செய்தல் வீண், அது தகாது என்று சும்மாவிராது அசுரரைக்கொன்று. நூறுதல் - கொல்லுதல்.

கரம் ஒடு வீற மோதின மறவா - கையாற் கிழியும்படி குட்டிய மறவா. அடைந்தோர் மும்மலங்களைக் கோறலால் மறவா என்றூர்.

குறிஞ்சி - மலைச்சார்புநிலம்.

சேண் ஒண்ணுயிடும் இதண்மேல் அரிவையை - ஆகாயத்தோடு ஒன்று பட்ட பரண்மேலிருந்த வள்ளிநாயகியாரை. சேண் - ஆகாயம். இதண் - பரண்.

திருடா - மும்மலங்களை நீக்கி ஆன்மாக்களை ஆட்கொண்டருளும்படி மானைக் காட்டி மான்பிடிப்பவர்போல் மானுடவடிவாய்வருந் திருடா.

சேரொணுவகை வெளியே திரியும் மெய்ஞ்ஞானயோகிகள் - கருவிகள் ஒன்றும் தாக்காவணணம் திருவருளில் அசைவறநிற்கும் மெய்ஞ்ஞானயோகிகளது. அது இது என்று சுட்டி அறியும் தற்போதம கெட்டுப் பரமாநந்த நித்திரைபண்ணும மெய்ஞ்ஞானயோகிகளது.

தேவனூர் - ஒரு ஸ்தலம்.

---

8. பத்து உற்ற திங்கள் - பத்துமாதம். திஙகள் - மாதம்.

முற்றிப் பயின்று - முதிர்ந்து அஙகே வசித்து.

கடையில் வந்து உதித்து - பத்துமாச முடிவில் வந்து தோற்றி.

அருநதுவிக்க - உணபிக்க.

இடு குதம்பை - இடப்பட்ட குதம்பை. குதம்பை - காதில் அணியும் ஓர் ஆபரணம்.

சுட்டி - நெற்றியில் அணியும் ஆபரணம். கிளர்தல் - வளர்தல்.

சுறறித் திரிந்தது அமையும் - சுற்றித்திரிந்தது போதும்.

கிருபைச சித்தம் - திருவுள்ளக் கருணை.

இரவி இந்திரன் வெறறிக் குரஙகின் அரசர் என்றும் - சூரியனும் இந்திரனும் வெற்றிபொருந்திய குரஙகினஙகளுக்கு அரசராகிய வாலி சுக்கிரீவர் என்றும்,

உந்தி இறைவன் எணகு இனக் கர்த்தன் என்றும் - பிரமன் கரடிமுகச் சேனைகளுக்குத தலைவனுகிய சாம்பவன் என்றும். உந்தி இறைவன் - பிரமா. எண்கு - கரடி. இனம் - கூட்டம்.

எரியது நெடுநீலன் என்றும் - அக்கினிதேவன் நெடியநீலன் என்னுஞ் சேனுபதி என்றும்,

உருத்திரன் சிறந்த அநுமனென்றும் - உருத்திரமூர்த்தி சிறப்புப்பொருந்திய அநுமான் என்றும்,

ஒப்பற்ற அண்டர் எவரும் இந்த வர்க்கத்தில் வந்து புனம் மேவ - உவமை சொல்லமுடியாத தேவர்கள் யாவரும் இந்த வானரக்கூட்டததில் வந்து பூவுலகமடைய. புவனம் புனம் என நினறது.

அரிய தன் படைக் கர்த்தரென்று - (அவர்களைத்) தன்னுடைய அருமையான படைத்தலைவரென்றுகொண்டு.

கிளைக் கட்டு - சுற்றமாகிய திரளை. கட்டு - திரள்.

அரி முகுந்தன் மெசசுற்ற பண்பின் - விட்டுணு புகழ்ந்துகொண்டாடும் தகைமையையுடைய.

புடைத்தல் - குட்டுதல். பரித்தல் - காத்தல். பரங்கிரி - திருப்பரங்குன்றம்.

9. அபசார நிந்தைபட்டு உழலாதே - தீயொழுக்கமுடையவனென்னும் இகழ்ச்சிமொழிக்கு ஆட்பட்டு அலைந்து திரியாமலும்,

அறியாத வஞ்சரைக் குறியாதே - அறிவில்லாத கபடிகளைக் கருதாமலும்,

உபதேச மந்திரப் பொருளாலே - தேவரீர் அடியேனுக்கு உபதேசித்த மந்திரத்தைக்கொண்டு. இவருக்கு முதல் உபதேசம் சடாக்ஷரமந்திரமெனச சரிதம் கூறும்.

இப மா முகன் - யானைமுகத்தையுடையவன், விநாயகர். இபம் - யானை.

இமவான் மடந்தை - இமயமலை அரசன் மகளாகிய உமாதேவி. இமவான் - இமயமலை.

செப மாலை - உருத்திராக்கமாலை.

திரு ஆ இனன் குடி - இலக்குமியும் பசுவும் சூரியனும் பூசைசெய்த தலம்.

---

10. சுருதி முடி மோனம் சொல் சிற்பரம - வேதத்தின் முடிவாகிய உபநிடதங்கள் வாக்கிறந்த பொருளென்று சொல்லுகின்ற ஞான முதல்வரே. "வேதக்காட்சிக்கு முபநிடத்துச்சியில் விரித்த போதக்காட்சிக்கும காணலன." (கந்தபுராணம்.)

ஞான சிவ சமய வடிவாய் வந்த, அத்துவிதமான - உண்மைஞானத்தைப் போதிக்கும் சைவசமயசொரூபமாய்வந்த, அத்துவிதப்பொருளான.

பரசுடர் ஒளியதாய் நின்ற - பரஞ்சோதிப்பிரகாசமாய்நின்ற.

நிட்கள சொரூப - அருவத் திருமேனியையுடைய.

துரியநிலையே கண்ட - நின்மலாவத்தையிலே துரியநிலைபொருந்திய. கருவிப்போதம் கழன்ற சுத்தாவத்தையில் ஆனந்தசத்தி நேரே நின்று தான் சிவத்தில் அதீதப்பட்டுநின்று ஆனந்தானுபவம் பெறுவது நின்மலதுரியம்.

அற்புத, சுபோத, சுக, சுயபடிக, மாவின்ப, பத்ம பதமே அடைய - இன்ன தன்மையதென்று சொல்லமுடியாததும், ஞானமயமானதும், மோட்ச சுகத்தைக்கொடுப்பதும், சுத்தபடிகம்போன்றதும், பேரின்பத்தைக்கொடுப்பதுமான பாதாரவிந்தத்தைச் சேர.

கருவில் உருவே தங்கு சுக்கிலம் நிதானவளி பொருமு - கருப்பாசயத்தில் உருவாகத் தங்குகின்ற சுக்கிலம் நிலையாயுள்ள பிராணவாயுவினுற் பொருமுதலடைய.

அதிலே கொண்ட முக்குண விபாகநிலை கருத அறியா வஞ்சகக் கபடம் மூடி - அவ்வுருவிலே பொருந்திய சாத்துவிகம் இராசதம் தாமதம் எனனும் முக்குணங்களாலாய வேறுபாடான நிலையை நினைக்கமுடியாத வஞ்சகம் மூடி. கபடம் - வஞ்சகம்.

உடல்வினை தானே கலகமிடவே பொங்கு குப்பை மல வாழ்வு நிஜமென உழலும் - அவ்வுடலானது வினைமாறுபாடுசெய்ய வளருகின்ற பிரயோசனமற்ற பந்தத்தோடு கூடிய வாழ்வை மெய்யென்றெண்ணி உழலும்.

மாயம் செனித்த குகையே உறுதி கருதும் - வஞ்சகம் உற்பத்தியான இவ்வுடலையே நிசமென்றெண்ணும்.

அசுழமாம் இந்த மட்டைதனை - நாயாகிய இந்த மூடனை. அசுழம் - நாய். மட்டை - மடையன்.

ஒரு நியமமே விண்ட சட்சமய வேத - ஒரு விதியையே கூறிய அறுசமய வேதங்களையுடையவரே.

அடி முடி நடுவுமாய் அண்ட முட்டை வெளியாகி - அண்டமாகிய முட்டையின் அடி முடி நடுவுமாயும் அதற்கப்பாலுமாய்.

உற்பனமதாக - உற்பன்னமாக, தோற்றமாக.

உததரிசமாம் இன்ப புத்தமிர்த போக சுகம் - சலத்தோற்றம்போல ஊறுகின்றதாகிய பேரின்பப் புதிய அமிர்தம்போன்ற ஆனந்த வாழ்வை.

சத்தி கர - ஞானசத்தியாகிய வேலாயுதத்தைக் கையிலேந்தியவரே.

மேவு உணர் அ உரு பிரணவ மந்த்ர கர்த்தவியமாக வரு - பொருந்திய அறிவுருவமாகிய அந்தப் பிரணவமந்திரத்துக்கு முதன்மையாக வருகின்ற. கர்த்தவியம் - முதன்மை. மந்திர கர்த்தவியம் - மந்திரத்துக்கு முதன்மை.

பருதிகதிரே கொஞ்சு நற்சரண நூபுரமது அசைய - சூரியவொளிபோன்ற ஒலிக்கின்ற நல்ல பாதகிண்கிணி அசைய.

நிறை பேரண்டம் ஒக்க நடமாடு கனபத - நிறைந்து பெரிய அண்டமெல்லாம் நடனஞ்செய்யும் பெருமைதங்கிய பாதங்களையுடையவரே.

கெருவிதா - கர்வமுடையவரே. துவகம் - உயர்ச்சி.

பணியும் அடியார் சிந்தை மெய்ப்பொருளதாக நவில் சரவணபவா - பணியும் அடியவர்கள் சிந்தையில் மெய்ப்பொருளாகத் துதிக்கப்படும் சரவணபவனே!

ஒன்ற வல் காரமுமாகி - உன்னோடு ஒன்றுதற்கு ஏதுவாகிய வலிய ஒளியுமாகி. வல் - வலிய. காரம் - ஒளி.

1. தாக்கு அமருக்கு ஒரு சாரையை - தாக்குகின்ற போர்முகத்தில் ஒரு சாரைப்பாம்புபோன்றவனை. தாக்குதல் - நெருக்குதல்.

வேறொரு சாகியறப் பசியாறியை - உடனிருந்து உண்பவரொருவரில்லாமல் தனித்து உண்பவனை.

நீறிடு சாஸ்தர வழிக்கு அதிதூரனை - விபூதி அணியும் சைவாகமநெறிக்கு அதிதூரமாயுள்ளவனை.

வேரவிழு தவம் மூழ்கும் தாறபரியம் அற்று உழல் - நிலையான தவத்திலே அழுந்துகின்ற கருத்தின்றி உழல்கின்ற. வேரவிழுதல் - வேரூன்றல. தாறபரியம் - கருத்து.

நாவலாபோல பரிவுறறு உனையே கருதாது - கற்றறிந்தவர்போல அன்பு கொணடு தேவரீரை நினையாமல.

இகல சாற்று தமிழ் குரை ஞாளியை - பிறர்வலியைச சொல்லுகின்ற கவியைப் பாடிக் குரைககின்ற நாயை குரைததல் - குலைததல்.

நாள்வரை தடுமாறி - எந்நாளும் கலககமுற்று.

விருதாவனை - வீணனை விருதா - வீண

மா மருள பூதத மலதநிரய பூரியை - மிகக மயககம்பொருந்திய மூம மலஙகளையுடைய கீழ்மகனை

நேரிய புலையேனை - சரியான புலையனை. நேர - சரி.

போககிவிடக கடனோ - கைவிட முறையோ. போககுதல - விடுதல்.

போாசசுடா வஜா வைவேல் - யுததததைசசெயகின்ற ஒளிபொருந்திய வயிரமான கூரிய வேறபடையையும்.

மூக்கறை மட்டை மகாபல காரணி - மூக்கு இல்லாதவளும், அறிவில்லாதவளும, பெரிய பெலததையுடைய சஙகாரகாரியும. ஹாரணி எனனும வடமொழி காரணி என நின்றது.

படுமூளி - மூககறை. உதாசனி - நெருப்புப்போனறவள், கொடியவள்.

விபீஷணா சோதரி - விபீஷணருடைய சகோதரி. விபீஷணர் - இராவணனுடைய தமபி.

இராவணனோடு இயலபு எறறிவிட - இராவணனிடததிற் சீதாபிராட்டியின் இலககணஙகளைப் புகழ்ந்து சொலல.

கமலாலய சீதையை - தாமரையை ஆசனமாகவுடைய இலக்குமியின் அவதாரமாகிய சீதையை.

மோட்டன் வளைதது - மூடனாகிய இராவணன் நிலததோடு பேர்ததெடுத்து.

மாக கன சிததிர கோபுர நீள் படை வீட்டில் - பெரிய மிக அலங்காரமான கோபுரததையுடைய உயர்ந்த காவல்வீட்டில.

அவன் வேரற மாாக்கம் முடித்த வில்லாளிகள நாயகன் - அவன் அடியோடொழியும்படி அவன் சந்ததியை முடிவுசெய்த வில்வீரர்களுக்கெல்லாம் தலைவனுக்கு.

வாசசியம் - வாத்தியம். பேரிகை - முரசவாத்தியம்.
மலர்க் கழுநீர் - செஙகழுநீர்ப் புட்பம். கழுநீர் - செங்கழுநீர்.

---

12. நாதம் விந்து கலை ஆதி - நாதம் விந்து என்னும் சுத்த தத்துவங்களுக்கும் அவைக்கும் அப்பாற்பட்ட உன்மனுகலைக்கும் முதல்வரே. நாதம் விந்து சுத்தமாயாபுவனத்துளடஙகியன. உன்மனுகலை சுத்தமாயா புவனத்துக்கு அப்பாற்பட்டது. உன்மனுகலை மேதாகலைமுதல் உன மனுகலை ஈருயுள்ள சோடசகலைகளிலொன்று.

வெகு கோடி நாம சம்பு - அநேககோடி நாமஙகளையுடைய பரமசிவனது.

போக அந்தரி - போகசத்தியாகிய பாரவதியின்.

நாக பந்த மயூரா - சுத்தமாயையாகிய அழகிய மயிலை வாகனமாகக் கொணடவரே. நாகம் - சுத்தமாயை. பந்தம் - அழகு. "தனிமந்திர ரூபநிலைகொண்டது ஆடுமயில்." (பார். பாட்டு - 29.)

பரசூரா சேத தணட விநோதா - பெரிய அசுர வீரர்கள் சேதமடையும்படி தண்டனையைசசெய்த விநோதரே. விநோதம் - பொழுதுபோக்கு.

தீர சம்ப்ரம வீரா - தைரியமும் களிப்புமுள்ள வீரரே.

கிரி ராஜ - குறிஞ்சிநிலததலைவரே.

தீப மங்கள ஜோதீ - பிரகாசம்பொருநதிய மஙகளமான சோதியே.

தூய அம்பல லீலா - சுத்த பரவெளியில் விளையாடுகின்றவரே.

தேவகுஞ்சரி - தெய்வயானை.

கோலால பூசை - பேரொலியமைந்தபூசை, சம்பிரமமானபூசை. கோலாகலம் - சம்பிரமம். ஈரம் - அன்பு.

ஏழ் தலம் புகழ் - ஏழு உலகஙகளும் பாராட்டுகின்ற.

சோழமண்டல மீதே மனோகர ராச கெம்பிர நாடு ஆளும் - சோழமண்டலததிலே மனோகரமாயுள்ள இராசகெம்பீரவளநாட்டை ஆளுகின்ற. மனோகரம் - அழகு, மனததைக் கவர்வது. இராசகெம்பீரவளநாட்டு மலை - ஒரு ஸ்தலம.

வயலூர் - ஒரு ஸ்தலம்.

ஆதரம் பயில் ஆரூரர் தோழமை - அன்புநிறைந்த சுந்தரமூர்த்திநாயனுருடைய நட்பை.

ஆடல் வெம் பரி மீது ஏறி - பாய்கின்ற வெவ்விய குதிரைமேல் ஏறி.

ஆதி அந்த உலா ஆசு பாடிய - பேதைமுதல் பேரிளம்பெண் இறுதியாயுள்ள ஏழு பருவஙகளையும் புறமாகக்கொணட "ஞானஉலா" என்னும் ஆசுகவியைப் பாடிய. ஏழு பருவம் - பேதை, பெதும்பை,

மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண். உலா - ஒரு பிரபந்தம். பேதைமுதலிய ஏழுபருவப்பெண்களும் கண்டு மயங்கும் படி தலைவன் பவனிவருதலைக் கலிவெண்பாவாற் கூறுவது. இத்திருவுலா "திருக்கைலாசஞானவுலா" என்றும் "ஆதியுலா" என்றும் பெயர்பெறும். (பெரியபுரா. வெள்ளையானைச்சருக்கம் 47.) ஆசு - ஆசுகவி, நால்வகைக்கவியிலொன்று. அது ஒருவன் இன்னபடி பாடுகவென்று கேட்க, அப்பொழுதே அவன் கருத்திற்கு ஒப்ப விரைந்து பாடுங் கவி.

சேரர் கொங்கு வைகாவூர் நன்னாடதில் - சேரமான்பெருமாணாயனாரால் ஆளப்பட்ட கொங்குதேசத்திலுள்ள வைகாவூர் என்னும் நல்ல நாட்டில்.

---

3. சரவண சாதா - சரவணப்பொய்கையிலே தோன்றினவரே. சாதம் - பிறத்தல்.

கருணை அதீதா - கருணையுடைய மேலானவரே.

சத தள பாதா - நூறிதழ்கள்பொருந்திய தாமரைமலர்போலும் திருவடியையுடையவரே. சதம் - நூறு. தளம் - இதழ்.

அபிராம - அழகுநிறைந்தவரே. அபிராமம் - அழகு.

தருணக - இளமைப்பருவமுடையவரே. தருணம் - இளமை.

தீரா - வலிமையுடையவரே. நிருப - அரசனே. நிருபன் - அரசன்.

அமர் வீரா - போர்வீரரே. சமதளவூரா - திருப்போரூரில் எழுந்தருளியிருப்பவரே. சமம் - போர்.

பரம சொரூபா - திவ்விய வடிவமுடையவரே.

சுரர்பதி பூபா - தேவர்க்கரசனாகிய இந்திரனுக்கு முதல்வரே. பூபன் - முதல்வன், அரசன்.

பரிமள நீபா - மிகுமணம்பொருந்திய கடப்பமாலையை அணிந்தவரே, நீபம் - கடப்பம்.

இக பர மூலா - இகத்துக்கும் பரத்துக்குங் காரணரே.

பவுருஷ சீலா - ஆண்மையையுடைய அறிஞனே, புருஷோத்தமனே.

விரவிய தூள் எற - நெருங்கிய தூகள் பரம்ப.

எழ் கடல் - உப்புக்கடல், பாற்கடல், தயிர்க்கடல், நெய்க்கடல், கருப்பஞ்சாற்றுக்கடல், தேன்கடல், நன்னீர்க்கடல்.

மாமேரு பூதரம் இடிபடவே - மகாமேருவாகிய மலை இடிபட. தான் - அசைச்சொல்.

நிசாசரா இகல் கெட - இராக்கதரது வலிமை குன்ற. நிசா - இருள். சரா - சஞ்சரிப்பவர்.

மரகத ஆகார ஆயன் - மரகத இரத்தினம்போலும் திருமேனியையுடைய விட்டுணு. ஆகாரம - வடிவு.

இரணிய ஆகார வேதன் - பொனபோலுந் திருமேனியையுடைய பிரமன. இரணியம் - பொன்.

வசு எனும் ஆகார ஈசன் - அக்கினியென்று சொல்லப்படும வடிவுடைய காலாக்கினி உருத்திரன். வசு - அக்கினி.

விநாயகமலை - ஒரு ஸ்தலம்.

மகீதர - மலையில வசிப்பவரே. மகீதரம - மலை.

வனசரா ஆதாரமாகிய - வனத்திலே சஞ்சரிக்கின்ற வேடாகளைக காப பாற்றுகின்ற.

---

14. ஈனம மிகுத்துள பிறவி - மிக்க இழிவான பிறவியை.

யானும் உனக்கு அடிமையென - நானும் உனனுடைய அடிமையென்று கொணடு.

வகையாக ஞான அருள்தனை அருளி - சோபானமுறையாகத திருவருள ஞானத்தைக்கொடுத்து.

நாணம் அகற்றிய கருணை - தடையிலாவருளை.

தான தவத்தினின் மிகுதி பெறுவோனே - தானத்திலும் தவத்திலும மேன்மைபெறுவோனே. தானஞ்செயதலிலும தவஞ்செயதலிலும் முதற்றெய்வமாக எணணப்படுபவா.

சாரதி உத்தமி துணைவ - சரஸ்வதியாகிய உத்தமிககுச சகோதரராயுள்ள வரே.

ஆன திருப்பதிகம் அருள் இளையோனே - தகுதிபொருநதிய தேவாரத் திருப்பதிகஙகளை அருளிசசெய்த திருஞானசமபநதமூாததியே.

ஆறுதிருப்பதி - ஒரு ஸ்தலம்

---

15. சமயபத்தி விருதாததனை நினையாதே - சமயபததியாகிய வீண்செயலை விட்டு. சமயத்தில் விசுவாசமுடையோமென்றிருந்து சமயம் விதிக் கும் சிவார்சசனை முதலிய தொண்டுகளைச செய்யாமலிருத்தல் வீண பத்தியாதலால், "சமயபத்தி விருதா" என்றார்.

சரண பத்ம சிவார்ச்சனைதனை நாடி அமைய - திருவடித்தாமரையிற் செய் கின்ற சிவார்ச்சனையை விரும்பிச்செய்கா அமைந்திருக்கும்படி.

சற்குரு சாத்திர மொழி நூலால் அருள் எனக்கு இனிமேல் துணை தருவாய - சற்குருவின் உபதேசமொழியாலும் ஞானசாத்திரநூலாலும உண்டாகும் அருளாகிய துணையை எனக்கு இனிமேல் தருவாய்.

உமை முலே தரு பால் கொடு அருள கூறி - உமாதேவியார் கொடுத்த ஞானப்பாலை உண்டு சிவபெருமான் குருவாய்வந்து தமக்கு அருள் செய்த முறையை "தோடுடைய செவியன" என்னும திருப்பதிகத்தினுல் எடுத்துக் கூறி.

உரிய மெய்த்தவம் ஆக்கி - அவ்வருள் சேர்தற்குரிய மெய்த்தொண்டாகிய ஆலயவழிபாடு முதலியவைகளைச செய்து.

நல் உபதேசத் தமிழ்தனைக் கரைகாட்டிய திறலோனே - நன்மையான உபதேசமந்திரமாகிய பஞசாக்கரத்திருப்பதிகத்தை முத்திக்கரையை அடைதற்கேற்ற நெறியாகககாட்டிய வலியுடைய திருஞானசம்பநதமூர்த்தியே. பஞசாக்கரப்பதிகம "காதலாகிக் கசிந்து" என்ற பதிகம.

---

16. உலக பசு பாச தொந்தம் அதுவான - உலகத்தில் ஆன்மாவைப் பந்தித்திருக்கும் பாசத்தொடர்பாயுள்ள.

மல சல சுவாச சஞசலமதால் - மலசலஙகளுக்கு நல்ல இருப்பிடமாயிருக்கும் இவ்வுடற் கவலையாலும. சுவாசம் - நல்லிருப்பிடம். உறவினை முதலியவாகளால் வருவதும் தேகத்தைப்பற்றி வருவதுமான கவலைகளினுல் எனதுநிலை கெட்டுப்போகாதபடி எனபதாம்.

மதிநிலை கெடாமல் - அறிவுநிலைதவருமல்.

சலம் அறுகு பூளை தும்பை அணி - கஙகையையும் அறுகையும் பூளைப் பூவையும், தும்பைமாலையையும் ஆபரணமாகக்கொணட பரமசிவனது. பூளை - ஓா செடிப்பூ.

சரவண பவா - சரவணப்பொய்கையில் உற்பவித்தவரே. சரவணம் - சரவணப்பொய்கை. பவம் - உற்பவித்தல். இவ்வாறெழுந்தும் ஒருஙகு சோநதபொருள "சிவபெருமானேயாகிய சொநதவடிவமாம்." (திருசசெந். புரா. மந்திர. 25.)

முகுந்தன் - விட்டுணு, மோககொடுப்பவன்.

பயிலுதல் - சொல்லுதல்.

---

17. வினையில் செருக்கி - வினையினுல் மயக்கமுற்று. தேகத்தை யான் எனறும் மனைமக்கள் முதலியவைகளை எனதென்றும் மயக்கமுற்றிருத்தல்.

விழலுக் கிறைத்துவிடலாமோ - வீண்விஷயத்தில் எனது அறிவைச் செலுத்திவிடலாமோ.

சுனை - சீருற்று. சொருபக் குறத்தி - அழகிய வள்ளிநாயகியார்.

தினம் நற் சரித்திரமுள தேவா - எப்பொழுதும் நல்ல ஒழுக்கத்தையுடைய தேவர்களது.

---

18. சீன் குளிர் வெதுப்பு - மிக்க குளிரோடு சேர்ந்த சுரம்.

நோய்கள் நோ உறு புழுக்கள் கூடு - நோய்கள்பொருந்திய புழுக்கள் வாசம்பண்ணுகின்ற கூடு.

பாரிய நவத்துவாரம் நாறு - பெரிய ஒன்பது வாயில்களும் நாறுகின்ற. நவதுவாரம் - கண, காது, மூக்கு, வாய், குதம், குய்யம்.

மும்மலத்தில் ஆறு பாய் பிணி இயற்று - மும்மலங்களாகிய ஆறு பெருக் கெடுத்து நோயை உண்டாக்குகின்ற.

பாடுெறொடு - பருந்துகளோடு. பாறு - பருந்து. நாரணி - துர்க்கை.

அறத்தின நாரி - தருமத்தின் செல்வி, உமாதேவி. முப்பத்திரண்டு அறங் களையும் வளர்ப்பவள்.

ஆறு சமயத்தி - அறுவகைப்பட்ட சமயத்தவர்களுக்கும் அவரவர்கொண்ட முதற்பொருளாய்ச் செறிந்துநிற்பவள்.

பூத நாயகர இடத்து காமி - சிவபெருமானிடத்து விருப்பமுள்ளவள். மகம் ஆயி - யாக முதல்வி.

நாடக நடத்தி - நடனமாடுபவள்.

கோல நீல வருணத்தி - அழகிய நீலநிறத்தையுடையவள்.

உமைசசி - பிரகாசமுள்ளவள். நீலி - நீலநிறமுடையவள்.

வார் அணி - கச்சணிந்த.

கலைசசி - அறுபத்துநான்கு கலைஞானங்களையும் அறிந்தவள்.

நாக வாள் நுதல் - இமயமலையிற்பிறந்த ஒளிபொருந்திய நெற்றியை யுடைய உமாதேவியார். நாகம் - மலை. வாள் - ஒளி.

மணத்த சோலை வாகு உள குறட்டி - வாசனைபொருந்திய பூக்கள் நிறைந்த சோலை சூழ்ந்த அழகிய குறட்டி என்னும் ஸ்தலம். வாகு - அழகு.

---

19. அந்தோ - இரக்கத்தினையுணர்த்தும் ஓர் குறிப்புச்சொல்.

இதாகித சூத்திரம் - நல்வினை தீவினையின் பயனாகிய இன்பத்துன்பங்களை அனுபவிக்கும்படி எடுத்த இயந்திரம். இதம் - இன்பம். அகிதம் - துன்பம். ஆகாமியம் நல்வினை தீவினையெனப்படும், அவற்றின்

வினைவாகிய சஞ்சிதம் புண்ணியம் பாவம் எனப்படும். அவற்றின் பயனாகிய பிராரத்தம் இன்பத்துன்பங்களைத் தரும். அதுபற்றியே இதாகித சூத்திரம் என்றார்.

அம்போருகன் ஆடிய பூட்டு இது - இந்த யாக்கை பிரமன் செய்த பூட்டு. ஆடுதல் - செய்தல்.

இனிமேல நாம் அஞ்சாது அமையா - இனிமேல் நாம் அச்சமின்றியிருத்தல் முடியாது.

கிரி யாக்கையை பஞ்சாடிய வேலவனுர்க்கு இயல் அநகு ஆக்குவம் வா - கிரவுஞ்சனாகிய மலைவடிவைப் பஞ்சுபோலப் பறக்கச்செய்த வேலவனுக்கு நமதுதன்மைகளையெல்லாம் அவர்தன்மைகளாக்குவம் வா.

ஆக்கையை ஒழியாமல் இனிது வந்தோம் - சரீரத்தை வீணாக ஒழியாமல் நல்லியல்புக்கு வந்தோம்.

இதுவே கதி - இவ்வண்ணமாவதே நமக்குக் கதியாகும்.

ஆட்சியும் இந்தா மயில்வாகனர் சீட்டு இது - ஆட்சிப்பத்திரமிந்தா, இது மயில்வாகனருடைய சீட்டு.

வந்து அனுவம் நாம என வீக்கிய சிவநீறும் (இந்தா.) வீக்குதல் - கட்டுதல்.

வந்தே வெகுவா நமை ஆட்கொள உவந்தார் மதம் மேதினி மேற்கொள - எழுந்தருளிப் பலவிதமாய் நம்மை ஆட்கொள்ளும்படி விரும்பியவரது மதம் உலகில் மேலாகக்கொள்ளும்படி.

மைந்தா குமரா எனும் ஆர்ப்பு உய்ய மறவாதே - மைந்தா குமரா என்னும் பேரொலியை உய்யும்படி மறவாதே. ஆர்ப்பு - பேரொலி.

மாத்துடி - பெரிய உடுக்கு.

செம்பூரிகை - சிவந்த ஊதிடும் பூரிகை.

பேரிகை ஆர்த்து எழ - பேரிகை ஒலிக்க. பேரிகை - பறைப்பொது.

செஙகாடு எனவே - சிவந்த காடுபோல. இது அவுணரது மயிர்க்குவமை.

சஙகார சிகாமணி வேல்கொடு திண்டாடி - சஙகாரததொழிலிலே மேம்பட்டதாகிய வேலாயுததததைககொண்டு நெருங்கி.

மகா மயில் மேற்கொளும் - பெரிய மயில்மேல் ஆரோகணஞ்செய்யும். மேற்கொள்ளுதல் - ஏறுதல்.

இந்து ஓடு இதழ் நாகம் மகாக் கடல் கஙகாளம் மின் ஆர் சடை சூட்டிய - சந்திரனும் கொன்றைமாலையும் பாம்பும் பெரிய கடல்போலும் பெருக்கெடுக்கின்ற கஙகையும் முழுவெலும்புமாகிய இவைகளை மின்னலையொத்த சிவந்த சடையிலணிந்த.

சதாசிவ கோத்திரன் - சதாசிவவாக்கத்தில் தோன்றிய ஸ்ரீகண்ட உருத்திரன். சதாசிவத்தினின்று மநோன்மனியும், மநோன்மனியிலிருந்து மகேசுரனும், மகேசுரனிலிருந்து மகேசையும், மகேசையிலிருந்து ஸ்ரீகண்ட உருத்திரரும, ஸ்ரீகண்ட உருத்திரரினின்று சுப்பிரமணியரும் தோன்றியபடியால் "சதாசிவகோத்திரன" என்றார். இவர மகேசுரரில் அடங்குவர். அடங்கவே, சிவபெருமானினின்று வேறு காதவர் என்றும், சிவபெருமானுடைய சத்தியெனறும உணர்க.

எண் கூடு அருளால் - அளவுமிக்க திருவருளால். கூடுதல - அதிகமாதல்.

நௌவி நோக்கியை - மானபோலும் பார்வையினையுடைய வள்ளிநாயகியாரை. நௌவி - மான.

நன் பூ மணம மேவி - நல்ல பூவும மணமும்போலப் பொருந்தி.

மனம் மேதினி நோக்கிய - மனமாகிய பூமியை நோக்கித திருவருள்பாலித்தருளும்.

சிராப்பளி - திரிசிராப்பள்ளியெனனும் ஸ்தலம.

---

20. மா தவம் - பெரிய தவம். தவத்திற்குக காரணம் தருமம. தருமம் செயயின அன்பும் அருளும உண்டாகும். அவை உணடாகத் தவம் உணடாகும். தவமாவது சரியை கிரியை யோகஙகளைச செய்தல். அத்தவத்தினுல மலபரிபாகமுணடாம். மலபரிபாகமுணடாக, திருவருளே குருவடிவாய்த தோன்றி உயிரை மும்மலஙகளினினறும நீககிச சிவபிரானை அடையசசெய்யும. சிவனிடத்தே உடல் பொருள் ஆவி மூன்றையும் தானம் செய்து எவ்விடத்தும தனது சுதந்திரத்துவம தோன்றாமைபிறபோர்ககுச சிவமேயொழியத் தானும்பிறந்த தோன்றார். இஙஙனம் யான எனது அற்று திருவடிபொருந்தி நிற்றல் மாதவமெனப்படும்.

தீது அகல ஓதிப் பணியாரும் - வினைநீஙகும்படி பஞ்சாக்கரம் ஓதி வணஙகாதாரும்.

நாத ஒளியே - நாதவடிவாயுள்ள ஞானசோதியே.

நற்குண சீலா - நன்மைதரும் அறகுணஙகள்பொருந்தியவரே.

தோம் இல் - குற்றமில்லாத, பரிசுத்தமான.

---

21. காதி மோதி வாதாடு நூல் - கண்டித்துத் தாக்கி வாதாடுகின்ற தர்க்க நூல்களை.

மாது பாகர் வாழ்வே யெனு - மாதுபாகரே, எமது வாழ்வே என்று துதிக்து.

மாறு இல்லாத - ஒப்பில்லாத, எதிரில்லாத.

மா நாதர் ஆகத்து உறைவோனே - பெரிய ஞானிகளுள்ளே யுறைவோனே.

நாகலோகம் ஈரேழு பார் - சுவர்க்கலோகம் முதலிய பதினாலு உலகங்கள். நாகலோகம் - தேவலோகம்.

தேவாதி தேவன் - தேவர்களுக்கெல்லாம் மேலான தேவன்.

---

22. மாதவர்க்கு அதிபாதகமானவர் - பெரிய தவத்தைச்செய்யும் முனிவோருக்கு அதிபாதகத்தைச்செய்பவர். சிவனுக்கும், சிவனடியார்க்கும், சிவனைப் பூசிக்குங் குருவுக்கும் விரோதமாகச்செய்யப்படுவது அதிபாதகமெனப்படும். அச்செயல்கள் சிவநிந்தை, சிவத்திரவியம் புசித்தல், கூலிக்குப் பூசித்தல், குருநிந்தை, குருத்திரவியம் புசித்தல், சிவனடியார்நிந்தை, வேதாகமநிந்தை முதலியனவாம்.

ஊசலின் கனலாய் எரி காளையர் - ஊஞ்சலைப்போல அங்குமிங்குமலைந்து காமத்தீயால வெந்துகொண்டிருக்கின்ற காளைப்பருவமுடையவர்.

ஆர் தனக்கும் உதாசினதாரிகள் - எவரையும் நிந்திப்பவர்கள். உதாசினம் - தூஷணம், நிந்தை.

உத்தமர் ஊதியம ஒடி நாடினர் - பெரியோர்களது பொருளைச் சென்று விரும்பிக் கவர்ந்தவர்.

பூதலத்தினில் ஓரமதானவர் - பூமியில் நீதிதப்பி ஒருபக்கம் சார்ந்தவர். ஓரம் - பக்கபாதம்.

ஏக சித்த தியானம் இல்லாதவர் - ஒரேமனமான தியானமில்லாதவர்.

மோகம் உற்றிடு போக இதம் ஊறினர் - மயக்கத்தைத்தருகின்ற போகங்களில் ஆசைப்பெருக்கமுடையவர்.

மாகலை ஆயும் உத்தமர் கூறிடும் வாசக - ஞானசாத்திரம் ஆராயும சற்குணர் துதிக்கும் உபதேசப்பொருளாயுள்ளவரே.

சேகு சித்திரமாக நின் ஆடிய - மிக்க அழகாக நின்று ஆடிய.

---

23. வேழம் உண்ட விளாகனி அதுபோல மேனிகொண்டு - வேழம் என்னும் நோய்பிடித்த விளாங்கனிபோலவிருக்கும் சரீரத்தைக்கொண்டு.

வியாபக மயல் ஊறி - நிறைந்த மயக்கம்பொருந்தி.

நாளும் மிண்டர்கள்போல் மிக அயர்வாகி - எந்நாளும் மிண்டர்களைப் போல மிகவுந் தளர்வுற்று. மிண்டர் - திண்ணியர், பருத்தவர். நைதல் - கெடுதல், துன்புறுதல்.

மாள அன்று அமண் நீசர்கள் கழுவேற - அந்நாளில் சமணசமயம் அழியும்படியும் இழிந்தோராகிய சமணர் கழுவேறும்படியும். சிகாமணி - முதல்வரே.

---

24. வசனம் மிக ஏற்றி மறவாதே - உருவேறச் செபித்துத் தேவரீரை மறவாதபடியும்.

இசை பயில் சடாக்ஷரமதாலே - விதிப்படி உச்சரிக்கும் சடக்கர மந்திரத்தினால். இசைபயிலல் - சொல்லுதல், உச்சரித்தல்.

மனது துயர் ஆற்றில் உழலாதே - எனது மனம் கிலேசவழியில் உழலாதபடியும்.

இகபர சௌபாக்கியம் - இகத்துக்கும் பரத்துக்குமுரிய நல்வாழ்வை. சௌபாக்கியம் - நல்வாழ்வு.

பசுபதி சிவாக்கியம் உணராவோனே - பசுபதியாகிய சிவனது 'சி' என்னும் வாக்கியமாகிய பதி அட்சரத்தை அறிவோனே. இது மகா மனுவென்றுசொல்லப்படும். பதி அட்சரம் இத்தன்மைத்தென்பது:— "நாயோட்டுமந்திர நான்மறைவேதம், நாயோட்டுமந்திர நாதனிருப்பிடம், நாயோட்டுமந்திர நாதாந்தசோதி, நாயோட்டுமந்திர நாமறியோமே." "அகரமுமாகம வேதமதோதினு, மெகரன்பிரானெழுத்தொன்றிலிருப்பது, சகரைகெட்டவ்வெழுததொன்றையுஞ்சோதித்தா, லகரரைசேர்க்க வருங்கலமாமே." (திருமந்திரம்.)

---

25. அவகுண விரகன் - துர்க்குணமுள்ள காமதூர்த்தன்.

வேதாள ரூபன் - பிசாசம்போன்ற உருவத்தையுடையவன்.

அசடன் - கீழ்மகன். மசடன் - பதுமைகலன். அகதி - கதியற்றவன். மறவன் - பாவி.

ஆதாளி வாயன் - வீம்புபேசுவோன். ஆதாளி - இரைச்சல், வீம்புபேசுதல்.

அஞ்சு பூதம் அடைசிய சவடன் - அஞ்சுபூதங்களும் ஒதுக்கிய வண்டன். அடைசுதல் - நேர்வழிநின்றும் விலகச்செய்தல், ஒதுக்குதல். சவடு - வண்டல். அஞ்சுபூதங்களென்றது சத்தம், பரிசம், உருவம், இரதம், கந்தம் என்னும் ஐந்து பௌதிகவிடயங்களை.

அவிசல் - அவிந்துபோனவன். ஆருண ஊணன் - அறுசுவை ஊணில் விருப்பமுடையவன்.

கவடன் - தந்திரமுள்ளோன். கவடம் - தந்திரம். விகடன் - சாலக்காரன்.

நாநா விகாரன் - பலவகைப்பட்ட வேறுபாடுடையவன்.

கலியன் - தரித்திரன். அலியன் - அலி.

ஆதேச வாழ்வன் - தனக்கென ஓரிடமில்லாது எப்பொழுதும் இரவற் குடியேயிருந்து அலேபவன். ஆதேசம் - திரிதல்.

வெம்பி வீழும் களியன் - சோர்ந்துவிழும் கள்ளுக்குடியன்.

அறிவு உரை பேணுத மாநட கசனி அசனி - புத்தியாகச சொல்லும் வார்த்தைகளே நன்குமதிக்காத மாநடவடிவங்கொண்ட யானேபோன்றவன், ஆடுபோன்றவன்.

மவுலியில் அழகிய பாதாள லோகனும் - முடியில் அழகுடைய ஆதிசேடனும்.

மரகதம் முழுகிய காகோத ராஜனும் - பசைநிறம்பொருந்திய சர்ப்பராசனும். ஆதிசேடனின் அவதாரமாகிய பதஞ்சலி. காகோதரம் - சர்ப்பம்.

மநுநெறியுடன் வளர் சோணுடர் கோனுடன் - மநுதன்மசாத்திரநெறியைக் கைக்கொண்டு வாழும் சோழநாட்டரசனுகிய இரணியவன்மனுடன்.

உம்பர் சேரும் மகபதி புகழ் - மேலுலகத்திலுள்ள இந்திரனும் துதிக்கின்ற. உம்பர் - ஆகாயம். சேர்தல் - பொருந்துதல்.

புலியூர் வாழ் நாயகர் - சிதம்பரத்தில் வாழும் பரமசிவனும்.

மடமயில் மகிழ்வுற வாளுடர் கோவென - இளமைபொருந்திய மயில் களிப்புறவும், தேவர்கள் தங்களுக்குத் தலேவரெனவும்.

மலேமகள் உமை தரு - இமயமலே அரசன் புத்திரியாகிய உமையும் அருளிய.

மனேகரம் - அழகு. மன்றுள் ஆடும் - சிதம்பரத்தில் நிருத்தஞ்செய்கின்ற.

தெரிசன பரகதியாளுய் - அன்பர்களடைகின்ற முத்திக்கு முதலாயுள்ளவரே. தெரிசனம் - அடைதல்.

திசையினும் மிசையினும் வாழ்வே - அட்டதிக்குகளிலும் மேலிடத்திலும் வாழ்பவரே.

செஞ்சொல் சேரும் தினேபுன வனிதை - இனிய வார்த்தைகளேப் பேசும் தினேப்புனததில் வசித்த வள்ளிநாயகியாரது.

சுராதிபர் = சுரர் + அதிபர்.

---

26. மாலினுல் எடுத்த கந்தல் - ஆசையினுல் எடுத்துக்கொண்ட பிறவியும். எல்லா உயிர்களுக்கும் பிறப்பினே விளேக்கும் வித்து அவாவாம். "அவாவென்பவெல்லாவுயிர்க்குமெஞ்ஞான்றுந், தவா அப்பிறப்பீனும் வித்து." (குறள்.)

மாறி ஆடு எடுத்த சிந்தை - மாறி அசைதலே மேற்கொண்ட மனத்தையும், அலேகின்ற மனத்தையும். "கொள்ளித்தேள்கொட்டிக்குதிக்கின்ற பேயக்குரங்காய்க், கள்ளமனத்துள்ளுவதென்" என்ருர் தாயுமான சுவாமிகள்.

அரியாய மாயையால் எடுத்து மங்கினேன் - விபரீத உணர்வைச் செய்யும் கொடிய மாயையால் எடுத்துக்கெட்டேன். ஆணவமலத்தினால் மறைப்புண்டு தனது கிரியை ஞானம் இச்சை என்னும் சத்திகள் சீவிக்கப்பெறாது மயங்கிய ஆன்மா, மாயாகரணங்களால் வெளிப்பட்டுச் சீவிதம்பெறும். அஃதாவது, அசுத்தமாயையிலிருந்துண்டான கலை என்னுந் தத்துவத்தால் தொழில்செய்யுந் தன்மையும், வித்தை என்னும் தத்துவத்தால அறியுந்தன்மையும், அராகம் என்னும் தத்துவத்தால் விரும்புந்தன்மையும் பெறும். பின்பு கலையிலிருந்து மூலப்பிரகிருதிதோன்ற, முக்குணங்கள் அதிற்றோன்றி ஆன்மாவோடு சம்பந்தமுற்று, அம்முக்குணசம்பந்தத்தால் ஆன்மா சுகதுக்கமோகியாய்நிற்கும். இவ்வாறுநிற்கும்பொழுது பிரகிருதிகாரியமான அவ்வியக்தத்தினின்று புத்தி தோன்றும். புத்தியிலிருந்து அகங்காரந் தோன்றும். அவ்வகங்காரம யான எனது என்னும் செருக்கினையுண்டாக்கி ஆன்மாவை முனைத்துநிற்கும்படிசெய்யும். பின் அவ்வகங்காரம் முக்குணங்களோடு சார அவற்றின் சார்பினால தைசதம் வைகாரிகம் பூதாதிகம் என மூன்று அகங்காரங்களாகும். அவற்றுள் தைசத அகங்காரத்தில் மனமும மெய் வாய் கண் மூக்கு செவி என்னும ஐந்து ஞானேந்திரியங்களுந் தோன்றும். வைகாரிக அகங்காரத்தினின்று வாக்கு பாதம் பாணி பாயு உபத்தம என்னும் ஐந்து கன்மேந்திரியங்களுந்தோன்றும். பூதாதிகாகங்காரத்தில் ஐந்துதன்மாத்திரைகளான சத்தமும் பரிசமும் உருவமும் இரதமும் கந்தமுந் தோன்றும். பஞ்ச தன்மாத்திரைகளாகிய சூக்குமபூதங்களுள், சத்ததன்மாத்திரையினின்று ஆகாயமும் பரிசதன்மாத்திரையினின்று வாயுவும், உருவதன்மாத்திரையினின்று தேயுவும், இரததன்மாத்திரையினின்று அப்புவும், கந்ததன்மாத்திரையினின்று பிருதிவியுமாக ஐந்து தூலபூதங்கள் தோன்றும். இப்பூதங்களிலநின்று தூலசரீர தத்துவங்களாகிய தாத்துவிகங்கள் அறுபதுந்தோன்றும். ஆன்மா ஐந்து தூலபூதங்களை இடமாகக்கொண்டு, ஆன்மாவின் இச்சை அந்தக்கரணங்களிடத்தும், ஆன்மாவின் ஞானம் ஞானேந்திரியங்களிடத்தும், ஆன்மாவின் கிரியை கன்மேந்திரியங்களிடத்தும்நின்று சத்தாதிவிடயங்களை அறிந்து பற்றி அழுந்தும். மாயை விபரீத உணர்வைசசெய்வதினால் அரியாயமாயை என்றும், அது இவ்வுடலுக்கும் மனத்துக்கும் காரணமாயிருப்பதால் ''மாயையால எடுத்து'' என்றும், மனம சென்ற வழி விடயங்களை அறிந்துபற்றி அழுந்துதலால் ''கெட்டேன்'' என்றும் கூறினார்.

எனக்கு இரங்கி வார் ஐயா - என்மேலிரக்கமுற்று வாராய் ஐயனே.

வேலினால் வினைக் கணங்கள் தூளதாக எரித்து - ஞானசத்தியாகிய வேலாயுதத்தால் தொகுதியாயுள்ள சஞ்சிதவினை சாம்பராய்ப்போகும்படி எரித்து.

உன்றன் வீடு தாபரித்த அன்பர்கணமூடே மேவி - உன்றன் மோட்ச வீட்டிலே நிலைபெற்றிருக்கும் அன்பர்கூட்டத்திற் சேர்ந்து. தாபரித்தல் - நிலைபெற்றிருத்தல்.

யான் உனைப்போல் சிந்தையாகவே களித்து - உன்னைப்போல யான் ஆநந்தசித்தமுள்ளவனுய்க் களித்து இருக்கும்படியும்.

கந்தவேளே ஆம் என - கந்தவேள் என்று சொல்லும்படி சாரூபம் பெற்றிருக்கவும்.

பரிந்து அருள்வாயே - அன்புகூர்ந்து அருள்செய்வாய்.

காலின் ஆல் எனப் பரந்த சூரர் மாள - விழுதுக்கூட்டங்களையுடைய ஆலமரத்தைப்போலக் கிளைத்த அசுரவீரர் மாளும்படி.

கால பானு சத்தி அம் கை - உதயகால சூரியனைப்போன்ற ஞானசத்தியாகிய வேலாயுதத்தை ஏந்திய திருக்கரத்தையுடைய.

காம பாணம் அட்டு - மன்மதனுடைய பஞ்சபாணங்களை அழித்து. அடுதல் - அழித்தல்.

சேலை நேர் விழிக் குறப்பெண் ஆசை தோள் உறப் புணர்ந்து - கயல்மீனை ஒத்த விழிகளையுடைய வள்ளிநாயகியாரது ஆசை புயங்களின்மேலே பற்றப் புணர்ந்து. சத்திசமேதராய் அன்பருள்ளத்திலிருப்பவர் என்பது கருத்து. "ஏதுமொன்றுமறிவிலராயினும், ஓதியஞ்செழுத்தும்முணர்வார்கட்குப், பேதமின்றியவரவருள்ளத்தே, மாதுந்தாமுமகிழ்வர்மாற்பேறரே." (தேவாரம்.)

தேவர் மாதா சித்தர் தொண்டர் - தேவர்களும் தேவப்பெண்களும் சித்தரும் அடியரும்.

ஏக வேளூருக்கு உகந்த - ஒப்பற்ற வேளூரை விரும்பிய.

சேவல் கேது சுற்று - சேவற்கொடி சூழ்ந்த.

---

27. சரண கமல ஆலயத்தை - பாதாரவிந்தமாகிய கோயிலை. சரணம் - பாதம். கமலம் - தாமரை.

சட கசட மூட மட்டி - வஞ்சகத்தையும் குற்றத்தையுமுடைய மயக்கம் நிறைந்த மடையன்.

கருணைபுரியாதிருப்பது என்ன குறை, இவ்வேளை செப்பு.

கடக புயமீது - கங்கணமணிந்த தோளின்மேல்.

இரத்நமணி அணி பொன் மாலை செச்சை கமழும் மணம் ஆர் கடப்பம் - இரத்நமணிபதித்த ஆபரணம், பொன்மாலை, செச்சை, பரிமளிக்கின்ற வாசனைநிறைந்த கடப்பமாலை. செச்சை - வெட்சி.

தருணம் இது ஐயா.

மிகுத்த கனமது உறு நீள் சவுக்யம் சகல செல்வயோக மிக்க பெருவாழ்வு - மிக்க கனம்பொருந்திய மிக்க சௌக்கியத்தையும், சகல செல்வயோகம் மிகுந்த பெருவாழ்வையும்.

தகைமை சிவஞானம் - பெருமைபொருந்திய அநுபவஞானத்தையும்.

நீ கொடுத்து உதவி புரியவேணும்.

செய்த்த வடிவேலா - நெய்பூசிய கூர்மையான வேலையுடையவரே.

அருண தள பாத பத்மம் அது - மிகவும் சிவந்த இதழ்களையுடைய தாமரைப்பூப்போன்ற திருவடியை. தளம் - பூவிதழ்.

---

28. ஐங்கரனை ஒத்த மனம் ஐம்புலம் அகற்றி - ஐந்தொழில்செய்யும் ஐந்து கரங்களையுடைய விநாயகருக்குச சமமாயிருக்கும் மனததையும் ஐந்து புலன்களையும் அகற்றி. விநாயகருடைய ஐந்து திருக்கரங்களும் படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல என்னும் ஐந்தொழிலைக் குறிக்கும். மனம் அசைவறநில்லாது எழுந்து விடயங்களைப்பற்றி அவைகளில் அழுந்தும் தொழிலைச்செய்யும். ஐங்கரனைப் போன்று தொழிற்படும் மனததைநீக்கி அசைவற்ற மனத்தை அருள்வாய் என்பதாம். ஐம்புலம் என்றது சததம் பரிசம் உருவம் இரதம் கந்தம் என்னும் பஞ்சவிடயங்களை. ஆன்மா சத்தாதிவிடயங்களைத் துரிசறவிடுததபோது மற்றைததத்துவம் முப்பத்தொன்றும் நீங்கலின் "ஐம்புலம் அகற்றி" என்றார்.

வளர் அந்தி பகல் அற்ற நினைவு - எழுகின்ற கேவல சகலங்கள் தாக்காத அறிவை. கருவிகள் முப்பத்தாறுங்கூடிநின்ற சாக்கிரத்தில் அறிவின்கண விகற்பமாய் வந்தடுப்பது சகலம். மயக்கமாய் வந்தடுப்பது கேவலம். விகற்பம் அந்தக்கரணவிருத்தியால் வருவது. மயக்கம் ஆணவமலத்தினால் வருவது. இவை பெத்தத்தில் கேவலசகலமெனப்படும். இச சகல கேவலங்களை நீங்கப்பண்ணித் தன்னை உள்ளபடி அறிவித்து அதன்பின்னர்த் தோன்றும் திருவருட்டரிசனத்திலும் இவ்வருளைச சகலமென்றும், இது கழன்றுதோன்றும் பரையோகத்தைக் கேவலம் என்றும் சொல்லுவர். இவை முத்திக்கேவல சகலமென்பர். முத்திச சகல கேவலங்களாகிய இவ்வருளும் பரையுமாகிய பகலும் இரவும் விட்டு நீங்கிய அறிவே இங்கு வேண்டப்பட்டது. பகலும் இரவும் கண்ணுக்குத் தோற்றுதல்போல அருளும் பரையும் ஆன்மாவிற்கு அநுபவமாய்த தோற்றலான் அந்திபகல் என்றார். "கொடியவைவர், பாாக்கறல்வேணடு மனமும் பதைப்பறல்வேண்டுமென்று, விராப்பகலற்றவிடத்தே யிருக்கையெளிதல்லவே." (கந்தரலங்காரம் 74.)

வளர் செந்தமிழ் வழுத்தி - விருத்தியாகின்ற சிறந்த தமிழ்ப்பாக்களினால் துதித்து.

தங்கிய தவத்து உணர்வு - நிலைபெறுன தவத்தின் அறிவை. யான் எனது அற்றுத் திருவடிபொருந்திநிற்றல் நிலைபெறுன தவம். (பார். பாட்டு. 20.)

சந்திர வெளி - சந்திரகாந்தி விளங்கும் நிராதாரவெளி. அது புருவமத்திய கமலத்துக்கு மேலாயுள்ள பிரமரந்திரகமலமாம்.

சம்பிரமம் - இடம்பம். இங்கிதம் - இனிமை.

மண்டலிகா இரப் பகலும் வந்த சுபரக்ஷை புரி வந்து அணைய புத்தியினை - இராசாக்கள் இரவும் பகலும் கைவந்த சுபரக்ஷைசெய்து என்னை வந்தடைதற்கேற்ற புத்தியினை எனக்கு.

கொங்கில் உயிர் பெற்று வளர் தென்கரையில் அப்பர் அருள் கொண்டு உடல் உற்ற பொருள் - கொஙகுநாட்டில் அவிநாசியப்பர் அருள் கொண்டு முதலைவாய்ப்பட்டு இறந்தபிள்ளை உயிரைப்பெற்று அந்நாள்வரை வளர்ந்த உடலைப்பெறுதற்குக் காரணமாகிய சிததியை.

கொங்கணகிரி - ஓர் ஸ்தலம்.

குஞ்சரமுகன் - யானைமுகன், விநாயகன்.

---

29. வாதினை அடர்ந்த வேல் விழியர் தங்கள் மாயம் அது ஒழிந்து - போர் செறிந்த வேல்போன்ற கண்களையுடைய பெணகளது வஞ்சகத்தினின் றும் நீங்கி.

ஆதியொடும் அந்தம் ஆகிய நலங்கள் - முதன்மையும் அழகுமாயுள்ள ஆறு குணங்கள். அறுகுணஙகள் - சருவஞ்ஞதை (முற்றறிவு), திருப்தி (வரம்பிலின்பமுடைமை), அநாதிபோதம் (இயல்பாகவே பாசஙகளினீங்குதல்), அலுப்தசத்தி (பேரருளுடைமை), அநந்தசததி (முடிவிலாற்றலுடைமை), சுவதந்திரத்துவம் (தம்வயமுடைமை). சிவபெருமானுக்குரிய இவ்வறுகுணஙகளும் முருகக்கடவுளுக்கு ஆறுமுகங்களாம். "எவர்தம்பாலுமின்றியெல்லைதீரமலற்குள்ள, மூவிருகுணனுஞ்சேய்க்குமுகஙகளாய்வந்தது." (கந்தபுராணம்.)

ஆன தனி மந்திர ரூபநிலை கொண்டது ஆடும்மயில் என்பது - மேன்மையுள்ள பிரணவமந்திரரூபநிலைகொண்டது ஆடுகின்ற மயில் என்பதை. மயில் பிரணவசொரூபம். (பார். பாட்டு. 12.)

நாதம் ஒடு விந்து ஆன உடல்கொண்டு நானிலம் அலைந்து - நாதவிந்து காரணமாக உண்டாகிய உடலைக்கொண்டு நான் பூமியில் அலைந்து. நானிலம் - பூமி.

நாகம் அணிகின்ற நாதநிலை கண்டு - சர்ப்பத்தை அணிதலின் பொருளாகிய நாதத்தின் இருப்பிடத்தைக் கண்டு. சுத்தமாயையின் அந்தமாயுள்ள நாதததுவத்தின் இருப்பிடத்தைக்கண்டு என்பதாம். நாகம் - குண்டலி, சுத்தமாயை. "நாதமுடிமேலிருந்த வெண்ணிலாவே—

அங்கே, நானும்வரவேண்டுகின்றேன்வெண்ணிலாவே." "ஐந்தலைப் பாம்பாட்டுகின்றார்வெண்ணிலாவே—அவர், அம்பலத்திளின்றதெ ன்னவெண்ணிலாவே." (திருவருட்பா.)

சோதி உணர்கின்ற வாழ்வு சிவம் என்ற சோகம் அது தந்து - பரஞ் சோதியைத் தியானிக்கின்ற வாழ்வுதானே சிவம் என்று சொல்லு கின்ற சிவோகம்பாவனையுந் தந்து. சோகம் - அது நான். (ஸ + அகம்=அது+நான்.) சிவோகம்பாவனை - சிவனே நான் என்று பாவித்தல். "சிவோகம்பாவிக்குமதனாற்சிவனுமாவர்." (சி. சி. 12, 3.)

சோலைமலை - பழமுதிர்சோலை.

---

30. களமாலை - கண்டமாலை. களம் - கழுத்து. விப்புருதி - சிலந்திக்கட்டு.

வறள் சூலை - மெலிவையுண்டாக்கும் சூலைநோய்.

குளிர் தாகம் மலி நீரிழிசசல் - குளிர்தாகத்தோடுகூடிய நீரிழிவு.

கக்கு - இருமல்.

களை வரு நீரடைப்பு - ஆயாசத்தைத் தருகின்ற சல அடைப்பு.

சிலை நோய் - இழிவானநோய். சில்லை என்பது சிலை என நின்றது.

தெளியா எனக்கு - அறிவில்லாத எனக்கு.

சிவம் ஆர் திருப்புகழை எனும் - நன்மைபொருந்திய திருப்புகழையெனும்.

சிவஞான சித்திதனை - பதிஞானம் கைகூடலை.

தொலையாத பத்தியுள - முடிவில்லாத அன்புடைய.

சக்கிரம் அதை - சக்கராயுதத்தை.

துவர் வேணி - சிவந்த சடையையுடைய.

மிகு சிவகாமி - மேலான சிவகாமி.

மிகு சுக வாரி - அளவிடுதற்கரிய ஆநந்தசாகரமாகிய.

அலை சூரன் வெற்பும் அரி முகன் ஆனை வத்திரனொடு அசுரர் இறக்க - சமுத்திரமும் சூரனும் கிரவுஞ்சமலையும் சிங்கமுகாசுரனும் யானை முகத்தினையுடைய தாரகாசுரனும் அசுரர்களும் அழியும்படி. வத்தி ரம் - முகம்.

அமுத அசனத்தி குறமடவாள் - தேனும் தினையுமாகிய இனிய உணவை யுண்ணும் வள்ளிநாயகியார். அமுத அசனம் - இனிய உணவு.

அமுத அசனத்தி கரிப்பெண் - அமுத உணவையுடையவராகிய தெய்வ யானை அம்மையார். கரி - யானை.

அருணாசலம் - திருவண்ணாமலை.

---

31. வங்கார மார்பில் அணி தாரொடு உயர் கோடு அசைய - பொன்போலும் அழகிய மார்பின்கண்ணே அணிந்த முத்துமாலையோடு பருத்த ஸ்தனங்கள் அசைய. வங்காரம் - பொன் தார் - மாலை.

கொந்து ஆரம் மாலை குழல் ஆரமொடு தோள் புரள - பூங்கொத்தாலாகிய கோத்த மாலையும கூந்தலும முத்துமாலையினோடு தோளின்புறத்தே அசைய ஆரம - பூமாலை, முத்துமாலை.

இதழ் மலர்போல - உதடு முருக்கம்பூப்போலவும்.

மஞ்சு ஆடு சாபம் நுதல் - மேகத்தில் அசைகின்ற இந்திரவில்லையொத்த நெற்றிப்புருவத்தோடும.

வாள் அனைய வேல் விழிகள் - வாளையும் வேலையுமொத்த கண்களோடும். அனைய - ஒத்த.

கொஞ்சு ஆரம் மோக கிளியாக நகை பேச - மழலைச்சொலப்பசும ஆரம நிறைந்த விருப்பத்தைத்தரும் கிளிபோலச் சிரித்துப் பேசி. கொஞ்சுதல் - மழலைபேசல். ஆரம் - கழுத்துவரி.

உற வந்தாரை வாரும இரும நீர உறவு என ஆசை மயல் இடும். உறுதல் - கூடுதல. மயல் - மயக்கம்

மாதர் சங்காளர - பெண்கள் கூட்டத்தார. சங்கம் - சங்கமம.

சங்கு ஓதை நாதம ஒடு கூடி - சங்கோசை முதலிய இன்னிசையோடு கூடி.

வெகு மாயை இருள் வெந்து ஓட - மிக்க மாயையும ஆணவமலமும் எரிந்து கெட.

மூல அழல் வீச - மூல அக்கினி சொலிக்க.

சிந்து ஆன விருது ஓதை - சமுத்திரம்போல ஒலிக்கின்ற வெற்றிச் சின்னத்தின் ஓசையானது.

சிங்கார ரூப மயில் வாகன நமோநமென, கந்தா குமாரசிவ தேசிக நமோநமென..... .

சிந்தூர பார்வதி சுதாகர - சிந்தூரமணிந்த உமாதேவியார்பெற்ற சந்திரன் போன்றவரே.

கங்காள வேணி குருவானவ - முழுவெலும்பைச் சடையிலே தரித்த பரம சிவனுக்குக் குருவானவரே.

திண் சூரர் ஆழி மலை - வலிமைபொருந்திய சூரனும்சமுத்திரமும் கிரவுஞ்ச மலையும். வைவேல் - கூரியவேல்.

இங்கித வேத பிரமாவை - இன்பத்தைத்தரும வேதங்களுக்கு அதிகாரியாகிய பிரமாவை. இங்கிதம் - இனிமை.

பெண்காதல் - பெண்ணாசை. வனம் மேவி வள்ளிநாயகியை - வள்ளிநாயகியாரைத் தினைப்புனத்திற் பொருந்தி.

இன்பான தேன் இரசம் ஆர் மூலை விடாத கரம் அணி மார்பா - இனிய தேன இரசம்போன்ற ஞானம்நிறைந்த சத்தியை (வள்ளிநாயகியாரை) விட்டுநீங்காத கரத்தையும் அழகிய மார்பையுமுடையவரே. அன்பருக்கு ஞானத்தை அளிக்கும கரமும் கருணையையுடைய மார்புமுடையவர் என்பது கருத்து.

எண்டோளர் காதல்கொடு காதல் கறியே பருகு செஙகாடு மேவி - எண்டோளராகிய சிவபெருமான் விருப்பத்தைக்கொண்டு பிள்ளைக்கறியே உண்ட திருசசெஙகாடு மேவினவரே. எணடோளர் - எண்தோளர், எட்டுப்புயஙகளையுடைய சிவபெருமான்.

என் காதல் மாலை முடி ஆறுமுகவா - எனது அன்புநிறைந்த பாமாலையை முடியிற தரித்தருளுகின்ற ஆறுமுகவரே!

---

32. ஆதி - முதற்பொருள்.

மகமாயி, மகாமாயி - உமாதேவி. அம்பை - மாதா.

சிவனார் மகிழ்ந்த ஆ உடைய மாது - சிவனுக்கு விருப்பமான ஞானமுடைய பெண. ஆ - சிவஞானம்.

ஆதரவாய் வருந்தி - அன்போடு வருந்தி. அது - பகுதிப்பொருள்விகுதி.

ஆளும் உனையே - அடிமைகொள்ளும் உன்னையே.

பூதம் அதுவான ஐந்து பேதம் இடவே அலைந்து - பௌதிகவிடயங்களான சததம் பரிசம் உருவம் இரதம் கந்தம் என்னும் ஐந்தும் வேற்றுமை உண்டாக்க, அடியேன் அவையைப்பற்றி அலைந்து.

நீதி நெறி - உண்மை மார்க்கம்.

உபதேச நேர்மை சிவனார் திகழ்ந்த காதில் உரை வேதமந்திர - உபதேசக் கிரமமாகப் பரமசிவனுடைய பிரகாசம்பொருந்திய திருச்செவியிற் சொல்லிய பிரணவமந்திரத்தையுடையவரே.

யோகம் அதுவே புரிந்து ஊழி உணர்வார்கள் தங்கள் வினை தீர - யோகத்தைசசெய்து ஊழிநாயகராகிய முதல்வரை உணர்பவர்களுடைய வினை தீர.

ஊனும் உயிராய் வளர்ந்து - உடலும் உயிரும்போல ஒன்றாய் வளர்ந்து. (பார். பாட்டு 7.)

ஓசையுடன் - கீர்த்தியுடன்.

ஊதிமலை மீது உகந்த - ஊதிமலையாகிய சேத்திரத்தில் விருப்பமுள்ள.

---

33. ஒருவரையும் ஒருவர் அறியாமலும் திரிந்து - பாசபந்தத்தினால் தேவரீரை அடியேன் அறியாமலும், பரிபக்குவமின்மையால் தேவரீர் அடியேனை அறிந்து ஆட்கொள்ளாமலும் பலபிறவிகடோறுந்திரிந்து.

இருவினையின் இடர் கலியொடு ஆடி - தீவினை நல்வினையின் பயனாகிய துன்ப இன்பத்தோடு சேர்ந்து. கலி - இன்பம். ஆடுதல் - உடனாதல், சேர்தல்.

முன் செய் வஞ்சனையாலே ஒளி பெறவே எழுபு மரபாவை துன்றிடும் கயிறுவிதமென மருவி ஆடி - முற்பிறப்பிற்செய்த வினையினால், விளங்கும்படி எழுந்து மரப்பாவையானது தொடுத்த கயிறு சென்ற வழி ஆடுவதுபோல, சரீரத்தைப்பொருந்தி நடமாடி.

விண்பறிந்து ஒளிறும் மினல் உருவதென ஒடி - ஆகாயத்தில் தோன்றி விளங்கும் மின்னல் உருவத்தைப்போல அழிந்து.

அங்கம் வெந்திடுவேனைக் கருதி - சரீரம் நீறாய்ப்போகும் என்மேல் அன்புகூர்ந்து.

பரம்பொருள் - மேலானபொருள், ஞானோபதேசம்.

நீறுகண்டு - நீறாயப்போகும்படி.

தண் தரு மா மென் - குளிர்ச்சியைத் தருகின்ற அழகிய மிருதுவான.

இந்துளம் தொடை மகுட முடியும் - கடப்பமாலைசூட்டிய முடியும். இந்துளம் - கடம்பு. தொடை - மாலை. மகுடம் - முடி.

ஒளிர் நூபுரம் சரண் கலகலென - ஒளிபொருந்திய சிலம்பானது திருவடியின்கணே கலகலென.

வந்து உகந்து எனை ஆள்வாய்.

தருண மழ விடையன் - இளமையான இடபவாகனன். தருணம் - இளமை. மழ - இளமையான.

ஆதி அந்தம் அங்கு அறியாத - ஆதியும் அந்தமும் அவ்விடத்தில் அறியப் படாத.

எங்கணும் திகழ் அருணகிரி சொருபன் - எங்கும் விளங்குகின்ற அருணசல சொரூபமாயுள்ளவர்.

சிவயநம நமசிவய காரணன் - சூக்குமதூல பஞ்சாக்கரங்களுக்குக் காரணமாயுள்ளவர்.

அமுதமதைச் சுரந்து அருளி எந்தைதன் திருவுருவில் மகிழ்கின்ற எனது தாய் பயந்திடும். எந்தைதன் - எந்தையினுடைய. பயத்தல் - கொடுத்தல்.

குருகு கொடியுடன் - சேவற்கொடியோடு.

மந்தரம் புவனகிரி சுழல - மந்தரம் முதலிய பூமியிலுள்ள அட்ட பர்வதங்களும் நடுங்க.

மறை ஆயிரங்களும் குமரகுரு என - வேதங்களெல்லாம் குமரகுருவென்று கோஷிக்க.

குறமகளின் இடை துவள பாத செஞ்சிலம்பு ஒலிய - வள்ளிநாயகியா ரது இடை அசைய, திருவடிகளிலணிந்த அழகிய சிலம்பு ஒலிக்க, (அவரோடு கலந்ததன்றியும்.) துவளல் - அசைதல். ஒலிய - ஒலிக்க.

ஒரு சசிமகளோடே கலந்து - இந்திராணி புத்திரியாகிய தெய்வயானை யோடு கலந்து. சசி - இந்திராணி.

திண் குருமலையின் மருவு - திண்மையான சுவாமிமலையைப் பொருந்து கின்ற. திண்மை - வன்மை, கடினம

---

34. இருமல், உரோகம. முயலகன் - முயலகனோய், ஒருவகை வலி.

எரிகுண நாசிவிடம் - பீனிசம. களமாலை - கண்டமாலை.

எரிகுலை - ஈரற்குலை எரிவு. நலிதல - வருந்துதல்.

அசுரா பதாதி - அசுரா சேனை

வடி சுடா வேலை - கூரிய ஒளிபொருந்திய வேற்படையை.

தரு நிழல் மீதில் உறை முகிலூர்தி தரும் திருமாது - கற்பகத்தருவின் நிழலில் வசிக்கும் இந்திரனபெறற புத்திரியாகிய தெய்வயானை. முகிலூர்தி - மேகவாகனன், இந்திரன்.

சலம் மிடை பூவின நடுவில் வீறு - கடல் சூழ்ந்த பூமியின் நடுவில் மேற் பட்டெழுந்த.

---

35. பெரு புவியில் உயாவு அரிய வாழ்வைத தீரக் குறியேனே - பெரிய பூமியில உயாவில்லாத வாழ்வை ஒழியும்படி கருதேனே. அரிய - இல்லாத.

துரிதமிடு நிருதர் புரம் சூறைக்காரப் பெருமானே - தீமைசெய்யும் அவு ணா நகரத்தைக கொள்ளையாடிய பெருமானே. துரிதம் - தீமை, கொடுமை.

விருது கவி விதரண விநோதக்கார - விருதை விரும்பும் கவிஞர்க்கு விதரணத்தை விநோதமாகசசெய்யும். விதரணம் - கொடை, வரம் முதலியன கொடுத்தல

விறல் மறவர் - வலிபொருந்திய வேடர்களது மகளாகிய.

திரு சிறுமி வேளைக்கார - அழகிய வள்ளிநாயகியாரில் ஆசையுள்ள. வேளை - ஆசை.

---

36. அற்றைக்கு இரை தேடி - அன்றன்றைக்கு உணவு தேடி.

அத்தத்திலும் ஆசைபற்றித தவியாத - பொன்னிலும் ஆசையுற்றுத் தாப மடையாத.

கற்று உற்றுணர் போதா - பலகலைகளையும் கற்று ஆராய்ந்தறிந்த ஞானத்தையுடையவரே. உற்றுணர்தல் - ஆராய்ந்தறிதல்.

---

37. பூதி ஆகம் அணி மாதவர்கள் - விபூதியை உடம்பிலே தரிக்கும் பெரிய தவத்தர்களது.

உனது மானம் என்றும் ஓதும் - உனது பெருமைகளை என்றுஞ் சொல்லுகின்ற.

ஏழைகள் வியாகுலம் இது ஏது என வினவில் - ஏழைகளது வியாகுலத்தைநோக்கி இதேது என்று கேட்டால்.

நீறுபடு மாழை பொரு மேனியவ - விபூதி தரித்த பொன்னை ஒத்த மேனியையுடையவனே! மாழை - பொன்.

நீசர்கடமோடு - நீசர்கள் தம்மோடு, நீசர்களோடு.

நீடு தனி வேல் விடும் - நீண்ட ஒப்பற்ற வேற்படையைப் பிரயோகிக்கும்.

மடங்கல் வேலா - ஊழித்தீபோன்ற வேற்படையையுடையவரே. இடியேற்றையொத்த எனினுமாம். மடங்கல் - ஊழித்தீ, இடியேறு.

மாறு அவுணன் - மாறுபாடுசெய்யும் கஜமுகாசுரன்.

சிகரி அண்ட கூடம் சேரும அழகு ஆர் - கொடுமுடி அண்டகடாகஞ் சேருகின்ற அழகுநிறைந்த. அண்டகடாகம் - அண்டகோளத்தின் சுவர்.

---

38. கரி பிறகான குழக - விநாயகருக்குப் பின்தோன்றிய முருகோனே. குழகு - இளமை.

குரவன் அருள் குருமணி - தந்தையாகிய பரமசிவனருளிய குருசிரேட்டர்.

அமுத இமையவா - அமுதத்தை உண்ணும் தேவர்கள்.

திமிர்தம் இடு கடல் அது என - ஒலிக்கின்ற கடலைப்போல.

உனை ஓதும் அமலை - உன்னைத் துதிக்கின்ற ஒலியையும்.

அடியவர் கொடிய வினைகொடு அபயம் இடு குரல் - அடியார் கொடிய வினையைத் தாங்கமுடியாது அபயமிடு குரலையும். அபயம் - ஓலம், முறையிடுதல்.

திமிரம் எழுகடல் உலகம் முறிபட - கருமையையுடைய சப்தசமுத்திரங்களாற் சூழ்ந்த உலகம் அழியவும்.

சிகர முடி உடல் புவியில் விழ - முடி அணிந்த தலையும் உடலும் பூமியில் விழவும்.

உயிர் திறை கொடு அமர் பொரும் அயில் வீரா - உயிரைத் திறையாகக் கொண்டு போர்புரியும் வேற்படையையுடைய வீரனே. திறை - அரசிறை.

அழல் இன் இணை கழல் - நெருப்பை ஒத்த பாதத்தையும். இணை ஒப்பு.

நதி கொள் சடையினர் - கங்காநதியைக்கொண்டிருக்குஞ் சடையினையு முடையவராகிய பரமசிவனது.

நளின குருமலை மருவி அமாதரு - நீர்சூழ்ந்த சுவாமிமலையை அடைந்து அங்கு எழுந்தருளியிருக்கும்.

நவிலும் மறை புகழ் - ஓதப்படுகின்ற வேதம் துதிக்கின்ற.

---

39. அணுகாத இருடி அயன் மால் அமரர் அடியார் இரையும் ஒலிதான் இவை கேளாது - தூரத்தேநின்ற முனிவர் பிரமன் விட்டுணு தேவர் அடியார் என்னும் இவர்கள் இரைந்து முறையிடுசெய்யும் சத்தம் தேவரீருக்குக் கேளாது.

இருவர் மயலோ அமளிவிதமோ எனென செயலோ - (இதற்குக் காரணம்) வள்ளிநாயகியார் தெய்வநாயகியாரிடத்துக்கொண்ட மயக்கத்தாலோ, அல்லது அவர் சம்பந்த வேறுபாட்டினாலோ, அல்லது வேறு என்னென்ன செயல்களாலோ தெரியாது.

ஒருவன் அடியேன் அலறு மொழிதான் ஒருவர் பரிவாய் மொழிவாரோ - (இங்ஙனமாக,) அடியேன் ஒருவன் கதறுகின்ற வார்த்தைகளை வேறொருவர் கேட்டு தேவரீரிடத்தில் வந்து அன்போடு சொல்லுவாரோ.

உனது பத தூள் புவனம் கிரிதான் - உலகங்களும் பர்வதங்களும் உனது பாத தூளாகும்.

உனது கிருபாகரம் ஏது - (அப்படியாயினும்) தேவரீரது கிருபைசெயல் எப்படியோ தெரியாது.

பவனம் முதலாகிய பூதபடையும் உடையாய் - வாயு முதலிய பஞ்சபூதக் கூட்டமாயும்நிற்பாய். "இருநிலனாய்த்தீயாகிநீருமாகியியமானனாயெறியுங்காற்றுமாகி, யருநிலையதிங்களாய்ஞாயிறாகியாகாசமாயட்ட மூர்த்தியாகிப், பெருநலமுங்குற்றமும்பெண்ணுமாணும்பிறருருவுந் தம்முருவுந்தாமேயாகி, நெருநலையாய்இன்றாகிநாளையாகிநிமிர்புன் சடையடிகணின்றவாறே." (தேவாரம்.)

சகல வடிவாய் பழைய வடிவாகிய வேலா - எல்லா வடிவாய் நின்று சுயரூபமாய் நிற்கின்ற வேலரே. சுயரூபம் - ஞானானந்த சொரூபம்.

---

40. புரைபடும் செற்றக் குற்ற மனத்தன் - கோபமும் குற்றமும்பொருந்திய புரைபட்ட மனத்தையுடையவன். புரை - துளை. அறிவாகிய உள்ளீடு இல்லாதது என்றபடி. செற்றம் - கோபம்.

சுத்தச் சத்ய அசத்யன் - உண்மையாகிய மெய்யைப் பொய்யாக்கும் புரட்டன்.

புகல் இலன் - தஞ்சமில்லாதவன்.

சுற்றச் செத்தையுள் நிற்கும் துரிசாளன் - சுற்றமாகிய செத்தைக்குள்ளே நிற்கும் குற்றமுடையன்.

பொறை - காரணம்பற்றியாவது, அறியாமையினாலாவது ஒருவன் தம்மிடத்துத் தீங்குசெய்த இடத்துத் தாமும் அத்தீங்கை அவனுக்குச் செய்யாமற் பொறுத்தல். (குறள்.)

கொத்துத் தத்வ விகற்பம் சகலமும் பற்றிப் பற்றற நிற்கும் பொருளுடன் பற்றுச் சற்றும் இல் வெற்றன் - கூட்டமாகிய தத்துவ வேறுபாடுகளெல்லாவற்றையும் பற்றியும் அவற்றோடு பற்றறநிற்கும் பரம பொருளிடத்தில் அற்பமேனும் அன்பில்லாத வெற்றன். தத்வ விகற்பம் சகலமும் என்றது மாயாகாரியமான கருவிகளின் வழியே சென்று பற்றும் விடயங்களை. வெற்றன் - வெறுமையுடையவன்.

நின் கரை அறும் சித்ரச சொல் புகழ் கற்கும் கலையிலன் - உம்முடைய அளவில்லாத அழகிய சொற்களால அறியும் புகழைக் கற்கின்ற கல்வியில்லாதவன்.

மட்டன் - மட்டி, மூடன். மட்டம் - குறைவு.

செச்சைப் பொன்புய வெற்பும் - செச்சைமாலை அணிந்த அழகிய புயமாகிய மலையும்.

கதிரையும் சக்ரப் பொற்றையும், மற்றும் பதிகளும், பொற்புக்கச்சியும் முற்றும் - கதிர்காமமும், சக்கரமலையும், மற்றைசசேத்திரங்களும், அழகிய காஞ்சீபுரமுமாகிய எல்லாவற்றையும். சக்ரம் பொற்றை - வட்டமான மலை. பொற்பு - அழகு.

கனவிலும் சித்தத்திற் கருதிக்கொண்டு அடைவேனோ - கனவிலும் உள்ளத்தில் எண்ணிக்கொண்டு திருவடிசேர்வேனோ. அடைதல் - சரணபுகுதல்.

குரை - ஆரவாரம்.

உட்குதல் - மடிதல், நிலைகெடுதல்.

கண் புரம் துட்டன் குலம் அடஙகக் கெட்டு ஒட்டு ஒழிய - இடம்பரந்த மகேந்திரபுர அரசனாகிய சூரனது குலம் முழுவதும் கேடடைந்து பற்றற. கண் - இடம். புரம் - மகேந்திரபுரி. ஒட்டு - பற்று.

ஒரு நேமிக் குவடு சென்று ஒதுங்க - சக்கரவாளகிரி சென்றொதுங்க. நேமி - வட்டம். குவடு - மலை.

சொர்க்கத்தர் - சுவர்க்கத்தர், தேவர்கள்.

திக்கிற் கிரி வர்க்கம் நடுங்க.

குலிசம் துங்கக் கைக் கொற்றவன் நத்தம் குடியேற - வச்சிரப்படையேந்திய வெற்றிபொருந்திய கையினையுடைய இந்திரன் பொன்னுலகத்தில் குடியேற. நத்தம் - ஊர்.

தரை விசும்பைச் சிட்டித்த இருக்கன் சதுர்முகன் சிட்சைப்பட்டு ஒழிய - பூமியையும் ஆகாயத்தையும் சிருட்டித்த வேதத்தையுடையவனாகிய பிரமன் தண்டிக்கப்பட்டு ஒழிய. சிட்சை - தண்டனை.

சந்ததமும் வந்திக்கப்பெற்றவர் தத்தம் பகையோட - எப்பொழுதும் வழிபாடுசெய்வோர் தங்கள் தங்கள் வினை தீர.

தகைய தண்டைப் பொன் சித்திர விசித்திரம் தரு சதங்கைக்கு ஒத்து ஒத்து முழக்கும் சரண கஞ்சத்தில் பொன் கழல் கட்டும் - அழகிய தண்டையில் தொடுத்த பொன்னாலாகிய அழகிய பலவகையான அலங்காரத்தொழில்கள் விளங்குகின்ற சதங்கைகளின் சத்தத்துக்கு ஒத்துத் தொனிக்கும் பொன்னாலாகிய வீரகழலைப் பாதாரவிந்தங்களில் கட்டும். தகை - அழகு. சித்ர - அழகிய. விசித்திரம் - பலவகையான அலங்காரத்தொழில்கள். கஞ்சம - தாமரை.

---

41. புவிக்கு - பூமியில்.

கால தரிசனை புலம் கணகூடும் அது தனை அறியாதே - பக்குவகாலத்தில் தேவரீர் கொடுக்கும் தரிசனம (பக்குவகாலம் வராதொழியினும் உனது பாதம நினைபவாக்கும்) பிரத்தியட்சமாகத் தெரியப்படும் என்பதை அறியாதே. புலம் - புலன். கணகூடு - பிரத்தியட்சம்.

புரட்டும் பாத சமயிகள் நெறிக்கண பூது படிறரை - தருக்கவாதத்தால் நாலுவாகக்கூறும் சமயிகளது நெறியில புகும் கீழோரை. ("காதி மோதி வாதாடு நூல கற்றிடுவோர்." (பார. பாட்டு. 21.)

புழுக்கண பாவம் அது கொளல் பிழையாதே - புழுக்கள் நிறைந்த நரக பூமி கொள்ளுதல் தவறாது. பாவம் - பூமி. கொள்ளுதல் - பறறுதல்.

கவி கொண்டு ஆடும் புகழினை படிக்கும் பாடு திறம் இலி - மதுரகவி கொண்டு சொல்லும் தேவரீரது புகழைப் படிக்கும் நட்பும் திறமையுமில்லாதவன். ஆடுதல் - சொல்லுதல். பாடு - நட்பு, பெருமை. மதுரகவியாற் புகழுகின்ற புகழினைப் படிக்கும் எனினுமாம். கொண்டாடுதல் - புகழ்தல்.

களைக்கும் பாவ சுழல்படும் அடி நாயேன் - பாவசுழலிற்பட்டு இளைப்புறும் இழிந்த நாயேனுக்கு.

கலக்குண்டாகு புவிதனில் எனக்குண்டாகு பணிவிடை கணக்குண்டாதல் - கலக்கத்தைத்தருகின்ற இப்பூமியில் எனக்குச்சம்பவிக்கின்ற செயல்களுக்குக் கணக்கிருத்தல். பாவத்தில் சுழலுகின்ற அடியேனை அதினின்றும் விலக்கியருளென்பது கருத்து.

சொருபம் இது ஒளி காணச் செழிக்கும் - திருவுருவமானது சோதியாய் விளங்க ஓங்கும்.

முநிவர்களிடம் மேவும் தவத்தின் - முநிவர்களிடத்திற்பொருந்தியிருக்கின்ற தவத்திற்குப் பயனை அளிக்கும். புரி பிழை - செய்கின்ற பிழைகளை.

குடி நிலை தரிக்கும் - குடிகளை நிலைபெறநாட்டிவைக்கும்.

சதைத்தல் - நசுக்குதல்.

எமை பணி விதிக்கும் - எமக்குத் தொண்டுசெய்தலை நியமிக்கும்.

சரவண தகப்பன சாமி - சரவணததிற்றோன்றிய சிவகுரு.

---

42. போத நிர்க்குண போதா - ஞானசொரூபனும் குணாதீதனுமாகிய ஞான குருவே.

நாத நிஷ்கள நாதா - நாதசொரூபமாயும் அரூபமாயுமிருக்கும் முதல்வரே.

பூரணக் கலை சாரா - நிறைந்த கலைஞானங்களின் சாரமாயுள்ளவரே. கலை ஞானம - வேதாகமஙகள் புராணம முதலியன.

பஞ்ச பாண பூபன் மைத்துன - பஞ்சபுட்ப பாணங்களையுடைய மன்மதனுக்கு மைததுனரே. பூபன் - அரசன்.

பூபா - பூமியைப் பாதுகாக்கின்றவரே.

நீப - கடப்பமாலை அணிந்தவரே. நீபம் - கடம்பு.

புஷ்பக தாளா - புட்பம்போன்ற திருவடிகளையுடையவரே.

போக சொர்க்க புபாலா - போகத்தைத்தரும் சொர்க்கபூமியைப் பாலனஞ்செய்கின்றவரே. புபாலா - பூபாலரே.

சங்கம் ஏறும் மா தமிழ்த் திரய சேயே - சங்கப்பலகையில் ஏறிய பெருமை பொருந்திய முத்தமிழையுமுடைய குமாரனே.

வேதனம் திரய - மூன்று வேதங்களையுமுடைய. வேதனம் - வேதம். அதர்வமொழிந்த இருக்கு, யசு, சாமம் என்பன. "த்ரயீவேதயம்." (சிவானந்தலகரி.)

வாழ் ஜகத்திரய வாழ்வே - சீவிக்கும் மூவுலக வாழ்வாயுள்ளவரே. நிலை பெற்றுவிளங்கும் திரிலோகங்களிலுள்ளார்க்கும் வாழ்வாயுள்ளவரே.

பாத வாரிஜம் - திருவடித்தாமரை.

மகோததி ஏழ் பிறப்பினில் மூழ்கா - பெருங்கடல்போன்ற ஏழுபிறப்பிலும் அமிழ்ந்தி.

மனோபவ மாயையிற் சுழியூடே விடாது - மனதில் உற்பத்தியாகும் விபரீத உணர்வாகிய சுழியில் அகப்பட்டுநீங்காது. மனோபவம் - மனதிற் பிறப்பது. மாயை மயக்கும். மயக்கத்தினால் விபரீத உணர்வு உண்டாம். விபரீத உணர்வை மாயாவிகற்பங்கள் என்பர்.

காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் என்பன மாயாவிகாரங்களாம்.

கீத நிர்த்த வேதாளம் அடவி நடாத புத்திர - இசையோடு கூடிய நடனத்தைப் பூதங்களோடு சுடுகாட்டிற் செய்யும் இறைவனது புத்திரரே.

பாகீரதீ கிருபாசமுத்திர - கங்காதேவிபெற்ற கிருபாசமுத்திரமே.

ஜீமூத வாகனர் தந்தி பாகா - மேகவாகனனாகிய இந்திரனது புத்திரியாகிய தெய்வயானையைப் பக்கத்திற்கொண்டவரே. ஜீமூதம் - மேகம். தந்தி - யானை.

கேகயப் பிரதாபா - மயில்வாகனத்திலேறும் மகத்துவமுடையவரே. கேகயம் - மயில்.

மூலாதிப - மூல அதிபரே. மாலிகை - மாலை.

விசாகக் கிருபாலு - விசாகநட்சத்திரத்திற் பிறந்த கிருபாகரரே.

விதருமகாரா - பவளவடிவரே. வித்துருமம் - பவளம். ஆகாரம் - வடிவு.

ஷடானன (ஷட் ஆனனம்) - ஆறுமுகவரே.

வேத வித்தக - வேதத்தில் வல்லவரே. வித்தகம் - அறிவு, ஞானம்.

வேதா விநோத - பிரமனோடு விநோதம்செய்தவரே.

கிராத லக்ஷ்மி - வள்ளிநாயகி. கிராதர் - வேடுவர்.

கிரீடித்தல - விளையாடல், லீலைசெய்தல.

மகா அசல வீர - பெரிய மலையில் விளையாடும் வீரரே.

விக்ரமம் - பராக்கிரமம்.

பார அவதான அகண்ட - பெரிய அவதானத்தையுடைய அகண்டரே. அகண்டர் - கண்டிக்கப்படாதவர்.

சூர வீர நிட்ரே - சூரவீரனுக்கு நிட்ரேஞ்செய்தவரே. வீரா - வீரரே.

ஆதிகாரண - முதற்காரணரே. நிர்ப்பய தீரா - பயமற்ற தீரரே.

அபிராம - அழகரே.

---

43. விரை மருவும் மலர் அணிந்த கரிய புரி குழல் சரிந்து விழ - வாசனை பொருந்திய புஷ்பங்களணிந்த கருமையான சுருண்ட அளகம் சாய்ந்து விழ.

வதனம் மதி விளங்க - முகமாகிய சந்திரன் பிரகாசிக்க.

மொழி குழற - சொல் தமொற. விரக மயல் - காம மயக்கம்,

நெஞ்சம் அறிவு அழிய உருகும் அந்த இருள் அகல - அறிவுகெட மனம் உருகுகின்ற அந்த மயக்கந் தீர. நெஞ்சம் - மனம்.

அரவில் விழி துயில் முகுந்தன் - சர்ப்பசயனத்திலே நித்திரைசெய்யும் முகுந்தனும.

அலர் கமல மலர் மடந்தை அழகினொடு தழுவு கொண்டல் - விரிந்த தாமரைமலரிலிருக்கும் இலக்குமி அழகினோடு தழுவுகின்ற மேகமுமாகிய விட்டுணுவுக்கு. கொணடல் - மேகம். விட்டுணு மேகநிறமுடையவர்.

அடல் அசுரர் - போர் செய்யும் அவுணர்.

நிணம் அதனில் முழுகி - நிணநீரிலே தோய்ந்து.

அண்டம் அமரர் சிறை விடு - விணணுலகததுத தேவர்சிறையை நீக்கிய. அணடம் - தேவலோகம்.

பிரசணட வடிவேலா - வேகமான கூரிய வேற்படையையுடையவரே.

பரவை வரும் விடம அருந்து - கடலிற்றோன்றிய நஞ்சையுணட.

விடையா - இடபவாகனா.

---

44. அலகின்மாறு மாறாத கலதி - விளக்குமாறு கைவிடாத மூதேவியும். அலகின்மாறு - விளக்குமாறு. கலதி - மூதேவி.

அடைவு இல் ஞாளி - முறையில்லாத நாயும்.

அறம் ஈயா அழிவுகோளி - தருமததிற்குக் கொடாது வீணிலழிப்பவனுமாகிய நான்.

அருள் இல்லாத மாதா தோள் தோய மருளாகி - அன்பில்லாத பெணகளுடைய தோள்களை அணைய மயக்கஙகொணடு.

பல கலை ஆகரா - பல கலைஞானஙகளுக்கு உறைவிடமாயுள்ளவனே.

மேரு மலை கர அசலா - மேருமலையையொதத புயமலையையுடையவனே.

வீசு பருவ மேகமே - மழையைப் பெய்கின்ற காலமேகம்போன்றவனே.

தாரு என - கற்பகதருவைப்போன்றவனே என்றுசொல்லி.

யாதும் பரிவு உறாத மா பாதர் வரிசை பாடி - சிறிதேனும் அன்பில்லாத மகா பாதகாகளுடைய மேம்பாடுகளைப் பாடி.

ஓயாத பரிசில் தேடி - ஒழிவில்லாத உபகாரக்கொடையைத்தேடி. பரிசில் - உபகாரக்கொடை.

இலகு வேலை நீள் வாடை எரிகொள் வேலை - விளஙகுகின்ற கரைநீணட வடவாமுகாக்கினியைக்கொணட சமுததிரத்திலும. வேலை - கரை. வாடையெரி - வடவாமுகாக்கினி.

மா சூரில் - மாமரவடிவத்தைக்கொண்ட சூரனிடத்திலும்.

எறியும் வேலை மாறாத திறல் வீரா - எடுத்த வேற்படைக்கலத்தையுடைய நீஙகாத வலிமையையுடைய வீரனே.

பகீரதி நதி - கங்காநதி.

சாரல் இறைவி கான மால் வேடர் சுதை பாகா - மலையரசியாகிய காட்டிலுள்ள மயக்கம்பொருந்திய வேடரின் புதல்வியாகிய வள்ளிநாயகியாரைப் பாகத்திற் கொண்டவரே.

கலக வாரிபோல் மோதி வடவையாறு சூழ் சீல - சத்திக்கின்ற சமுத்திரம்போலத் திரையடித்து வடபாகத்தினின்றும் ஓடுகின்ற மாணிக்ககங்கை அருகாற்பாயும் அழகிய. வட ஐ ஆறு. ஐ - அழகு.

மூது ஊரில் - பழைய ஊரில். பெரிய ஊரில் எனினுமாம்.

கனகநாடு வீடாய கடவுள்யானை வாழ்வான கருணைமேருவே - சுவர்க்கலோகம் எழுந்தருளியிருக்கும் ஸ்தானமாகக்கொண்ட தெய்வயானையம்மையாரின் வாழ்வாயுள்ள கிருபாமூர்த்தியே. வாழ்வான - வாழ்வுக்குரிமையான.

---

15. எருவாய் கருவாய தனிலே - மலவாசலின் பக்கத்திலிருக்கும் கர்ப்பாசயத்தில்.

வெறிபோல - பிசாசம்போல.

பலகோடிய தாயுடனே - பலகோடி தாய்மாருடன்.

முருகா என ஓர்தரம் ஓது அடியார் முடிமேல்.

முது சூர உரம் மேல் - பெரிய சூரனுடைய மார்பில்.

திருமால் பிரமா அறியாதவர் சீர் சிறுவா - விட்டுணுவாலும் பிரமனாலும் அறியப்படாதவராகிய சிவபெருமானது சிறந்த புதல்வரே.

செழு மா மதில் சேர் - அழகிய உயர்ந்த மதில்சேர்ந்த.

அழகு ஆர் பொழில் சூழ் - அழகுநிறைந்த சோலையாற் சூழப்பட்ட.

திருவீழி - சோழநாட்டில் காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு ஸ்தலம்.

---

16. ஊனும் உட்பிணியும் ஆறு கவித்த உடல் ஊதாரி - தசையும் உள்ளேயும் பிணிகளும் ஒன்றுசேர்ந்து மூடிய உடலையுடைய ஊதாரி. ஆறு - நீங்காத. கவிதல் - மூடுதல். ஊதாரி - வீண்கொடையாளன்.

பட்டு ஒழிய உயிர்போனால் - இறந்து நீங்கும்படி உயிர்போய்விட்டால்.

குவித்துவர - குவிந்துவர, திரண்டுவர. குவிதல் - கூடுதல், திரளுதல்.

நாலுவிதச சிவிகைமேலே - பலவிதமான தண்டிகையின்மேல்.

அடவி எரியூடே நாணுமல் வைத்துவிட - சுடுகாட்டிலே நெருப்பிற் கூசாமல் வைத்துவிட.

மால் நாக துத்தி முடிமீதே - பெரிய சர்ப்பத்தின் புள்ளிபொருந்திய தலையின்மேல். துத்தி - பாம்பின்படப்பொறி.

மட்டு ஒழுகும் மலர்மீதே வாழ்வாய் இருக்கும் ஒரு வேதாவும் - தேன் சொரியும் வெண்டாமரையின்கண் வாசஸ்தானமாயிருக்கும் பிரமனும்.

அட்ட குலகிரி - எட்டு மலைகள். கயிலை (வெள்ளிமலை), இமயமலை, மந்தரமலை, விந்தமலை, சிஷதமலை, ஏமகூடம, நீலகிரி, கந்தமாதனம்.

ஆறு அரக்கருடன் - அடங்காத அரக்கருடன்.

வரும் ஆலாலம் உற்ற அமுது அயில்வோன்முன் - வருகின்ற நஞ்சுபொருந்திய உணவை உண்டவராகிய சிவபெருமான்முன்பதாக.

ஆடானை - பாண்டிநாட்டிலுள்ள திருவாடானை என்னும் ஸ்தலம்.

---

47. அப்படி எழும் எழும் வழாது வகுத்து - அந்தப் பதினாலு உலகங்களையுந் தவறாது அந்தந்தக்காலத்தில் உண்டுபண்ணி.

போதினில் அக்ரம் வியோம கோளகைமிசை வாழும் அக்ஷரதேவி கோவின் விதிப்படி - தாமரைப்பூவில் ஆகாயவட்டம்போன்றிருக்கும் நுதியிலே வாழுகின்ற சரஸ்வதிநாயகரான பிரமாவின் விதிப்படி. அக்கிரம் - நுதி. வியோமம் - ஆகாயம். கோளகை - வட்டம். அக்கரதேவி - சரஸ்வதி.

அனைத்து உருவாய காயம் அது அடைவேகொண்டு - எல்லா வடிவுமாய உடல்களை முறையே எடுத்து. அடைவு - முறை.

உற்பவியா விழா - உற்பவித்து விழுந்து.

திரிதரு காலம் - சுழலுங்காலம்.

ஊழி காலம் - உகாந்தகாலம், உகமுடிவுகாலம், கடல்பெருகியுலகமழியுங் காலம். வாழி - அசைநிலை.

கற்பக வேழம் - கற்பகத்தருவில் அமைந்திருக்கும் தெய்வநாயகியாரும்.

ஏய் பசிளை ஏனல் வனம் மீதுறை கற்புடை மாது - பொருந்தியபசசையும் முதிராத பருவமுமுடைய தினைப்புனத்தில் வசித்த கற்புடைய வள்ளிநாயகியாரும். ஏனல் - தினை.

தோய்தரும் அபிராம - பொருந்தப்பெறும் அழகரே.

கற்புரதூள் இலேபன மல்புய - கற்பூரப்பொடிசேர்ந்த கலவைசசாந்தை அணிந்த வலிய புயங்களையுடையவரே. இலேபனம் - கலவைச சாந்து, வாசனைத்தைலம்.

பாகசாதனன் கற்பகலோக தாரண - இந்திரனது சுவர்க்க உலகத்தை நிலைபெறுத்தினவரே. தாரணம், தாரணை - நிசசயம், நிலை. பாகசாதனன் - இந்திரன்.

கிரி சால விப்ர சமூக வேதன - மலைக்கூட்டம்போன்ற பாவங்களை எல்லாம் நீக்குகின்றவரே. சாலம் - கூட்டம். விப்பிரம் - குற்றம், பாவம்.

சமூகம் - கூட்டம். வேதனம் - துளைத்தல், அழித்தல்.

பச்சிமம் பூமி காவல - குறிஞ்சிநிலத்தலைவரே. பசிமம் - மேற்கு. மெத்திய ஆழி - பெரிய சமுத்திரம்.

---

48. திமிர உததி அனைய - இருட்கடல்போன்ற.

அதிக குலமும் - உயர்குலமும. குலம் - சாதி.

அறிவுநிறையும் - அறிவுநிறைவும், பேரறிவும்.

சமரமுக வெல் அசுரா - போர்முகத்தில் வெற்றியடையும் அசுரர்.

சலதி அலற - சமுத்திரம் ஒலிக்க.

பதலை தகர - மலைநொருங்க. தகரல் - நொருங்குதல், உடைதல்.

வெம் அர அணையில் - வெவ்விய சர்ப்பசயனத்தில. வெம்மை - கடுமை, கோபம.

விழிகள் நளினன் - தாமரைக்கணணனுகிய விட்டுணு. நளினம் - தாமரை.

மிடறு கரியா - பரமசிவன். கரி - நஞ்சு.

விரவுதல் - எழுந்தருளியிருத்தல்.

---

9. திமிலை - சல்லரி.

முழவு இன் இசை - முழவுவாசசியத்தின் இனிய ஒலி.

எழில் பணி கொள் வார காது - அழகிய குணடலத்தை அணிந்த நீண்ட திருசசெவிகளுடன். பணி - ஆபரணம்.

உபய பதமிசை குலவும் சீர் எறு நூபுரமும் - இரண்டு திருவடிகளிலும் பிரகாசிக்கின்ற சிறப்புமிகுந்த சிலம்புகளுடன். உபயம் - இரணடு. குலவுதல் - பிரகாசித்தல்.

அந்த மாரபும் - அழகிய மாரபுடன்.

அமரர் தரு மது ஒழுகு பூமாரியே சொரிய - தேவர்கள் கற்பகதருவிலுள்ள தேனொழுகும் பூமாரியைச சொரிய. மாரி - மழை.

உதர வில் மணி மீதே முநூல் ஒளிர - உதரபந்தனமாகிய ஒளியைக்கொண்ட மணிவடத்தின்மேலே முப்புரிநூல் விளங்க. உதரம் - வயிறு. வில் - ஒளி.

அழகு பொலி ஆளாய் - அழகுநிறைந்தவராய்.

முன் ஆர் அடியர் - முன்னிலையில் அரிய சிவனடியார்.

விருது பல முறை முறையிலே ஊதி வாது செய்து - வெற்றிச்சங்கு பலவற்றை முறைமுறையே ஊதித் தர்க்கித்து.

மதலை - சிறுவன். சுதலை - அறிவிலான், மூடன்.

மயிலின் மிசை இங்ஙனம் வந்திடாயோ.

பிறை எயிறு முரண் அசுரர் பேராது பாரில் விழ - பிறைச்சந்திரனைப் போன்ற வக்கிரதந்தத்தினையுடைய போர்செய்யும் அவுணர்கள் நிலைபேராது பூமியில் விழ. எயிறு - பல்லு, வளைந்த பல்.

எழு புவி அதிர - ஏழுலகங்களும் நடுங்க.

பிடி களிறின் அடல் நிரைகள் - பெண்ணுமாணுமாகிய யானைகளின் போர் அணிகள். அடல் - போர்.

திசையில் நின்ற நாகம் பிரிய - திசைகளில் நின்ற அட்டநாகங்களின் உடல் பிரிய.

மா வாரி தூளி எழ - பெரிய கடலிற் புழுதி எழும்ப.

குற மறவர் கொடி அடிகள் கூசாது போய் வருட - வள்ளிநாயகியாரது பாதங்களை நாணமின்றிப் போய்த் தடவ. பரஞானமடைதற்குத் தீவிரதரபக்குவமாயிருந்த வள்ளிநாயகியாரைத் தடையின்றி ஆட்கொண்டு என்பதாம்.

வாரான கானில் - நீண்ட காட்டில்.

கணி இன் இளம் மரமதேயாகி - இனிய இளமைவாய்ந்த வேங்கைமரமாகி. கணி - வேங்கைமரம்.

முயலகன் - ஓர் பூதம். ஆணவமலத்தைக்குறிக்கும்.

---

50. புவனத்து ஒரு பொற்றொடி சிறு உதரக் கருவில் பவமுற்று - பூமியில் ஒரு பெண்ணின் சிறிய கருப்பாசயத்தின் கருவில் உற்பவித்தது. உதரம் - கருப்பை.

விதிப்படியில் புணர் துக்க சுகப் பயில்வுற்று - ஊழின்படி வந்துசேருகின்ற சுகதுக்கங்களை அனுபவித்து.

ஆவி புரியட்டகம் இட்டு - உயிரைச் சூக்குமதேகத்தில்வைத்து தன்மாத்திரைகள் ஐந்தும் மனம் புத்தி அகங்காரம் என்னும் மூன்றுமாகிய எட்டும் கூடியது புரியட்டகவுடம்பெனப்படும். இதுவே சூக்குமவுடம்பு.

அது கட்டி இறுக்கு அடி குத்து என அச்சம் விளைத்து. அது - அதை.

அலறப் புரள்வித்து - கதறும்படி உருட்டி.

மணல் சொரிவித்து - காய்ச்சிய மணலைச் சொரிவித்து.

அனல் ஊடே தவனப்பட விட்டு - அவ்வனலின்கண் தாகமுண்டாகும்படி விட்டு.

அணி பற்கள் உதிர்த்து - வரிசையான பற்களை உதிர்த்து.

எரி செப்புருவைத் தழுவப் பணி - எரிகின்ற செம்பாலாகிய உருவத்தைத் தழுவச்செய்து.

முட்களில் கட்டி இசித்திட - முள்ளுமரங்களிலே கட்டி இழுத்து. இசித்தல் - இழுத்தல்.

வாய் கண் சலனப்பட எற்றி - சஞ்சலப்படும்படி வாயிலும் கண்ணிலும் அடித்து.

அயில்வித்தல் - உண்பித்தல்.

உளையத் தளையிட்டு - கால்கள் உளையும்படி விலங்குபூட்டி.

இயமப் பிரகர துயர் - இயமனுடைய கூட்டத்தாராலாய துன்பத்தை. பிரகரம் - கூட்டம்.

பவனத்தை ஒடுக்கும் மனக்கவலைப் பிரமையற்று - சுவாசத்தை அடக்கும் மனக்கவலையாகிய மயக்கமற்று. பிரமை - மயக்கம். கருமயோகத்தைக்குறித்தது.

ஐவகைப் புலனில் கடிதில் படர் இச்சை ஒழித்த - ஐம்புலன்களில் விரைந்துசெல்லுகின்ற ஆசைகளையும் ஒழித்த.

தவச சரியைக் கிரியை யோகர் பரிபக்குவர் நிட்டை நிவிர்த்தியில் பரிசுத்தர் விரத்தர் கருத்ததனில் - தவமாகிய சரியை கிரியை யோகங்களில் நிற்பவர், மலபரிபாகமெய்திய பக்குவர், நிட்டைசாதனம் முடித்த பரிசுத்தர், விரதிகள் என்னும் இவர்களது சித்தத்திலும். பரிபக்குவர் - இருவினையொப்பு மலபரிபாகம்பிறந்து உயிர்ச்சார்பு பொருட்சார்புகளை நீத்துத் தவச்சார்பில் நிற்போர். இவர்கள் பக்குவம் மந்தம் மந்ததரம் தீவிரம் தீவிரதரம் என நான்குவகைப்படும். நிவிர்த்தி - முடிவு. பரிசுத்தர் - தற்சுதந்தரமற்ற மெய்ஞ்ஞானிகளாவார். இது அது என்று காண்பானும் காட்சியுமாய் அறிந்துவந்த தற்சுதந்திர அறிவுநீங்கிப் பரையோகத்தில்நிற்கும் ஞானிகள். விரத்தர் - துறவிகள். விரதி - துறவு.

பரவப்படு செய்ப் பதியில் - துதிக்கப்படுகின்ற வயலூரிலும் எழுந்தருளியிருக்கும். செய்ப்பதி - வயலூர்.

**சிவன்**, உத்தமன், நித்த உருத்திரன், முக்கணன், நக்கன், மழுக்கரன், உக்ர இரணத் திரிபுரத்தை எரித்தருள் சிற்குணன், நிர்க்குணன், ஆதி, செகவித்தன், நிசப்பொருள், சிற்பரன், அற்புதன், ஒப்பிலி உற்பவ. உத்தமன் - யாவரினும் மேலானவன். நித்த உருத்திரன் - என்றுமுள்ள ஸ்ரீகண்ட உருத்திரன். நக்கன் - சங்காரகருத்தன். மழுக்கரன் - மழுவைக்கையிலேந்தியவர். உக்ர இரணத்.........சிற்குணன் - கொடிய போரைச்செய்த அசுரர்களுடைய மூன்றுபுரங்களையும் எரித்த ஞானகுணத்தையுடையவர். செகவித்தன் - உலகுக்குக் காரணமாயுள்ளவர் (வித்தாயுள்ளவர்). சிற்பரன் - மேலான ஞானமுடையவர். ஒப்பிலி உற்பவ - உவமையில்லாத சிவபெருமானது நெற்றிக்கண்ணில் உற்பவித்தவரே.

பதும தடத் திரிசிரப்புர வெற்பு உறை - தாமரைகள்நிறைந்த தடாகங்கள் பொருந்தியிருக்கின்ற திரிசிராமலையில் வீற்றிருக்கும்.

சற குமரப் பெருமாள் - நல்ல இளையபெருமாள்.

---

51. உன் அடி இணை உறப் பணிந்திலன் - உமது திருவடிகளிரண்டையும் மிகவும் வணங்கிலன்.

உனது அருள் மாறு உளத்துள் அன்பினா - உமது திருவருள விட்டு நீங்காத உள்ளத்தையுடைய அன்பராது.

உன சிகரமும் வலம் வருகிலன் - உமது மலையைப் பிரதக்கிணம செய்கிலேன். (திருப்பரங்கிரி)

உவப்பு - சந்தோஷம, மகிழ்ச்சி. விழைதல் - விரும்புதல்.

பகடு அது பிடா மிசை - எருமைக்கடாவின் முதுகினமேல். பகடு - எருமைக்கடா.

மறலிதன் உழையினா கதித்து அடர்ந்து எறி கயிறு அடு கதைகொடு பொருபோது - இயமதூதா மீதூர்ந்து நெருங்கி எறிகின்ற பாசக் கயிற்றினோடு, கொல்லுகின்ற தணடாயுதத்தையும கையிற்கொணடு தாக்குமபொழுது.

கலக்குறும் செயல ஒழிவற - அசசத்தை உணடாக்கும் செயகை ஒழிந்து போகவும்.

அழிவு உறு கருத்து நைந்து அலம உறுபொழுது - அறிவுகெட்டு வருநதிச சஞசலப்படுமபொழுது

அளவை கொள் கணத்தில் என பயம் அற - கைநொடி என்னும் அளவை கொணட கணப்பொழுதினுளளே எனது பயம நீங்கும்படியும.

வினைத் தலம் - போர்க்களம. அலகை - பிசாசம.

விழுக்கு உடைந்து மெய் உகு தசை கழுகு உண - கொழுப்பு உடைந்து சரீரத்திலிருந்து உதிருகின்ற தசையைக கழுகுகளுணண.

மிகுத்த பண பயில் குயில் மொழி அழகிய கொடிசசி - நல்ல இசை பாடுகின்ற குயில்போலும் இனிய சொற்களையுடைய அழகிய வள்ளி நாயகியாரது. கொடிசசி - குறிஞ்சிப்பெண.

உழும் - தழுவப்பெற்ற.

நறை விரைத்த சநதனம மிருகமதம் புயவரையுடையோனே - வாசனை கலந்த சந்தனமுங கஸ்தூரியும் பூசிய மலைபோன்ற புயத்தையுடையவரே.

தினம் தினம் சதுர்மறை முநி முறைகொடு புனல் சொரிந்து அலர் பொதிய - ஒவ்வொருநாளும் நான்குவேதங்களையும் உணர்ந்த பிரமா விதிப்படி நீர்விட்டுப் பூக்களைச சொரிய.

விண்ணவரொடு சினத்தை நிந்தனை செயும் முநிவரர் - தேவர்களோடு கோபத்தை இகழும் முநிசிரேட்டர்.

வரி அளி நறை தெவிட்ட அன்பொடு பருகு உயர் பொழில் திகழ் - வரியையுடைய வண்டுகள் தேனைத் தெவிட்டும்படி விருப்புடன் உண்ணும் உயர்ந்த சோலை விளங்குகின்ற.

---

52. பஞ்சபாதகம் உறு - பஞ்சபாதகங்களும் பொருந்தினாற்போலும்.

பிறை எயிறு - பிறைசசந்திரன்போன்ற வக்கிரதந்தங்களையும்.

எரி குஞ்சி - அக்கினிபோன்ற செந்நிறம்பொருந்திய குடுமியையும்.

கூர் விடம் மதர் விழி - கூர்மைபொருந்திய நஞ்சுபோலுஞ் செருக்குற்ற கணகளையும்.

பிலவக பஙக வாள் முகம் - குரஙகைப்போலப் பஙகமுறுகின்ற ஒளிபொருந்திய முகத்தையும். பிலவகம் - குரஙகு. பஙகம் - திரைவு.

முடுகிய நெடுகிய திரிசூலம் பந்த பாசமும் மருவிய கரதலம் - விரைந்து செல்லுகின்ற நீணட முததலைசசூலாயுததைதயும் கட்டுகின்ற பாசக் கயிற்றையும் வைத்திருக்கின்ற கரஙகளையுமுடைய.

மிஞ்சி நீடிய கருமுகில் உருவொடு - மிகவும் நீடிய கருமுகில்போன்ற உருவததோடு.

பண்பு இலாத ஒரு பகடது முதுகினில் - தகுதியில்லாத ஒரு எருமைக் கடாவின் முதுகினில்.

அஞ்சவே வரும் அவதரமதில் - அஞ்சும்படி வருகின்ற சமயத்தில்.

ஒரு தஞ்சமாகியே - தேவரீர ஒரு துணையாய்.

வழி வழி அருள் பெறும் அன்பினால் உனது அடி புகழ் அடிமை என் எதிரே - பல பிறவிகளிலும் தேவரீரது அருளைப் பெறுதற்கேதுவா யிருந்த அன்புகாரணமாக உம்முடைய திருவடியைப் புகழ்ந்து பாடுகின்ற அடியவனாகிய என் எதிரே.

அண்ட கோளகை - அண்டகடாகம்.

எண் திசாமுகம் - எட்டுத்திசைகளும்.

மோகர மயிலினில் இயலுடன் - உக்கிரங்கொண்டு ஆரவாரிக்கிற மயிலின் மேற் சுவரூபத்தோடு.

மஞ்சுபோல் வளர் அளகமும் - மேகம்போல வளர்கின்ற கூந்தலும்.

இளகிய இரஞ்சித அம்ருத வசனமும் - மிருதுவான இன்பத்தைத் தருகின்ற அமிர்தம்போன்ற இனிய வசனமும். இரஞ்சிதம் - இன்பம்.

இரு குழை அளவு ஓடும் மன்றல் வாரிச நயனம் - இரண்டு காதுவரையும் ஓடுகின்ற வாசனைபொருந்திய தாமரைமலர்போன்ற திருக்கண்களும் பொருந்திய. மன்றல் - வாசனை.

குன்ற வாணர்தம் மடமகள் - வேடரது மடமைக்குணம்வாய்ந்த மகளாகிய வள்ளிநாயகியாரது.

மந்தர அசலம் - மந்தரமலை.

செஞ்சொல் மா திசை - செந்தமிழ்வழங்குந் தெக்கிணதிசை.

விஞ்சு கீழ் திசை - விசேஷம்பொருந்திய கிழக்குததிசை. விஞ்சுதல் - மிகுதல்.

இகல் செய்து - போர்செய்து. இகல் - போர்.

பல தளி தொழுது - பல ஸ்தலஙகளையும் வணஙகி.

உயா மகமேரு செண்டு மோதினர் அரசருள் அதிபதி - உயர்ந்த மகா மேருமலையைச செணடால் அடித்த உககிரகுமாரர் என்னும் அரசாக் கரசரே.

தொணடராதியும் வழி வழி நெறி பெறு - தொண்டாமுதலியோரும் பரம்பரையாக மோட்சநெறியைப் பெறுகின்ற.

---

53. மடிபிடியதாக நின்று - மடியிற்பிடித்துநின்று.

மயலது பொலாத வம்பன் - மயக்கம்பொருந்திய பொல்லாத வம்பன்.

விரகுடையன் - கபடமுடையவன். விரகு - கபடம்.

வசைகள் - இகழ்ச்சிசசொற்கள்.

கருவி அதனல் எறிந்து - ஆயுதத்தினல் எறிந்து.

கரிய புனல் - இரும்பை உருக்கிய நீர்.

கழுமுனையிலே இருவென்று விடுமெனும் அவ்வேளைகண்டு. கழு முனை - கழுமரத்தின் நுனி.

பரகிரி - திருப்பரங்குன்றம். உலாவு - பவனி.

விலுவமொடு - வில்வப்பத்திரத்துடன். தூர்வை - அறுகு.

---

54. தமர குரஙகளும் - ஒலிக்கின்ற குளம்புகளும். தமரம் - பேரொலி. குரம் - குளம்பு.

கார் இருள் பிழம்பு மெழுகிய அங்கமும் - கரிய இருட்பிழம்பு செறிந்த சரீரமும். பிழம்பு - திரட்சி.

கொழுந்து தழல் உமிழ் கண்களும் - சுவாலைவிட்டெரிகின்ற நெருப்பைச சொரியுங கண்களும்.

காளம் ஒத்த கொம்பும் உள - கருமைபொருந்திய கொம்புகளுமுள்ள.

கதக் கட மா மேல் - உக்கிரமான மதம்பொருந்திய எருமைக்கடாவின் மேல். கதம் - உக்கிரம். கடம் - மதம். மா - எருமை.

அடவருமென்று - கொல்லவருவானென்று அடல் - கொலலுதல்.

சிந்தாகுலத்து இருந்து - மனத்துயரோடிருந்து. (சிந்தா + ஆகுலம்.)

தமர் - உறவோர.

சோகமுற்று இரங்க - சோரவடைந்து அழ. இரங்குதல் - அழுதல்.

கோமளத்து இலங்கு நகையும் - அழகுற்று விளங்குகின்ற புன்முறுவலும்.

நெடும கணும் - நீணட கணகளும.

கனக குதமபையும் - பொற்குதம்பையும். கனகம் - பொன். குதம்பை - காதிலணியும ஒருவகை ஆபரணம்.

வஜ்ர அங்கதமும் - வயிரமணிஇழைத்த தோளணியும். வச்சிரம்-வயிரமணி.

அடல் சுடா வேலும் - வெற்றிபொருந்திய ஒளியையுடைய வேலும்.

கடிது உலகு எங்கணும் தாடி இட்டு வந்த - விரைவில் உலகமெங்கும் தாண்டி வந்த. கடிது - விரைவு. தாடி - தாணடி (இடைக்குறை).

இலங்கு அலங்கார பொற் சதங்கை கழல் ஒலி தணடையம் காலும் - விளங்குகின்ற அழகிய பொற்சதங்கையும வீரககழலும சத்திக்கின்ற தணடையணிந்த பாதமும.

ஒக்க வந்து - பொருந்த வந்து.

இமகிரி வந்த பொன பாவை - இமயமலையிலேதோன்றிய அழகிய பெண.

பசசை வஞ்சி - மரகதநிறமான பெண.

அகில தலம் பெறும் பூவை - சாவ உலகங்களையும பெற்ற பெற்ற கன்னிகை. அம்பை - மாதா.

செழும் பால் குடித்து இலங்கும் இயல் நிமிர்த்திடுவோனே - திவ்விய ஞானப்பாலை உணடு அதனால விளங்கும் சிவஞான இயல்பை நிலை பெறச்செய்தவரே. செழுமை - மாட்சிமை.

ஆகமப் பிரசங்கம் உரை செய்திடும் பிரசணடா - ஆகம உணமைகளைப் போதித்த வீரரே. பிரசணடம் - வீரம்.

விசித்து நின்ற இரணமுக துங்க வெம சூர் - போர்முனையின் கணணே அணி வகுத்துநின்ற பெருமைபொருந்திய கொடிய சூரனது. விசித்தல் - கட்டுதல்

அமணா அடங்கலுமு திரணடு - சமணா எல்லாருங கூடி.

கூடலில் - மதுரையில்

கழுவில் உதைந்து உதைந்து எற - கழுவில மிதித்து மிதித்து ஏறும்படி.

அபிநவ - புதுமையுடையவரே. அபிநவம் - அதிசயம, புதுமை.

மிகுத்த செஞ் சொல் அருணை - மிக்க இனிய சொற்களாற் போற்றப் பட்ட திருவண்ணாமலை.

நெடும் தடம் கோபுரத்து அமர்ந்த. தடம் - விசாலம்.

55. தந்த பசிதனை அறிந்து - உண்டாகிய பசியை அறிந்து.
கடும்பு - உறவினர்.
உயிரெனவே சார் மைந்தர் - தன்னுயிரபோலச் சார்ந்த மைந்தர்.
கடன் உதவும் அந்த வரிசை மொழி பகா கேடாய் வந்து - கடமையாகச் சொல்லுகின்ற உபசாரவார்த்தைகளைச் சொல்லமுடியாமல் வந்து.
தலை நவிர் அவிழ்ந்து தரை புக - தலைமயிர் அவிழ்ந்து பூமியில் விழ.
மகிடம் - எருமைக்கடா.
அந்த மறலியொடு உகந்த மனிதன் நமது அன்பன் என மொழிய.
நகில் இணைகள் - இரு ஸ்தனங்கள்.
சிந்து பயம் அயிலும் - சிந்துகின்ற பாலைக் குடிக்கும்.
திங்கள் அரவு நதி துன்றும் சடிலர் - சந்திரன் சர்ப்பம் கங்கை என்பன செறிந்த சடையார். சடிலம் - சடை.

---

56. திரியும் நரியும் எரியும் உரிமை தெரிய - இரைதேடித்திரியும் நரியும் அக்கினியும் தேகத்தை எனக்கு எனக்கு என்று உரிதாக்கொண்டாடும்படி.
எருமை கடவு - எருமைக்கடாவைச் செலுத்துகின்ற. கடவுதல் - செலுத்துதல்.
திரிசூலன் கறுவி இறுகு கயிறொடு உயிர்கள் கழிய முடுகி எழு காலம் - இயமன் சினந்து முறுகிய பாசக்கயிற்றோடு உயிர்போகும்படி நெருங்கி எழுந்துவருங் காலத்தில்.
விரவி அணுகாதே - என்முன் நெருங்கிவராமல்.
செறிவும் அறிவும் உறவும் அனைய - நிறைவும் அறிவும் உறவும்போன்ற.
பரிய வரை - பருத்த மலை, இமயமலை.
பழனம் உழவர் கொழுவில் எழுது - வயலிலே உழுபவர் கலப்பையினால் உழுகின்ற.
வெருவுதல் - அஞ்சுதல்.
அரிய கிரியை உருவ எறிவோனே - பெரிய கிரவுஞ்சமலையை ஊடுருவும்படி வேற்படையை எறிபவரே.
அயிலும் மயிலும் அறமும் நிறமும் அழகும் உடைய. அயில் - வேற்படை. அறம் - கருணை.

---

57. நத்திடுவேன் - விரும்புவேன், ஆவலோடு பின் செல்வேன்.
அவத்தினிலே இறத்தல் கொலோ - வீணில் இறந்துபோதலோ.
சகத்தவர் வசையில் படவோ - உலகத்தவரது இகழ்ச்சியில் அகப்படவோ.

பாதம் வைத்திடு ஐயா - குருவாய்வந்து திருவடிதீக்ஷை செய்வீராக ஐயனே. "கோவாய்முடுகி யடுதிறற்கூற்றங் குமைப்பதன்முன், பூவாரடிச்சுவடென்மேற்பொறித்துவை" என்றார் திருநாவுக்கரசு சுவாமிகள்.

தெரித்தெனை தாளில் வைக்க நீயே மறந்திடில் - அவ்வண்ணம் திருவடி தீக்ஷைசெய்து திருவடிப்பேற்றைக் கொடுக்காவிடில். தெரித்தல் - தெரிவித்தல்.

பால் மொழிக் குரல் ஓலமிட்டிடில் - பால்போன்ற இனிய வார்த்தையின் ஒலியைக்கொண்டு ஓலமிட்டிடில்.

யாரெடுப்பதென வெறுத்து அழ - யார் தூக்குவதென்று வெறுத்து அழும்படி.

சிந்தியாதோ - சித்தியாகாதோ, கைகூடாதோ.

ஓதம் உற்று எழு பால் கொதித்தது போல - பெருக்கெடுத்து எழுகின்ற பாற்கடல் பொங்கி எழுந்ததுபோல. ஓதம் - பெருக்கு.

எண் திகை நீச முட்டரை ஓட - கீழ்மக்களான மூடரை எட்டுத்திசைகளிலும் ஓடும்படி. திகை - திசை.

பானு சத்திகை - ஞானசத்தியாகிய வேற்படை ஏந்திய திருக்கரத்தை யுடைய.

ஓத மொய்ச் சடை - கங்கைசெறிந்த சடை. ஓதம் - நீர்ப்பெருக்கு.

உற்று அமர் - பொருந்தி இருக்கின்ற.

மா தினைப் புனம் மீது இருக்கும் மை வாள் விழிக் குற மாதினை - அழகிய தினைப்புனத்தினகண் வீற்றிருந்த கருமையும் பிரபையும் பொருந்திய கண்களையுடைய வள்ளிநாயகியாரை.

மாரன் வெற்றிகொள் பூமுடிக் குழலார் வியப்புற - மன்மதன் வெற்றியைப்பெறுகின்ற பாணங்களாகிய பூக்களை அணிந்த கூந்தலையுடைய பெண்கள் அதிசயப்படும்படி. மாரன் - மன்மதன்.

நீடு மெய்த் தவர் வாழ் - பெரிய உண்மைத் தவத்தர் வசிக்கின்ற.

---

58. கறைபடும் உடம்பு - இரத்தம் நிறைந்த உடம்பு. கறை - இரத்தம்.

வாயுவைக் கரும வசனங்களால் மறித்து அனல் ஊதி - பிராணவாயுவை ஆகருஷண ஸ்தம்பனாதிமந்திரங்களினாற் கும்பித்து மூலாக்கினியை எழுப்பி. கருமவசனங்கள் - கருமயோகிகள் உபயோகிக்கும் ஆகருஷண ஸ்தம்பனாதி மந்திரங்கள்.

கவலை படுகின்ற யோக கற்பனை மருவும் சிந்தை போய்விட - துயருறுகின்ற யோகசாதனைக்குரிய நியமங்கள்பொருந்திய சிந்தனை நீங்கி விட.

கலகமிடும் அஞ்சும் வோரச் செயல் மாள - கலகஞ்செய்கின்ற ஐந்து ஆசையும் அடியோடு கெட அவைகாரணமாகச சத்தாதி விடயங் களைப்பற்றி அழுந்தும் செயலும் மாள.

குறைவற நிறைந்த மோன நிர்க்குணமது பொருந்தி வீடுற - பூரணமாக நிறைந்த அத்துவிதமௌனநிலை பொருந்தி முத்தியடைய.

குருமலை - திருவேரகம், சுவாமிமலை. கூதளம் - கூதாளசசெடி.

கோமளம் பதம் உகளம் புண்டரீகம் - அழகிய இரண்டு பாதங்களாகிய தாமரைகள். கோமளம் - அழகு. உகளம் - இரண்டு.

சிறை தளை விளங்கு பேர்முடிப் புயலுடன் அடங்கவே பிழைத்து - சிறை சசாலையில் விலஙகு பூட்டியிருந்த தேவர்கள் அனைவரும் முடியை அணிந்த மேகமபோன்ற இந்திரனோடு ஒருமிக்கப் பிழைத்து. புயல்- மேகம.

திமிரம் மிகு சிந்து வாய்விட - கருமைமிகுந்த சமுத்திரம் ஒலிக்க. சிகரி கள் - மலைகள்.

திகிரிகொள் அநந்த சூடிகைத திருமால் - சக்கராயுததைத ஏந்தி ஆதி சேடனது முடியில விளஙகும விட்டுணு. அநந்தன் - ஆதிசேடன். சூடிகை - முடி.

பிறை மவுலி மைந்த, கோ என - பிறையணிந்த சடையுடைய சிவபெருமா னது மைந்தரே, உமக்கு அடைக்கலம என்று இரக்கக்குறி கூற.

மண்டு சூரனைப் பொருது ஏறி - நெருஙகிவந்த சூரனைப் போரில் வென்று. மண்டுதல - நெருஙகுதல்.

பெருகு மத கும்ப இலாளித கரி என - ஊற்றெடுக்கின்ற மதம்பொருந் திய மததகத்தினையுடைய அழகிய யானை என்று சொல்லும்படி. கும்பம் - யானைமததகம. இலாளிதம், இலளிதம் - அழகு.

பிரசண்ட வாரணப் பிடிதனை - வலிபொருந்திய யானையின்மகளை, தெய் வயானையை.

---

59. ஓல மறைகள் அறைகின்ற - வேதஙகள் பரம்பொருளென்று கோஷித் துச சொல்லுகின்ற.

மேலை வெளியில் ஒளிரும் - துவாதசாந்தவெளியில் விளஙகுகின்ற.

புணர்ந்தவர் - சார்ந்தவர்.

துரியம் கடந்தது - பிரமா விட்டுணு உருத்திரன் என்னும் மூன்றுக்கும் அப்பாற்பட்டு நாலாவதாயுள்ளது. துரியசிவம். இது சிவத்தின் தடத்தநிலை. இந்நிலைக்கும் அப்பாற்பட்டு விளங்கும் துரியங்கடந்த பொருள். துரியம் - நாலாவது.

போத அருவ சுருபம் - அதிசூக்குமசித்தாய். போதம் - சித்து. அருவ சுருபம் - அதிசூக்குமவடிவு.

சிவஞானம் சாலவுடைய தவர் - சிவஞானம் மிகவுடைய தவத்தர்.

மூல நிறைவு குறைவு இன்றி நின்றது - தனக்கொரு காரணமும் தன்னின் மேம்பட்ட வியாபகமும் தானொன்றுக்கு வியாப்பியமாதலும இல்லாது நின்றது.

சாதி குலமும் இலது. அன்றியும்,

அன்பா சொன வியோமம் சாரும் அனுபவர் அமைந்து அமைந்த மெய் வீடு, பரமசுகசிந்து - உமது அன்பா சொன்ன ஞானவெளியைச சேர்ந்த அநுபூதிமான்கள் ஒடுங்கிப் பொருந்திநின்ற மோட்சவீடு, பேரின்ப சாகரம்.

இந்திரிய தாப சபலம் அற வந்து நின் கழல் பெறுவேனோ - இத தன்மையுடைய உமதுதிருவடியை, இந்திரியஙகளினுல்வரும் துன்ப மாகிய சிறுமை ஒழியுமபடி, நான்வந்து அடைவேனோ? சபலம - சிறுமை.

குன்றெறி வேல - கிரவுஞ்சமலையைப் பிளந்த வேலையுடையவரே. எறிதல் - குததுதல், வெட்டுதல்.

வான விபுதா பதி - சுவர்க்கததிலுள்ள தேவர்களின் தலைவன், இந்திரன். விபுதர் - வானோர்.

வாச களப வர - வாசனைபொருந்திய கலவைச்சாந்தை அணிந்த மேலான வரே. களபம் - கலவைச்சாந்து. வரம் - மேன்மை.

துஙக மஙகல வீர - உயர்ச்சியான நன்மையையுடைய வீரரே.

கடக புய சிஙக - கஙகணந் தரிதத புயத்தையுடைய சிஙகமே.

சுந்தர வாகை புனையும் இரண அரஙகம் புஙகவ - அழகிய வாகைமாலையைத தரிக்கின்ற யுத்தகளத்தையுடைய தலைவரே. இரணம் - போர.

இமயம் பயந்த மின் - இமயமலை அரசன்பெற்ற பெண. பயததல் - பிறப்பித்தல்.

அகிலம் பரந்தவள் - எங்கும் நிறைந்தவள்.

திரிபுர ஆயி - மூன்று உலகஙகளுக்கும் தாயாயுள்ளவள்.

ஆலின் உதரமுள - ஆலிலைபோன்ற வயிற்றையுடைய.

பைஙகரும்பு - பசுமையான கருப்பஞ்சாறறை ஒத்தவள்.

வெண் நாவல் அரசு மனை வஞ்சி - திருவானைக்காவில் எழுந்தருளியிருக்குந் தலைவராகிய சிவபெருமானது மனைவியாகிய உமாதேவியார.

---

50. விண்டு விடாமல் உன் பதம் மேவும் - விட்டுவிடாமல் உமது திருவடி பொருந்தியிருக்கிற.

விஞ்சையர் - அறிஞர், ஞானிகள். விநாச முன் - அழிவுக்கு முன்பு.

கலிதீர - சிறுமைதீரும்படி. கலி - சிறுமை, துன்பம்.

வண் சிவஞான வடிவாகி - தெளிவான பதிஞானம் பெற்று. வண்மை - தெளிவு, உண்மை. வன்பதம் - நிலையானபதவி.

வந்து அருள் பாத மலர் - தேவரீர் வந்து திருவருளாகிய திருவடித் தாமரையை.

என் கணில் - எனது கண்ணில். தழல் வேணி - சிவந்தசடை.

தேடும் அன்பா சகாயா - தேடுகின்ற அன்பருக்குச சகாயா.

எந்தையா - எமது தந்தையா.

சுந்தர ஞான மென் குறமாது - அழகிய ஞானத்தையுடைய மிருதுவான வள்ளியம்மை.

---

61. சத்தி பாணீ - ஞானசத்தியாகிய வேற்படையைத திருக்கரத்திலுடையவரே.

தத்வ ஆதீ - தத்துவங்களுக்கு முதல்வரே.

முத்தி ஞாநீ - முத்திக்குக் காரணமான ஞானத்தை யுடையவரே.

விந்து நாத சத்து ரூபா - விந்துநாதவடிவாயுள்ள சததுப்பொருளே. சதது - காரிய காரணப்படுதலின்றி என்றும் ஓரியல்பாய நிற்பது.

ரத்தின தீபா - இரததின தீபம்போன்ற சோதியே.

தற்ப்ரதாபா - இயல்பாயப் பிரகாச முடையவரே. தத்+பிரதாபம்=சுயம் பிரகாசம். மாஞர் - பெண்களது. மாஞா - பெணகள்.

சவாது அகில்.

பசசை பாடீரம் பூஷித - வாசனைபொருந்திய சந்தனமணிந்த. பாடீரம் - சந்தனம். பூஷிதம் - அலங்கரிப்பு. பசசை - வாசனை.

பட்டிமாடு - கட்டாமாடு, விடுகாலி.

உலோகித பத்ம சீர்பாதம் - செந்தாமரைபோன்ற அழகிய திருவடியை. உலோகிதம் - சிவப்பு.

அத்ர தேவ ஆயுதா - அஸ்திரங்களுக்கெல்லாம் முதன்மையான வேற்படையையுடையவரே.

சுரர் உக்ர சேஞபதீ - தேவர்களுடைய பயங்கரப்படத்தக்க படைத்தலைவரே.

சுசி அர்க்ய சோமாசியா - அக்கினியிலே சொரியும் அர்க்கியததையுடைய சோமயாகத்திற்குக் கர்த்தாவே. சுசி - அக்கினி. அர்க்கியம் - தீர்த்தம்விடுதல். சோமம் - ஒரு யாகம். யாசி - கர்த்தா.

குரு சம்பிரதாயம் - குருபாரம்பரிய உபதேசநியமம்.

அர்ச்சன ஆவாகஞ - பூசையிஞல் அழைக்கப்படுகின்றவரே.

வயலிக்குள் - வயலூர் என்னும் ஸ்தலத்தில்.

புய அட்சமாலாதரா - புயத்தில் அட்சமாலையைத் தரித்தவரே. அட்சமாலை-உருத்திராக்கமாலை.

சித்ர கோலாகலா - அழகிய ஆடம்பரத்தையுடையவரே.

வீரலக்ஷ்மி சாதா - வீரலக்குமி விளங்கப்பெற்றவரே. சாதம் - பிறப்பு.

ரதா - மகிழ்ச்சியுடையவரே, இனிமையுடையவரே.

பல திக்கு பாலா - பலதிக்குகளையும் காக்கின்றவரே. பாலனம் - காத்தல்.

சிவாகம தந்திர போதா - சிவாகமநூலைப் போதிக்கின்றவரே. தந்திரம் - நூல்.

சிட்ட நாதா - மேலான தலைவரே. சிட்டம் - பெருமை.

சிராமலை - திருச்சிராப்பள்ளி.

மகா விருத - பெரிய வளர்ச்சியுடைய. விருதம் - வளர்ச்சி.

தெர்ப்பை ஆசார - தெர்ப்பை ஆசனமே ஆசாரமாகக் கொண்ட.

---

62. இனி உடல் விடுக முடியாது - இனி உடலோடுகூடி வாழ முடியாது. விடுதல் - விள்ளுதல், தழுவல்.

எரி புவி - அக்கினியும் பூமியும்.

கடன் உனது, அபயம், அடிமை உன் அடிமை - (என்னைக் காப்பது) உனது கடனாகும். (உனக்கு) அடைக்கலம். தமியேன் உனது அடிமையாவேன்.

விழு திகழ் அழகி - நன்மைவிளங்குகின்ற அழகுடையவள். விழுமை-நன்மை.

விரி தலம் - விரிந்த பூமி.

குலகிரி - அட்டகுலபர்வதம்.

நடம் மருவும் - நடனத்தைச்செய்கின்ற.

63. இருளும் ஓர் கதிர் அணுக ஒண்ணாத - இரவும் பகலும் கிட்ட இயலாத. கேவலசகலமற்ற. (பார். பாட்டு. 28.)

பொன்னிடம் அது ஏறி - சந்திரகாந்தி விளங்கும் பிரமரந்திரகமலம்பொருந்தி.

இரு நோய் - நல்வினை தீவினையின் விளைவாகிய சஞ்சிதவினை.

மலம் ஒழிய - ஆணவமலங் கெட.

சுடா இலகு மூலக ஒளி மேவி அருவிபாய இன் அமுதம் ஊற - ஒளி விளங்கும் மூலாதார அக்கினிபொருந்தி அருவிபாயும்படி இனிய அமுதம் ஊற.

உன் அருள் எலாம் எனதளவாக அருளி - உன்னுடைய அருளெல்லாம் எனக்குக் கிடைக்கும்படி அருளி.

சிவம் மகிழுவே பெற அருளி - சிவத்துவத்தை மகிழ்ச்சியோடு பெறும்படி அருளி.

பரவை வான் மதி - கடலையும் ஆகாயத்தின்கணுள்ள சந்திரனும்.

பரமராசியர் - பரமர் ஆசிரியா. [டாடல்.

மறை குலாவிய - வேதங்கள் கொண்டாடுகின்ற. குலாவுதல் - கொண

---

64. இருவினை - நல்வினை தீவினையாகிய ஆகாமியம்.

வருவினை - ஆகாமியவினையின் விளைவாகிய சஞ்சிதவினை.

இருள் பிணி துஞ்ச - அவித்தையாகிய நோய் வலிகுன்ற.

மலம் மாய - ஆணவமலம் கெட.

இசைகொடு தங்க புகழ் கூறி - இசையுடன் வெற்றிப்புகழை ஓதி.

திருமுக சந்திர - சந்திரனைப்போன்ற அழகிய முகத்தையுடையவரே.

முருக கடம்ப - முருகக்கடவுளே கடப்பமாலையணிந்தவரே.

சிவ சுத - பரமசிவனது குமாரரே.

தெளிவு உறு நெஞ்சு - அமைவுபொருந்திய என்மனதில். தெளிவு - மன அமைவு.

திகழ நடம செய் - விளங்கும்படி ஆனந்த திருநடனத்தைச் செய்யும்.

மருதொடு கஞ்சன் - மருதமரத்தோடு கஞ்சனையும். கஞ்சன் - கிருட்டினனது மாமன்.

வதை புரிகின்ற நிசிசரர் குன்ற - கொலைசெய்கின்ற அசுரர் அழியும்படி.

விடை உந்தும் அமலன் - இடபத்தைச் செலுத்தும் பரமசிவன்.

அருள் செறி பந்தணையில் - திருவருள்நிறைந்த திருப்பந்தணைநல்லூரில்.

இரு மங்கை அமளி நலங்கொள் - தெய்வயானை வள்ளிநாயகி என்னும் இரு சத்திகளின் சயனசுகத்தை (இகபரசுகத்தை அளித்தலாகிய நலத்தைக்) கொண்டிருக்கும்.

---

65. தாழ் சடை - நீண்டசடை, தூங்கிய சடை.

துயத்தல் - உண்ணுதல்.

காயம் ஒறுத்தும் - உடம்பை வாட்டியும். உண்டிசுருக்கல், வெயில்நிலை நிற்றல் முதலியவற்றால் வருத்துதல்.

காசினி - பூமி.

சீவன் ஒடுக்கம் பூத ஒடுக்கம் தேற உதிக்கும் - அந்தக்கரணஒடுக்கமும் பஞ்ச பூதங்களின ஒடுக்கமும் தெளியும்படி தோன்றும். அந்தக்கரண ஒடுக்கம் - விடயங்களைப்பற்றி நிச்சயித்து அபிமானித்துச் சிந்தித்துநிற்கும் மனம் புத்தி அகங்காரம் சித்தம் என்னும் அந்தக்கரண வாசனைநீக்கம். பூத ஒடுக்கம் - விடயங்களை அபகரிக்குஞ் சோத்திராதி பஞ்சேந்திரியங்களுக்கும், அபகரித்தபோது வசனகமனதான விசர்க்கானந்தங்களை விடயீகரிக்கும் வாக்காதி கன்மேந்திரியங்கள் ஐந்துக்கும் ஆதாரமாய்நிற்கும் பூதங்களின் ஒடுக்கம்.

பர ஞான தீப விளக்கம் காண - மேலான ஞான ஒளியைத் தெரிசிக்க, திருவருளைத் தெரிசிக்க. கருவிப்போதங்கழன்ற சுத்தாவத்தையில் அருளாலே தன்னை அறிந்து, தனக்கொரு சேட்டை அற்று, அந்த அருளே தனக்கு ஆதாரமாய், அவ்வருளிலே தான் அசைவறநின்ற இடம் அருட்டரிசனம்.

பாவ நிறத்தின் தாருக வர்க்கம் - கருநிறங்கொண்ட தாரகனும் அவனது வர்க்கமும்.

உக்ரம் தரு - கோபங்கொண்ட.

பாணிகள் கொட்டும் - கைகளைக் கொட்டும்.

தூவிகள் - அன்னங்கள்.

சாலி வளைக்கும் - நெல்வயல்கள் சூழ்ந்திருக்கும்.

---

66. மாயம் மிகுந்த ஊசல் சுடு நாறு குரம்பை - வஞ்சகம் நிறைந்த ஊழலும் இரத்தமும் நாறுகின்ற குரம்பை. ஊழல் - அழுகல்நீர். சுடு - சுடுவன், இரத்தம். சுடு என ஈறு கெட்டது. குரம்பை - குடில, கூடு.

நாலுமுகன் றனால் உற்றிடு கோலம் - பிரமனால் உண்டாக்கப்பட்ட வடிவம்.

கூளசசடம் - கஞ்சற் சடம்.

ஈதை உகந்து புவிமீதே - இதனைவிரும்பிப் பூமியிலே.

கூசு அப்பிரமாண பிரபஞ்ச மாயக் கொடு நோய்கள் அகன்று - கூச்சத்தை விளைவிக்கும் எல்லையில்லாத பிரபஞ்ச மயக்கமாகிய கொடிய நோய்களில் அகப்படாது தப்பி. அப்பிரமாணம் - எல்லைக்குட்படாமை. உடற்பற்றால் நான் என்பது உண்டாக எனது என்னும் பிரபஞ்ச மயக்கம் உண்டாம். அதனால் நான் எனது என்பது அற்று திருவடி அடையுமாறு அருள்செய்வாய் என்பதாம்.

கோலக் கழல் - அழகிய பாதம்.

சேனக் குரு கூடலில் - சமணரது குருவுக்கு இடமாகிய திருவாலவாயில். சேனர் - சமணர்.

சேனை சமணோர் கழுவின்கண் மிசை ஏறத் திர - சமணர்கூட்டத்தவர் கழுவின்கண் ஏறவும் (அவர்கள் முற்றாய்) ஒழியும்படியும்.

மீனக் கொடியோன் உடல் துன்று தீமைப் பிணி - மகரக்கொடியை யுடைய கூன்பாண்டியனுடலைப் பிடித்த கொடிய சுளிர்சுரம். துன்றுதல் - பிடித்தல், பற்றுதல்.

உவததல் - மகிழ்தல்.

கானச சிறு மானை - குறிஞ்சிநிலத்துள்ள இளம்பெண்ணை, வள்ளிநாயகியாரை. கானம் - குறிஞ்சிநிலம்.

ஏனல் புனம் - தினைப்புனம்.

காதல் கிளி - காதலைத்தருகின்ற வள்ளிநாயகி.

கணி - வேங்கைமரம்.

காழிப்பதி - சீகாழி.

---

7. மயல் பெருக - மயக்கம் அதிகப்பட.

அனல் அவிய - சூடு இல்லாமற் போக.

அனையு மனை - அன்னையும் மனைவியும்.

வெருவி அழ - அஞ்சி அழ.

செறியும் இருவினை கரணம் - பொருந்திய இருவினைகளும் அந்தக்கரண விருத்தியும்.

மருவு புலன் ஒழிய - தாக்குகின்ற பஞ்சப்புலன்களது செயலும் ஒழிந்து போக

பொதியவரை முநிவன் - அகத்தியர்.

அலரி - சூரியன். நமன் - இயமன். மகபதி - இந்திரன்.

முளரி - அக்கினிதேவன். நிருதி - அட்டதிக்குப் பாலகரிலொருவன்.

நிதிபதி - குபேரன்.

வனமாலி - துளசிமாலையை அணிந்தோன், விட்டுணு. வனம் - துளசி.

நிலவு மறையவன் - கீர்த்தி விளங்கும் பிரமன்.

நிருதன் உரம் அற - சூரபன்மனது வலிமை அழிய. நிருதன் - இராக்கதன். மறி பரசு - மான் மழு.

மதலை தவழ் உததியிடை வரு தரளம் மணி புளினம் மறைய உயர் கரையில் - தோணி செல்லுகின்ற கடலிலிருந்து வரும் முத்துக்களாகிய மணிகள் மணற்குன்றுகள் மறையும்படி ஓங்கி உயர்ந்திருக்கின்ற அலைவாய்க்கரையாகிய செந்தூரில்.

68. பாதி மதி நதி போதும் அணி சடை நாதர் - இளம்பிறையையும் கங்கையையும் கொன்றைமாலையையும் தரித்த சடையையுடைய பரமசிவன்.

பாகு கனி மொழி மாது - பாகையும் கனியையும் ஒத்த இனிய மொழியையுடைய பெண்.

வருடுதல் - தடவுதல்.

காதும் ஒருவிழி காகம் உற அருள் - கெடுக்கப்பட்ட ஒரு கண்ணைக் காகம் அடையும்படி செய்த. இராமரும் சீதாபிராட்டியாரும் ஓரிடத்திருந்தபோது காகாசுரனென்பவன் சீதையைத் தாக்கிய காரணத்தால் இராமர் பிரயோகித்த தெர்ப்பைப்புல்லாகிய அம்பினால் ஒரு கணணிழந்து பின்னர் அவர் சகாயத்தால் அதனைப்பெற்றான் என்பது இராமாயணகதை.

ஆதி அயன் ஒடு தேவர் சுரர் உலகாளும் வகையுறு சிறைமீளா - மேலான அயனோடு தேவர்களும் சுவர்க்க உலகத்தை அரசாளும்படி (அவர்கள்) அடைந்த சிறையை மீட்டு.

சூதம் - மாமரம். வாரி - சமுத்திரம்.

வேலை விட வல பெருமாள் - வேலாயுதத்தை விடுதற்கு வல்ல பெருமாள். (உக்கிரகுமாரபாண்டியன்.)

---

69. மனத்து இரைந்து எழும் - மனத்தினும் வேகமாய் இரைந்து எழுகின்ற.

குஞ்சி - மயிர்.

மலர்க்கண் இருள் அண்டு ஆகி - பூப்போன்ற கண்கள் இருள் அடைந்து. அண்டுதல் - சேர்தல், அடைதல்.

தாய் மனையாள் மக வெறுத்திட அங்கு இளையோருடன் யாவரும். மகவு - பிள்ளை.

எனைக் கடந்திடு பாசமுமே கொடு - என்னைச் செயிக்கும் பாசக்கயிற்றையுங் கொண்டு.

கனத்த செந்தமிழால் - மேன்மையுற்ற செந்தமிழ்ப் பாக்களினால்.

நினைக்க - துதிக்க.

உனது ஆர் அருள் கருத்திருந்து உறைவாய் எனது ஆர் உயிர் துணையாக.

சேவலும் மா மயில் விடும் - சேவலும் பெரிய மயிலுமாகவிடுகின்ற.

அனத்தனும் - அன்னப்பட்சியை வாகனமாகவுடைய பிரமனும். அனம் - இடைக்குறை.

கமல ஆலயம் மீது உறை திரு கலந்திடும் மால் - செந்தாமரை மலராகிய கோயிலின்மீதிருக்கின்ற இலக்குமியையுடைய திருமாலும்.

அடி நேடிய அரற்கு - அடிமுடி தேடிய பரமசிவனுக்கு. நேடுதல் - தேடுதல்.

அரும்பொருள் - பிரணவத்தின் அரும்பொருளாகிய உரையைச்சொல்லிய.

அறந்தனையும் தருவோர் கன பூசுரர் - தருமங்களையுஞ் செய்வோராகிய சிறந்த அந்தணர்.

நினைத தினம் தொழுவார் அமர் - நின்னைத் தினமுந் தொழுவாராய் வசிக்கின்ற.

ஆய் புரி அருள் செறிந்து - தாய்செய்யும் அன்பினும் மிகுந்த அருளைச செறிந்து.

அவிநாசி - கொங்கநாட்டிலுள்ள ஒரு ஸ்தலம்.

---

ஈ - ஈதல். பீளை - கண்ணழுக்கு. துன்றுதல் - நெருங்குதல். கோழை - கபம். சோரி - இரத்தம்.

தூல பங்க காயம் - அழிவுள்ள தூலசரீரத்தை. பங்கம் - அழிவு.

ஆலம் உண்ட கோன் - விஷத்தையுண்ட பரமசிவன்.

அகண்ட லோகம் உண்ட மால்-சகல உலகங்களையும் விழுங்கிய விட்டுணு.

விரிஞ்சன் - பிரமா. ஆரணம் - வேதம். ஆனனம் - முகம்.

அம் கை ஆடல் வென்றி வேலும் - அழகிய திருக்கரத்திற் பொருந்தியிருக்கும் வெற்றிவேலையும்.

வால சந்திர சூடி - இளம்பிறையணிந்த பரமசிவனும்.

சந்த வேத மந்திர ரூபி - சந்தங்களையுடைய வேதங்களின் மந்திரவடிவி.

அம்பை வாணி பஞ்சபாணி - பார்வதி. பஞ்சபாணம் - ஐந்து அத்திரம்.

மாயை ஐந்து - அசுத்தமாயைக்குரிய காலம், நியதி, கலை, வித்தை, இராகம் என்பன.

வேகம் ஐந்து - மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்துபொறிகள்.

நாதம் ஐந்து - சிவம், சத்தி, சாதாக்கியம், ஈசம், சுத்தவித்தை என்னுஞ் சிவதத்துவம்.

வாழ் பெருஞ் சராசரங்கள் - வாழ்கின்ற பெரிய சராசரங்கள். சராசரம் - இயங்குதலுள்ளதும் இயங்குதலில்லதுமாகிய பிரபஞ்சம். சிவதத்துவமுதற் பிருதிவியீறாகிய சமஸ்த சேதனசேதனப் பிரபஞ்சங்களிற் சுப்பிரமணியப்பெருமான் வியாபித்துள்ளார் என்பது பொருள்.

அன்புகூர வந்த வேலை - அன்புற்றுவந்த சமயத்தில். வேலை - காலம்.

ஏக தந்த யானை - ஒற்றைக் கொம்பையுடைய யானைமுகத்தவராகிய [illegible]

வீரமங்கை - வீரலக்ஷ்மி. வாரி மங்கை - கங்காதேவி.
பாரின் மங்கை - பூமிதேவி.
மேரு மங்கை - உத்தரமேரூர் என்னும் ஸ்தலம்.

---

71. புற்புதம் என் நாம - நீர்க்குமிழி என்று சொல்லப்படும்.
பொய்க் குடில் - அசத்தியமான உடம்பும்.
குலாவு மனையாளும் - கொண்டாடும் மனையாளும்.
புந்தி சலியாத - புத்தி இளைத்தோயாத.
கற்பம் - ஊழிகாலம், உலகமுடியுங்காலம்.
மாய நிட்டை - பொய்யான நிட்டை.
சர்ப்பகிரி - கொங்குநாட்டிலுள்ள திருசெங்குன்றூர். நாகாசலம், திருச்செங்கோடு என்றும் பெயர்.
சக்ர கதை பாணி - சக்கரத்தையும் தண்டாயுதத்தையுங் கையிற் கொண்ட விட்டுணு.
தர்க்க சமண மூகர் - வாதுசெய்யுஞ் சமணராகிய ஊமைகள்.
காழி மறையோன் - சீர்காழித் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.
வெற்பு அடியின் - மலைசசாரலில்.
கற்றை மறவாணர் - மயிர்க்கற்றையையுடைய வேடர். கற்றை - மயிர் தொகுதி.
கைத்த அசுரேசர் மொய்த்த குலகால - பகைத்த அசுரர்களது நெருங்கிய குலத்துக்குக் காலனே.
கற்பதரு நாடர் - சுவர்க்கலோக தேவர்களுக்கு.

---

72. இயல் இசையில் உசித வஞ்சிக்கு அயர்வாகி - அழகிலும் வார்த்தையிலும் முதன்மையான பெண்களில் மயங்கி. இயல் - இலட்சணம், அழகு.
மயில் தகர் கல் இடையர் - மயிலும் ஆடும் நிறைந்த குன்றினிடத்தில் வசிக்கும் வேடுவர். தகர் - ஆடு.
வனசம் - தாமரை.

73. வரி ஆர் - வரிபொருந்திய.
மட மாதர் மகவாசை தொடர்ந்தும் அதுவாகி - மடமைக்குணம் பொருந்திய பெண்களிலும் பிள்ளைகளிலுங் கொண்ட ஆசையான து தொடர்பாகி.
இருபோது நைந்து - பகலும் இரவும் துன்புற்று. நைதல் - வருந்துதல்.

பரிபாலனஞ் செய்து - காப்பாற்றி.

பரம ரசரனதன.

அரி, கேசவன் - விட்டுணு. அலைவாய் - திருச்செந்தூர்.

---

4. எதிர இலாத பத்தி - ஒப்பில்லாத அன்பு.

இனிய தாள் நினைப்பை - இனிய திருவடியின் சிந்தனையை.

இருபோதும் இதய வாரிதிக்குள் உறவாகி - பகலும் இரவும் இருதய மாகிய கடலின்கணே பதியச்செய்து.

எனதுளே சிறக்க - எனதுள்ளே மேற்படும்படி.

கனக மேரு - பொன்மயமாகிய மேருமலை.

மதுர வாணி உற்ற - இனிய ஒலிபொருந்திய. வாணி - வார்த்தை; ஆகுபெயர்.

வழுதி கூன் - பாண்டியனது கூனலை

---

5. புலையனை மா ஈனன்.

தாமீகன் - தாமதகுணத்தையுடையவன். காபோதி - குருடன்.

கொடையிலாத ஊதாரி - சற்பாத்திரதருமமின்றி வீணசெலவுசெயபவன்.

வேமாளி - பேயன். குல பாதன் - குலக்கேடுசெய்வோன்.

சிலை - வில. வாளி - அம்பு.

வீறு திறமி ஆன - மிக்க வலிமையுடையவராயிருந்த. திறம் - திறமை, வலிமை.

அமர் அது ஆடியே - யுத்தத்தைச செய்து.

---

6. சால நெடுநாள் - மிகவும் நீடித்தகாலம்.

சாமளவாதாக வாந்து - சாகுமெல்லையுடையதாக வந்து.

சாதகமுமான பின்பு - சனனமான பின்பு.

பாதமலர் ஒன்றுசேர - திருவடித்தாமரையைச்சேர்ந்து ஐக்கியப்படும்படி.

ஆறு சடை நாதர் - கங்கையைச சடையில் அணிந்த தலைவரும்.

திகள் ஆடு அரவு பூணர் - சந்திரனையும் படத்தைவிரிததாடுகின்ற சர்ப்பத்தையும் ஆபரணமாகவுடையவருமாகிய பரமசிவன்.

மடு வாயில் - குளத்தினிடத்தில். மடு - குளம். வாய் - இடம்.

மூலம் என - ஆதிமூலமே என்று அழைக்க.

கோல மலர் வாவியெங்கும் மேவும் புனம் - அழகிய மலர்கள்நிறைந்த சுனைகள் பலவிடங்களிலும் பொருந்தியிருக்கின்ற தினைப்புனம்.

கோவை அமுது ஊறல் உடை - கொவ்வைப்பழம்போன்ற அதரத்தின்கணுள்ள அமுதைப் பானஞ்செய்த, வள்ளிநாயகியாருக்குப் பேரானந்தப்பேற்றை அருளிய.

கோடை நகர் - கொங்குநாட்டிலுள்ள திருச்செங்கோடு.

---

77. விழு தாது எனவே உடலை கருதாது - ஒழுகுகின்ற சுக்கிலதத்தினால் உண்டானதென்று தேகத்தைச் சிந்திக்காமல.

வினை சோவதுவே புரி - வினைவந்து சேரத்தக்க செயல்களையேசெய்கின்ற.

தாக விருதாவினிலே - இசையுடைய வீண்செயலிலே.

உலகாயதம் மேவிடவே - உலகாயதத்தன்மை மேற்பட. உலகாயதம் - தேகமே ஆன்மா, போகமே மோட்சம் என்னும் மதம்.

அழுது ஆ கெடவே - அழுது அந்தோ கெடும்படி.

நாள் அடைவே கழியாது - வாழ்நாள்களை முறையே கழியாதபடி.

உறவாய் மருவும் ஓர் அழியா வரம். வரம் - வரத்தை.

துகள் தீர் பரமே தரு - குற்றமற்ற பரமுத்தியைக் கொடுக்கின்ற.

எது தா அது தா - எது தரத்தக்கதோ அதனைத் தருவாயாக.

தனையே இணை - தனக்குத் தானே ஒப்பான.

நாகை - நாகபட்டணம.

---

78. சீரான கோல கால நவமணி மாலை அபிஷேக பார - சிறப்பான சம்பிரமத்தோடு கூடிய நவரத்தின மாலையினால் அலங்கரிக்கப்பட்ட பாரமான முடிதரித்த. கோலாகலம் - கோலகாலம் எனமாறியது. நவமணி - ஒன்பது இரத்தினம். அபிஷேகம் - கிரீடம்.

சேவைசெயும் - வழிபடுகின்ற.

சீராடு வீர மாது - சிறப்பு விளங்குகின்ற வீர இலக்குமி.

நீளும் வரி அளி - நீண்ட வரிகளையுடைய வண்டினங்கள்.

சீராக மோதும் நீப பரிமள - சிறப்பாக மோதுகின்ற கடப்பமலர் வாசனை பொருந்திய. நீபம் - கடம்பு. பரிமளம் - வாசனை.

ஆராத காதல் - நிறைவுபெறாத காதலையுடைய. ஆர் - நிறைவு.

சீமூதம் ஊர் வலாரி - மேகத்தை வாகனமாகச் செலுத்தும் இந்திரன். சீமூதம் - மேகம். ஊர்தல் - செலுத்துதல். வலாரி - இந்திரன்.

ஆதார பூதமாக - ஆதாரமாய்ச் சேர்ந்திருக்க. பூதம் - இருத்தல், அடைதல்.

ஆராயும் நீதி வேல் - ஆராயப்படுகின்ற நீதியையுடைய வேல்.

மெய்ஞ்ஞான அபிராம தாப வடிவம். தாபவடிவம் - பிரதாபவடிவம், பிரகாசம்பொருந்திய சொரூபம்.

ஆபாதன் - பாதகன், துரோகி.

ஏர் ஆரும் - அழகுநிறைந்த.

மீதேறி - வெள்ளியம்பலத்தின் மீதே நின்று.

மாறி ஆடும் - கால்மாறித திருநடனஞ்செய்யும்.

ஏழேழுபேர்கள் கூற வரு பொருளதிகாரம் ஈடாய - சங்கப்புலவர்கள் நாற்பத்தொன்பதின்மரும் உரைகூறவந்த அன்பினைந்திணைக் களவியல் எனனும் பொருளதிகாரத்திலுள்ள வலியை ஆராய்வுசெய்யும்படி. ஈடு - வலி, பெருமை.

ஊமர்போல வணிகர் இல் ஊடாடி - உருத்திரசருமன் என்னும் நாமமுடைய ஊமைப்பிள்ளையாக வணிகா இல்லததிற் பயின்று.

ஆலவாயில் விதி செய்த - மதுரையிற் கிரமஞ்செயத.

விசார தீர - ஆராய்வில் வல்லவரே.

மூன் வீய நினையவன் ஈடேறுமாறு - முன்னொருநாள் இறக்கும்படி சபதஞ்செய்த அருச்சுனன் இறவாது மேமபட. வீதல் - இறத்தல்.

கூர் ஆழியால் பானு மறைவுசெய் கோபாலராயன் நேயமுள - கூரிய சக்கரப்படையினுற் சூரியனை மறைவுசெய்த கோபாலருக்கு முதல்வராகிய கிருஷ்ணரது அன்புநிறைந்த.

கோடாமல் - குறைவில்லாமல். வயலி - வயலூர். கோனாடு - சோழநாட்டிலுள்ள நாடுகளிலொன்று.

79. எலுப்புத் தோல் மயிர் நாடிகுழாம் மிடை - எலும்பு தோல் மயிர் நாடிக்கூட்டம் நிறைந்து.

இறுக்குச சீ புழுவோடு அடை மூளைகள் - நெருங்கிய சீழ் புழுவோடு பொருந்திய மூளைகளும்.

நீர் மலம் மேவிய கும்பி ஓடை - சலமும் மலமும நிறைந்த சேற்றுத் தடாகம். கும்பி - சேறு.

இளைப்பு - தொய்வு. உளைப்பு - தேகக்குடைசசல். இரைப்பு - ஒருநோய்.

கேவல மூலவியாதி - இழிவான மூலவியாதி, துன்பததைக் கொடுக்கும் மூலவியாதி.

குலைப்புக் காய்கனல் - நடுக்கத்தோடுகூடிய காய்சுரம.

அளைப்புக் காதடை - துவாரததையுடைய காதடைப்பு.

விசூசிகை - ஓர்நோய்.

குருட்டுக் கால்முடம் - குருடோடு கால்முடம்.

உள் ஊடு அறு கண்டமாலை - உள்ளேயிருந்து அறுக்குங் கண்டமாலை.

குடிபுக்கு ஈனம் இதே - நிலைதத இடமாகக்கொண்ட இழிவான இந்த உடலையே. ஈனம் - இழிவு.

சதமாமென எடுத்து - நித்தியமென்றெடுத்து.

பாழ் வினையால் - கேட்டை வருவிக்கும் வினையால்.

ஞான சதாசிவ அன்பு - ஞானத்தோடு கூடிய நிலைபெற்ற நன்மையமைந்த அன்பு.

கெலிக்கப் போர்பொரு சூரர் குழாம் உமிழ் இரத்தம் - அஞ்சத் தக்கதாகப் போர்செய்யும் அவுணர்கூட்டத்திலிருந்து சொரியும் இரத்தம்.

சூர் கிரி - சூரனும் கிரவுஞ்சமலையும்.

கண்ட வேலா - செய்த வேலையுடையவரே.

கிளர் பொன் தோளி - விளங்குகின்ற பொன்போன்ற தோளையுடைய உமாதேவியார்.

சராசர மேவியெ அசைத்துப் பூசைகொள் ஆயி - சரம் அசரமாகிய பிரபஞ்சத்தைப் பொருந்தி அவைகளை இயக்கி வழிபாடுகளை ஏற்றருளும் உலகமாதா.

கிழப் பொற் காளை - முதிர்ந்த அழகிய இடபம்.

வலித்தத தோள் மலை இராவணனானவன் எடுத்தபோது - இராவணனானவன் மலையை உயர்த்தித் தோளில் வைத்தபொழுது.

பரமாகிய - மேன்மையான.

---

30. ஊடு ஊடு நெக்கு அவசமாய் ஆதரக் கடல் ஊடுற்று - இடையிடையே உருகிப் பரவசப்பட்டு அன்புக்கடல் பொருந்தியும். ஊடு - நடு, இடை.

அமைவு இல் கோலாகலச சமய பாதகர்க்கு - அடக்கமில்லாத ஆரவாரத்தோடுகூடிய சமயவாதிகளாகிய துரோகிகளுக்கு.

மோன முத்திரை நாடி - முப்பத்தாறு தத்துவங்களையுங் கடந்து, அறிவுதாமென்று தம்மை அருளால் அறிந்து, அருள் தாமாயிருந்து, பரையாகி, பரைநீக்கத்தில் ஆனந்தமயமாகி, ஆனந்தத்துள் அதீதப்படும் அத்துவிதமான மௌனநிலையை நாடி.

பிழைபடா ஞான மெய்ப்பொருள் பெறாதே - உண்மைஞானமாகிய மெய்ப்பொருளைப் பெறாது.

வினைப் பெரிய ஆதேச புற்புதமாய பிறவி வார் ஆகரச சுழியிலே - வினையினால் வரும் மிக வேறுபாடான நீர்க்குமிழிபோன்ற பெரிய பிறவிச சமுத்திரச சுழியில்.

பழைய பாகீரதிப் படுகைமேல் வாழ்வு எனப் படியும் - பழைய கங்கையாகிய சயனத்தில் இருக்கை என்று சொல்லும்படி அமர்ந்து.

ஆறு ஆய் இனம் தன சாரம் பருகும் - ஆறு தாய்மார்களாகிய கார்த்தி

ஆறு ஆனனச் சிறவ - ஆறுமுகங்களையுடைய குமாரரே.

சோணாசலப் பரம - அருணாசலத்தில் எழுந்தருளியிருக்குங் கடவுளே. சோணம் - சிவப்பு.

வித்தக வேளே - சாதுரியப்பாட்டையுடைய குமாரரே. வித்தகம் - சாதுரியம்.

பொழுது சூழ் போது வெற்பு இடிபடா - சூரியன் வலம் வரும் மேருமலை இடிபட்டு. சூழ்போதல் - வலம்வருதல்.

பார் முதல் பொடிபடா ஓட - பூமி முதலியவும் பொடிபட்டுப் போய்விட.

முத்து எறி மீனப் புணரி - முத்துக்களைத் திரையெறிகின்ற மீன்கள் வசிக்கும் சமுத்திரம்.

---

81. எத்தனை கோடி கோடி விட்டு உடல் ஓடி ஆடி எத்தனை கோடி போனது - எத்தனை கோடிகோடி உடல்களை விட்டுப் பின்னும் வேறு உடல்களிற் சென்று சஞ்சரித்து இப்படி எத்தனை கோடி அழிந்தது.

மோக போகம் - ஆசையால் வரும் அனுபவம்.

இனிமேல் யோசித்திடில்.

சீசீ குத்திர மாயை சிக்கினில் ஆயும் மாயும் - அருவருக்கத்தக்க பொய்யான வஞ்சக மாயைச் சிக்கில் அகப்பட்டு அழியும்.

அடியேனை - (ஆசையால்) அடியேனுக்கு.

சித்தினில் ஆடல ஓடு - அட்டமாசித்தியோடு.

முத்தமிழ் வாணர் - முத்தமிழ்ப்புலவர்.

சித்திர ஞானபாதம் - மேலான ஞானபாதத்தை. ஞானபாதம் - சாயுச்சியம் பெறுதற்கேதுவாயுள்ள மார்க்கம்.

நிர்த்தம் அது ஆடும் - நடனத்தைச்செய்யும்.

நிட்களரூபா - அருவத்திருமேனியுடையவர்.

பசசுருவான - பசசைவடிவமாயிருக்கின்ற. மூணு - மூன்று.

பைத்தலை நீடும் ஆயிரத் தலை மீது பீறு பத்திரபாத - படத்தை எடுத்தலிருந்த ஆதிசேடனது ஆயிரந்தலையின்மேலுங் கீறுகின்ற வில்வப் பத்திரம்போலப் பிரிவினையுடைய அடிகளையுடைய.

பூகம் - கமுகு. செய்க் கயல் - வயல்களிலுள்ள கயல்மீன்கள்.

வேளூர் - வைத்தீசுரன்கோயில்.

---

82. ஆசார ஈனன் - ஒழுக்கமில்லாதவன். ஈனம் - குறைபாடு.

கோப அபராதி - கோபமாகிய குற்றமுடையவன். அநிருதம் - பொய்.

ஆசை விசார வெகுவித மோக ஆசரீத பரவசன் - ஆசையாகிய விசாரத்தால் வரும் வெகுவிதமான மோகம் முதலிய குற்றங்களைக் கைக்கொண்டு பரவசப்பட்டிருப்பவன். ஆசரிதத்ல் - கைக்கொள்ளுதல்.

ஆகாசம் நீர மண் அனல் வளி உருமாறி - ஆகாசம் முதலிய பஞ்சபூதங்களினால் உருவம் வேறுபட்டு (மாறி மாறி உடம்பெடுத்து.) வளி - காற்று.

மாசு ஆன நாலெண வகைதனை நீ நான் என்றுத அறிவு உளம் வாயாத - குற்றமுள்ள முப்பத்திரண்டு தத்துவங்களையும் நீயுமல்ல நானுமல்ல என்னும் அறிவுகிடையாத, தத்துவங்கள் பதியுமல்ல பசுவுமல்ல என்ற உணமைதெரியாத, பதி பசு பாச உண்மை தெரியாத.

மாதா பிதாவின் அருள் நலம் மாறு மகாரில் - மாதா பிதாவின் அன்பின் நன்மை மாறுதிருக்கும் மகக்ள்போல. மகார - மக்கள்.

வீசு ஆலம் வேலை சுவறிட - நஞ்சைக் கக்குகின்ற சமுத்திரம் வற்றும்படி.

மா சூரர் - பெரிய படைவீரர்.

வேதாள இராசி - வேதாளக் கூட்டம்.

அறை கூறி - போருக்கழைத்து

மேக ஆரவாரம் என அதிர் போர் யாதுதானர் - மேக ஆரவாரமென்று சொல்லும்படி அச்சத்தைத் தரும் யுத்தத்தைச செயயும் அவுணர். யாதுதானா - அவுணர்

கூசாது வேடன் உமிழ்தரு நீர ஆடி ஊன் உண எனும் உரை கூறுமல் ஈய, அவன் நுகர் தரு சேடம் கோதாம் என்றுமல் அமுதுசெய் வேதாகமம் ஆதி முதல் தரு கோ - நாணுது கண்ணப்பநாயனுர் கொப்பளித்த நீரிலே திருமஞ்சனமாடி, இறைச்சி உணவு என்னும் வார்த்தையைச் சொல்லாமற் கொடுக்க, அவனுண்ட எச்சிலைக் குற்றமென்றுகொள்ளாமல் திருவமுதுசெய்த வேதாகமங்கள் முதலியவைகளை அளிக்கும் முதல்வரே.

---

83. கலை மேவும் ஞானப்பிரகாசக் கடல் ஆடி - கலைகளாற் சொல்லப்படும் ஞானவிளக்கமாகிய கடலிலே முழுகி.

ஆசைக் கடல் ஏறி - ஆசையாகிய கடலினின்று கரையேறி,

பலமாய வாதில் பிறழாதே - பொய்யான பல வாதத்தில் மாறுபடாமல்.

பதி ஞான வாழ்வு - பதிஞானத்தோடு கூடிய வாழ்வு. பதிஞானம் - அனுபவஞானம். (பார். பாட்டு. 7.)

மாயக் குறமாது - அழகிய வள்ளியம்மை. மாயம் - அழகு.

சிலை வேட - வில்லேந்தித்த வேடனே.

திருவாணி கூடல் - இலக்குமியும் சரசுவதியும் வாசஞ்செய்கின்ற மதுரையில் எழுந்தருளியிருக்கும்.

---

4. நாடித தேடித் தொழுவார்பால - தேவரீரை நாடித் தேடித் தொழுகின்ற அன்பரிடத்து.

நான் நத்தாக - நான் விருப்பமுடையவனாய்.

மாடக் கூடல் பதி - நான்மாடக்கூடலாகிய மதுரையிலெழுந்தருளியிருக்கும் இறைவனே. கூடல் - மதுரை.

பாடல் காதல் புரிவோனே - பாடலின்கண் விருப்பம் வைக்கின்றவரே.

பாலைத் தேனை ஒத்து அருள்வோனே - பாலையுந் தேனையும்போல அருள்வோனே.

ஆடல் தோகை - ஆடுகின்ற மயிலின் சாயலையுடைய வள்ளிநாயகியாருக்கு.

ஆனைக்கா - திருவானைக்கா என்னும் ஸ்தலம்.

---

5. சீல அகத்திய ஞான - நல்லறிவுடைய அகத்தியருக்கு உபதேசித்த ஞானமாகிய.

மாதவர் - மகா தவத்தையுடையோர். (பார. பாட்டு. 20.)

நாககிரி - சர்ப்பகிரி, திருசசெஙகோடு.

---

6. அந்தகன் வரும் தினம் பிறகிட - இயமன்வரும் நாள் பின்னிடவும், இயமன் என்னை அணுகாதபடிக்கும். சஙகதம் - நட்பு.

அந்தி பகல் - பெத்தத்தில் கேவல சகலம். (பார். பாட்டு. 28.)

இந்திரிய சஞ்சலஙகளை அறுத்து - இந்திரியப்பற்றுக்களினால் வரும் துன்பஙகளை நீக்கி. இநதிரியஙகள் ஞானேந்திரியம், கன்மேந்திரியம், அந்தரிந்திரியம் என மூவகைப்படும். ஆன்மாவின் இச்சாசத்தி மனம் முதலிய அந்தரிந்திரியங்களிடத்தும், ஞானசததி ஞானேந்திரியஙகளிடத்தும், கிரியாசத்தி கன்மேந்திரியஙகளிடத்தும்நின்று சத்தாதிவிடயஙகளை அறிந்துபற்றி அழுந்துமாகலின், அப்பற்றுக்களும் துயர்க்கிடமாகும்.

முக்குணம் மாள - தாமத இராசத சாத்துவிக குணஙகளின் விருத்திமாயும்படி. அம்புயம் - தாமரை.

கந்தனை அறிந்து அறிந்து அறிவினில் சென்று செருகும் தடம் தெளிதர - கந்தனாகிய நின்னை அறிந்து உனது அருள் தாரகமாக எனது அறிவாற் சென்று நுழையும் வழி வெளிசசமாகும்படி.

தணியாத சிந்தையும் அவிழ்ந்து அவிழ்ந்து - அடங்காத மனமும் நெகிழ்ந்து நெகிழ்ந்து.

உரை ஒழிதது - வாக்கைத் தவிர்தது.

மெய்ச சிந்தை - உண்மை ஞானம், பதிஞானம்.

கொந்து அவிழ் சரண சரண் சரண் என - பூப்போல அலர்ந்த திருவடியே சரணம் சரணம் என்று.

கும்பிடு புரந்தரன் பதி பெற - கைகூப்பி வணங்கும் இந்திரன் இழந்துபோன தன் உலகததைப்பெற.

குஞ்சரி குயம் புயம் பெற - தெய்வநாயகியாரது ஸ்தனம் திருப்புயங்களைப் பொருந்த. குஞ்சரி - பெண்யானை.

அம்பொனின் திருவரைக கிண்கிணி - அழகிய பொன்னாலாகிய திருவரைஞாணுகிய கிணகிணிமாலை. குழை - காது.

சிறு சதங்கை கொஞ்சிட - சிறு சதங்கைகள் ஒலிக்க.

திரு ஆன சங்கரி மனம் குழைந்து உருக - அழகுநிறைந்த பார்வதி மனம நெகிழ்ந்து உருக.

செழும் தளர் நடைச சந்ததி - அழகிய தளர்சசியான நடையையுடைய குமரனே.

---

87. பந்தத் தொடராலே - மலபந்தத் தொடர்சசியால்.

சஞ்சலம் துஞ்சித திரியாதே - துன்பமுற்றுத துஞ்சித் திரியாதபடி.

கந்தன் என்று என்று உற்று. உற்று - அடைந்து.

தந்தியின் கொம்பை - யானையின் மகளை, தெய்வயானையை. கொம்பு - பூங்கொம்புபோன்ற இடையையுடைய பெண.

சிவை - பார்வதி.

கண்டி - சோழநாட்டிற் காவிரியின் தென்கரையிலுள்ள திருக்கண்டியூர்.

---

88. இருவினையில் மதிமயங்கி - முற்பிறப்பிற் செய்த நல்வினை தீவினையின் பயனுய் இப்பிறவியில் நுகரும் இன்பத்துன்பங்களாற் புத்தி கலங்கி.

எழு நரகில் உழலும் நெஞ்ச உற்று - எழுவகைப்பட்ட நரகங்களிற் கிடந்து வருந்துதற்கேதுவாகிய பாவமனத்தையுடையவனுய்.

உணர்வாலே பரவு தரிசனையை என்று எற்கு அருள்வாய் - ஞானத்தால் வழிபடும் உனது உண்மைத்தரிசனையை எனக்கு என்று அருள்வாய்.

தெரி தமிழ் - ஆராய்தலமைந்த தமிழ்.

கருணை நெறி புரியும் - பத்திமார்க்கத்தை அநுட்டிக்கும்.

29. தண்டை அணி - தணடை ஆபரணம்.

வெணடையம் - வீரவெணடையம், ஒருமணி.

தண கழல் - குளிர்சசிபொருந்திய வீரக்கழல்.

சிலம்பு - காற்சிலம்பு, ஓர் ஆபரணம்.

கொஞ்சுதல் - ஒலித்தல்.

நின் தந்தையினை முன் பரிந்து - நினது தந்தையாராகிய பரமசிவனது முன்பாக அனபோடு பேசி.

இன்பவுரிகொணடு - இனிய பவுரிக்கூத்தை விளையாடி.

நன் சநதொடம் அணைந்துநின்ற அன்புபோலக் கணடுற - நல்ல சந்தோஷ மடைந்துநின்ற அன்புபோல அன்புகொணடுவருதலை அடியேனுங காணும்படி.

சந்த மகுடம - அழகிய முடி.

கஞ்ச மலா - தாமரைப்பூப்போன்ற.

சிந்து வேல் - பகையைச சிந்துகின்ற வேற்படை. சிந்துதல் - சிதறல்.

சந்திர நிறம் - பொன்னிறம. சந்திரம் - பொன்.

புணடரிகர் அணடமும் - பிரமதேவருடைய அணடமும்.

கொணட பகிரணடமும் - அதனைசசேர்ந்த பகிரணடமும். பகிரணடம் - அணடததைசசூழவிருக்கும் வெளி.

வெஙகளம் - யுத்தகளம்.

பொன் கிரியென அம் சிறந்து எஙகினும் வளர்ந்து முன் புண்டரிகர் தந்தையும் சிந்தை கூர கொண்ட நடனம் பதம் - மேருமலையென்று சொல்லுமபடி அழகிற் சிறந்து ஏஙகும் வளர்ந்து முன்னொருகாலத் திற பிரமாவின் பிதாவாகிய விட்டுணுவும் மனஞ் சந்தோஷிக்கும்படி நடனஞசெய்த திருவடிகள்.

கொஞ்சி நடனம் கொளும் - வீரதணடை ஒலிக்கும்படி நடனத்தைச் செய்யும. சந்த மணம் உணடிடும் - சந்தன வாசனையை முகக்கும்.

கும்பமுநி - அகத்தியர்.

---

30. நிருதரார்க்கு ஒரு காலா - நிருதருக்கு ஒரு இயமனுயுள்ளவரே. நிருதர் - இராக்கதர்.

ஜே ஜெய - வெற்றிபெறுக, வெற்றிபெறுக.

நிமலனார்க்கு - பரமசிவனுக்கு.

விறலான - வெற்றிபொருந்திய. தான் - அசைசசொல்.

தரையின் ஆழ்த் திரை ஏழேபோல் - பூமியின்கண் ஆழ்ந்த ஏழு சமுத் திரங்களும்போல. ஆழ் - ஆழ்ந்த.

எழு பிறவி மாக்கடல் ஊடே - எழுவகைப் பிறப்புக்களான பெரிய கடலின்கண்.

நான் உறும் சவலை தீர்த்து - அடியேன் அடையும் மெலிவை நீக்கி.

ஞானபோதம் - ஞானம்.

தமியனேற்கு முனே - தமியேனுக்கு முன்னே.

தருவின நாட்டு அரசாள்வான் - கற்பகதருப்பொருந்திய நாடாகிய சுவர்க்க உலகத்தில் அரசுபுரிகின்ற இந்திரன்.

வேணுவின் உருவமாய - மூங்கிலின் உருவமாய்.

சகல லோக்கியமேதான் ஆளும் - சகல லோகங்களுக்கு முரியவைகளை ஆளுகின்ற. உலோக்கியம் - உலகத்துக்குரியவை.

அசுர பாரதிவனோடே சேயவர் தமரை - அசுர அரசனோடு புத்திரர்களையும் அவன் உறவினரையும். [று.

ஏற்று அமரோடே போய - அதற்கு இசைந்து யுத்தகோலத்தோடு சென்

அவர் உறையும் மாக்கிரியோடே தானையும அழிய வீழ்த்து - அவர்கள் இருக்கும் பெரிய கிரவுஞ்சமலையோடு சேனையும்அழியும்படிவிழுத்தி.

அமர் அடல் ஆகி - போர்செய்து. அடல் - பொருதல்.

வீட்டுதல் - கொல்லல்.

---

91. உபதேச மந்திரம் - பிரணவத்தின் பொருளை.

வர பால - மேன்மையான புத்திரனே.

அவ மாயைகொண்டு - வீண மயக்கங்கொண்டு.

அறிவு ஆகமும் பெறுக - ஞானசொரூபம் உண்டாக.

அருள் ஞான இன்பம் - அருளினால் வரும ஞானசுகத்தை.

நவநீதம் - வெண்ணெய்.

உரலோடே ஒன்றும் அரி - உரலுடன் கட்டப்பட்ட கிருஷ்ணர்.

இரகு ராமா - இரகுவின் சந்ததியில் வந்த இராமா. இரகு - திலீபன் மகனாகிய ஓர் அயோத்தி அரசன்.

நிச தேவ - நித்தியமான தேவனே.

அலங்கிருத - அலங்கரிக்கப்பட்டவரே.

நலமான விஞ்சை கருவிளை கோவே - உண்மைஞானம் உண்டாதற்கு மூலமாயுள்ள தலைவரே.

சம்பிரம் - சமபிரமம், மனக்களிப்பு.

மிஞ்சு கதிர வடிவேலா - மிக்க ஒளிபொருந்திய கூரியவேலையுடையவரே.

மெய் கணட - உணமையென்று கண்ட.

வேள் சவுந்தரிக - அழகிய குமரனே.

---

2. தகரம் நறுமலர் பொதுளிய குழலியர் - மயிர்ச்சசாந்தும் வாசனைபொருந்திய பூவும் நெருங்கிய கூந்தலையுடைய பெண்களது. பொதுளுதல் - நெருங்குதல்.

கலக செருவித விழி வலைபட - கலகத்தோடுகூடிய மதாப்புப்பொருந்திய கணவலையில் அகப்பட.

விதி தலையிலெழுதியும் - பிரமா தலையிலெழுதியும்.

அனை வயின் உறவிடும் அதனால் - அன்னைவயிற்றிற் பொருந்தவிடுதலால்.

தனையா, அனை, தமா - புத்திரர், அன்னை, உறவோர்.

சுரபி விரவிய வகையென - இளங்கனறை விட்டுப் பிரிந்த தலையீற்றுப்பசு அக்கனறை நினைந்து மனமுருகி அணுகியதுபோல. விரவுதல் - அணுகல், கிட்டல.

தவன சலதி - ஆசைக்கடல். தவனம் - ஆசை.

அகர முதலுள பொருள - பிரணவப்பொருள்.

வலன் இடம் உற - வலம் வர

எழில் உனது இரு பாதம் - அழகிய தேவரீரது இரண்டு திருவடிகளையும்.

அருளுடன் அருள - அன்போடு கொடுக்க.

மருளற இருளற - மயக்கங்கெட ஆணவமலங் கெட.

கிரண அயில கொடு - பிரகாசம்பொருந்திய வேற்படையைக்கொண்டு.

குருகு அணி கொடியொடு - சேவல் எழுதிய கொடியோடு.

சிகர குடையினில் நிரைவர இசைதெரி சதுரன் - கோவர்த்தனமலையாகிய குடையின் கீழ்ப் பசுக்கூட்டங்கள் வரும்படி வேய்ங்குழலை ஊதின சாதுரியன்.

விதுரன் இல் வருபவன் - விதுரனுடைய வீட்டுக்கு விருந்தாய வருபவன்.

அளையது திருடி - வெண்ணெய் திருடி.

நெடியவன் - நெடியோன், விட்டுணு.

மது சூதன் - மதுசூதனன். மது என்னும் அசுரனைக் கொன்ற விட்டுணு.

திகிரி வளை கதை வசி தனு உடையவன - சக்கராயுதம், சங்கு, தண்டாயுதம், வாள், வில் எனனும் இவைகளை உடையவன்.

எழிலி வடிவினன் - மேகநிறமுடையவன். எழிலி - மேகம்.

பகர புகர்முக மதகரி உழைதரு வளிதை வெருவ முன்வர அருள் புரிகுக - அழகிய புள்ளிபொருந்திய முகத்தினையுடைய மதம்பொழிகின்ற விக்கினேசுவரர் என்னும் யானையை மான்வயிற்றிற் பிறந்த வள்ளிநாயகியார் அஞ்சும்படி முன்னிலையில் வருமபொருட்டு வேண்டியருளிய குருவே. பகரம் - அலங்காரம், அழகு. உழை - மான்.

இமகிரிதருமயில் - பார்ப்பதி.

பலவின் முதுபழம் விளைவுசெய் தொழுகிய நறவு நிறை வயல் - பலாவின் முதிர்ந்த பழத்தினின்றும் உண்டாகி ஒழுகிய தேன்நிறைந்த வயலும்.

புரவலன் - காப்பாளன், அரசன்.

---

93. இரு வினை புனைந்து - பெரிய செயலாகிய சிவயோகத்தைப் பொருந்தி.

ஞான விழிமுனை - இலாடநந்திசசுழி.

நோயின் இருவினை இடைநதுபோக - துன்பத்தைச்செய்யும் இருவினைகளும் வலிகுன்றிப்போக.

மல மூட இருளற விளங்கி - மலமறைப்பாகிய அஞ்ஞானம்ஒழிய விளங்கி.

பரிமள சுகந்த வீத மயமென - பரிமளத்தோடுகூடிய பூவின்றன்மைபோல, மலரும் மணமும்போல என்றபடி. வீ - பூ.

அடியென விளங்கி ஆடும் - பஞ்சகிருத்தியங்களுக்கெல்லாம் ஆதிகாரணமென விளங்கி நிருத்தஞ்செயயும்.

அழல் உறும் இரும்பின் மேனி மகிழ் மரகதம் பெண் ஆகம் அயல் அணி சிவன் புராரி - அக்கினியிற்பொருந்திய இரும்பின்வண்ணமாயிருக்கும் திருமேனியில் மகிழ்கின்ற மரகதநிறம்போலும் உமாதேவியாரது திருமேனியை இடப்பாகததிலே பொருநத வைததிருக்கும் திரிபுரஙகளை எரிதத சிவபிரானது.

மருவலாகள் திண் பண ஆர முடி உடல் - வயிரிதத நாகரததினஙகள் நிறைந்த முடியை அணிந்த பகைவரது சரீரம்.

வளை குலம் அலஙகு - சஙகுக்கூட்டஙகள் விளஙகுகின்ற.

---

94. இருவினை அஞ்ச - நல்வினை தீவினைகள் வலிகெட.

மல வகை மஙக - மும்மலஙகளுங கெட.

இருள் பிணி மஙக - அஞ்ஞானநோய் கெட.

இன அருள் அன்பும் ஒழிய - இனத்தவரிடத்துள்ள அருளும் அன்பும் ஒழிய.

கடம்பினது அகமும கொடு - கடம்பின் அகவிதழை இடமாகக்கொண்டு.

நடஙகொடு - நடனஞ்செய்து.

வெளி அங்கண் அருள் குடிகொண்டு திகழ நடஞ் செய்து - ஞானாகாசமாகிய சிதம்பரததிலே கருணை நிலைபெறறு விளஙக நடனஞ் செய்து.

எமை ஈண - ஆன்மாக்களாகிய எம்மைச சிருட்டிக்குமாறு.

அரசி இடம் கொள் - உமாதேவியாரை இடப்பாகததிற கொண்ட.

விலங்கல் - மலை.

குறமங்கை அமளி நலம்கொள் பெருமாள் - வள்ளிநாயகியின் சயனசுகத்தைப்பெறும் பெருமாள், வள்ளிநாயகியாருக்குப் பேரானந்தத்தைக் கொடுக்கும் பெருமாள்.

---

பாசம் கொடு என் காலில் ஆர்தந்து - பாசக்கயிறுகொண்டு எனது காலிலே கட்டி. கோதண்டம் - வில்லு.

சூடு தோள் - தரித்திருக்கின்ற கை.

ஆர்வம் செயும் தோகைமேல் - ஒலிக்கின்ற மயிலின்மேல்.

ஆலகால அம்பரன் பாலதாக அஞ்சிடும் தேவர் வாழ அன்று உகந்து அமுது ஈயும்.

வேலைமேல் கண் வளர்ந்த - சமுத்திரத்தின்மேல் நித்திரைசெய்த.

ஆதி மாயன்தன் நன் மருகோனே - முதன்மையான விட்டுணுவின் நல்ல மருகோனே.

சாலி சேர் சங்கினம் வாவி சூழ் பங்கயம் சாரல் ஆர் - நெல்லோடு சேர்ந்திருக்கின்ற சங்குக்கூட்டங்களும் தடாகங்களிற் சூழ்ந்திருக்கின்ற தாமரைகளும் பக்கத்திற் பொருந்தியிருக்கின்ற.

தாரை வேல் - கூரியவேல்.

---

அதல சேடனார் - பாதலத்திலேயுள்ள ஆதிசேடனார்.

அகிலம் மேரு மீதாட - பூமியும் மேருமலையும் மேலே ஆட.

அபின காளி - வேற்றுமையில்லாத காளி.

அதிர வீசி வாதாடும் - ஆரவாரமுறத் திருவடியை உயர்த்தித் தருக்குற்று நிற்கும்.

மதுர வாணி - இனிய சரச்சுவதி.

வனச மாமியார் - செந்தாமரை ஆசனத்தையுடைய இலக்குமி.

நெடிய மாமன் - நெடிய மாமனாகிய விட்டுணு.

கதை விடாத தோள் வீமன் எதிர்கொள் வாளியால் - தண்டாயுதத்தை வைத்திருக்கின்ற கையையுடைய வீமன் தன் எதிரேவருகின்ற அம்பினாலே.

நீடு கருதலார்கள் மா சேனை பொடியாக - மிக்க பகைவரது பெரியபடை பொடியாகவும்.

கதறு காலி போய் மீள - கதறுகின்ற பசுக்கள் தத்தம் இடங்களிற் போய் அடையும்படியும்.

விஜயன் ஏறு தேர் மீது கனக வேத கோடூதி - அருச்சுனன் ஏறும் தேரிலேநின்று பொன்மயமான தொனிபொருந்திய சங்கை ஊதினவரும்.

அலை மோதும் உததி மீதிலே சாயும் உலகம் மூடு சீர்பாத உவணம் ஊர்தி மாமாயன் - அலைகள் மோதுகின்ற கடற்புறத்தே கிடக்கின்ற உலகத்தை அளந்து மூடிய அழகிய பாதங்களையுடைய கருடவாகனருமாகிய விட்டுணுவின.

உதய தாமம மார்பான - ஒளிபொருந்திய மாலையணிந்த மார்பினையுடைய.

பிரபுடதேவ மா ராசன் உளமுமாட - திருவண்ணாமலையிலிருந்த பிரபுட தேவா என்னும அரசரது மனமுங களிக்கும்படி.

---

97. கடிய வேகம் ஆறாத விரத சூதா - மூர்க்கத்தோடு கூடிய கோபம் ஒருகாலுந் தணியாத விரதத்தையுடைய வஞ்சகா.

ஆபாதா - உபத்திரவஞ் செய்வோர்.

கலகமே செய் பாழ் மூடர் - சண்டையேசெய்யும் வீண் மூடர்.

வினை வேடா - தீததொழில்செய்யும் வேடரது குணமுடையோா.

கபட ஈனா ஆகாத இயலபு நாடி - கூடாத ஒழுக்கங்களை நல்லொழுக்கமாகக்கொண்டு.

நீடு கன விகாரமே பேசி - மிகவும் பலவேறுவேறான வீணவார்த்தைகளைப் பேசி.

நெறி பேணுக் கொடியன் - நல்லொழுக்கத்தைப் பாதுகாவாத, அறிவில்லாத கொடியன்.

விரக சாலமே மூடும் குடிலின் மேவி - ஆசையாகிய வலையினால் மூடப்பட்ட உடம்பாகிய குடிசையின்கண் பொருந்தி. சாலம் - வலை.

குலவு தோகை மீது - பிரகாசம்பொருந்திய மயிலின்மேல்.

குவளை வாகு - குவளைப்பூமாலை அணிந்த தோள்.

படியினோடு - பூமியினோடு

சேட பணமும் ஆட - ஆதிசேடனது படங்களும் நடுங்க.

நீடு வரை சாடி - உயர்ந்த கிரவுஞ்சமலையை மோதி.

பரவை ஆழிநீர் மோத - பரந்த சமுத்திரநீரானது தாக்குண்ண.

வடிவு உலாவி ஆகாச மிளிர் - வடிவம்பரந்து ஆகாசத்தில் உயர்ந்திருக்கின்ற.

வனசம் - தாமரை. பூ ஓடை - பூக்கள் நிறைந்த நீரோடை.

மணிசெய் மாடம் - இரத்தினம்பதித்த மண்டபம்.

மா மேடை - பெரிய உபரிகை.

சிகரமோடு - கோபுரத்துடன். வாகான - அழகான.

மயிலை மேவி - திருமயிலை என்னும் ஸ்தலத்தைப் பொருந்தி.

98. பிரகிருதி மார்க்கம் உற்று - பிரகிருதிமாயை காரணமாகவரும் உடம்பை எடுத்து. பிரகிருதி - பிரபஞ்ச உற்பத்திக்கு மூலகாரணமாயிருக்கும் மாயை. இது கலாதத்துவத்தினின்றுந் தோன்றுவது. சாத்துவிகம் இராசதம் தாமதம் என்னும் குணதத்துவங்கள் இதினின்றுந் தோன்றும்.

உறுதி குரு வாக்கியப் பொருளாலே - நிலையான குருவினது உபதேச வாக்கியப் பொருளினால்.

உனது பத காட்சியைத் தருவாயே - யான் எனது என்னும் தற்போத ஒழிவில் உதிக்கும் ஆனந்த நிலையை அடையும்படி அருள்வாய.

அறுசமய சாத்திரப் பொருளோனே - அறுவகைப்பட்ட சமயசாத்திரங்களுக்கும் அவரவாகொண்ட முதற்பொருளா யுள்ளவரே. சமயம்: புறப்புறம் புறம் அகப்புறம் அகம என நான்குவகை. அவை தனித்தனியே அறுவகை.

அறிவுள் அறிவார்க் குணக் கடலோனே - அறிவின்கண் அறிபவர்க்குக் குணக்கடலாயுள்ளவரே, சிவானுபோகத்தில நிரபோருககு ஆனந்த சாகரமாயுள்ளவரே. கருவிகள்வேறு தான்வேறு என்று அறிந்து, அஙஙனம் அறிந்தபோது தனககு இக்கருவிகளை வேறாக்கித தன்னை அறிவித்தது அருளெனககணடு, அவ்வருளேவடிவாகி இருந்து சிவானுபோகத்தில் இரணடற அழுந்தி நிறபது ஆன்மசுத்தியும சிவத்தில் வியாபகமாகிய பேரறிவுமாகலின் அறிவுள் அறிவாாககு என்றார். அறிவுருவாகநின்று அறிபவாக்கு எனினுமாம்.

---

99. கலக விழி மாமகளிர் கைக்குளேயாய் - கலகஞ்செய்யுங் கண்களையுடைய பெணகள் கைக்குள் அகப்பட்டு.

பொய் களவு மதனூல் பல படித்து - பொய்யுங் களவும் பல காமநூல்களும் படித்து.

அவா வேட்கை - காமவேட்கை மிகுதியினால்.

இசையால் ஆர்த்து - இசையாற் கட்டுண்டு.

கழுநீர் ஆர் கமழ் நறை சவாது புழுகைத் துழாய் வார்த்து - செங்கழுநீர் நிறைந்த வாசனைபொருந்திய நறும்புகைசேர்ந்த சவாதையும் புழுகையும் கலந்து வார்த்து.

நில அரசு நாடு அறிய கட்டில் போட்டார் செய்யும் கருமம் அறியாது - பூமியை ஆளுகின்ற இராசாவும் ஊராரும் அறியத்தக்கதாகப் பரத்தையர்செயயுங் கருமததை அறியாது.

வாழ்க்கை கருதாது - நல்ல வாழ்வை நினையாமல்.

[illegible]

நிறை பவுசு வாழ்வு அரசு - நிறைந்த சந்தோஷத்தோடுகூடிய வாழ்வும் முதன்மையும்.

அனுராகம் - சிற்றின்பவிருப்பம். நெறிநிற்க - முத்திநெறியில் நிற்கும்படி.

அலகில் தமிழால் உயர் - அளவில்லாத தமிழ்ப்பாக்களாற் புகழ்ந்து போற்றப்பட்ட.

அடல் மயில் நடாவிய ப்ரியதநனே - வலிமைபொருந்திய மயிலைச் செலுத்துதலிற் பிரியமுள்ளவரே.

அவதான - மேன்மையான.

அகில தலம் - எல்லாவுலகங்கள், சருவலோகம். அகிலம் - எல்லாம்.

கரதர கபாலி குரு விதநனே - கையிலே கபாலத்தையுடைய சிவனுக்குக் குருவாகிய அறிஞனே.

பெருவாழ்வாம் பிரமன் அறியா விரத - பெருவாழ்வுடையவராகிய பிரமா அறியாத ஞானயோகத் தவமுடைய.

கோளரி - சிங்கம். பெரியமடம் - ஒரு ஸ்தலம்.

யோக்யர் - யோகிகள்.

---

100. வாசித்துக் காணொணாதது - வேதாகமநூல்களைப் படித்துத் தரிசிக்க அரியது. இந்நூல்கள் ஓதுதலினால் வரும் ஞானம் பாசஞானமாம்.

பூசித்துக் கூடொணாதது - சரியை கிரியை யோக பூசைகளால் அத்துவித நிலைகூட அரியது. பதிஞானத்தாலே அந்நிலை அடையக்கூடியது.

வாய்விட்டுப் பேசொணாதது - அதன்சொரூப இலக்கணம் இத்தன்மையதென்று வாக்கினாற் சொல்லமுடியாதது.

நெஞ்சினாலே மாசர்க்குத் தோணொணாதது - அழுக்குமனத்தோருக்குத் தோன்றற்கரியது.

நேசர்க்குப் பேணொணாதது - அன்பரைவிட்டு நீங்காதது. "கருமமாதவஞ் செபஞ்சொல் காசறுசமாதிஞானம், புரிபவர்வசமதாகிப் பொருந்திடேம்புரையொன்றின்றித், திரிவறுமன்புசெயவோர்வசமதாய்ச்சேர்ந்துநிற்போ, முரைசெய்வோமவர்முனெய்தியவருளத்துறைவோமென்றும்." (வாயுசங்கிதை.)

மாயைக்குச் சூழொணாதது - மாயையினாற் பற்றமுடியாதது, மாயைக்கு அப்பாற்பட்டது.

விந்துநாத ஓசைக்குத் தூரமானது - விந்துநாதத்துவங்களுக்கு அதீதப்பட்டது.

மாகத்துக்கு ஈறதானது - ஆகாயத்துக்கு முடிவாயுள்ளது, பரவெளிக்கு முடிவாயுள்ளது.

யோகத்தைச் சேருமாறு - ஞானயோகத்தை அடையும்படி.

ஊனத்தைப் போடிடாது - உடற்பற்று விடாது.

ஆசைப்பட்டு ஏனல் காவல்செய் - விரும்பித் தினையைக்காவல்செய்கின்ற.

வேடிச்சிக்காக மா மயலாகிப் பொற்பாதமே பணி - வள்ளிநாயகியாரை ஆட்கொள்ளும்படி அதிக விருப்பங்கொண்டு அவரை மார்க்சார சம்பந்தமாக ஆட்கொண்ட.

ஆலித்து சேல்கள் பாய் வயலூரதனில் - களித்துச் சேல்மச்சங்கள் பாய்கின்ற வயலூரில் எழுந்தருளியிருக்கும்.

காளம் ஒடு அடா ஆரத்தைப் பூண் மயூர துரங்க வீரா - கருநிறத்தோடு நெருங்கிய ஆரத்தைப்பொருந்தியிருக்கின்ற மயிலாகிய குதிரைவீரரே. துரங்கம - குதிரை.

நாசிக்குள் பிராண வாயுவை ரேசித்து எட்டாத யோகிகள் - நாசிவழியாகப் பிராணவாயுவை ரேசக பூரக கும்பகஞ் செய்து எட்டி அடையாத கருமயோகிகள்.

நாகத்துச் சாகை - புன்னைமரத்தின் கொப்புகள்.

சிராமலை - திரிசிராப்பள்ளி.

---

101. விரகு அற நோக்கியும் உருகியும் வாழ்த்தியும் விழி புனல் தேக்கிட - கபடமறத் தெரிசித்தும் மனங்கசிந்தும் துதித்தும் கண்களில் நீர் நிறைந்து பெருகும்படிக்கும்.

அன்பு மேலமேல் மிகவும் இராப்பகல் பிறிது பராக்கற - அன்பானது மேலும்மேலும் அதிகரிக்கவும் இரவும்பகலும் மனம் வேறுவழிப்படாமல் இருக்கும்படிக்கும்.

விளைவு குராப் புனையும் குமார - அலர்ந்த குராமலர்மாலையை அணியுங் குமாரரே.

பார்த்திவ - பூமிக்கரசரே.

மொழி குளறத் தொழுது அழுது அழுது ஆட்பட - வார்த்தைகுளறித் தொழுது அழுதழுது அடிமைப்படும்படிக்கும்.

முழுதும் அலாப் பொருள் தந்திடாயோ - உலகப்பொருள் யாவற்றையுங் கடந்தபொருளை அடியேனுக்குத் தந்திடீரோ. (ஞானோபதேசத்தை)

பரகதி காட்டிய விரக - பரமுத்தியைக் காட்டிய சாமாத்தியமுடையவரே. விரகு - சாமர்த்தியம், உபாயம்.

சிலோச்சய - குறிஞ்சிநிலத்தலைவரே. சிலோச்சயம் - மலை.

பரம பராக்கிரம - மேலான வலிமையுடையவரே.

சம்பராரி பட - காமன் அழியும்படி.

நிசிசரர் கூப்பிட - அவுணர் ஓலமிடும்படியும்.

ஆர்ப்பு - பேரொலி.

எழுகரைநாடு - ஒரு ஸ்தலம்.

---

102. தாரணிக்கு - பூமியில்.

மனசாதனைக் களவாணியாய் உறும் அதி மோக தாபம் மிக்குள வீணனாய் - மனத்திலே நன்கு பயின்ற கள்வனாய், பொருந்திய மிக்க மயக்கமும் துன்பமுமிக்குள்ள வீணனாய்.

பொரு வேல் விழிச்சியர் ஆகும் மாதர்கள் தாம் - வேலையொத்த கண்களையுடைய பெண்கள். பொருதல் - போர்புரிதல்.

உயச் செயும் ஏது தேடிய - உய்யும்படிசெய்தற்குக் காரணத்தைத்தேடிய. ஏது - சீவனப்பொருள்.

பூரணச் சிவஞான காவியம் ஓதுதல் புணர்வான நேயர்கள் - நிறைந்த சிவஞான நூலைப் படிக்கின்ற சார்பாயுள்ள அன்பர்கள்.

அருள் ஞானமாகிய போதகத்தினை எயுமாறு - ஞானோபதேசத்தை அடையுமாறு.

வாரணத்தினையே கராவு முன்னே வளைத்திடுபோது - யானையை முதலை முன்னொருகாலத்திற் கவர்ந்தபொழுது.

இதமாக வீறிய - உரிமையாக மேம்பட்ட.

வாழும் முப்புர வீறுதானது - வாழ்ந்திருந்த முப்புரங்களின் பெருமையானது.

காரணக் குறியான நீதியரானவர்க்கு முனாகவே நெறி காவியச் சிவநூலை - காரணப்பொருளாகிய சிவத்தையே குறிக்கொண்ட பாண்டியர்களுக்கு முன்பாகச் சிவபெருமான் அருளிச்செய்த இறையனார் அகப்பொருள் என்னும் நூலின் உரைத்திறத்தின் முறையை.

---

103. மகக்கட்குக் கூற அரிதானது - மனிதரால் இன்னதன்மையதென்று இலக்கணம் சொல்லமுடியாதது. (பார. பாட்டு. 7, 100.)

கற்று எட்டத்தான் முடியாதது - ஞானசாத்திரங்களை ஓதி அடையமுடியாதது.

மற்றொப்புக் கியாதும் ஒவ்வாதது - வேறுவமை சொல்வதற்கு எதுவுஞ் சமமில்லாதது.

மனதாலே மட்டிட்டுத் தேட ஒணாதது - மனத்தாலே அளவிட்டறிந்து நாட முடியாதது.

தத்துவத்திற் கோவை படாதது - தத்துவக்கூட்டத்திற் சேராதது.

மத்தப் பொற்போது பகீரதி மதி சூடும் - ஊமத்தையின் அழகிய பூவையும் கங்கையையும் சந்திரனையும் சடையிற் சூடும்.

முக்கண் பொற்பாளர் உசாவிய - மூன்று கண்களையுடைய பேரழகுபொருந்திய சிவபெருமான் வினவிய. பொற்பு - அழகு.

அர்த்தக்குப் போதகமானது - பிரணவத்தின் அர்த்தத்துக்கு உபதேசமானது.

நானமறை எட்டிற்று எட்டாது எனவே வரு முற்பட்டு அப்பாலையில் ஆவது - நான்குவேதங்களும் எட்டிற்றெனவும் எட்டாதெனவும் வருகின்ற முதன்மையுடையதாய், அவற்றிற்கும் அப்பாற்பட்டதை.

செம் கணை சக்ராயுத மாதுலன் - செம்மையான கணைகளையுஞ் சக்கராயுதத்தையுமுடைய மாமனாகிய விட்டுணு. மாதுலன் - மாமன்.

புல்போது படாவிய திகுப் பொன் பூதரமே முதல் வெகு ரூபம் சிட்டித்து - புல்லும் பூ விரிந்த திக்குகள் அழகிய மலைகள் முதலிய வெகு வடிவங்களைச் சிருட்டித்து. படாவிய - பரந்த, விரிந்த.

கைக்கொட்டு இட்டு ஆட - கைகொட்டிக் கூத்தாட.

மகோததி செற்று - பெரிய கடலை அழித்து

மாரபு அகம் முது சோரி கக்க - மார்பினகத்தே முதிர்ந்த இரத்தம் கக்க.

கச்சு உற்ற அப்பார பயோதர முலையாள் - கச்சணிந்த அந்தக் கனத்த ஸ்தனங்களையுடைய உமாதேவியார். பரஞானம அபரஞானம என்னும இரண்டுமுடையவர் என்பது கருத்து.

கச்சிக் கச்சாலையில் - காஞ்சீபுரத்துள்ள கச்சபாலயத்துள். கச்சபம் - ஆமை. விட்டுணு ஆமைவடிவங்கொண்டு பூசித்த ஸ்தலம.

---

104. தறுகணன மறலி - அஞ்சாதவனாகிய இயமன். தறுகண் - அஞ்சாமை.

தலைகொடு விசிறிக் கொடுபோகும சளம அது தவிர - கழுத்தைச் சுற்றி வீசிக்கொண்டுபோகுந் துன்பம்நீங்கும்படி. சளம் - துன்பம்,நடுக்கம்.

அளவிடு சுருதி தலை கொடு - ஆராயும் வேதமுதலாகக் கொண்டு.

தலை மூச்சினையாகும் அருவருவு ஒழிய - மயக்கமாகிய அருவருப்பு நீங்க.

வடிவுள பொருளை அலம் வர - மெய்ப்பொருளாகிய ஞானோபதேசத்தை அமைவு வரும்படி. அலம - அமைவு.

நறுமலர் இறைவி - இலக்குமி.

நகம் உதவிய பாரப்பதி - பர்வதராசபுத்திரியாகிய பார்வதி. நகம் - மலை.

நதி மதி இதழி பணி அணி - கங்கையையும் சந்திரனையும கொன்றைமாலையையும பாம்பையும அணிந்த.

கறுவிய நிருதர் - பகைசாதித்த அவுணர். கறுவுதல் - பகைசாதித்தல்.

கடல் இடை பொடியாப் பொருதோனே - கடலிடம பொடியாகப் போர் செய்தவரே.

---

105. திரை வஞ்சம் இருவினைகள் நரை அங்கம மலம் அழிய - கொடிய இருவினைகளாகிய திரையும் ஆணவமலமாகிய நரையும் நீங்கும்படி. சஞ

சிதவினையும் ஆணவமலமும் நீங்கும்படி என்பது கருத்து. இருவினைகள் - நல்வினை தீவினைகளின் வினைவாகிய சஞ்சிதவினைகள். அது பல பிறவிகளுக்குக் காரணமாகையால் வஞ்ச இருவினைகள் என்றார். நரை அங்கம - நரைவடிவு.

சிவகஙகைதனில் முழுகி விளையாடி - சிவகஙகையாகிய அருளில் முழுகி அதன்வசமாய் நின்று.

சிவம் வந்து குதிகொள - சிவம் வந்து சேர.

அக வடிவு உன்றன் வடிவம் என - என்னுடையவடிவு உம்முடைய வடிவமென. அகம் - யான்.

களிறு முகன் எம்பி என மகிழ - யானைமுகராகிய விநாயகா எனது தமபியென்று மகிழ.

அடியென்கண அளி பரவ - அடியேனிடதது அன்பு பெருக.

தந்தை திருநடனம என உடன் மருவி - சிவபெருமானது திருநடனத்தைப்போல நடனஞ்செயதுகொணடு எனனுடன் பொருந்தி.

அருமந்த பொருளை - அரிய மருந்துபோனற பொருளை, ஞானோபதேசததை.

ஒரு வழுதி பரி துஞ்ச வரும் - ஒப்பற்ற பாணடியராசனது குதிரைகள் இறக்குமபடி வநத.

பழி அஞ்சி - பழியஞ்சுநாதர் (பார. திருவிளையாடற்புராணம. பழியஞ்சின படலம்)

புணடரிக பவளம் சொல் வடிவ உமை - தாமரையையும் பவளத்தையும் உவமை சொல்லுகின்ற வடிவினையுடைய உமாதேவியாரின்.

இருள் வஞ்ச கிரி - இருள்நிறமபொருந்திய சூதான கிரவுஞ்சமலையையும்.

எனது அன்பில் உறை சயிலம மகிழ் வஞ்சி குறமகளொடு - எனது அன்பிலிருப்பவரும, குன்றவர் மகிழும பெணணும, குறமகளுமாகிய வள்ளிநாயகியாரோடு. சயிலம் - மலை.

எணு பஞ்சணையில் மருவும் - தியானிக்கப்படும் பஞ்சணைமீதிற் பொருந்தும். பஞ்சணை - பஞ்சமெதத்தை. நினமலாவததையிலே துரியாதிதத்தில் அத்துவிதமாகப் பொருநதும்.

10௬. ஆண்டார் இறைஞ்ச மொழிந்ததை - பரமசிவன் வணஙகிக் கேட்கச சொன்ன பிரணவ உபதேசததையும. ஆணடார் - ஆணடவா, முதலவா.

வான் பூதலம் பவனம் கனல் புனலான வான் பூதமும் - ஆகாயம் மண் காற்று தீ நீர என்னும் பெருமைபொருந்திய பஞ்சபூதஙகளும்.

நான் போய் ஒடுஙக - யான் என்னும் தற்போதமுங கெட.

அடங்கலும் மாய்ந்தால் - எல்லாக் கருவிகளின் செயலுமற்றால்.
விளங்குமது ஒன்றினை - அப்பால் விளங்கும் சிவானந்தப்பேற்றை.
வேண்டாமை ஒன்றை அடைந்து - அவாவின்மையையே அடைந்து.
உளம் மீண்டு ஆறி - மனம் விஷயங்களிற் செல்லாமல் திரும்பி அடங்கி.
சேந்தன் - செந்நிறமுடையவர்.

ஆண்டார் தலங்கள் அளந்திட நீண்டார் முகுந்தர் - ஆட்சிசெய்தவராகிய மாவலி என்பவருடைய பூமிகளை அளக்க நீண்ட வடிவங்கொண்ட முகுந்தர்.

தடம தனில் ஆண்டு ஆவி துஞ்சியதென்று முதலைவாய் உற்று ஆங்கு ஓர் சிலம்பு புலம்பிட - தடாகத்தின்கண்ணே உயிர்போனதென்று முதலைவாயில் அகப்பட்ட ஒரு மலைபோன்ற யானை சத்தமிட.

ஞான்று ஊது துங்க சலஞ்சலம் ஆம பூ முழங்கி அடங்குமளவில் - அப்பொழுது ஊதிய உயாசசிபொருந்திய பாஞ்சசன்னியம் என்னுஞ் சங்கு நீர்பொருந்திய பூமியில் ஒலித்து அடங்கிய வேளையில. ஆம - நீர்.

நேசம் பூண்டு ஆழிகொண்டு வனங்களில் ஏய்ந்து ஆளவென்று வெறுந் தனிபோந்து ஓலம் என்று உதவும் புயல் - அன்புபொருந்திச சக்கரப்படைகொண்டு நீர்நிலையை அடைந்து யானையைக் காக்கவேண்டுமென்று தனியேபோய் ஓலம் என்று சொல்லித துணைசெய்த மேக வண்ணனாகிய விட்டுணுவின். வனம் - நீர.

தேம் காவில் - தேன்பொருந்திய சோலையில்.

பூந்தோகை கொங்கை விரும்பிய - பொலிவான மயில்போலுஞ் சாயலையுடைய வள்ளிநாயகியாருக்குத திருவருள்ஞானத்தை அருளவிரும்பிய.

---

107. மால் ஆசை - ஆணவமலமாகிய மயக்கததாலுண்டாகிய ஆசையும். மால்-மயக்கம்.

மாயா விகார வழியே செல் - மாயையின் விகற்பரூபங்களான காமம் குரோதம் உலோபம் மோகம் மதம் மாறசரியம என்னும் இவைகளின் வழியிற் செல்லுகின்ற. மனம் வாக்குக் காயங்களின் வழியிற் செல்லுகின்ற எனினுமாம்.

காளி - விஷகுணமுள்ளவன்.

நாலான வேதம் ஆகமம் ஆதி நூல் - நான்குவேதங்கள் ஆகமங்கள் முதலிய நூலகளை.

ஆறாறு மீதில் - முப்பத்தாறு தத்துவங்களுக்கும் அப்பாற்பட்ட இடத்தில், நாதாந்தவீட்டில், நாததத்துவததின் முடிவாகிய விடுதலையில், அன்ம

தரிசனமும் திருவருட்டரிசனமும் உண்டாம். அவ்வருளே குருவடிவாய் வந்து உபதேசிப்பது. '

கல்லார - செங்கழுநீர்ப்புட்பத்தை அணிந்தவரே. கல்லாரம் - செங்கழுநீர்.

ஆமோத லேப பாடீர மீதே அணி ஆக - வாசனைகுழைத்த சந்தனத்தை மேலே அணிகின்ற திருமேனியையுடையவரே. ஆமோதம் - மணம்.

மீன பானீயம் மேலை வயலூரா - மச்சங்கள் வசிக்கும் நீர்வளஞ்சேர்ந்த மேலைவயலூரில் எழுந்தருளியிருக்கின்றவரே.

விராலி வாழ்வே - விராலிமலையில் வசிக்கின்றவரே.

சமூக வேதாள பூதபதி - கூட்டமான வேதாளங்களுக்கும் பூதங்களுக்கும் முதல்வராகிய சிவபெருமானின்.

கடோர சூராரியே - கொடூர சூரனுக்குப் பகைவரே.

---

08. ஒருவழிபடாது, மாயை இருவினை விடாது, நாளும் உழலும் அனுராக மோக அனுபோகம் உடலும் உயிர்தானுமாய், உன் உணர்வில் ஒரு காலிராத உள்ளமும் நெகிழ்வாகுமாறு - ஒருவழிப்படாமல், மாயையும் இருவினையும் விடாமல், என்றும் அலையும் காமவாஞ்சையாகிய அநுபோகத்தையுடைய உடம்பையும் உயிரையுமுடையவனேய, உன்னை அறியும் ஞானத்திலே ஒருகாலுமிராத மனமும் நெகிழுமாறு.

இரவு பகல் போன - கேவலசகலமற்ற. (பார். பாட்டு. 28.)

பரம சிவயோக தீரம் என மொழியும் மோன உரை இல் உபதேச ஞான வாளை - மேலான சிவயோக முடிவு என்று சொல்லப்படும் மௌனமாகிய சொல்லிக்காட்டமுடியாத உபதேசமாகிய ஞானவாளை. தீரம் - கரை, முடிவு. ஞானவாள் என்பது சின்முத்திரை, ஒரு மொழி, மகாவாக்கியம் எனவும்படும். சின்முத்திரையைப் பெறுவதற்குச் சாதனமாகிய ஞானமுத்திரைகள் சாம்பவி பயிரவி கேசரி என மூவகைப்படும். சாம்பவிமுத்திரையில் நின்று நிஷ்டைசெய்தல் சிவயோகம். இச்சாதனமுடிவில் மகாவாக்கிய உபதேசம் அருளப்படுமாகையால், "சிவயோகதீரம் என மொழியும் ஞானவாளை" என்றார்.

பாசம் வீசு கனகோப எமபடரை மோதும் - பாசக்கயிற்றை எறிகின்ற அதிக கோபத்தையுடைய இயமதூதரை மோதுகின்ற.

எனது பகை தீர - எனது பகைகளான மாயை இருவினை முதலியன ஒழியும்படி.

அமணர் குல காலனாகும் - சமணர்குலத்தை அழித்தவனாகிய.

சோமநாதன மடம் மேவும் முருக - அமணர்குலத்தை அழித்தவனும், அருணாசலேசுரரைத் தவறாது பூசைசெய்யும் அன்பனுமான சோமநாதன் என்னும் பக்தன் ஒரு திருமடம் கட்டுவித்து அதனில் முருகக்கடவு

னின் திருவுருவம் ஸ்தாபித்து வழிபட்டுவந்தான். அம்மூர்த்தியை "சோமநாதனமடம்மேவும்முருக" என்றார்.

மூகர சலராசி வேக - ஒலிபொருந்திய சமுத்திரம் எரிய. சலராசி-கடல்.

---

109. தசையும உதிரமும் நிணமொடு செருமிய - ஊனும் இரத்தமும் கொழுப்போடு நெருங்கிய.

கரும கிருமிகள் ஒழுகிய பழகிய சடல உடல் - உட்டணத்தால் உண்டாகுங் கிருமிகள் நடமாடிப் பயின்ற பருத்த உடலே. கருமம - உட்டணம். சடலம் - பருமை. ஒழுகுதல் - சஞ்சரித்தல்.

கடை சுடலையில் இடு சிறு குடில் - இறுதியிற் சுடலையிற் கொண்டுபோய் எறியும் சிறிய குடிலே.

சகல கருமிகள் - நித்தியகருமம் வழுவாதுசெய்யுஞ் சகலரும்.

சருவிய சமயிகள் - தாக்கவாதஞ்செய்யுஞ் சமயிகளும்.

சரியை கிரியைகள் தவம் எனும அவர் சிலர் - சரியைகிரியைகள் பெரிய தவம என்று சொலலுஞ் சிலரும்.

சவலை அறிவினர் - பிள்ளைமைப் புத்தியுடையோர்.

நெறியினை விட - இவர்களது நெறியை விட.

இனி அடியேனுக்கு இசைய - இனி அடியேனுக்கு உடன்பாடாக.

இது பொருள் என அறிவுற - இது பொருள் என்று அறியும்படி.

ஒரு வசனம் உற - ஒரு உபதேசவார்த்தை பொருந்த.

எனதற நினதற - எனது என்றும் நினது என்றும் காண்பானுங் காட்சியுமாய் அறிந்துவந்த தற்சுதந்திர அறிவுநீங்க.

அநுபூதி இனிமை தரும் ஒரு தனிமையை - அநுபூதி இன்பத்தைக் கொடுக்கும் ஒப்பற்ற ஏகாந்த மௌனநிலையை. அநுபூதி இனிமை - தானே கண்டறிந்ததும் பிறர்க்குச் சொல்ல இயலாததுமான பேரின்ப அறிவு.

மறைகளின் இறுதி அறுதியிட அரிய பெறுதியை - வேதங்களின் முடிவாகிய உபநிடதங்களும் நிச்சயிக்க அரிய பேற்றை

இருமை ஒருமையில் பெருமையை - இரண்டென்றும் ஒன்றென்றும் இல்லாத அத்துவித நிலையை.

அசல குலபதி - பர்வத இராசன். அமலை - மலமில்லாதவள், பார்வதி.

விமலைகள் எழுவரும் - சப்தகன்னிகைகளும். அநகை - பாவமில்லாதவள்.

அநுபவை - அநுபவமுள்ளவள். அநுதயை - கிருபையுள்ளவள்.

அபிநவை - மிக்க புதுமையுள்ளவள்.

அதலம் முதல் எழுதலம் இவை - அதலம் முதல் எழு பாதல உலகங்களை யும். எழு தலம் - அதலம், சுதலம், தராதலம், இரசாதலம், மகா தலம், பாதாளம் என்பன.

முறை முறை அடைய அருளிய பழையவள் - கிரமமாக முற்றுயக்கொ டுத்த பார்வதி.

வசுவ பசுபதி - அக்கினிசொரூபியான பரமசிவன்.

ஒருமொழி மவுனம் அருளிய மகிமையும் - மகாவாக்கிய மவுன உபதேசத் தைச்செய்த மகிமையையும்.

இமையவர் மரபில் வனிதையும் - தெய்வயானையையும்.

வனசரா புதல்வியும் - வள்ளியம்மையையும். வனசரா - வனவாசிகள், வேடர்.

இயல் அறி புலமையும் - இயற்றமிழை அறியும் அறிவையும்.

உபநிட மதுர கவிதையும் - உபநிடத இனிய சுலோகங்களையும்.

விதரண கருணையும் - கொடுக்கும் கருணையையும். வேண்டியதைக் கொ டுக்குங் கருணையுள்ளவா. விதரணம் - கொடை.

வளமையும - நன்மையையுமுடைய.

---

110. கதியை விலக்கு மாதர்கள் - மோட்சகதியைத் தடுக்கும் பரத்தையரது. மோட்சகதி அடைதற்கு விக்கினஞ்செயயும் பரத்தையரது.

இரதந பூஷண கனதன வெற்புமேல் - இரத்தின ஆபரணங்களால் அல ங்கரிக்கபட்ட பாரமாகிய தனவெற்புமேல்.

உனது பிரசித்தமாகிய கன தனம் ஒதத மேனியும் - தேவரீருடைய கீர்த்தி பெற்ற மாற்றுயர்ந்த பொன்னை ஒதத திருமேனியையும். தனம் - பொன்.

அதி பலம் வஜ்ரவாகுவும் - அதிக வலியையுடைய வயிரமணிபோன்ற தோள்களையும்.

அயில் நுனை வெற்றி வேல் அதும் - கூரிய முனையையுடைய வெற்றி வேலையும்.

அரவு பிடித்த தோகையும் - சர்ப்பத்தைப்பற்றிய மயிலையும்.

உலகு எழும் அதிர அரற்று கோழியும் - எழு உலகங்களும் நடுங்கும்படி ஒலிக்கின்ற சேவலையும்.

அபிநவ பத்ம பாதமும் - மிக்க புதிய தாமரைப்பூப்போன்ற திருவடியை யும். அபி - மிக. நவ - புதிய.

இரவி குலத்து இராசதம் மருவி எதிர்த்து வீழ் கடு இரண முக சுத்த வீரிய குணமான இளையவனுக்கு - சூரியகுலத்துக்குரிய இராசத

குணத்தைப் பொருந்தி, கடிய போர்முனையில் (பகைவரை) எதிர்த்து மேவுகின்ற சுத்த வீரியகுணமே குணமாகக்கொண்ட இளையவனாகிய பரதனுக்கு. வீழ்தல் - மேவுதல்.

நீண் முடி அரசது பெற்று வாழ்வுற - நீண்ட முடியையும் அரசியலையும் பெற்று வாழும்படி.

இதம் ஒடு அளித்த - அன்போடு கொடுத்த.

பதினொரு உருத்திராதிகள் தபனம் விளங்கும் மாளிகை பரிவொடு நிற்கும் ஈசுர - பதினொரு உருத்திரர்களது பிரகாசம் விளங்குகின்ற கோவிலில் அன்போடு நின்றருளும் ஈசுவரரே. தபனம் - வெப்பம்.

சுரர் உலோக பரிமள கற்பக அடவி - தேவலோகத்தில் வாசனைபொருந்திய கற்பகச்சோலையிலுள்ள.

அளி அளி சுற்று பூ உதிர் பழநிமலை - வரிபொருந்திய வண்டுகள் சூழ்கின்ற பூக்களசொரிகின்ற பழநிமலை. தேவர்கள் பூசைசெய்யும் ஸ்தலம் என்பது கருத்து.

---

1. வெகு வழி சார்ந்த மூடனை - பல தீயவழியிற் சார்ந்த மூடனை.

நிறை பொறை வேண்டிடா மத சடலனை - நிறையையும் பொறுமையையும் விரும்பாத மதங்கொண்ட சரீரத்தையுடையவனை. நிறை, பொறை, தேற்றம், நீதி, சால்பு எனனும் ஐந்தும் ஆடவர்க்குரிய குணங்கள்

மிகு கேள்வி - மிக்க கல்வியையும்.

தாண்டுகாலி - விடுகாலி.

அவமதி அதனில் பொல்லாங்கு தீமை செய் சமடனை - தாழ்ப்புத்தியினாற் பொல்லாங்கையும் தீமையையுஞ் செய்யும் மூடனை. (ச + மடன்) = அறியாமையோடுகூடினவன்.

வலிய அசாங்கமாகிய தமியேன் - மிக ஒழுங்கீனமுடைய தமியேன்.

விரை செறி குழலியர், வீம்பு நாரியர் - வாசனைசெறிந்த கூந்தலையுடையவர், பெருமைபேசும் பெண்கள். வீம்பு - மேன்மை.

வாஞ்சை மோகியர் - ஆசைமயக்கமுள்ளவர்.

விழி வலை மகளிர் - கண்களாகிய வலைகளையுடைய பெண்கள். ஆங்கு இடைச்சொல்.

ஒரு மலர் இலை கொடும் ஓர்ந்து - ஒரு பூவாதல் பத்திரமாதல் கொண்டு நினைத்து

விதமுறு பரிவொடு - தலையன்பு முதலிய வகைகளையுடைய அன்போடு. விதம் - வகை.

ஒருபது சிரமிசை போந்த இராவணன் - பத்துத்தலை மேலேகிளர்ந்த இராவணனும். மிசை - மேல்.

ஏந்தும் ஏதியும் - ஏந்துகின்ற வாளும்.

ஒரு கணைதனில் அற வாஙகும் - ஒரு பாணத்தினால் இருகூறுகும்படி வளைக்கும். வாஙகுதல் - வளைத்தல்.

புகழ் ஆய்ந்த நூலினர் - புகழை ஆராயந்த கற்றோர்.

ஈந்த பாலகா - பராசரமுநிவர்பெற்ற பாலகா.

ஓஙகு மா மயில் - பெரிய அழகிய மயிலின்மீது.

குரைகழல் பணிவொடு கூம்பிடார் பொரு களமிசை அறமது தீர்ந்த சூராகள் - ஒலிக்கின்ற வீரக்கழலை அணிந்த பாததததைத் தாழ்வுடன் வணஙகாராய் யுததகளத்திலே தருமமுறை சிறிதுமில்லாதுநின்று போாசெய்த அவுணவீராகளது.

கூந்தலூா - ஒரு ஸ்தலம்.

---

112\. அகலம் நீளம் யாதாலும் ஒருவராலும் ஆராய அரிய மோனமே கோயில் என மேவி - அகலமும் நீளமும் எதனாலும் எவராலும் ஆராய்ந்து உணரக்கூடாத மௌனநிலையே கோயிலெனப் பொருந்தி.

அசையவே கிரியா பீடமிசை புகா - மனம் அசையுமபடி கிரியாபூசை செய்யப்புகாமல்.

மகா ஞான அறிவில் ஆதர ஆமோத மலர் தூவி - சுததமான பேரறிவாகிய சிவததின்கண அன்பென்னும் வாசனைபொருந்திய மலரைத் தூவி. ஆதரம் - அன்பு. ஆமோதம் - வாசனை.

சகல வேதன அதீத - சகல வேதஙகளுக்கும் அதீதப்பட்ட. வேதனம் - வேதம்.

சகல வாசக அதீத - சகல வாக்குக்களுக்கும் எட்டாத.

சகல மா கிரியை அதீத - சகல மேன்மையான கிரியைகளுக்கும் எட்டாத.

சிவரூப சகல சாதக அதீத - சிவரூபமான சகல சாதனைகளுக்கும் அதீதப்பட்ட. சாதகம - சாதனை.

சகல வாசன அதீத - சகல அறிவுக்கும் அதீதப்பட்ட. வாசனம் - அறிவு.

தனுவை நாடி - சொரூபததை விரும்பி.

மா பூசை - ஞானபூசை.

விகட தார சூதான நிகள போது பாத உள - அழகிய இதழ்களையுடைய தாமரைமலர்போலும் நீண்ட பாதாரவிந்தத்தையுடையவரே. விகடம் - அழகு. தாரம் - நா, இதழ். சூது - தாமரை. நிகளம் - நீளம். போது - தாமரை.

விரக ராக போதம் ஆர அசுரர் கால - காம இச்சையாகிய அறிவு நிறைந்த அசுரர்களுக்குக் காலரே.

விபுத - அறிஞரே.

மாலிகர - மாலையை அணிந்தவரே.

நீல முகபடம் ஆகம் மாயூர - நீல முகபடம்போலும் அங்கத்தையுடைய மயிலை வாகனமாகக் கொண்டவரே. முகபடம் - முகம் முதலிய அவயவங்களை மூடிக்கொள்ளும் போர்வை. படம் - சீலை. ஆகம் - சரீரம்.

சீலக - பரிசுத்தமுடையவரே.

ககன கூட பாடீர தவள சோபித ஆளான கவன பூதர் ஆரூடர் சத கோடி கனக காரண - ஆகாயத்தினகணணே பரவுகின்ற மேகம் போலும் வெண்ணிற விபூதி அணிந்த அடியாராயுள்ள அளவில்லாத பூதப்படைகளுக்கும் ஞானிகளுக்கும் பொன்போன்ற காதத்ரே. ககனகூடம் - ஆகாயம். பாடீரம் - முகில். தவளம் - வெண்மை. சோபிதம் - அலங்கரிக்கப்பட்டது. கவனம் - படை. ஆரூடா - ஞானிகள்.

ஞான கருணை மேருவே - ஞானத்தையும் கருணையையுமுடைய மேருவே.

---

13. ஊனும் தசை உடல தான் ஒன்பது வழி - நிணமும் தசையுமாகிய இவ்வுடல் ஒன்பது துவாரமுடையது.

ஊருமு கருவழி - சென்று பற்றும் கருப்ப வேறுபாடுகள்.

ஓரும்படி - தெளிவாய் அறியும்படியும

கானும் திகழ் கதிரோனும் - வனத்தையும் ஒளிவிளங்குகின்ற சூரியனையும்.

நடையுடையோனும் - காற்றையும். நடையுடையோன் - இடைவிடாது சஞ்சரிப்போன்; காற்று.

காரும் - மேகத்தையும. கார் - மேகம். வரை - மலைகளையும்.

கயிலாயன் - பரமசிவனது. வான் இந்திரன் - சுவர்க்கலோக இந்திரன்.

வாள் கொண்டு - ஒளிபொருந்திய வேற்படையைக்கொண்டு. வாள் - ஒளி.

---

114. மூல மந்திரம - பஞ்சாக்கர மந்திரம்.

மடவார்கள் மோகமுண்டு. மோகம் - மயக்கம.

அதி தாகம் - அதிக ஆசை.

அபசாரம் - துராசாரம். அபராதம் - குற்றம், பிழை.

இடு மூகன - பிறவி ஊமை.

அருள் பயிலாத கோலமும் குணவீன துன்பர்கள் வார்மையும் பலவாகி - அருளோடுகூடாத வடிவமும், நற்குணமில்லாத தீயவர்களது ஒழுக்கமும பலசெய்து.

வெந்தெழு கோர குமபியிலே - வெந்தெழுகின்ற அக்கினிமயமான நரகத்திலே.

கூடுகொணடு - உடம்புகொண்டு. கூாமை - அறிவு

பீலி வெந்து உயர் ஆவி வெந்து அ அசோகு வெந்து - மயிற்பீலியும வெந்து, சிறந்த உயிரும் வெந்து, அந்த அசோகமரமும வெந்து.

அமண மூகர் நெஞ்சிடை பீதி கொணடிட வாதுகொணடு - சமணராகிய ஊமைகள் நெஞ்சில் அச்சமுறத் தருக்கஞ்செய்து. பீதி - அச்சம.

அருள் எழுது ஏடு பேணி அங்கு எதிர ஆறு சென்றிட - திருவருட் பாவாகிய தேவாரம எழுதிய ஏடு அவ்விடத்தில ஆற்றுக்கு எதிர முகமாகச செலல.

மாறன - பாணடியன்.

வஞ்சகர் பீறு வெங கழுவேற - வஞ்சகத்தன்மையையுடைய சமணர் பீறுகினற கொடிய கழுவில ஏற.

சோதி அஙகணா - பிரகாசம்பொருந்திய அருட்கணணா (சிவபெருமான்.)

அநதரி - பார்வதி. சஙகரி - சுகத்தைக் கொடுப்பவள்.

ஆரணம் பயில் ஞான புஙகவ - வேதத்தை உபதேசிக்கும ஞானசிரேட்டரே.

சேவல் அம் கொடியான பைஙகர - கோழிக்கொடிபொருந்திய பசிய கரத்தையுடையவரே.

---

15. சீறல - பெருஙகோபி.

தீமைபுரி கபடி - தீமையைச்செய்யும் வஞ்சகன்.

பவ நோயே தேடு பரிசி - பாவமாகிய நோயையே தேடுகின்ற தன்மையுடையவன்.

பொய்யான கொடுமையுள கோளன் அறிவிலி - பொய்யாகின்ற கொடுமையுள்ள கோளன அறிவிலி.

கூளன் - கஞ்சல். கூளம் - கஞ்சல்.

மாறுபடும அவுணர் - விரோதிக்கும் அவுணர்.

வாகையுள மவுலி - வெற்றிமாலையை அணிந்த முடியை.

புனைதல் - அணிதல்.

மாகம் முகடு அதிர வீசு சிறை மயிலை வாசியெனவுடைய - மேகமண்டலம் நடுநடுங்கும்படி வீசுகின்ற சிறகினையுடைய மயிலைக் குதிரையாகவுடைய.

வீறு கலிசை வரு சேவகனது இதயம மேவும் - பெருமைபொருந்திய கலிசை என்னும பதியிலிருந்து வந்த அதிபனுடைய மனத்திற் பொருந்தியிருக்கின்ற. கலிசைச்சேவகன என்றது கலிசை என்னு மூரிலிருந்துவந்து பழநியில் வசித்த அருணகிரிநாதருடைய ஓா அரிய நண்பனை சுப்பிரமணியக்கடவுளைப் பழநியிலிருந்த திருக்கோலத்தோடுந் தரிசிக்கவேண்டி, கலிசைச்சேவகனார் வீரை என்னுந் தலத்திலே கோயிலொன்று கட்டுவித்துப் பழநிநாதர்போலத் திருவுருவொன்றுசமைத்து அம்மூாத்தியை வழிபட்டுவந்தாா. சேவகனார் பெயா தெரியவில்லை.

தீர தர - மிக்க தைரியமுடையவரே. தரம் - ஒரு வடமொழி விகுதி.

---

116 ஊன் எறு எலும்பு சீசீ மலங்களோடே - தசைமிகுந்த எலும்பு அருவருக்கத்தக்க மலஞ் சலத்தோடு.

நரம்பு கசுமாலம ஊழ் நோய அடைந்து மண்டும் மாசான ஊனோடு உழன்ற - நரம்பும அழுக்கும் பழவினையால் வந்த நோயும் சோந்து நெருங்கிய அற்ப உடலுடன அலைந்து திரிந்த.

கடை நாயேன நான் ஆா - நாயிற் கடையேனாகிய நான் ஆர், எனக்கு என்ன சுதந்திரமுண்டு.

உணங்கல் - துக்கித்தல, வாடல.

தானே புணாந்து - தானாகவே சராசரங்களெல்லாவற்றோடுங் கூடி.

அருள ஊறித தாயபோல் பரிந்த தேனோடு உகந்து - அருள்சுரந்து தாய போல அனபுகொணட தேன்போன்ற உமாதேவியாரோடு மகிழ்ந்து.

தாா வேணி - கொன்றைமாலை அணிந்த சடையையுடைய.

---

117. முசித்தல் - இளைத்தல், மெலிதல். தரித்தல் - சகித்தல்.

கல் நாா உரித்த என் மன்னு - கல்லைப்போன்ற எனது மனத்தில் அன்பை வருவித்து அதனைக் கசியப்பண்ணிய எனது குருவே.

கர்ண அமிாதப் பதம - காதில் அமிர்தம்போன்ற ஞானோபதேசத்தை ஓதிய.

கல்லார் மனத்து உடன் நில்லா மனத்தவ - ஞான நூல்களைக கல்லாதார் மனத்திற்கூடி நில்லாத திருவுள்ளத்தையுடையவரே. "கல்லா நெஞ்சின், நில்லானீசன், சொல்லாதாரோ, டல்லோநாயே." (தேவாரம்.)

கண்ணாடியில் தடம் கண்ட வேலா - பளிங்கு ஒத்த தூய மனத்தினிற் பெரிதாய் விளங்கும் வேலவரே.

மன்னான தக்கனை முன் நாள் முடித் தலை - முன்னாளிலே தலைவனான தக்கனது முடி அணிந்த தலையை.

வன் வாளியில் கொளும - வலிய அம்பினாற் கொல்லும்.

தவகருபன் மன்று - பரமசிவனது குருவே.

வயற்பதி - வயலூர.

மூவர்க்கு - மூவருககு. மூவர் பிரமா விட்டுணு உருத்திரன்.

---

118. பகல் இரவினில் தடுமாறு - கேவலசகலத்தில் அகப்பட்டுக் கலங்காது.

பதி குருவெனத் தெளிபோத இரகசியம் உரைத்து - சிவமே குருவெனத் தெளிகின்ற ஞானோபதேச இரகசியததைத தெரிவித்து.

அனுபூதி இரத நிலைதனை - அனுபவம்வாய்த்த இனபநிலையை.

சக சிர கிரி - பூமியிலுள்ள திரிசிராமலை. சகம் - பூமி.

---

119. கருப்பற்று ஊறி - கருப்பையிலூறி.

பாடு உற்று - வருத்தமுற்று.

திருப்பொற பாதத தனுபூதி சிறக்க - யான் எனது என்னும் தற்போதம் ஒழிந்த இடத்து ஆனமா ஆனந்தமயமாகின்ற திருவடியடைதலாகிய பேரின்ப அநுபவம் மிகுமபடி.

பரப்பு அற்றருக்கு - சித்தவிருத்தியற்றவருக்கு.

பரத்து அப்பாலுக்கு அணியோனே - பரத்துக்கு அப்பாலுக்குச சமீபமாயுள்ளவரே. பரவெளியிலுள்ளவரே.

---

120. ஆர் அமுதமான சர்க்கரை தேனே ஆன அநுபூதியை - அரிய இனிமையான சர்க்கரையையும் தேனையும்போன்ற அநுபவத்தை.

காரணமதான உததம சீலா - எல்லாவற்றிற்குங் காரணமான உத்தம குணமுடையவரே.

---

121. ஞான நிருத்தம் - ஞானநடனம், அநுக்கிரகம்.

அநுபூதி இராசி தழைக்க - அநுபூதியின் இயைபு செழிக்க. இராசி - இணக்கம், இயைபு.

பூளை எருக்கு மதி நாகம் பூணர் - பூளை, எருக்கு, சந்திரன், சர்ப்பம் எனனும் இவைகளை அணிந்த பரமசிவன்.

வேளை தனக்கு உசிதமாக வேழம் அழைத்த - அந்நேரத்துக்கு ஏற்றதாக விநாயகராகிய யானையை அழைதத.

---

22. அநித்தமான ஊன் நாளும் இருப்பதாகவே நாசி அடைத்து வாயு ஓடாத வகை சாதித்து - நிலையில்லாத உடம்பு எப்போதும் இருப்பதாக எண்ணி நாசியை அடைத்து வாயு ஓடாமலே தடுத்து (கும்பகஞ் செய்து.)

அவத்திலே குணால் மூலி புசித்து வாடும் - வீணிலே கூட்டமான மூலிகளைப் புசித்துச் சோர்வடைகின்ற.

ஆயாச அசட்டு யோகி ஆகாமல் - இளைப்பையடைகின்ற இழிவான யோகியாகாமல், கருமயோகியாகாமல் என்பது கருத்து. கருமயோகமாவது தத்துவங்களையெல்லாம் நேதிபண்ணி நீக்கித் தம்மை அருளால் அறியும் அறிவின்றி, அத் தத்துவங்களைத் தன்மேலே முட்டாக்காய் மூடிக்கொண்டு பிராணவாயுவை இரேசித்தும் பூரித்தும் கும்பித்தும் உள்ளடங்கச்செய்து தாமும் அதனோடு அசைவறறிருந்து சமாதி கூடுதலாம். இது கிரியாயோகம் எனவும் பெயர்பெறும். ஆயாசம் - இளைப்பு. அசடு - இழிவு.

மலம் மாயை செனித்த காரிய உபாதி ஒழித்து - ஆணவமும் மாயையும் காரணமாய்வந்த உடலைப்பற்றிய கவலைவிட்டு. காரியம் - சரீரம். உபாதி - கவலை.

ஞான ஆசார சிரத்தையாகி - ஞானம் அடைதற்கு ஏதுவாகிய ஒழுக்க விதிகளில் நம்பிக்கைகொண்டு.

யான் வேறு என் உடல் வேறு செகத்து யாவும் வேறாக நிகழ்ச்சியாம் - ஆன்மாவாகிய நான் வேறு, மாயாகாரியமாகிய இந்த உடல் என்னினும் வேறு, உலகம் முழுவதும் வேறு என்று நிகழ்கின்ற.

மனோதீத சிவச சொரூப மாயோகி என - மனத்துக்கெட்டாத சிவசொரூபமாயுள்ள சிவயோகியென்றிருக்கும்படி. சிவயோகமாவது எல்லா வடிவமும் அருள்வடிவாகக்கண்டு உறைவது. (பார். பாட்டு. 124.) ஒருகால் நினைந்தும் ஒருகால் மறந்தும் முன்னர் அறிந்ததுபோல அறியாது, நினைப்பு மறப்பு (கேவல சகலங்கள்) முதலிய ஒன்றுந் தோன்றாத அறிவாய் எங்கும் பூரணமாய் ஒன்றோடுந் தாக்கற்று அருள்வடிவாய் அசைவற்றுநிற்றலாம். இது ஞானயோகம் எனவும் பெயர்பெறும். கருமயோகம் செய்வதினால் துன்பமுண்டு. துன்பட்டுச்செய்யினும் ஆன்மலாபமுமில்லை. மனததால் வாயுவைவாங்கி உள்ளே நிறுத்தி அதனுள்ளே தாமும் மறைந்திருத்தலாகிய கருமயோகத்தால் ஆனந்தநித்திரை வாராது. அது இது என்று சுட்டி அறியுடதற்போதங்கெட்டு அருட்கேவலம்வந்தால் அந்நித்திரைவரும். "துறூத்தியெனும்படி கும்பித்துவாயுவைச் சுற்றிமுறித், தருத்தியுடம்பை யொறுக்கிலென்னுஞ் சிவயோகமெனுங், குருத்தையறிந்து முகமாறுடைக் குருநாதன்சொன்ன, கருத்தைமனததி லிருத்துங்கண்டீ

முத்தி கைகண்டதே." என்றும், "காட்டிற்குறத்தி பிரான்பதத்தே கருத்தைப்புகட்டின், வீட்டிற்புகுத மிகவெளிதே விழி நாசிவைத்து, மூட்டிக்கபால மூலாதாரநேரண்ட மூச்சையுள்ளே, யோட்டிப்பிடித்தெங்கு மோடாமற்சாதிக்கும் யோகிகளே" என்றும் கந்தரலங்காரத்தில் இந்த அநுபூதிமானை சொல்லியிருக்கிறார். கேவலசகலங்கள் தாக்காது நிற்றலால் "மநோதீதம" என்றும், அருளிலே மறைந்து அருள்வடிவாய்ச் சிவயோகியிருத்தலால் "சிவசொரூபமாயோகி" என்றும் சொன்னார்.

தொனித்த நாத வேய் ஊது - சத்திக்கின்ற ஓசைபொருந்திய மூங்கிற் குழலை ஊதுகின்ற.

சகஸ்திர நாம - ஆயிரம் நாமங்களையுடைய.

கோபால சுதன் - இடையர் புத்திரனாகிய கிருட்டிணன்

மீகாமன் - மாலுமி.

தொடுத்த நீப - தொடுத்த கடப்பமாலையை அணிவோரே.

மனித்தர் ஆதி - மானுடர் முதலாகிய.

மகப் பிரவாக பானீயம அலை மோதும் - பெரிய பெருக்கையுடைய நீர் அலை மோதுகின்ற.

மணத்த சோலை சூழ் காவை அனைத்து லோகம் ஆள்வாரும் மதித்த சாமியே - பரிமளம பொருந்திய சோலைகள்சூழ்ந்த திருவானைக்காவில் எழுந்தருளியிருக்கின்ற எல்லா உலகங்களையும் ஆளுகின்ற பரம சிவனும் நன்குமதித்த குருவே.

---

123. அடைய மீளில் - முற்றுயத் திரும்பினால். கும்பகஞ் செய்தால்.

அவனிமீதில் ஓயாது தடுமாறி அருள்பெறா அநாசார கருமயோகியாகாமல் - பூமியிலே இடைவிடாது தடுமாறித் திருவருள்பெறாத தீயொழுக்கமுடைய கருமயோகியாகாமல்.

வாசக அதீத அடி ஊடே உருகி - வாக்குக்கெட்டாத திருவடியின்கண் அன்பினாலே மனங்கரையப்பெற்று.

ஆரிய ஆசார - மேலான ஆசாரம்பொருந்திய. ஞான ஆசாரம்பொருந்திய. ஆரியம் - மேன்மை.

பரமயோகி - மாயோகி, சிவயோகி.

உன் உபய பாத இராசீவம் - உமது இருபாத தாமரைமலரை. இராசீவம் - தாமரைப்பூ. இருபாதம் - கிரியாசத்தி ஞானசத்தி.

வட பராரை மா மேரு கிரி எடா நடா - வடபாகத்திலுள்ள பருத்த அரையையுடைய பெரிய மந்தரகிரியை எடுத்து நட்டு.

மோதும் மகர வாரி ஓரேழும் அமுதாக - திரைமோதுகின்ற மகரமீன் சஞ்சரிக்கும் ஏழு சமுத்திரங்களையும் அமிர்தம் உண்டாகும்படி.

மகுடவாள் அரா நோவ - முடியையுடைய கொலைசெய்யும் வாசுகி என்னுஞ் சர்ப்பமும் (கயிறாகக்கொணடிழுத்தமையால்) நோவடைய.

மதியம் நோவ - மத்தின் கடைதறியாகிய சந்திரனும் நோவடைய.

வாரீச வனிதை மேவு தோள் ஆயிரமும் நோவ கடையும் - தாமரையாசனியாகிய இலக்குமி வசிக்கும் புயங்கள் ஆயிரமும் நோவடைய கடையும்.

ஆதி கோபாலன் - முதல்வராகிய விட்டுணு.

கனகலோக பூபால - சுவார்க்கலோகத்துக்கு அரசரே.

---

124. மந்திர வேதம் - மந்திரவடிவமான வேதம்.

ஐம்பதோர்விதமான லிபிகள் - ஐம்பத்தொருவகையான அக்கரங்கள்.

வெகு ரூப அணடர் ஆதி சர அசரமும் - பல வடிவங்களாகிய தேவர்கள் முதலாகச்சொல்லப்படுகின்ற சரம் அசரங்களும்.

உயர் புண்டரீகனும் - மேலான பிரமனும். புண்டரீகம் - தாமரை.

மேக நிறவனும் - விட்டுணுவும்.

அந்திபோல் உருவானும் - அந்திவானம்போன்ற திருமேனியையுடைய

காலுதல் - கக்குதல், வீசுதல்.

அசபை - ஹம்ஸமந்திரம்.

விந்துநாதமும் ஏக வடிவம் - ஐந்துபூதமாதி விந்துநாதமீறாகவுள்ள எல்லா வடிவங்களும்.

அதன் சொரூபமாக உறைவது சிவயோகம் - சிவசொரூபமாகக் கண்டிருப்பது சிவயோகமெனப்படும். “மநோதீதசிவசசொரூபமாயேநி” (பார். பாட்டு. 122.)

உபதேச குருபர சம்ப்ரதாயமொடு எயும் நெறியது - பாரம்பரியமாக வரும் உபதேச நியமத்தோடு கூடிய உபதேசகுருவினாலே தரப்படும் மேலான நெறியை. சம்பிரதாயம் - பாரம்பரியமாகவரு முபதேச நியமம்.

தானவர் சேனை கெடிபுக - அவுணர்சேனை கலங்க.

விபுதர் - வானோர்.

மண்டு பூத பசாசு - நெருங்கிய பூதங்களும் பசாசுகளும்.

மயிடாரி - மகிடாசுரனுக்குப் பகையாயுள்ளவள், துர்க்கை.

வன்கண் வீரி - கொடிய தொழிலுடைய காளி.

பிடாரி - பிடாரிதேவி.

மேருகிரி தலை மண்டு தூளெழ - மேருமலையின்முடி மிக்க தூளாய்ப்போக.

பந்த பாச விகார பரவசம் வென்றியான சமாதி முறுகு கல் முழை கூடும் விண்டு மேல் - பந்தமாகிய மாயாவிகாரத்தினாலே தன்வசமற்றிருப்பதை வெல்லற்காரணமான சமாதியை முறுகலான கற்கள் பொருந்திய குகையிற்கூடுகின்ற மலையின்மேல். முழை - குகை. விண்டு - மலை.

இனிய கள்ளுண்டு - இனிய தேனை உண்டு.

இதழி பொன் விஞ்ச வீசும் - கொன்றை பொன்போன்ற பூக்களை அதிகமாகச் சொரிகின்ற.

---

125\. உருவேறவே ஒருகோடி செபித்து - உரு அதிகப்படும்படி ஒருகோடி மந்திரத்தைச் செபஞ்செய்து.

ஓமசித்தி உடனாக ஆகமத்து உகந்து பேணி - ஓமசித்தியுண்டாகும்படி ஆகமவிதிப்படி யாகத்தை விருப்போடு செய்து.

உணர்வு ஆசை யாரிடத்தும் மருவாது - அறிவும் ஆசையும் யாரிடத்தும் மருவாமல்.

ஓர் எழுத்தை ஒழியாது - ஓரெழுத்தைத் தவறாது.

ஊதை விட்டு இருந்து - பிராணவாயுவை வெளியே விட்டிருந்து.

நாளும் தரியாத போதகத்தர் குருவாவர் ஓர் ஒருத்தர் - எப்பொழுதுந் தரியாத அறிவுடையோரிற் சிலர் குருவாய் வருவார்கள்.

தருவார்கள் ஞானவித்தை தஞ்சமாமோ? - (அவர்கள்) ஞானோபதேசத்தைத் தருவார்கள். அது அடியேனுக்குப் பற்றுக்கோடாகுமா?.

தழல் ஆடி வீதிவட்டம் ஒளிபோத ஞானசித்தி தருமாகில் ஆகும் - நெற்றிப்புருவமத்தியஸ்தானத்தில் ஞான ஒளிதோன்றும் ஞான யோகசித்தியைக் கொடுக்குமாயின் அது தகுதியாகும். தழலாடி வீதி - நெற்றி. வட்டம் - புருவமத்தியஸ்தானம்.

அத்தைக் கண்டிலேனே - அதை அடியேன் காணவில்லை. மந்திரம் உருவேறச் செபித்தும், ஓமசித்தியுணடாக யாகத்தைச் செய்தும், ஆசை ஒழிவும் ஏகாட்சர தியானமும் கருமயோக சாதனநிவிர்த்தியுமின்றி, அறிவுடையோரிற் சிலர் குருவாய் வருவார்கள். அவர் செய்யும் ஞானோபதேசம் அடியேனுக்குத் தஞ்சமாகாது. ஞானயோகசித்தியைத் தருவீராக என்பதாம்.

குருநாடு இராசரிக்கர் - குருபூமியின் இராசாக்கள். குருநாடு - குரு என்னும் அரசன் ஆண்ட நாடு. அது இந்திரப்பிரஸ்தம(டெல்கி) என்னும் பட்டினத்துக்குச் சமீபமாயுள்ளது.

மாயமிட்டு - வஞ்சனை செய்து.

குந்தி பாலர் குலையாமல் நீதி கட்டி - குந்தியின் புதல்வர் நிலைகுலையாமல் முறைசெய்து. குந்தியின் புதல்வர் - தருமன், அருச்சுனன், வீமன், நகுலன், சகாதேவன் என்னும் ஐவர்.

எழு பாரை ஆள விட்ட - எழுலகங்களையும் ஆளும்படி விட்ட.

குறள் ஆகன் ஊறு இல் நெட்டை கொண்ட ஆதி - குறள்வடிவரும், குற்றமில்லாத நெடிய வடிவத்தைக்கொண்ட முதல்வருமாகிய விட்டுணு. ஊறு - குற்றம்.

புராரி சித்தன் - திரிபுரங்களை எரித்த சித்தராகிய பரமசிவன்.

விராலி சித்திர மலைமேல் - அழகுபொருந்திய விராலிமலையின்மேல்.

அம் கை வேலா - அழகிய திருக்கரத்தில் வேலாயுதத்தையுடையவரே.

மதுராபுர ஈசர் மெய்க்க - மதுரைநகரத்தின் கணுள்ள அரசர் மெசசும்படி.

மாறன் வெப்பு வளை கூன் - பாணடியனது சுரத்தையும் வளைந்த கூனையும்.

---

126. பூரண வார கும்பம் - பூரணமான நீரையுடைய குடம்போன்ற. வார் - நீர்.

சீத படீர கொங்கை - குளிர்ந்த சந்தனத்தை அணிந்த கொங்கையையுடைய.

மாதர் விகார வஞ்ச லீலையில் - மாதர்களது வேறுபாடான கபடம் பொருந்திய சையோகத்தில்.

போது அவமே இழந்து - காலத்தை வீணிலே கழித்து.

போனது மானம் என்பது - மானங் கெட்டுப் போனதென்பதை.

பூரியன் - கீழ்மகன்.

நெஞ்சு காவல் படாத பஞ்ச பாதகனும் - பொறிவழிசென்று மனங் காக்கப்படாத ஐவகைப் பாதகங்களையுஞ் செய்பவனும்.

காரண காரியங்களானதெலாம் ஒழிந்து யான் எனும் மேதை விண்டு பாவகமாயிருந்து கால் உடல் ஊடு இயங்கி நாசியின்மீது இரண்டு விழி பாய - மாயையின் காரியமாயுள்ள பிரபஞ்சப்பற்றெல்லாம் நீங்கி யான் என்னும் அகங்காரமாகிய பசுஞானத்தைவிட்டுச் சிவத்தியானத்தோடிருந்து பிராணவாயு சுழுமுனைநாடிமார்க்கமாய் ஓடி மூக்குநுனியை இரண்டுகண்களும் பொருந்த. மேதை - அறிவு. பாவகம் - பாவனை, தியானம.

காயமும் நாவும் நெஞ்சும் ஓர் வழியாக - காயமும் வாக்கும் மனமும் ஒரு வழியாக.

அன்பு காயம் விடாமல் - அன்பையும் சரீரத்தையும் பாதுகாத்து.

றன் நீடிய தாள் நினைந்து காணுதல் கூர் தவம் செய் - தேவரீருடைய தேடியுங் காணமுடியாத திருவடிகளைத் தியானித்துக் காணும் பொருட்டு மிக்க தவத்தைச் செய்கின்ற.

ஆரண சார மந்திர வேதம் எலாம் விளங்க ஆதிரையானை நின்று தாழ்வன் எனு வணங்கும் ஆதரவால் விளங்கு பூரண ஞானம் மிஞ்சும் உரவோனே - வேதசாரமாகிய மந்திரங்கள் எல்லாம் விளங்கும்படி பரமசிவனை நின்று வணங்குவேன் என்று வணங்கும் அன்பு மிகுதியினாலே தெரியப்பட்டிருக்கும் பரிபூரண ஞானமிகுதியினையுடைய சர்வவல்லமையுடையோரே!

ஆர்கலி ஊடு எழுந்து - கடலினுள்ளே எழுந்து. ஆர்கலி - கடல்.

மா வடிவாகி நின்ற - மாமரவடிவாகி நின்ற.

அண்டர் ஆனவர் கூர் அரந்தை தீர - தேவர்கள் மிக்க துன்பம் நீங்கும்படி.

ஆழிகொண்டு - சக்கரத்தினால். வாரணம் - யானை.

வாவியின் மாடு இடங்கர் பாழ்பட - தடாகத்தின் கண்ணே பொருந்திய முதலை அழியும்படி. மாடு - இடம். இடங்கர் - முதலை.

மா முகில் - கரிய முகில்போன்று.

சூல் நிறைவான சங்கு வண்டல் ஓடிய காலில் வந்து வாலுகம் மீது மாமணியீன - கருநிறைந்த சங்குக்கூட்டங்கள் வண்டல் ஓடிய வாய்க்கால்வழியாகவந்து வெண்மணற்குன்றின்மேல அழகிய முத்துக்களை ஈன. வண்டல் - ஆற்றிலே மணலோடு சேர்ந்து குழம்பப்பட்டு ஓடும் நீர.

உந்து வாரிதி நீர் பரந்த சீரலைவாய் உகந்த - திரைமோதுகின்ற சமுத்திரநீர் பரந்த திருச்செந்தூரில மகிழ்ந்தருளும்.

---

127. இன் ஒளி வீசி ஓடி இருபக்கம் ஓடு உறச செல் வளி - இனிய ஒளியைப்பரப்பி இடைகலை பிங்கலை என்னும் இருநாடிகள் மார்க்கமாக ஓடிக்கழியும் வாயுவை.

ஆசை நாலு சதுரக் கமலம் உற்று - நான்குபக்கத்தையுடைய சதுரக் கமலமாகிய மூலாதாரத்திற் பொருந்தி. ஆசை - பக்கம்.

ஆவல் கூர மூணு பதியில் மண்முதல் சலசம் இந்து வாகை ஆர பொற்சபையும கொள நிறுத்தி - விருப்பமுற (அங்கிருந்து சுழுமுனை நாடி மார்க்கமாக) அக்கினியாதி மூன்று மண்டலங்களிலுமுள்ள சுவாதிட்டானம் முதல் ஆக்ஞை ஈறாக உள்ள ஐவகைக் கமலங்களிலும், சந்திரகாந்திநிறைந்த பிரமரந்திரக் கமலத்திலும் பொருந்த நிறுத்தி.

வெளியாரு சோதி நூறு பத்தினுடன் எட்டு இதழாகி எழும் அளவிட்டு - அப்பால் ஆயிரத்தெட்டு இதழோடுங் கூடிய சோதிநிறைந்த வெளியாகிய துவாதசாந்த கமலவரை எழு தலங்களையும்பொருந்தி.

அருண வில் பதியில் - சூரிய ஒளிபொருந்திய பிரமரந்திரகமலத்தில்.

விந்து நாத ஓசை சாலும் ஒருசத்தம் அதிகப்பட இகம் ஒடு கூடி - மதிக் கலாமிர்தமும் நாத ஓசைமிகுந்த ஒரு'சததமும் அதிகப்படுகின்ற இவற்றேருடு கூடி ஒருமித்து.

அமுத சித்தியொடு - மதிமண்டலத்தினின்றும் பெருகிப் பாயும் கலா மிர்தப் பேற்றுடன்.

வேதம் ஓதும் சரசத்தி அடியுற்ற திருநந்தியூடே ஊமையேனை ஒளிர் வித்து - வேதம் சொல்லுகின்ற வாசிசத்திக்கு ஆதாரமாக உள்ள ஸ்ரீநந்தி ஒளியையும் ஊமையேனுக்குத தெரிசிப்பித்து.

உனது முத்தி பெற - உனது முததியைப் பெறும்படி.

மூலவாசல் வெளிவிட்டு - பிரமரந்திரவெளிவிட்டு.

உனது உரத்தில் ஒளிர் யோக பேத வகை எட்டும் இதில் ஒட்டும் வகை இன்று தாராய் - உனது திருவருள் வலிமையில விளங்கும் அஷ்டாங்கயோகமும் இதனுடன்பொருந்தும் வகையை இன்று தந்தருளல்வேண்டும்.

வாசி வாணிகன் - குதிரை வியாபாரி.

மாழை ரூபன் - பொன்மயமானவர்.

முகம் மத்திகை விதத்து அருண செம் கையாளி - ஒலிக்கின்ற சவுக்கிறைல் (குதிரையைச செலுததும்) வகைபொருந்திய பிரகாசமான அழகிய கரத்தையுடையவர்.

வாகு பாதி உறை சததி - வாமபாகத்திலிருக்கும் பார்வதி. வாகு - பக்கம்.

குதலை வாயின் மாது - மழலைமொழிபேசும் மாது.

துகிர் பசசை வடிவி - கரும்பவளம்போலும் பச்சைவடிவத்தையுடையவர்.

சிவை - பார்வதி.

என் மாசு சேர் எழுபிறப்பையும் அறுத்த உமை.

இரத்னகிரி - மாணிக்கமலை, திருவாட்போக்கி, சோழநாட்டிற் காவிரியின் தென்கரையிலுள்ளது.

சர்ப்பகிரி - கொஙகநாட்டிலுள்ள நாகாசலம் என்னும் ஸ்தலம். திருச் செஙகுன்றூர், திருசசெஙகோடு என்றும் பெயர்.

தெவுர் - திருத்தேவூர். சோழநாட்டிற் காவிரியின் தென்கரையிலுள்ள ஒரு ஸ்தலம்.

பறியல் - திருப்பறியலூர். சோழநாட்டிற் காவிரியின் தென்கரையிலுள்ள ஸ்தலம், திருப்பறியலூர் வீரட்டானம் என்றும் பெயர்.

காவை - திருவானைக்கா.

மூதூர் - பழமலை, விருததாசலம், திருமுதுகுன்றம். மகதநாட்டிலுள்ளது.

நாகை - நாகைக்காரோணம் (நாகபட்டணம்.)

காழி - சீர்காழி.

வேளூர் - வைத்தீசுரன்கோயில்.

குறுக்கை - திருக்குறுக்கை. அட்டவீரட்டத்துள் ஒன்று. சோழநாட்டிலுள்ளது.

திருவெண்ணெய்ப்பதி - திருவெண்ணெய்நல்லூர். மகதநாட்டிலுள்ளது.

---

128. மூலம் கிளர் ஒருருவாய் - மூலாதாரத்தினின்றும் மேலோங்கி ஓர் உருவமாய்.

நடு நாலங்குல மேல் - சரீரமத்தியஸ்தானத்திலிருந்து நாலங்குலத்துக்கு மேலே. நடு - பாயுவிற்கிரண்டங்குலம் மேலே இலிங்கத்திற்கிரண்டங்குலம் கீழே நடுவிலோரங்குலம் தேக நடுவாகும்.

நடுவேர் இடை மூள் பிங்கலை நாடியொடு ஆடிய - சுழுமுனை இடைகலை மூளுகின்ற பிங்கலைநாடிகளோடு சேர்ந்து. நடுவேர் - சுழுமுனை. ஆடுதல் - உடனுதல்.

முதல்வோகள் மூணும் பிரகாசமதாய் ஒரு சூலம் பெற ஓடிய வாயுவை - அந்த முதன்மையான நாடிகள் மூன்றும் பிரகாசமாய் சூலம் போன்று ஓடிய பிராணவாயுவை.

மூலந் திகழ் தூணவழியே அளவிட ஓடி - சுழுமுனை நாடிவழியாகப்பொருந்தி ஓடச்செய்து.

பாலம் கிளர் ஆறு சிகாரமொடு ஆரும் சுடர் ஆடு பராபர பாதம்பெற - புருவமத்தியில் விளங்குகின்ற ஆஞ்ஞைஸ்தானத்திற் சிகார அக்கரத்தோடுபொருந்திய சோதிவடிவாகிய சிவம் நடனஞ்செய்கின்ற பராபரவடிவாகிய திருவடியை அடையும்படி.

ஞானசதாசிவம் அதில் மேவி - ஞானசதாசிவத்தைப் பொருந்தி.

பாடுந் தொனி நாதம் - ஒலிக்கின்ற நாத ஒலி.

நூபுரம் ஆடும் கழலோசையிலே பரிவாகும்படியே அடியேனையும் அருள்வாய் - திருவடியிலசைகின்ற நூபுர ஓசையிலே பற்றுக்கொண்டிருக்கும்படியே அடியேனையும் அருள்வாய.

கலைமான் - ஆணமான். துடி - உடுக்கு.

விரி அரா தோடு குழையும்சேர - படம்விரிகின்ற சர்ப்பமும் தோடும் குண்டலமும் பொருந்திய.

சூரன் கரம் ஆர் சிலை வாள் அணி தோளும் தலை தூள்படவே - சூரனது கரத்தில் விளங்கும் வில்லும் வாளும ஆபரணமணிந்த தோளுடன் தலையும் தூளாய்ப்போகும்படியும்.

அவர் சூளும் கெட - அவரது சபதமுங் கெட. சூள் - சபதம்.

சேவகன் - வீரன்.

நாணம கெட - நாணம் நீங்க, அஞ்ஞானங்கெட.

---

29. மூலாதாரமொடு அங்கியை ஏற்றி - மூலாதாரத்தின்கணுள்ள அக்கினியை எழுப்பி.

ஆறாதார யந்திரமொடு ஒட்டி - ஆறு ஆதாரங்களிலுமுள்ள சக்கரங்களைப் பொருந்தச்செய்து.

மூலவாயுவை நன் சுழுமுனையூடே ஏற்று - பிராணவாயுவை நன்மைதருகின்ற சுழுமுனைநாடிவழியாக எழுப்பி.

மூது ஆதார மருப்பில் அந்தர - முதன்மையான ஆறு ஆதார முடிவிலுள்ள.

நாத கீதம் அது ஆர்த்திடும் பரம் ஊடே - நாத ஓசை தொனிக்கும் மேலான ஸ்தானத்தில். (பிரமரந்திரகமலத்தில்).

பால் ஒளி ஆத்துமந்தனை - பால்போலும் ஒளிபொருந்திய ஆன்மாவை.

விலகாமல் மால் ஆடு ஊன் ஒடு சேர்த்து இதம் பெற - நீங்காமற் பிராணவாயு இயங்குகின்ற தேகத்தோடுசேர்த்து சுகம்பெறும்படி. மால்-காற்று. (பார். பாட்டு. 126. அன்புகாயம்விடாமல்.)

நாநாவேதம சாத்திரம் சொலும் - பலவித வேதங்களும் ஆகமங்களுமாகிய சாத்திரங்கள் சொல்லுகின்ற. வேதாகம என்றது வேதம என நின்றது.

வாழ் ஞானபுரி ஏற்றி - பேரானந்தவாழ்வைத்தருகின்ற ஞானபூமிசேரச் செய்து. (துவாதசாந்தவெளி சேரச்செய்து.)

மந்திர தவிசு ஊடே மாதா நாதனும் வீற்றிருந்திடும் வீடே மூணு ஒளி காட்டி - மந்திரபீடத்தின்கணணே பராசத்தியும் பரமசிவனும் எழுந்தருளியிருக்கும் வீட்டையும் சோமசூரியாக்கினியாகிய மூன்று ஒளியையுங்காட்டி.

சந்திரவாகு ஆர் தேன் அமுது ஊட்டி என்றனை உடன் ஆள்வாய் - சந்திரகாந்திநிறைந்த தேன்போலும் இனிய அமிர்தத்தைப் பருகத் தந்து அடியேனை இக்கணமே ஆட்கொண்டருள்வாய்.

சூலாள் மாது - சூலத்தையுடையமாது.

தூர்த்த சம்பவி - மோககுணமுள்ள பார்வதி.

இராப்பகல் காத்து அமைந்த அன்னை.

சூடோடு ஈர்வினை வாட்டி மைந்தர் என எமை ஆளும் தூயாள் - சூட்டோடுசூடாய் வருத்துகின்ற வினைகளின் வலிகெடுத்து புத்திரர் போல எம்மையாட்கொண்டருளும் சுத்தமுடையவள்.

மூவரைநாட்டும் எந்தையர் - பிரமா விட்டுணு உருத்திரன் என்னும் மூவரையும் நிலைபெறுத்தும் எம..ா கந்ை.யார்.

வேளூர் வாழ் 'வினைதீர்த்த சஙகரர் தோய் சாரூபரோடு ஏற்று இருந்தவள் - வைத்தீசுரன்கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற வினைதீர்த்த சஙகரரும பொருந்திய ரூபத்தோடு கூடினவருமாகிய சிவனோடு இடபவாகனத்தில் எழுந்தருளியிருந்தவள். ஏறு - இடபம்.

வீட்டுதல் - அழித்தல்.

அந்தகன்வீடு ஊடு ஏவிய - இயமபுரத்துள்ளே அனுப்பிய.

காத்திரம் பரி - உறுப்பைத் தரித்த. பரித்தல் - தரித்தல்.

வேதா நால்தலை சிக்கொளும்படி கோலாகாலமது ஆட்டும் - பிரமாவினது நான்குதலைகளும் சிழ்பிடிக்கும்படி சம்பிரமத்தோடு குட்டிய.

மான்மகள் - வள்ளிநாயகி.

---

130. மூல கமலத்தில் அங்கியை - மூலாதாரகமலத்துள்ள அக்கினியை.

நாலுசதுரத்த பஞ்ச அறை - நாற்சதுரப் பிரமபீடமாகிய சஙகாரக்கிரமத்தின் அஞ்சாம் வீடாகிய சுவாதிஷ்டானத்திற் செல்லும்படி.

மந்திர பந்தியாலே - மந்திர ஒழுஙகினாலே.

நாடியின் நடத்தி - சுழுமுனைநாடிமார்க்கத்திற் செலுத்தி.

நாரண புரத்தில் - விஷ்ணுவின்வீடாகிய மணிபூரகத்தில் உள்ள.

இந்துவின் ஊடு - அர்த்த சந்திராகாரமாகிய விஷ்ணுபீடத்தில்.

உற இணக்கி - பொருந்தச்செய்து.

நன் சுடர் நாற - நல்ல சுடர் தோற்றும்படியாக.

இசை நடத்தி - அநாகதம்முதலிய மற்றஸ்தானங்களிலும் இணங்கநடத்தி.

மண்டல சந்தி ஆறில் - அக்கினியாதி மும்மணடலஙகளிலும் சந்தித்துள்ள ஆறுதாரஙகளிலும் பொருந்திய.

கோலமும் உதிப்ப - விநாயகராதி சதாசிவாந்தமாகிய மூர்த்திகளின் திருக்கோலஙகளும் பிறவும் பிரசன்னமாக.

கண்டு - அவைகளைத் தரிசித்து.

உள - சரீரநிலைக்கு ஆதாரமாகவுள்ள.

நாவினை - நாலஙகுலப் பிராண கலையை.

மறித்து - ஒவ்வொரு சுவாசஙகளின்வழியாகவும் சிறிது சிறிதாகக் கழிந்து போகாதபடி தடுத்து.

இதம்பெறு - இனிமையாகிய.

கோ என முழக்கு சங்கு ஒலி - கோ என்று முழக்கும் சங்கத்தொனியாகிய.

விந்து நாதம் - விந்துசம்பந்த நாத ஒலி.

கூடிய முகப்பில் - கூடிமுழஙகும் இடத்துநின்று.

இந்திரவான அமுதத்தை உண்டு - இந்திரபோகமாகிய தேவாமிர்த்தத்தைப் பருகி.

ஒருகோடி நடன பதம சபை - அனந்தானந்த நடனம்பொருந்திய குஞ்சித பதமமைந்த திருச்சபையை.

என்று சேர்வேன் - அடியேன் எக்காலத்து அடையப்பெறுவேன்.

ஆலம் மலருற்ற சம்பவி - கைவிரல்களினின்றும் கஙகைமுதலிய நதிகள் விரிந்த சாம்பவி. ஆலம் - நீர். மலாதல் - விரிதல். சாம்பவி - பார்வதி.

வேரிலி குலககொழுந்திலி - ஆதியந்தமிலலாதவள். கொழுந்து - உச்சி.

ஆரணா தலைக்கு அலஙகு ஒளி - சிவபெருமானிடத்தில் விளஙகும் ஒளியா யுள்ளவள். ஆரணா - சிவன. தலை - இடம.

செமபொன வாசி - இமயத்தில வசித்தவள்.

ஆணவ மயக்கமும் கலிகாமியம் அகற்றி - ஆணவமலத்தினெல்வரும் மயக் கத்தையும துன்பத்தைவருவிக்கும கன மமலத்தையும நீக்கி.

என்றனை ஆளுமை - என்னை ஆளுகின்ற உமாதேவி.

பரத்தி - பரனுககுச சத்தி

மால விதி - விட்டுணுவும் பிரமாவும். வஞசகா - அவுணர்.

வேத சதுரத்தா - வேதசதுரா, வேத அறிவுடையோா.

வீறு நடனா - ஏகாநதநடனஞ்செய்பவா. வீறு - தனிமை, ஏகாந்தம்.

---

31. சூலம் என ஓடு சாப்ப வாயுவை விடாது அடக்கி - சூலம்போன்று கந்தநடுவிலிருந்து ஓடுகின்ற பிராணவாயுவை இடைகலை பிஙகலை நாடிகள வழியாகச செல்லவிடாது மறித்துச சுழுமுனைநாடிமார்க்க மாக ஓடச்செய்து. பாயுவிற்கிரணடஙகுலம் மேலே இலிங்கத்திற் கிரணடஙகுலம் கீழே நடுவில் ஓரஙகுலம தேகநடுவாகும். அஙகிரு ந்து ஒன்பது அஙகுலத்துக்குமேலே முட்டைபோலக் கந்தமுணடா யிருக்கும. அந்தக்கந்தம் நாலஙகுலப்பிரமாணமாய்த தோல் எலும்பு இவறறுற பூஷிககப்பட்டிருககும். சுழுமுனை முதலான நாடிகளின் உற்பத்திக்கு இடம் அக்கந்தத்தின் நடு.

தூய ஒளி காண முத்திவிதமாக - சுத்த சோதி தோனறவும் முத்தியுண டாகவும்.

சூழும் இருள் பாவகத்தை வீழ அழலூடு எரித்து - பற்றியிருக்கின்ற ஆணவமல சொரூபத்தைக் கெடும்படி சோதித்தழலால் எரித்து. பாவகம் - இயல்பு, சொரூபம்.

சோதிமணி பீடமிட்ட மடம் மேவி - ஒளிபொருந்திய இரத்தினமணி ஆசனமமைந்த பிரமரந்திரகமலத்தைப் பொருந்தி.

மேலைவெளி ஆயிரத்து நாலிரு பராபரத்தின் மேவி - அதன்மேலுள்ள ஆயிரத்தெட்டிதழ்க் கமலங்களையுடைய துவாதசாந்தமாகிய பராபரவெளியைப் பொருந்தி.

அருணாசலத்தினுடன் மூழ்கி - ஒளிப்பிழம்பாகிய சிவத்துடன் கலந்து.

வேலு மயிலவாகன பிரகாசமதிலே தரித்து - வேற்படையையொத்த வசிர ஒளியையும் மயில்வாகனத்தையொத்த மாணிக்க ஒளியையும் பொருந்தி.

வீடும் அதுவே சிறக்க அருள தாராய - முத்திநிலையும் அதுவாய் விளங்க அருளைத் தாராய்.

ஓல் அசுரர் ஆழி எட்டு வாளகிரி மாய - ஓலமிடுகின்ற அசுரரும் சமுத்திரமும் அட்டகிரிகளும் சக்கரவாளகிரியும் மாயும்படியும்.

வெற்பும் ஊடுருவ - கிரவுஞ்சமலையும் ஊடுருவும்படியும்.

அவள் கால் பிடித்து உள் ஓம் என் உபதேச வித்தொடு அணைவோனே - வள்ளிநாயகியாரை வலிந்து ஆட்கொள்ளக்கருதி நிலைபேறான பிரணவ உபதேசஞ்செய்து அத்துவிதமாகக் கலப்பவரே.

மேதி மட்க - எருமைக்கடா மழுங்க.

ஊழி புவிமேல் கிடத்து - ஊழிகாலம் பூமியில் வீழ்ந்துகிடக்கச்செய்த.

காலன் இடம் மேவு சத்தி - காலையுடைய பரமசிவனது இடப்பக்கத்திற் பொருந்தும் உமாதேவி.

காலம் முதல வாழ் புவிக்கு ஆதார நகர் - காலத்துக்குக் கருத்தாவாகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் பூமிக்கு ஆதாரமாகிய திருக்கடவூர்.

---

132. இந்து கதிர் சேர் - சந்திரனுஞ் சூரியனுஞ் சேர்ந்த (இடைகலை பிங்கலை நாடிகள் ஒன்றுசேர்ந்த.)

அருணப் பந்தி நடுத்தூண ஒளிபட்டு - செந்நிறத்தின் வரிசைபோன்ற நடுவிலுள்ள தூணின் ஒளிபட்டு (சுழுமுனைநாடியின் ஒளிபட்டு.)

இன்ப ரசப் பால் அமுதச் சுவை மேவும் - இனிய இரசமாகிய வெள்ளிய அமுதத்தின் சுவையுடைய.

எணகுணமுற்றோன் நடனச சந்திர ஒளிப் பீடு அகம் உற்று - எண்குணங்களையுடைய சிவபெருமான் நடனஞ்செய்வதற்கிடமாகிய சந்திரகாந்திவிளங்கும் பெருமையுடைத்த ஸ்தானத்தைப் பொருந்தி. (பிரமரந்திரகமலத்தைப் பொருந்தி.)

எந்தை நடித்து ஆடும் மணி சபையூடே - எமது பெருமான் நடனஞ்செய்கின்ற அழகிய சபையின்கண்.

கந்தம் எழுத்தோடு உறு - மூலமொழியோடு பொருந்திய. மூலமொழி
3 3 3
என்பது பிரணவம். "பாதாப்ஜே ஸாவஸம்ஸார தாவகாலா நலம்
3 4 2 4 4 2 3
ஸ்வகே, ப்ரஹமரந்தரே ஸ்திதாம்போஜ மத்யதஸம் சந்த்ரமண்டலம்.
2 3 2 3 3
அகதாதி தரிரே காப்ஜே ஸஹஸ்ரதல மமடலே, ஹம்ஸபார்ஸ்வ

த்ரிகோணேச ஸ்மரேதத்தந் மத்யஹம் ம-ரும்." (குருகீதை 103-104.)

சிற்கந்த மணப் பூவிதழை - ஞானமாகிய மணங்கமழும் பூவிதழை.

கண்டு களித்து - கண்டு களிப்படைந்து.

அமுதக்கடல் மூழ்கி - அமுதககடலில் ஆழ்ந்து.

கந்த மதித்து - கந்தவேளை நன்குமதித்து.

ஆயிர எட்டு அண்டம் அதை - ஆயிரத்தெட்டு இதழோடுபொருந்திய கமலத்தையுடைய துவாதசாந்தவெளியை.

கோல் புவனக் கண்டம் அதை - அழகிய அநதத் துவாதசாந்த வெளியை.

காண எனக்கு அருள்வாய் - யான் காணும்படி எனக்கு அருள்புரிவாய்.

காளம் மணித தவில் ஓசை திந்த திமித ..டிநதம என - காளமும் அழகிய தவிலோசையும திந்த திமித ..டிநதமென.

சிந்தை திகைதது - மனந் திகைத்து.

எழு கடல் பொஙக - எழுகடலைப்போற் பொஙக.

அரி சூர மகுடச் சென்டு குலைத்து ஆடும் - பகைவனாகிய சூரபன்மனுடைய தலையாகிய பந்தை நிலைகுலைதது (உடலினின்றும பிரித்து) ஆடுகின்ற.

மணிக் கதிர வேலா - அழகிய ஒளிபொருந்திய வேலாயுதததையுடையவரே.

அரி குந்தி தாழ் துளபம் - வண்டுகள் குந்தித் தஙகுகின்ற துளசிமாலையை அணிந்த.

செந்திருவைச் சேர் களபக் கொணடல் நிறததோன் மகளை - இலக்குமியை மார்பிற்சேர்தத கலவைச்சாந்துபூசிய முகில்வணணனாகிய திருமாலின் மகளாகிய வள்ளிநாயகியை.

தரைமீது கும்பிட கைத்தாளம எடுதது - பூமியின்கணணே கும்பிடும்படி கை கூப்பி.

அம் பொன் உருப்பாவை புகழ் - அழகிய பொன்னாற்செய்த பாவை போன்ற உருவைப் புகழ்கின்ற.

கும்பகோணத்து ஆறுமுகப் பெருமாளே - கும்பகோணத்தின்கண்ணே எழுந்தருளியிருக்கின்ற ஆறுமுகப்பெருமாளே.

133. ஞானம் கொள் பொறிகள கூடி - ஐம்புல உணர்வைக் கொள்ளுகின்ற ஐம்பொறிகளும் ஒடுங்கி.

வான் இந்து கதிர் இல்லாத நாடு அணுடி - கேவலசகலமற்ற பிரமரந்திர கமலஞ்சேர்ந்து. "இருளுமோர்கதிரணுகொணாதபொன்னிடமதேறி" (பாா. பாட்டு. 23)

நமசிவாய வரை ஏறி - பஞ்சாக்கர மலையிலேறி.

நாதங்கள் ஓடு குலாவி - அவ்வருவியின் ஓசையோடு கூடி.

ஊனங்கள் உயிர்கள் மோக நானென்பதறிவில்லாமல - உடம்புகளும் உயிர்களும நானெனகின்ற மயக்க அறிவு இல்லாமல் உடம்பு நான் என்றும சீவன நான் என்றும் எண்ணுகின்ற மயக்க அறிவில்லாமல். அம்மயக்கத்துக்குக் காரணம ஆணவமலம்.

ஓம் அங்கி உருவமாகி - ஓமாக்கினிவடிவமாகி. ஓமம் ஓம எனக கடை குறைந்தது.

ஓா அந்தம் மருவி - ஏகாந்தமாகப் பொருந்தி.

ஞான மா விஞ்ஞை முதுகிலேறி - விஞ்ஞானமாகிய குதிரையின் முதுகி லேறி.

லோகங்கள் வலமதாட - லோகங்கள் எங்கும் வலஞ்சுற்றி விளையாடும்படி.

தேன் அம கொள் இதழி - தேனைககொண்டிருக்கும் கொன்றைமாலை யையும்.

தூகி தார் - ஆத்திமாலையையும். தாதகி என்பது தாகி என இடை குறைந்தது

சலிலம - நீா, கங்கை.

சீரங்கன் - சீரிய அங்கத்தையுடையவன்.

ஒரு மாது சோ பஞ்ச வடிவி மோகி சேர் பங்கின் - ஒருசத்திசேர்ந்த ஐந்து வடிவத்தையுடையவள், மோகத்தைசசெய்பவள்.

யோகங்கொள் மவுன சோதி, அமல நாதன் அருள் பாலா - யோகநிட்டை யைக்கொள்கின்ற மவுனசோதியுமாகிய உமாதேவியாாபொருந்திய பாகத்தையுடைய.

அமல நாதன் அருள் பாலா - மலமில்லாத சிவபெருமான் தந்தருளிய பாலனே.

நீல காடந்த, நீலம் காள் தந்த - நீலமும் கறுப்பும் பொருந்திய.

வேடம் பெண அமளி சேர்வை - வேடப்பெணணாகிய வள்ளிநாயகியைச சேர்ந்தவரே. காண - முனனிலை அசை.

134. இலாபமில் பொலா உரை சொலா மன தபோதனர் - பயனில்லாத பொல்லாங்குரைகளைச சொல்லாத மனத்தையுடைய தபோதனர்.

இராகமும் விநோதமும் உலோபமுடன் மோகமும் இலான் - காமமும், மதமும், உலோபமும், மோகமுமு இல்லாதவன். விநோதம் - களிப்பு, மதம்.

இவனும் மா புருஷன் என ஏய - இவனும் உத்தமபுருடன் என்று இயைய.

சலாபவ - விகாரமற்றவரே. சலம் - விகாரம். அபவம் - இன்மை.

மலாகர - மலத்தை ஒழிக்கின்றவரே.

சசீதர - சந்திரனைத தரிததவரே.

விதாரண - சஙகாரஞ்செய்கின்றவரே.

சதாசிவ - அனுக்கிரகஞ்செயகினறவரே.

மயேசுர - திரோபவததைச செயகின்றவரே.

நிலாவிரி நிலாமதி - சந்திரிகை விரிநது பிரகாசிக்கின்ற சந்திரனையும்.

நிலாத அநில அசன நியாய பரிபால அர - நில்லாது ஓடுகினற காற்றைப்புசிககின்ற நீதியைப் பரிபாலனஞ்செய்வதில் வல்ல ஆதிசேடனுகிய சர்ப்பததையும்.

நிசாசரர் குல அதிபதி இராவணன் புயம் அரிட - அரககாகுலததுக்கு அதிபதியாகிய இராவணனது புயஙகளுககுக் கேட்டைசசெய்த.

நிர் ஆமய சரோருகம் கரன் - நோயற்றவரும் தாமரைமலர்போன்ற கரததையுடையவருமாகிய பரமசிவன். ஆமயம் - நோய்.

வில் ஆசுகம் வலார் எனும் உல்லாச வித ஆகவ - வில்லிற்பூட்டும் அம்பு விததையில் வல்லவரென்று சொல்லப்படும் உல்லாசமான போரினையுடையவரே. ஆசுகம் - அம்பு. ஆகவம் - போர்.

வியாதர்கள் விநோத மகள்-வேடரது பொழுதுபோக்கி விளையாடும் வள்ளி நாயகி.

விராவு வயலார் புரி - விளஙகுகின்ற வயலூர்.

பிரான்மலை - திருக்கொடுஙகுன்றம். பாணடிநாட்டிலுள்ளது.

---

135. தறையின் மானுடர் - பூமியிலுள்ள ஆடவர்.

ஆசையினுல் மடல் எழுதும் மால் அருள் - தம்மேற்கொணட ஆசையினுல் மடலேறற்கு வடிவை எழுதுமு மயக்கத்தைததருகினற.

தோதக சரசர் மாதர்கள் - வஞ்சகம்பொருந்திய காமசசேட்டைசெய்பவராகிய பெணகளினது.

தளர் மின் நேர் இடை - சோர்வான மின்னலையொத்த இடை.

பறவையான மெய்ஞ்ஞானிகள் மோனிகள் அணுகொணுவகை நீடும் இராசிய - ஓரிடமென்று நில்லாது பறந்துதிரியும பறவைபோலிருக்கின்ற பற்றற்ற உண்மைஞானிகளும் மௌனிகளும கிட்டிக்கொள்ளாவண்ணம மிக்க இரகசியமானதும்.

பவனபூரக ஏகிகம் ஆகிய விந்துநாதம - பிராணவாயுவை ஒடுக்கிச்செய்யும் யோகத்தில் ஒன்றுபட்ட விந்துநாதங்களால்.

தயாபர பதியதான - அருளோடுகூடிய.

சமாதி மனோலயம் - மனோலயசமாதி.

திறல் விநோத சமேள - திறலும் விநோதமும்பொருந்தியவரே. சமேளனம் - சேர்க்கை.

அம்புராசி - கடல்.

குடக காவிரி - குடகமலையினின்றும்வருகின்ற காவேரியாறு. குடகம் - தென்னிந்தியாவின் மேற்குப்பக்கத்திலுள்ள ஒரு மலை. குடகநாட்டிலிருப்பதனுற் குடகமலை எனப் பெயர்பெற்றது.

திரிசிராமலை - திரிசிராப்பள்ளியிலுள்ள மலை. தாயுமானசுவாமிகோயில் கட்டப்பட்டிருககும் மலை.

குறிஞ்சி வாழும மறவா - மலைசார்ந்தநிலத்திற சீவிக்கின்ற வேடரது.

வடிவின் நாயக ஆனைதன் நாயக - ரூபத்திலே நாயகமான தெய்வயானையின தலைவரே.

எங்கள் மானின் மகிழு நாயக - எங்கள் மானுகிய வள்ளிநாயகியாரிற் களிப்படையுந் தலைவரே.

வடிவதாம மலை யாவையும் - அழகிய மலையெங்கும்.

---

136. ஆறுமாறும் அஞ்சும் அஞ்சும்...ஆறுமாய சஞ்சலங்கள் வேறதா விளங்குகின்ற - தொண்ணூற்ருறு தத்துவங்களுக்கும் வேருய் (அதீதப்பட்டு) விளங்குகின்ற. சஞ்சலங்கள் - துன்பத்தைச்செய்யுங் கருவிகள்.

ஆரணம் ஆகமம் கடந்த கலையான ஈறு கூறு அரும் பெரும் சுவாமியாய் - வேதாகமங்களின் முடிவான உபதேசகலையாகிய சித்தாந்தங் கூறும் அரிய பெருஞ் சுவாமியாய்.

ஏது வேறு இயம்பலின்றி ஒரு தானுய் யாவுமாய் இருந்த நன்றி - வேறு காரணமில்லாமல ஒன்ருயும் பலவுமாயிருந்த நன்மையினுல்.

மனங் கடந்த மோன வீடு அடைந்து ஒருங்கி - மனுதீத அத்துவிதமான மவுனநிலைபொருந்தி அடங்கி.

யான் அவா அடங்க என்று பெறுவேனே - அடியேன் ஆசை அடங்கும் படி என்று பெறுவேன்.

வங்க வாரிமேல் வெகுண்ட சண்டவித தாரை வாகை வேல - தோணிகள் ஓடுகின்ற சமுத்திரத்தின்மேற் கோபித்த வலிமைபொருந்திய கூரிய வெற்றியினையுடைய வேற்படையையுடையவரே. வங்கம்-மரக்கலம். சண்டம் - வலிமை. தாரை - கூர்மை.

கூவிளங் கொழுந்து - வில்வந் தளிரையும்.

வால சோமன் - பாலசந்திரன், இளம்பிறை.

நஞ்சு பொங்கு பகுவாய சீறு மாசுணம் - நஞ்சுமிகுந்த பகிர்ந்த வாயினையுடைய கோபம்பொருந்திய சாப்பத்தையும்.

கடம்பு அலங்கல் - கடப்பமாலை.

தேவனூர் - ஒருஸ்தலம்.

---

137. சுட்டதுபோல் ஆசை விட்டு - சுட்டபொருளைக் கைவிடல்போல ஆசையாகிய பசையறவிட்டு, ஆசையினால் வரும்பேறு துக்கமே என்று அதனைவிட்டு.

உலக ஆசார துக்கம் இலா - உலக ஒழுக்கமும் துக்கமுமில்லாத. ஆசாரம்-விதிவிலக்குகளை அநுட்டிக்கும் ஒழுக்கம்.

சொல் கரண அதீத - வாக்குமனத்துக்கெட்டாத.

நிர்க்குணம் ஊடாடும் சுத்த நிராதர வெளி - நிர்க்குணம்பொருந்திய சுத்தமான ஆதாரமற்ற வெளியை (துவாதசாந்தம்).

மொட்டு அலர் வாரிசம் சக்கர சட் ஆதாரம் முட்டவும் மீதேறி மதிமீதாய் - முகைவிரிந்த கமலங்களையும் சக்கரங்களையுமுடைய மூலாதாரம் முதல் ஆறு ஆதாரங்களையும் பொருந்தி, அதன்மேற்சென்று சந்திர மண்டலம் பொருந்தி.

முப்பதும் ஆறும் முப்பதும் வேறான முத்திரையாம் மோனம் அடைவேனோ-தொண்ணூற்றாறு தத்துவங்களுந்தோன்றாத சின்முத்திரையாகிய அத்துவித மௌனநிலையைப் பெறுவேனோ.

எட்டவொணு வேதனத்தொடு - தாங்கமுடியாத வேதனையோடு.

எற்றிய எழ் ஆழி - திரையெறிகின்ற ஏழு சமுத்திரங்கள்.

ஒரு சூர் - ஒப்பற்ற சூரன்.

பத்திரு தோள் - பன்னிரண்டு புயங்களையுடைய.

---

138. நா எறு பா மணத்த பாதாரம் - நாவினாலே துதிக்கப்பட்ட பாக்கள் பொருந்திய பாதாரவிந்தத்தை.

நால் ஆறு நாலு பற்று வகையான - இருபத்தெட்டு வகையான.

நால் ஆரும் ஆகமத்தின் நூலாய ஞானமுத்தி - சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்கு பாதங்களும்பொருந்திய ஆகமங்களின் கருத்தாகிய ஞானமுத்தியை.

நாடோறும் நான் உரைத்த நெறியாக - ஒவ்வொருநாளும் நான் வேண்டியபடி.

நீ வேறெனாது இருக்க நான் வேறெனாது இருக்க - நீவேறு நான்வேறென்னாது இரண்டறக் கலந்துநிற்கும் அத்துவித நிலையிலிருக்க. காண்பானும் காட்சியுமற்று ஆநந்தாதீதப்பட்டால் இரண்டென்றும் ஒன்றென்றும் கூறக்கூடாது.

நேராக வாழ்வதற்கு உன் அருள் கூர - உனது அருள்மிகுமாறு அந்த அத்துவிதநிலையிற் செம்மையாக வாழும்படிக்கு.

நீடு ஆர் சட் ஆதாரத்தின் மீதே பராபரத்தை - மேன்மைபொருந்திய மூலாதாரம் முதலிய ஆறாதாரங்களின் மேலேயுள்ள பராபரத்தை.

நீ காண என அனைசொல் - நீ காண்பாயாக என்று ஐக்கியபதத்தை.

சே ஏறும் ஈசர் சுற்ற - இடபவாகனத்திலேறும் பரமசிவன் வலம்வர.

மா ஞான போத புத்தி - பிரணவத்தினுட்பொருளை.

தேரார்கள் நாடு சுட்ட - தம் பகைவராகிய தேவர்களது சுவர்க்கநாட்டை எரித்த. தேரார் - பகைவர்.

வாவி பூ மணத்த காவு ஆர் சுவாமி வெற்பு - பூமணம்வீசுகின்ற வாவியும் சோலையும் நிறைந்த சுவாமிமலை.

---

139. அமல வாயு ஓடாது கமல நாபி மேல் வீழ - பிராணவாயு இடை பிங்கலை நாடிகள்வழியாய் ஓடாது நாபிக்கமலத்திலே சுழுமுனைநாடியிற்பொருந்த. அமலம் - அழகு. (பார். பாட்டு. 128.)

அமுதபான மேல் மூல அனல் மூள - பிரமரந்திரத்திலுள்ள பானம்பண்ணும் அமிர்தநிலயத்தில் மூலாக்கினி சுவாலித்துப் பற்ற.

அசைவுறாத பேராத மவுனம் மேவி - அசைவில்லாத நிலைபேராத மவுன நிலையைப் பொருந்தி.

ஓவாது - அந்நிலையினின்றும் நீங்காது.

அரியதான சோபானம் அதனாலே - அரிய அந்த யோக முறையால். சோபானம் - முறை.

எமனை மோதி - யமனை வென்று. (பார். பாட்டு. 118.)

ஆகாச கமனமாம் மனோபாவம் எளிது சால - புறத்தேசெல்லும் மனத்தன்மை இலேசாய் ஒடுங்க. கமனம் - போதல். மனோபாவம் - மனநிலை.

மேலாக உரையாடும் எனது யானும் வேறாகி எவா யாதும் யானாகும் இதய பாவனாதீதம் - எப்பொழுதும் மேம்பாடாகச் சொல்லும் எனது என்பதும் யான் என்பதுமற்று எவரும் எப்பொருளும் என்னில் விளங்கும் மனோபாவனாதீதநிலையை. தானல்லாத உடம்பைத் தானென்றும் தனதல்லாத போகத்தைத் தனதென்றும் மாறுபாடாயக் கருதப்பண்ணும் ஆணவமலங்கெட்டு ஞானதிருஷ்டியினாற் சர்வத்தையும் யானாகிய ஆன்மாவிற் றரிசித்து மனத்தாலே தொடரப்படாத அத்துவித சம்பூரணநிலையை.

விமலை தோளின் மீது ஓடு யமுனைபோல - பார்வதியின் கைகளினின்றும் ஓடுகின்ற கருநிறமான யமுனைநதிபோல. உமாதேவியார் சிவபிரானுடைய திருக்கண்புதைத்து எடுத்தகாலத்துக் கைகள் இரண்டிலும் வேர்வை உண்டாகிப் பத்துவிரல்வழியாலும் விரிந்த கங்கை முதலிய நதிகளுள் யமுனை ஒன்று. அது கருநிறமுடையது.

ஓரேழு விபுத மேகமேபோல - சாமாத்தியமான சத்தமேகங்களையேபோல.

உலகு எழும் விரிவு காணும் மாமாயன் முடிய நீளுமாபோல - சத்த உலகங்களினதும் அளவைக்கண்ட விட்டுணு முற்றாய நீண்டது போல.

வெகுவித ஆமுக ஆகாய பதம் ஓடிக் கமலயோனி வீடான ககனகூட மீது ஓடும் கலப நீல மாயூர - ஆகாயந்தொடக்கம் பலவிதமான புவனங்களெல்லாம் ஓடி, தாமரைமலரிற் பிறந்த பிரமனது வீடாகிய சத்திய உலகத்திலும் ஓடுகின்ற நீலம்பொருந்திய தோகையையுடைய மயிலை வாகனமாகக் கொண்ட. ஆமுகம் - தொடக்கம். ககனகூடம் - ஆகாயவீடு.

---

40. மூளும் வினை சேர மேல் கொண்டிடா - மூளும் வினை முற்றாய் மேற்கொண்டு. வினை - ஆகாமியத்தால்வரும் நலவினை தீவினை. மூளும் வினை - ஆகாமியத்தின் பயனாகிய பிராரத்தவினை. அது இன்ப துன்பங்களைக் கொடுப்பது. சேர - முழுமையும்.

ஐந்து பூத வெகுவாய மாயங்களை தான் நெஞ்சில் மூடி - ஐந்து பௌதிக வேறுபாடான விடயங்களை மனத்திலே நிரவி.

நெறி நீதி ஏதும் செயா அஞ்சி - நெறிநீதிகளைச் சிறிதுஞ் செய்யாமற் பயந்து.

ஞேயங்களாய நின்ற - அறியப்படும் பொருள்களாய்நின்ற.

மூல பரயோகம் மேல் கொண்டிடா நின்றது உளதாகி - மேலான பரயோகம் மேற்கொண்டு நிற்பதுளதாய்.

அதி வேக கால்கொண்டு தீமண்ட - அதிக வேகமாய்ச்செல்லும் பிராணவாயுவினால் மூலாக்கினி நெருங்க.

வாசி அனல் ஊடுபோய் வானின்கண் ஒன்றி - பிராணவாயு மூலாக்கினி யூடு சென்று அம்பரவெளியிற்பொருந்தி.

காம மதி மீதில் ஊறும் கலா இன்ப அமுது ஊறல் நாடி - வியப்பான சந்திரமண்டலவெளியில் ஊறுகின்ற அமுதகலையாகிய இன்பத்தைத் தரும் அமுத ஊற்றை நாடி.

ஆனந்த மேலை வெளி - பராபரவெளி, துவாதசாந்தவெளி.

நாடியினும - தேடியின்னும்.

காள விடம் ஊணி - கரிய விடத்தை உண்டவள்.

மாதங்கி - மதங்கமுனியின் புதல்வி.

வந்த காலன் விழ பாதங்களால் மோதும் சாமுண்டி. சாமுண்டி - துர்க்கை.

பார் அம்பு ஓடு அனல் வாயு காதி முதிர் வானமே தங்கி வாழ் வஞ்சி - நிலம் நீர் தீ வாயு என்பன அழிந்து விரிதற்குக் காரணமாயுள்ள ஆகாயத்திலே தங்கி வாழ்கின்ற சத்தி.

பாகம் குலாம் மங்கை - வாமபாகத்தில் விளங்குகின்ற மங்கை. குலாவுதல் - பிரகாசித்தல்.

வாளம் முழுதும் ஆளும் ஓர் தண் துழாய் தங்கும் சோதி மணி மார்ப மாலின் பின்னாள் - சக்கரவாளகிரியாற் சூழ்ந்த உலகம்முழுவதையும் காத்தருளும் ஒரு குளிர்ந்த துளசிமாலைதங்கிய ஒளிபொருந்திய கௌத்துவமணி அணிந்த மார்பையுடைய விட்டுணுவின் தங்கையாகிய. துழாய் - துளசி.

இன் சொல் வாழும் உமை மாதராள் - இனிய சொற்கள் விளங்குகின்ற பார்வதியின்.

---

141. அருமையினில் அருமையிட - அதிகம் அருமைபாராட்ட.

ஆளு மேளமாய் - அவரும மேளம்போல.

இருதுபடு மொழி - செருக்கு வார்த்தை.

ஆவியாய ஓர் தேவிமாருமாய் - உயிர்போன்ற மனைவிமாரையுங்கொண்டு.

விழு சுவரை - விழுகின்ற சுவர்போன்ற காயத்தை.

அணுவளவு தவிடும் இக பிதிரவிட - அணுவளவு தவிடேனும் இங்கே சிதறவிட. பிதிரதல் - உதிர்தல், சிதறுதல.

ஊசி வாசியாய் - ஊசிபோனவிடம் தேடுகினறவாகளைப்போல நுணுக்கமுடையோனுய.

அவியுறு சுடர்போலே வெறு மிடியன் - அவிகின்ற தீபம்போலக் கெட்டு வறுமையினால் மூடுண்டவன். வீணியார் சொலே - வீணர்கள் வார்த்தையே.

மறுமையுளதெனுமவரை - மறுபிறப்புண்டென்று சொல்லுமவர்களை.

விழலை விடும் - வீணவார்த்தையை விடும்.

விடு துறவு பெரியவரை - உலகத்தைவிட்ட துறவினராகிய பெரியோரை.

மேளமே சொலாய் - மேளம்போல முழங்கிப் பேசி.

ஆளி வாயராய் - சிங்கம்போன்று ஒலிக்கும் வாயராய. ஆளி - சிங்கம்.

ஊது காமாலை - பெருக்கின்ற காமாலை.

மனையவள் மனம் வேறாய் மறுக - மனைவிமனம் வேறுபட்டுச் சுழல.

வலதழிய விரகழிய - பெலன்கெட, அறிவுங்கெட.

ஈ மொலேல் என - ஈக்கள் மொலேல் என்று இரைக்க.

இடுகு பறை - இடைசுருங்கு பறை.

திமிலையொடு - சல்லரியோடு.

ஈமதேசம் - சுடுகாட்டுநிலம்.

எரிதனில் இடும் வாழ்வையே உனது அடியவர் பெறுவது என்றால் ஏசிடாரகளோ.

நீயும் நானுமாய் இருக்கும்வகை பரமசுகமதனை - நீயும் நானும் அத்துவிதமாயிருக்கும்படி பரமசுகத்தை.

---

142. கரி புராரி - கயமுகனுடைய சரீரத்தையழித்தவர்.

காமாரி - காமனுக்குப் பகைவர்.

திரிபுராரி - முப்புரங்களுக்குப் பகைவர்.

காபாலி - பிரமனுடைய சிரகபாலத்தை அகங்கையிலேந்திநின்று நிருத்தஞ் செய்தவர்.

கழை யோனி - மூங்கிலில் உற்பவித்தவர்.

கரவுதாசன் ஆசாரி - ஒளிபொருந்திய அக்கினிதேவனுக்குக் குரு. கரம் - கிரணம். உதாசனன் - அக்கினிதேவன்.

பரசு பாணி - மழுவைக் கையிலுடையவர்.

பானாளி - அர்த்தசாமத்திலே நடனஞ்செய்கின்றவர். பால்நாள் - அர்த்த யாமம்.

கா யோகி - காக்கும் யோகி. கா - காத்தல்.

பரி அரா சடா சூடி - பெரிய சர்ப்பத்தைச் சடையிலணிந்தவர்.

பசு ஏறி - இடபவாகனத்தில் ஏறினவர்.

பரதமாடி - நிருத்தஞ்செய்கின்றவர்.

கான் ஆடி - சுடலையாடி,

பர வயோதிக அதீத பரமஞான ஊர்பூத - மிக்க முதுமையும் எட்டற்கரியதுமான மேலான சிவகதியடைய, ஞானபூமியை அடையும் பொருட்டு.

சுருதியாடி தாதா ஆவி வெருவியோட - வேதாத்தியயனஞ்செய்யும் பிரமன உயிர்க்கு அஞ்சியோட

கோப மீதோடி மூதேவி துரக - வெறுப்புமிகுந்து மூதேவி அகல.

அழுது அன்னாவி வாய பாறி சுரதிரேடு சூரமாள - அழுதுநின்று வாய் பிளாந்து ஓலமிட்டுச் சூரன்மடிய. சுரதிரேடு - சுரத்திரேடு, சத் தத்தோடு.

உலகேழும் திகிரி மாதிர ஆவார திகிரி சாய - ஏழு உலகங்களும் வட்டமாகிய திக்குக்களை மறைக்கின்ற சக்ரவாளகிரியுஞ் சாய்ந்துபோக. திகிரி - வட்டம். மாதிரம் - திசை. ஆவாரம் - மறைத்தல். திகிரி - மலை.

பாரோடு - பருந்துகளோடு.

செருவின ஆடுவான் நீப - யுத்தத்திலே (சூரனைக்) கொன்ற பெரிய கடப்பமாலையையுடையவரே

பார - பெரிய.

---

143. சுருதியூடு கேளாது - வேதங்களினூல ஆராய்ந்தறியப்படாதது.

துரியம் மீது சாராது - துரியாதீதமாயுள்ளது.

எவராலும் தொடரொணாது - எல்லாராலும சென்று அடையக்கூடாதது.

மா மாயையிடை புகாது - மாயைப்பற்று இல்லாதது.

ஆறாத சுக மகா உததியாகி ஒழியாது - குறைவில்லாத சுகானந்த மகா சமுத்திரமாகி நித்தியமாயுள்ளது.

பருதி காயில் வாடாது - சூரியன் காய்ந்தால் வாடாதது.

வடவை - ஊழித்தீ.

சலித்தல் - அசைதல.

பரவை சூழில் ஆழாது.

பரம ஞான வீடேது - முத்திவீடு ஏதுவென்று.

மகர பூமி - மகரமீனவசிக்கும் சமுத்திரம்.

நிபிட தாருகா பூமி - நெருங்கிய கற்பகத்தருசசோலை செறிந்தபூமி, நிபிடம - நெருக்கம். தாருகம - சுவர்க்கலோகம்.

நிகர பார நீகார சிகரம் மீது வேலேவும் நிருப - கூட்டமாகிய பெரிய பனியினுலே மூடப்பட்ட கிரவுஞ்சமலையினமேலே வேற்படையை ஏவிய அரசனே. நிகரம் - கூட்டம். நீகாரம - பனி.

வேத ஆசாரியன் - பிரமன்.

கனக காரமுக ஆசாரி - பொன்னுலாகிய மேருமலையை வில்லாகக் கொண்ட குரு. காரமுகம் - வில்.

ககன சாரி - ஆகாயததிற் சரிப்போன். சரித்தல் - சஞ்சரிததல்.

பூசாரி - பூமியிற்சரிப்போன்.

வெகு சாரி - பலவற்றிலுஞ் சரிப்போன்.

கயிலே நாடகன் ஆசாரி - கயிலேயிலுள்ள நிருத்தராசருக்குக் குரு.

---

144. மெய்ப்பொருள் தரு பராசததியின் பரமான துரியமேல் - உண்மைப் பொருளாகிய சிவத்தை அடையச்செய்யும பராசத்தியினும மேலான துரியாதீததத்தில.

அற்புதப் பரமஞானத தனிச சுடர் வியாபித்த நற்பதி - அற்புதமான மேலான சுதத ஞானசோதி நிறைந்த நல்ல பதியாகிய. தனி - சுததம

நீடு துகள் இல் சாயுச்சியக் கதியை - நித்தியமானதும குற்றமில்லாததுமான சாயுசசியக் கதியை.

ஈறு அற்ற சொல் சுக சொரூபததை உற்று அடைவேனே - முடிவற்ற சொல்லப்படுகின்ற ஆனநதநிலேயைப்பொருந்தி முத்தியடைவேனே.

புரிசை சூழ் சொர்ப்பதிச சுரர்கள் - மதில்சூழ்ந்த சுவர்க்கலோக தேவர்கள்.

வீரதது விக்ரம சூரன் - வீரததையும மிக்க சாமர்ததியத்தையுமுடைய சூரன.

கரிய யூகததிரள் - கரிய குரஙகுக்கூட்டம்.

கதலி சூததத்தினிற் பயிலும் - வாழைகளிலும் மாமரஙகளிலும் தஙகுகின்ற.

---

145. குருதி - இரததம். புலால் - தசை.

கிருமிகள் மாலம் பிசிதம அணடிய குடர் - கிருமிகள் மலம் சலம் நெருஙகிய குடல். பிசிதம் - நீர். நிணம் - கொழுப்பு.

ஐந்து வேடர் - பஞ்சப்பொறிகளாகிய வேடர்.

ஐம்புல அடவியில் ஓடும துராசை வஞ்சகர் - சத்த பரிச ரூப ரச கந்தஙகளாகிய ஐம்புலக்காட்டில் ஓடிததிரியும தீய விருப்பததையுடைய வஞ்சகர்.

மா பஞ்ச பாதகஞ் செய - கொலை களவு முதலிய ஐந்து மகா பாதகங்களையுஞ் செய்ய. இச்சா ஞானக் கிரியைகள் சிவதத்துவங்களைச் செலுத்த, சிவதத்துவங்கள் கலாதிகளைச் செலுத்த, கலாதிகள் ஆன்மாவின் இச்சா ஞானக் கிரியைகளை எழுப்ப, ஆன்மாவின் இச்சை அந்தக் கரணங்களிடத்தும், ஞானம ஞானேந்திரியங்களிடத்தும், கிரியை கன்மேந்திரியங்களிடத்தும் நின்று சத்தாதி விடயங்களை அறிந்து பற்றி அழுந்தும. ஆன்மாவின் ஞானம் ஞானேந்திரியங்களிடத்து நின்று ஐம்புலக்காட்டில ஓடித்திரிந்து விடயங்களைப்பற்ற, ஆன்மாவின் கிரியை கன்மேந்திரியங்களிடத்து நின்று பஞ்சபாதகங்களைச் செய்து அழுந்துமாதலின் "ஐந்துவேடா, ஐம்புல அடவியிலோடுந் துராசைவஞ்சகர் மாபஞ்சபாதகஞ்செய" என்றார்.

அண்டா பூசை வந்தனை - தேவர்கள் பூசையையும் வணக்கத்தையும்.

துதியொடு நாடும் தியானம் - தோத்திரத்தோடு விரும்பும் தியானம். தேவார திருவாசக முதலிய தோத்திரமும் பஞ்சாக்கர தியானமும்.

சமடமதாய் - அறிவீனமாய். சமடு - அறிவின்மை.

வம்பு மால் கொளும் தீய திமிரரோடே பந்தமாய் - தீச்செயலும் காம மயக்கமும் பொருந்திய கீழ்மக்களோடு சேர்ந்து.

நிருதரும் மாவும் கல்லோல சிந்துவும் - அவுணரும் மாமரமும் திரையையுடைய சமுத்திரமும். கல்லோலம் - திரை.

உயர் தவா - மேலான தவத்தினர்.

மா உம்பரான அண்டர்கள் - பெருமைபொருந்திய சுவர்க்கத்திலுள்ள தேவர்கள்.

அடி தொழுதே மன் பராவு தொண்டர்கள் உளமதில் - திருவடியைத் தொழுது மிகத் துதிக்கின்ற அடியார்களுடைய உள்ளத்தில்.

கருதிய ஆறு அங்க வேள்வி அந்தணர் - கருதப்பட்ட ஆறங்கமும் உணர்ந்த வேள்விசெய்யும் பிராமணர். வேதாங்கம் ஆறு - மந்திரம், வியாகரணம், நிகண்டு, சந்தோபிசிதம், நிருத்தம், சோதிடம்.

சீரங்கராசன் நண்புறும் - ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருக்கும் விட்டுணு அன்புகூரும்.

ஆகண்டல ஆதி அண்டர் - இந்திரன்முதலிய தேவர்கள். ஆகண்டலன் - இந்திரன்.

கரி வனம் வாழ் - திருவானைக்காவில் வீற்றிருக்கின்ற.

---

46. பத்த - அன்பரே. வித்தக - சாமர்த்தியமுடையவரே.

அமரேசா - தேவாதிதேவரே.

ஆதி அரன் - பரமசிவன்.

வேத முதல்வன் - பிரமன்.

தானவர் குலம் - அவுணர்கூட்டம்.

சால் சதுர் மிகுத்த - நிறைந்த சாமர்த்தியத்தான் மேம்பட்ட. சதுர் - சாமாத்தியம்.

வான் எழு புவிக்கும் - மேலேழுலகங்களுக்கும்.

தேன் எழு புனத்தில் - தேன் எழுகின்ற தினைப்புனத்தில்.

மருவுற்ற - பொருந்திய, அணுகிய.

---

47. தேன் உக்கு முக்கனிகள் பால் செங்கருப்பு இளநீர் சீரும் பழித்த சிவம் அருளுற - தேனைச சொரிகின்ற மூன்றுகனிகள் பால் செங் கரும்பு இளநீ என்னும் இவைகளின் சிறந்த தித்திப்பையும் பழித்த மேலான திருவருள்பெருக.

நான் என்பது அற்று - யான் என்னும் அகங்காரம் நீங்கி.

உயிரோடு ஊனென்பது அற்று - உயிர்ப்பற்றும் உடற்பற்றும் நீங்கி.

வெளி நாதம் பரப்பிரம ஒளி மீதே - பரவெளியிலேயுள்ள நாதத்தோடு கூடிய பரஞ்சோதியில்.

வானம் தழைக்க - சுவர்க்கலோகவாசிகள் வாழ்வடைய.

அலை விடம் மாள வாரும் கரத்தன் - கடலிலெழுந்த நஞ்சை வலிகெட அள்ளிய கையினையுடையவர்.

வண்டு சுற்றி மதுதான் உண் கடப்ப மலர் - வண்டுகள்சூழ்ந்து தேனை உண்ணுகின்ற கடப்பமலர்.

எமை ஆளும் தானம் குறித்து திருக்கயிலை சாலும் - எமை ஆட்கொள் ளும் இடமாகக் குறித்துத் திருக்கயிலையிலுறையும். சாலுதல் - அமைதல்.

---

48. தத்துவ - பிரமப்பொருளே.

மெய்ஞ்ஞானக் குருநாதா - உண்மைஞானமாகிய பரஞானத்தையுடைய குருநாதா.

சத்த சொரூபா - சத்வடிவரே, என்றும் ஒரேபடித்தாய் நிற்பவரே.

புத்தமுதோன் - புதிய அமுதம்போன்றவர், ஆனந்தமுடையவர்.

நித்ய கிருதா - நித்தியமும் பஞ்சகிருத்தியஞ் செய்கின்றவரே.

நிர்த்த செக சோதி - நடனஞ்செய்கின்ற மிக்க ஒளிபொருந்திய.

---

149. முத்தனும் ஆறு - முத்தனுயிருக்கும்படி.

உத்தமாதான சற்குணா - உத்தமத்தைச்செய்யுஞ் சற்குணர். சற்குணர் - ஞானிகள்.

மணிக்கிரி - இரத்தினகிரி.

ஞான சத்திநிபாதா - திருவருள்ஞானம் பதியச்செய்பவரே.

---

150. எனை ஆள் சற்குருவாகிப் பிறவாகி - என்னை ஆளுகின்ற சற்குருவாகியும் வேறுமாய.

திரமான பெரு வாழ்வு - முத்தியாகிய பெருவாழ்வு. திரம் - முத்தி.

கறை யானை - உரல்போன்ற காலையுடைய யானை. கறை - உரல்.

---

# பிழை திருத்தம்.

## எழுத்துப் பிழைகள்.

| பாட்டு. | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 17 | 2 | வலையக்கடகக | வலையைக்கடக்க |
| 30 | 7 | எனுணாவினிற் | எனுநாவினிற் |
| 43 | 3 | மொழிகுழற | மொழிகுளற |
| 68 | 4 | மளவாளா | மணவாளா |
| 82 | 14 | கூருமனீய | கூருமலீய |
| 92 | 22 | விழைவுசெய் | விளைவுசெய் |
| 101 | 7 | மொழிகுழருத் | மொழிகுளருத் |
| 117 | 10 | கர்ணாமிதப் | கர்ணாமிதப |
| 139 | 16 | வாழ்தேவ | வாழதேவர் |
| 142 | 11 | நீமுள | நீமூள |

## குறிப்புப் பிழைகள்.

| | | | |
|---|---|---|---|
| 19 | 17 | சிகாமணி!வேற்கொடு | சிகாமணிவேந்கொடு |
| 25 | 16 | மகபதி, புகழ் | மகபதிபுகழ் |
| 25 | 18 | மனோகர ! | மனோகர . |
| 26 | 6 | கணைமூடே, | கணைமூடே |
| 28 | 11 | வந்த,சுப | வந்தசுப |
| 42 | 14 | பாகீரதீ ! | பாகீரதீ |
| 46 | 2 | லூதாரிபட்டொழிய, | லூதாரி, பட்டொழிய |
| 120 | 3 | சர்க்கரைதேனே !ஆன | சர்க்கரைதேனே ஆன |
| 148 | 5 | தத்துவ | தத்துவ! |

# ஸ்தல அகராதி.


1. அவிநாசி (திருப்புக்கொளியூர்), 69.
2. ஆறுதிருப்பதி, 14.
3. இரத்நகிரி (மாணிக்கமலை, வாட்போக்கி), 149.
4. உத்தரமேரூர், 70.
5. ஊதிமலை, 32.
6. எழுகரைநாடு, 101.
7. கதிர்காமம், 5, 20, 44. 74, 112, 123, 139, 143, 144, 150.
8. கயிலைமலை, 147.
9. காசி, 23, 102.
10. காஞ்சீபுரம், 36, 40, 103.
11. கும்பகோணம், 132.
    குருமலை, பார் சுவாமிமலை.
12. குறட்டி (குறட்டோ), 18.
13. குன்றுதோறாடல், 135.
14. கூந்தலூர், 111.
15. கொங்கணகிரி, 28.
16. சர்ப்பகிரி, 71.
17. சிதம்பரம், 6, 25, 62, 63, 65, 79, 88, 104, 130.
18. சீர்காழி, 66.
19. சுவாமிமலை, 27, 33, 38, 58, 68, 93, 138.
20. செங்காட்டங்குடி, 31.
21. சோமநாதன்மடம், 108.
22. திரிசிராப்பள்ளி, 19, 50, 61, 100, 118.
23. திருக்கடவூர், 131.
24. திருச்செந்தூர் (சீரலைவாய்), 52, 55, 60, 67, 72, 73, 86, 89, 95, 126, 140.
25. திருத்தணிகை, 4, 11, 34, 57.
26. திருப்பந்தணைநல்லூர், 64.
27. திருப்பரங்குன்றம், 8, 51, 87.
28. திருமயிலை, 97.
29. திருவருணை (அண்ணாமலை), 30, 39, 54, 75, 80, 94.
30. திருவாடானை, 46.
31. திருவாவினன்குடி, 9, 12, 91, 114.
32. திருவானைக்கா, 59, 84, 122, 145.
33. திருவிடைமருதூர், 141.
34. திருவீழிமிழலை, 45.
35. திருவேரகம் (பார் சுவாமிமலை.)
36. தேவனூர், 7, 136.
37. நாககிரி (நாகாசலம்), 85.
38. நாகபட்டணம், 77.
39. பழநி, 3, 10, 16, 24, 35, 37, 43, 48, 56, 92, 110, 115, 128, 133.
40. பழமுதிர்சோலை, 29, 127.
41. பெரியமடம், 99.
42. மதுரை, 83.
43. வயலூர், 117.
44. வல்லகோட்டை, 76.
45. விநாயகமலை, 13.
46. விராலிமலை, 78, 107, 124, 125, 134, 142.
47. வேளூர் (வைத்தீசுரன்கோயில்), 26, 81, 129.
48. பொது, 1, 2, 15, 17, 21, 22, 41, 42, 47, 49, 53, 82, 90, 96, 98, 105, 106, 109, 113, 116, 119, 120, 121, 137, 146, 148.

# பாட்டு முதற்குறிப்பகராதி.


அகலநீளம், 112.
அடைபடாது, 123.
அதலசேட, 96.
அந்தகன்வருந, 86.
அந்தோமனமே, 19.
அபசாரநிந்தை, 9.
அப்படியேழு, 47.
அமலவாயு, 139.
அரகரசிவ, 4.
அலகின்மாறு, 44.
அவகுணவிரகனை, 25.
அழுதுமாமாவென, 80.
அறிவழிய, 67.
அறுகுநுனி, 141.
அற்றைக்கிரை, 36.
அனிததமான, 122.
ஆசாரவீன, 82.
ஆசைநாலு, 127.
ஆதிமகமாயி, 32.
ஆறுமாறு, 136.
ஆறுமுகம், 37.
ஆனைமுகவர்க்கு, 146.
இத்தரணிமீதிற், 148.
இந்துகதிர், 132.
இயலிசையில், 72.
இருமலுரோக, 34.
இருவர்மயலோ, 39.
இருவினைபுனைந்து, 93.
இருவினையஞ்சமலவகை, 94.
இருவினையஞ்சவருவினை, 64.
இருவினையின், 88.
இருளுமோர், 63.
இலாபமில்பொலா, 134.
இறவாமற்பிறவாமற், 150.
ஈனமிகுத்துள, 14.
உம்பர்தரு, 2.
உருவேறவே, 125.
உலகபசுபாச, 16.
உறவின்முறை, 49.
உனைத்தினந், 51.
ஊனத்தசை, 66.
ஊனுருமுட்பிணியு, 46.
ஊனுந்தசையுடல், 113.
ஊனேறெலும்பு, 116.
எதிரிலாதபததி, 74.
எத்தனைகோடி, 81.
எருவாய்கருவாய், 45.
எலுப்புததோல், 79.
எழுகடல்மணலை, 62.
என்னால்பிறக்கவும், 117.
எதுபுததிஐயா, 57.
ஐங்கரனை, 28.
ஐந்துபூதமு, 124.
ஒருபொழுது, 35.
ஒருவரையு, 33.
ஒருவழிபடாது, 108.
ஓதுவித்தவர், 22.
ஓலமறைக, 59.
கடலைபொரி, 3.
கடியவேக, 97.
கதியைவிலக்கு, 110.
கரிபுராரி, 142.
கரியபெரிய, 56.
கருப்பற்றாறிப், 119.
கருவடைந்து, 8.
கலகவிழி, 99.
கலைமேவு, 83.
கறைபடு, 58.
கனகசபை, 6.
காணொணாதது, 7.
காதிமோதி, 21.
காவியுடுத்துந், 65.

காவலனார், 95.
காலனிடத், 85.
குமரகுருபர, 38.
குருதிபுலா, 145.
கைத்தலம், 1.
சத்திபாணீ, 61.
சந்ததம், 87.
சமயபத்தி, 15.
சரணகம, 27.
சரவணசாதா, 13.
சரியையாளர்க்கு, 144.
சாலநெடுநாள், 76.
சிவனார்மனங், 91.
சீராரசோல, 78.
சீறலசடன், 115.
சுட்டறுபோ, 137.
சுருதிமுடி, 10.
சுருதியூடே, 143.
சூலமென, 131.
ஞானங்கொள், 133.
தகரநறுமலர், 92.
தசையுமுதிரமு, 109.
தண்டையணி, 89.
தந்தபசிதனை, 55.
தமரகுரங், 54.
தரையினில், 111.
தறுகணன், 104.
தறையின்மானுட, 135.
தாக்கமருக், 11.
தாரணிக், 102.
திமிரவுததி, 48.
திருமகளுலாவு, 5.
திரைவஞ்ச, 105.
தேனுந்து, 147.
தோலெலும்பு, 70.
நாடித்தேடி, 84.
நாதவிந்து, 12.
நாரியர்க, 120.
நாலுசதுரத்த, 130.
நாவேறுபா, 138.
நாளுமிகுத்த, 121.
நிருதரார்க்கொரு, 90.
நீரிழிவு, 18.
பகலிரவினிற், 118.
பஞ்சபாதக, 52.
பத்தியால், 149.
பாதிமதி, 68.
பிறவியலை, 98.
புரைபடுஞ், 40.
புலையனை, 75.
புவனத்தொரு, 50.
புலிக்குன், 41.
புற்புதமென், 71.
பூரணவாரகும்ப, 126.
போதநிர்க்குண, 42.
மக்கட்குக், 103.
மனத்திரைந், 69.
மனைமக்கள், 17.
மாண்டாரெலும், 106.
மாதர்வசமா, 20.
மாலாசை, 107.
மாலினுலெடுத, 26.
மூலங்கிளர், 128.
மூலமந்திர, 114.
மூலாதாரமொ, 129.
மூளும்வினைசேர, 140.
வங்கார, 31.
வசனமிக, 24.
வரியார்கருங், 73.
வருபவர்க, 53.
வலிவாதபித்த, 30.
வாசித்துக், 100.
வாதினையடர்ந், 29.
விந்ததினூறி, 60.
விரகறநோக், 101.